# திராவிட மொழியின் மூவிடப் பெயர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | **Tirāvita Moḻiyiṉ Mūvitap Peyarkaḷ** |
| Author | : | **V. Venkatarajulu Reddiyar** |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>CPT Campus, TTTI Post,<br>Tharamani, Chennai - 600 113. |
| Publication No. | : | 298 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | Reprint |
| Paper used | : | TNPL 16 Kg. Super Printing |
| Size of the book | : | 1/8 demy |
| Printing types | : | 11 points |
| No. of pages | : | xix + 164 |
| Price | : | 40/- |
| No. of Copies | : | 1200 |
| Printed by | : | **PAVAI PRINTERS (P) LTD.,**<br>Chennai - 600 014. |
| Subject | : | Pronouns -nouns of Dravidian Languages |

---

**தமிழக அரசு, தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.**

# FOREWORD

The present work is the result of researches carried on by Sri. V. Venkatarajulu Reddiyar, Junior Lecturer in Tamil, O.R. Institute, during the year 1933 - 34.

The author's main attempt is to reconstruct the original Dravidic Pronouns from a study of their forms in the various languages of the Dravidian family of speech. The views and conclusions of the previous workers in the field, Dr. Caldwell, Messrs. KV. Subbaier, Lakshmana Rao and others are considered in detail. The conclusions of the author may be conveniently tabulated as follows:

| **Person** | **Singular** | **Plural** |
|---|---|---|
| First person | ēn | ēm |
| Second person | nin | nim |
| Third person | tān | tām |

With regard to the demonstrative pronouns (third person, neuter) in the primitive Dravidian, the author's view is that they ended originally in consonants. The original demonstrative bases were, according to him, ā, ī, and ū and the interrogative pronouns were *evan* and (singular) and *evam* (plural).

A series of monographs on each of the several problems connected with Dravidian Philology is necessary before a comprehensive study of the subject could be made. It is to be hoped that the present work will serve as an incentive to the preparation of similar works on allied subjects.

University of Madras
20-4-39

**S. VAIYAPURI PILLA**
Reader in Tamil

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

# அணிந்துரை

தமிழறிஞர் வேங்கடராஜுலு ரெட்டியார் நெல்லை மாவட்டத்தில் சமூகரங்கபுரம் என்ற ஊரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் வெங்கடாசல ரெட்டியார், லட்சுமியம்மாள் ஆவர். இவருடைய மாமா கிருட்டிணசாமி ரெட்டியாரிடம் தொடக்கக் கல்வி கற்றார். ஒட்டநத்தம் கவிராச பண்டிதர் சகவீர பாண்டிய னாரிடம் தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வுக்குத் தாமே கற்றுத் தேர்வு எழுதிப் பண்டிதர் பட்டம் பெற்றார். நெல்லை இந்துக் கல்லூரி, சிவகாசி நாடார் உயர்நிலைப் பள்ளி, அண்ணா மலைப் பல்கலைக்கழக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதலிய வற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகம் அமைத்த பேரகராதிக் குழுவில் சேர்ந்து பணிபுரிந்த இவர் பின்னர் 'கீழ்நாட்டுக் கலையாராய்ச்சிக் கழக'த்தில் விரிவுரை யாளராகப் பணிபுரிந்தார்.

'இக்கால தொல்காப்பியர்' என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களாலும், 'யான் தேடிக் கொணர்ந்த தமிழ் மாணிக்கம்' என்று உ.வே. சாமிநாதைய்யர் அவர்களாலும், 'ரெட்டியார் தமிழில் தருக்க நுட்பமும், விஞ்ஞான வரையறையும் ஒவ்வொரு சொற்றொடரிலும் அமைந்திருக்கும், அவருக்கே சிறப்பாய் அமைந்த திறம் இது' என்று தெ.பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களாலும் காவல் தெய்வம்' என்று கா. நமச்சிவாயம் அவர் களாலும் பாராட்டப்பெற்ற அறிஞர் பெருந்தகை வேங்கட ராஜுலு ரெட்டியார்.

வேங்கடராஜுலு ரெட்டியார் பன்மொழிப்புலமை பெற்றவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, ஆங்கிலம், வடமொழி முதலிய மொழிகளில் திறம் மிக்கவர்.

திராவிட மொழியறிஞர், சிந்தாமணிச் செல்வம், பல்கலைக் குரிசில், இலக்கணப் பெருங்கடல் முதலிய விருது களைப் பெற்ற பெருமைக்குரியவர்.

வேங்கடராஜுலு ரெட்டியார் தமிழ் ஆய்வை வாழ்க்கை யாக அமைத்துக் கொண்டவர். எனவே திருமணத்தைப் பற்றி எண்ணிப்பார்க்காமல் இறுதி வரை ஒரு துறவியைப் போல் வாழ்ந்து மறைந்தார்.

விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நடுநிலை உணர் வுடன் ஆய்வு செய்யும் திறம் பெற்றவர் பேராசிரியர் வேங்கட ராஜுலு ரெட்டியார். அவருடைய பரந்துபட்ட பட்டறிவும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளை நுணுக்கமாக விளக்கும் திறமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

வேங்கடராஜுலு ரெட்டியார், இலக்கிய ஆய்வு, இலக் கண ஆய்வு, மொழியியல் ஆய்வு முதலிய துறைகளில் முத்திரை பொறித்தவர். இவருடைய படைப்புகளான கபிலர், பரணர் முதலியவை இலக்கிய ஆய்வைச் சேர்ந்தவை. தொல்காப்பியம் - எழுத்ததிகார ஆராய்ச்சி, இளைஞர் இலக்கணம், அளபெடை ஆராய்ச்சி, ஐகார ஔகாரம், தேவி எனும் சொல், வியங்கோள், இறைச்சிப் பொருள், குற்றியலுகரம்-அசை, சீர் முதலியவை இலக்கண ஆய்வைச் சார்ந்தவை. திராவிட மொழியின் மூவிடப் பெயர், தென் மொழிகள் 1,2 முதலியவை மொழியியல் ஆய்வைச் சார்ந்தவை. இவற்றுள், 'திராவிட மொழியின் மூவிடப் பெயர்' என்ற நூல் தொடக்கக் காலத்தில் மொழியியல் ஆய்வு வளர்வதற்குத் துணை செய்தது எனலாம். இந்நூலில் நூலாசிரியர் வேங்கடராஜுலு ரெட்டியார் தெரிவித்த கருத்துகள் சிந்திக்கத் தக்கன.

மொழியியல் ஆய்வு வல்லுநர்கள் மக்கள் பேசுகின்ற மொழிகளையும் அவற்றில் காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமைகளையும் கருத்தில் கொண்டு மொழி இனங்களைப் பகுக்கின்றனர்.

மொழி இனங்களைக் கண்டறிய தன்மை, முன்னிலை, படர்க்கை முதலிய இடப்பெயர்களும், உறுப்புப் பெயர்களும், உறவுப் பெயர்களும், வினைச்சொல் அமைப்பில் வினைமுடிவும் துணைசெய்ய வல்லன.

இந்தியத் துணைக் கண்டத்தில் வழங்கும் மொழிகளில் வழக்கில் இருக்கும் மொழி இனங்கள் மூன்று. ஒன்று திராவிட மொழியினம், இரண்டாவது ஆரிய மொழியினம், மூன்றாவது

முண்டா மொழியினம். தமிழ், கன்னடம், தெலுங்கு, மலை யாளம், துளு முதலிய மொழிகள் திராவிட மொழி இனங்களைச் சார்ந்தவை. ஹிந்தி, குஜராத்தி, மகாராஷ்டிரம் முதலிய மொழி கள், ஆரிய மொழி இனத்தைச் சேர்ந்தவை. மத்திய இந்தியாவில் வழங்கும் சந்தாலீ, கார்மாலீ, மாஹலே, முண்டாரீ முதலிய மொழிகள் முண்டமொழி இனத்தைச் சார்ந்தவை.

'வடமொழியான சமஸ்கிருதத்தில் இருந்து தான் திராவிட மொழிகள் தோன்றின என்று சிலர் கூறிவந்த நேரத்தில் அந்தக் கருத்தை மறுத்துத் திராவிட மொழிகள் ஆரிய சமஸ்கிருத மொழி யில் இருந்து பிறந்தவை அல்ல என்று, ஆய்வுத் திறன் கொண்டு நிறுவியவர் டாக்டர் கால்டுவெல் ஆவார். அவருக்குத் திராவிட மக்கள் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளனர். அவருடைய மொழி ஆராய்ச்சிக்குப் பிறகுதான் திராவிட மக்கள் தங்களுடைய மொழி களின் தொன்மையைப் பற்றியும் தனித்தன்மையைப் பற்றியும் எண்ணத் தொடங்கினர். இல்லையெனில் போகிற போக்கில் போகின்ற செம்மறியாடுகளாக அலைந்து திரிந்திருப் பர். இவ்வகையில் டாக்டர் கால்டுவெல்லின் ஆய்வுப்பணி திராவிட மக்களின் மொழி உணர்வுக்கும் இன எழுச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம்.

'சமஸ்கிருதம் மட்டும் இன்றி அதனின்று சிதைந்துண்டாய வடமொழிகளோடாவது திராவிட மொழிகளுக்கு யாதொரு தொடர்பும் இல்லை' என்று கேரளபாணினி இராசராசவர்ம கோயிற்றம்பிரானவர்கள் கூறியிருப்பதை ரெட்டியார் மேற்கோள் காட்டி இருக்கிறார்.

தன்மை, முன்னிலை, படர்க்கை முதலிய அமைப்புகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகளில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்க ஒரு கட்டுரை எழுத விழைந்த ரெட்டியார் அவர்கள், பின்னர் இப் பொருண்மையை விளக்கித் தனி நூலாக எழுதினார். இவ்வாய் விற்குத் திராவிட மொழிகள் மட்டுமின்றிக் குயி, ஒராஒன், ப்ரஹூயி முதலிய மொழிகளில் காணப்படும் இலக்கண அமைப் பையும் எடுத்தியம்பியுள்ளார். தமிழ் மொழியில் இருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழிகள் பிறந்தன என்று மொழியியலார் பெரும்பாலோர் கருதுகின்றனர்.

ஆயின் ரெட்டியார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகள் இந்நாட்டில் பண்டுதொட்டு வழங்கி வந்த தனி ஒரு மொழியில் இருந்து பிரிந்தன என்று கருது கின்றனர்.

இங்ஙனம் மொழியியல் ஆய்வில் முன்னோடியாக விளங்கும் பேராசிரியர் வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய 'திராவிட மொழியின் மூவிடப் பெயர்' எனும் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகம் 1939-இல் வெளியிட்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலினை மறுபதிப்பு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறது.

'திராவிட மொழியின் மூவிடப் பெயர்' எனும் இந்நூல் ரெட்டியாரின் பன்மொழிப் புலமையையும் மொழியியல் அறிவையும் அறியத் துணை செய்யும் நூலாகும். இந்நூலுக்கு அறிஞர் பெருந்தகை வையாபுரிப்பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் முன்னுரை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய 'கபிலர்', 'பரணர்', 'திராவிட மொழியின் மூவிடப் பெயர்' முதலிய நூல்களை மறுபதிப்பு செய்ய உரிமை தந்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு முதற்கண் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப., அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினைக் கவினுற அச்சிட்டுத் தந்த 'பாவை அச்சகத் தார்க்கும் இதன் மெய்ப்பைத் திருத்திய நிறுவனச் சுவடிப்புல ஆராய்ச்சி உதவியாளர் திரு. மொ. மருதமுத்து அவர்களுக்கும் நன்றி.

*18.7.98* **இயக்குநர்**

# நூன்முகம்

உலகில் வாழும் மக்கள் வெவ்வேறு இனத்தவராயிருத்தல்போல, அவர்கள் வழங்கும் மொழிகளும் வெவ்வேறு இனத்தனவாயிருக்கின்றன. இக்காலத்தில் பன்னூறு மொழிகள் வழங்குகின்றனவாயினும், மொழி நூலாராய்ச்சியாளர், அவற்றையாராய்ந்து சில இனங்களாக வகுத்திருக்கின்றனர். மொழிகளை இனப்படுத்துதற்குச் சிறந்த ஏதுக்களாவன இன்றியமையாதனவாய் முதற்கண் அமையக்கூடிய பெயர்ச்சொற்களும்(தன்மை முன்னிலை முதலிய இடத்துப்பெயர்களும் உறுப்புப் பெயர் முறைப்பெயர் முதலிய பெயர்களும்) வினைச்சொற்களின் அமைதியும் சொன்முடிபும் இவைபோல்வனபிறவுமாம். இவை, ஒரு வீட்டிற்குச் சுவர் உத்தரம் தூண் முதலியன போன்று, மொழிக்கு மூலமானவை யாகும். இவற்றை நோக்கி, அறிஞர் மொழிகளை வகைப்படுத்தியிருக்கின்றனர்.

நமது தேசத்தில் வழங்கும் மொழிகளை ஆரிய மொழியினம் என்றும், திராவிட மொழியினம் என்றும், முண்ட மொழியினம் என்றும் மூன்றினங்களாகப் பிரித்து வழங்குவர். ஹிந்தி குஜராத்தி மஹாராஷ்ட்ரம் முதலியன ஆரிய மொழியைச் சேர்ந்தவை. தமிழ் கன்னடம் தெலுங்கு மலையாளம் முதலியவை திராவிட மொழியைச் சேர்ந்தவை. மத்திய இந்தியாவில் வழங்கும் சந்தாலீ, கார்மாலீ, மாஹலே, முண்டாரீ முதலிய மொழிகள் முண்டமொழியைச் சேர்ந்தவை. ஆயின், திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளினின்று தோன்றியவையே என்னுங் கொள்கை சிலகாலத்திற்குமுன்வரை, சிலரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனை ஆராய்ந்து, திராவிடமொழிகள் ஆரியத்தினின்று தோன்றினவல்ல என்று பல ஏதுக்களை எடுத்துக்காட்டி நிலைநாட்டியவர் **டாக்டர் கால்டுவெல்** ஆசிரியரே. அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் பணியின்பொருட்டு அவரை எஞ்ஞான்றும் மறவாது பாராட்டுதல் திராவிடமக்களுக்குரியதொரு கடமையாகும். டாக்டர் கால்ட்வெல் கொள்கையை மறுத்து, திராவிடமொழிகள் ப்ராக்ருகத்தினின்று தோன்றியன என்று கூறுவாரும் உளர். ஆயின், '**ஸம்ஸ்க்ருதத்தோடாவது அதனின்று சிதைந்துண்டாய வடஇந்திய மொழிகளோடாவது திராவிட மொழிகளுக்கு யாதொரு தொடர்பும் இல்லை.** ஸப்த

ஸாஸ்த்ரக்காரர் பாஷைகட்குச் சில மஹாவிபாகங்கள் செய்துள்ளவற்றில் ஸிதியன், டார்ட்டார், துரேனியன் என்றும் மற்றும் கூறுகின்ற அநிருக்த ஸ்வரூப்ங்களாகிய பல கிளைகளோடு திராவிட பாஷாவர்க்கத்திற்குத் தொடர்புள்ளதாக வாதங்கள் தோன்றியிருப்பினும் அவற்று **ளொன்றாவது சித்தாந்த நிலைக்கு வந்திலது'** [1] என்று கேரளபாணினி, ஸ்ரீமத் ராஜராஜ வர்ம கோயிற்றம்பிரானவர்கள் கூறியிருப்பது உளங்கொளத் தக்கதாகும் இதனால், திராவிடமொழிகள் ஸிதியன் மொழியைச் சேர்ந்தவை என்று டாக்டர் கால்ட்வெல் கூறியிருப்பது துணிபுடையதன்றாதல் அறியப்படும்.

டாக்டர் கால்ட்வெல் கூறுவதுபோல 'நான் என்னுஞ் சொல் தொன்மையதே யாயினும் அது செய்யுளில் இடம் பெறுதற்குப் பன்னூறாண்டுகளாயின. செந்தமிழாசிரியர்களால் விலக்கப்பட்டு வழக்கில்மட்டும் ஒதுங்கியிருந்த நீம் என்னுஞ் சொல் மீண்டும் செய்யுளில் இடம் பெறுதற்கு நெடுங்காலமாயிற்று. உயர்திணைப்பெயரில் கள்விகுதி சேர்ந்து வழங்கிய காலத்திலன்றே அதுவும் கள்விகுதிபெற்று நீங்கள் என்று வழங்கப்பட்டது? இவ்வாறே வழக்கில் வழங்குஞ் சொற்களுட் சிறப்பில்லாதன சில, செய்யுட்களிற் புகுதற் பலகாலம் ஆகும். [2]அந்தா [3]இந்தா என்னுஞ் சொற்கள் கந்தபுராணத்தில் ஆளப்பட்டிருப்பினும் பெரும்புலவர் பிறரால் மேற்கொள்ளப்பட்டில வன்றே? நிற்க.

தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் இம்மொழிகளிலுள்ள மூவிடத்துப்பெயர்களைக்குறித்து ஒரு கட்டுரை எழுத முதற்கண் எண்ணினேன். பின்னர், திராவிடமொழிகளைப் பெரிதும் ஆராய்ந்து சிறந்ததொரு நூலை எழுதிய டாக்டர் கால்ட்வெல்லின் கொள்கையையும், அக்கொள்கையைப் பின்பற்றியும் மறுத்தும் சிலர் கூறியுள்ள கூற்றுக்களையும் ஆராய்தல் ஆவசியகமாகுமென்று கருதி அவற்றையும் ஆராயலாயினேன். அன்றி, துளு குயி ஒராஒன் ப்ரஹுயி இம்

---

1. கேரளபாணினீயம். பீடிகை. பக்கம். 7.
2. கந்த. அசமுகிப். 17.
3. கந்த. வள்ளியம்மை திருமணப். 35

மொழிகளின் இலக்கணங்களையும் வேண்டுந்துணை நோக்கி னேன். அவற்றுள், டாக்டர் கால்ட்வெல் தன்மையொருமைப் பெயர்களைக் குறித்து எழுதியிருப்பது மிக்க விரிவினதா யிருத்தலானும் அதிற் பல்வேறு மொழிகளின் செய்தி கூறப் பட்டிருத்தலானும், அதனைத் தமிழ் மக்கள் அறிதல் நன்று என்றெண்ணி, அதனைச் சுருக்கி, முதற்கண் எழுதியுள்ளேன். ஆயினும், அது சிறிது பெருகியுளது. அதனை அறிஞர் பொறுக்கு மாறு வேண்டுகிறேன்.

இந்நூலிற் கூறப்பட்ட பொருள்களுட் சில, மீண்டும் வேண்டுமிடங்களில் கூறப்பட்டுள்ளன. அவை அவ்வவ் விடங்க்ளில் பொருள் விளங்குதற்கு இன்றியமையாதனவா யிருத்தலின் அவ்வாறு எழுதப்பட்டனவாதலால் அவற்றைக் 'கூறியது கூறல்' என்னுங் குற்றத்தின்பாற்படுத்தலாகாது.

இந்நூல் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு முதலிய மொழிகளின் தொடர்பினை அறிதற்கு ஒருசிறிது உதவியாகும். இதனால் இம்மொழிகளெல்லாம் இந்நாட்டிற் பண்டுபண்டே வழங்கியதொரு தனிமொழியினின்று பிரிந்தவை என்பது விளங்குதல் கூடும்.

கன்னட மொழியின் ஆதிபுராணம், பஸவபுராணம், குமாரவ்யாஸ பாரதம் இவற்றிலிருந்து எ்டுத்தாண்டிருப்பவற்றை யும் பாணினீய சூத்திரத்தையும் ஸ்ரீமத் H. ஶேஷையங்காரவர் கள் (Junior Lecturer in Kannada, Univeristy of Madras) அறிவித்தார்கள். ஆகலின், அவர்கள்பால் நன்றியறிதலுடை யேன். இந்நூற்றிறத்தில் எனக்கு உதவிபுரிந்த ஏனைய நண்பர் கட்கும் நன்றி பாராட்டுதலுடையேன்.

இந்நூல் 1933-34 ஆம் ஆ்ண்டில் எழுதப்பட்டது. ஆயினும், இப்போது தமிழ் ரீடர், ராவ்ஸாஹிப், திரு. எஸ். வ்வையாபுரிப் பிள்ளையவர்கள் இதனை நோக்கித் தங்கள் கருத்தினைத் தெரிவித்து உதவினார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்து கின்றேன்.

**வே. வேங்கடராஜுலு.**

# I

## உள்ளுறை

**தோற்றுவாய்:**

**திராவிட இனத்து மொழிகள்:**

**தன்மையொருமைப் பெயர்:**

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, துத, கோத, கோண்டு, குயி அல்லது கொந்த், ஒராஒன், ராஜ்மஹல், ப்ரஹுயி.

**கால்ட்வெல் கருத்து:**

திராவிடத் தன்மைப் பெயரின் பழைய வடிவம் நான் என்பதா, யான் என்பதா? - நான் என்பதற்கும் யான் என்பதற்கும் உள்ள தொடர்பு - யான் நான் இரண்டும் தொன்மைய - அதற்கு ஒரு திருஷ்டாந்தம் - தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து யாது? - யான், நான் முதலியவற்றின் இறுதி னகரம் - இறுதி னகரம் பால் காட்டுவதன்று - தன்மை முன்னிலைப் பெயர்களிற் சேர்ந்திருக்கும் உயிர்களும் சுட்டெழுத்துக்களும் ஒரே நியதிய வல்ல.

திராவிடமொழிந்த பிறமொழிகளிற் காணுந் தொடர்பு
ஸெமிடிக் மொழி
சிதியன் மொழி

திராவிடத்தன்மைப்பெயர்க்கு மூலமாகிய ஆகாரத்திற்கு ஜேவெடிக் மொழியினத்ததாகிய **மா** மூலமாகலாம்.

### K.V. சுப்பையா கருத்து:

தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகார ஏகாரங்கட்கு இடைப்பட்ட ஒலியினது - ஆன் என்பது நான் என்றாதல் - தன்மைவிகுதிகள்: அன் விகுதியமைந்தபின்பே அம் விகுதி அமையும்.

### லக்ஷ்மணராவ் கருத்து:

நான் என்பதன் பழைய ஒலி 'ந்யான்' என்பது - ஏன் என்பதுவே முதலுருவம் - தன்மைமையக் குறிப்பது ஏகாரமே.

### தன்மை யொருமைப் பெயரின் ஆராய்ச்சி:

தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து யாது? - தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து ஆகாரம் என்பார்க்கு உள்ள ஆதாரம் - தெலுங்கில் தன்மையொருமைப் பெயர் உருபேற்கு முறை - தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஏகாரமே ஆகாரம் படர்க்கையையும் ஈகாரம் முன்னிலை யையும் ஏகாரம் தன்மையையும் குறிப்பனவாதல் - படர்க்கை முன்னிலை இடப்பெயர்களிலும் சுட்டுக்களிலும் உயிரெழுத் துக்கள் ஒரே நியதியன்வாயிருத்தல் - நான் என்பது ஞான் எனத் திரிதல் - தன்மையில் அன்விகுதிக்கு முற்பட்டது அம் விகுதி என்றல் அமையாமை - தன்மைப்பெயர்க்கு மூலம் **மா** என்றல் அமையாமை - நான் என்னும் பெயரின் அமைதி - ஆன், தன் முன்னின்ற னகரத்தால் நான் என்றாயிற்று என்றல் பொருந்தாமை.

### தன்மைப் பன்மைப் பெயர்:

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, துத, கோத, கோண்டு, குயி அல்லது கொந்த், ஒராஒன், ராஜ்மஹல், ப்ரஹூயி.

### கால்ட்வெல் கொள்கை:

பன்மைப் பெயரிலுள்ள மகரம் **உம்** என்பதனினின்று

அமைந்தது - மனமு என்னும் பெயரின் அமைதி மேமு என்பதன் முதற்கணுள்ள மகரம் இறுதி மகரத்தால் வந்தது.

**தன்மைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி:**

தன்மைப் பன்மைப்பெயர் ஆம் என்பதுவே என்றற்கு ஆதாரம் - பன்மைப்பெயர் ஏம் என்பதுவே - நாம் என்னும் பெயரின் அமைதி - கன்னடமொழியில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப்பெயரில் வேறுபாடு உளதா? -நாம் யாம் என்பவற்றிலுள்ள மகரம் **உம்** என்பதனின்று வந்ததன்று - நாங்கள் யாங்கள் என்பவற்றில் கள் விகுதி.

**தெலுங்கின் பன்மைப்பெயர்:**

மேமு என்பதன் முதலிலுள்ள மகரமும் எண்ணைக் குறிப்பது - மனமு என்னும் பெயரின் அமைதி.

தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் - விகுதிகளின் நியதி.

★★

# II

# முன்னிலைப் பெயர்கள்

**முன்னிலை யொருமைப்பெயர்:**

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, துத, கோத, கோண்டு, குயி அல்லது கொந்த், ஒராஒன், ராஜ்மஹல், ப்ரஹுயி.

**கால்ட்வெல் கொள்கை:**

நீ என்பது ஸிதியன் மொழியோடு தொடர்புடையது.

### முன்னிலை யொருமைப் பெயரின் ஆராய்ச்சி:

முன்னிலை யொருமைப்பெயரின் தொல்வடிவம் நீன் என்பது - தொல்காப்பியனார் கூற்று - கண்டிசின் என்பதுபோன்ற முன்னிலை யொருமைவினையிற் காணும் **இன்** நீன் என்னும் பெயரின் கூறு ஆதல் - வினையெச்சத்தில் உள்ள **இன்** விகுதி - வழக்கில் முன்னிலையிற் காணும் ஏன் விகுதியின் உண்மை வடிவம் - நீன் என்பதன்கண் உள்ள நகரம் - நீன் என்பதில் 'ன்' விலக்கப்பட்டதன் காரணம் - நீய் என்னும் பெயர்.

### தெலுங்குப் பெயர்:

நீவு என்பது நீம் என்பதன் திரிபு.

### முன்னிலை யொருமை விகுதி:

ஐ விகுதியின் உண்மை வடிவம் - ஐ விகுதியின் பொருள் - ஔ (அவ்) விகுதியும் அதன் பொருளும்.

### முன்னிலை யசைச்சொல்:

சின் - கண்டிகின் என்பதில் ககரம் சகரமாய்த் திரிந்ததன் காரணம்.

### முன்னிலைப் பன்மைப்பெயர்:

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, துத, கோத, கோண்டு, குயி அல்லது கொந்த், ஒராஒன், ராஜ்மஹல், ப்ரஹுயி.

### முன்னிலைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி:

முன்னிலைப் பன்மைப்பெயரின் தொல்லுருவம் நீம் என்பது - கால்ட்வெல் கொள்கை பொருந்தாமை - தொல் காப்பியனார் கூற்று - பிரயோக விவேகமுடையார் கூற்று - 'நீயிர்' என்பதன் அமைதி - 'நீர்' என்னுஞ்சொல் - 'நீவிர்' என்னுஞ் சொல்.

**முன்னிலைப் பன்மை விகுதி:**

மகரமெய் முன்னிலைப் பன்மைப்பெயரின் கூறு 'மின்' விகுதி - கால்ட்வெல் கருத்து.

**மின் விகுதியின் ஆராய்ச்சி:**

மின் விகுதியின் அமைதி.

'மோ' விகுதி - கால்ட்வெல் கொள்கை பொருந்தாமை.

முன்னிலையசை - **இகும்.**

கன்னடத்து முன்னிலைப்பன்மை: - நீம் என்பது நீவு என்றாதல்.

தெலுங்கு முன்னிலைப் பன்மை: - மீரு என்னும் பெயர் - கால்ட்வெல் கருத்து.

**மீரு** என்பதன் அமைதி.
**மீரு** என்பதன் ஆராய்ச்சி.
மலையாளப் பன்மை.
துளுமொழிப் பன்மைப்பெயர்.

# III

**படர்க்கைப் பெயர்:**

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, கூயி, ஒராஒன், ப்ரஹுயி.

**படர்க்கைப் பெயரின் ஆராய்ச்சி:**

படர்க்கைப் பெயர் தான், தாம் என்பவை.

படர்க்கைப்பெயருக்கும் சுட்டுப்பொருளுக்கும் உள்ள வேறுபாடு.

# IV

## சுட்டுப் பெயர்

### சுட்டுப் பெயர் :

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, துத, குயி, கோண்டு, ஒராஒன், ப்ரஹுாயி.

### சுட்டுப் பெயரின் ஆராய்ச்சி:

ஒன்றன்பாற் பெயர் :- 'அது' முதலியன்
பலவின்பாற் பெயர் :- அவை முதலியன
அவை' முதலியவற்றின் உண்மை வடிவம்
அஃது முதலியவற்றின் தன்மை
ஆண்பாற் பெயர்: - 'அவன்' முதலியன
ஸி.பி. வெங்கடராமையர் கூற்றுப் பொருந்தாமை.

### தெலுங்குப் பெயர்:

'வாഠடு' என்பதன் அமைதி - தமிழிலும் படர்க்கைப் பெயரோடு 'து' சேர்தல் உண்டென்பது - துவ் விகுதியின் பொருள்.

'அதഠடு', 'ஆதன்' முதலிய பெயர்கள்.

### கன்னடப் பெயர்:

ஆண்பாற் பெயர் னகரவீறே என்பது
பெண்பாற்பெயர் - பெண்பால் தெலுங்கில் அஃறிணைப் பொருள் - திணைப்பாகுபாடு தொன்மையதன்று
பலர்பாற் பெயர் - 'வாண்ட்ரு' என்னுந் தெலுங்குப் பெயர் 'அவந்திர்' என்னுங் கன்னடப் பெயரின் திரிபு.

## V

## சுட்டு

தமிழ் , கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குயி, ஒராஒன், ப்ரஹூயி.

சுட்டுக்கள் ஆ ஈ ஊ என்னும் நெடில் என்பது.

## VI

## வினாப் பெயர்:

**வினாப்பெயர் :**

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, குயி, ஒராஒன், ப்ரஹூயி.

**வினாப்பெயரின் ஆராய்ச்சி:**

தொடர்புடை வினாப்பெயர் - 'யாவன்', 'யாவள்' முதலியவற்றின் அமைதி - தமிழ் 'எவன்' தெலுங்கு 'ஏமி' - எவன், எவம் (ஏம் = ஏமி) என்பனவே தொன்மைய என்பது - கன்னடம் 'ஏன்' - மலையாளம் 'ஏந்து'

வினாப் பெயர்களிற் சேர்ந்திருக்கும் உயிர் ஏகாரம்.
வடமொழிப் பெயரோடு ஒப்பிட்டறிதல்.
சுட்டு வினாக்களின் அமைதிச் சிறப்பு.

## VII

## [1]சுட்டின் அடியிற் பிறந்த சொற்கள்

'ஆங்கு' முதலியவற்றின் அமைதி
'ஆங்கண்' முதலியவற்றின் அமைதி
'ஆண்டு' முதலியவற்றின் தோற்றம்

1. வினாவினடியிற் பிறந்த சொற்கள் சிலவும் எழுதப்பட்டுள்ளன.

'அன்று' முதலியவற்றின் அமைதி - அன்று இன்று என்பன அம் இம் என்பனவற்றினின்று தோன்றியன அல்ல.

'அற்று' முதலியவற்றின் அமைதி.

'அனைத்து' முதலியவற்றின் அமைதி - தெலுங்கு 'அந்த', தமிழ் 'அந்த'

'அந்த', 'இந்த' முதலியவற்றின்திறத்தில் குண்டர்ட் முதலியோர் கொள்கை பொருந்தாமை.

'அம்பர்' முதலியன - 'அந்தோ' முதலியன - 'ஆங்கனம்' முதலியன - பல - சில - பிற - எல்லாம் என்னுஞ் சொல்.

## இந்நூலில் எடுத்தாளப்பட்ட நூல்கள் முதலியன

### தமிழ்

அகநானூறு
அப்பர் தேவாரம்
ஐங்குறுநூறு
கந்தபுராணம் (முன்னுரை)
கம்பராமாயணம்
கலித்தொகை
குறள்
குறுந்தொகை
சிலப்பதிகாரம்
சீவக சிந்தாமணி
சூளாமணி
தனிப்பாடல் - அவ்வையார்
திவ்யப்ரபந்தம்
- இயற்பா
- திருமாலை
- திருவிருத்தம்
- நாய்ச்சியார் திருமொழி
- பெரிய திருமொழி

தொல்காப்பியம்
- இளம்பூரணருரை
- நச்சினார்க்கினியருரை
- பேராசிரியருரை

நற்றிணை
நன்னூல்
- ஆறுமுகநாவலர் காண்டிகை
- சங்கரநமச்சிவாயருரை
- மயிலைநாதருரை

பழமொழி
பிரயோக விவேகம்
புறநானூறு
பெருங்கதை
மணிமேகலை
வீரசோழியம்(அனுபந்தம்)

### கன்னடம்

ஆதி புராணம்
கதா யுத்தம்
கர்னாடக பாஷா பூஷணம்
கவிராஜ மார்க்கம்
காவ்யாவ லோகனம்
குமாரவ்யாஸ பாரதம்
பஶவ புராணம்
பாரதம்
மஞ்சரீ மகரந்த வ்யாக்யானம்
ஶப்தமணி தர்ப்பணம்
ஶப்தாதர்ஶம்
ஶப்தானு ஶாஸனம்

### தெலுங்கு

ஆந்த்ரபாஷா பூஷணம்
ஆந்த்ரஶப்த சிந்தாமணி
ஆந்த்ரஶப்த சிந்தாமணி விமர்ஶனம் (வஜ்ஜல, சின ஸீதா ராமஸ்வாமி ஶாஸ்த்ரிகள்)
ப்ரௌடவ்யாகரணம்
மனுசரிதம்
லஷ்மணராய வ்யாஸாவளி

### மலையாளம்

குண்டர்ட் இலக்கணம்
கேரள கௌமுதி
கேரள பாணினீயம்
கேரளவர்ம ராமாயணம் (குண்டர்ட் இலக்கண மேற்கோள்)
பாஷா நைஷதசம்பு
மஹாபாரதம் (குண்டர்ட் இலக்கண மேற்கோள்)
ராம சரிதம்
லீலாதிலகம்
வ்யாகரணமித்ரம்

### வடமொழி

பாணினீயம்
ஸித்தாந்த கௌமுதி

### ஆங்கிலம்

A Grammar of the Kuvi Language
**by the Rev. F.V.P. Schulze.**

A Grammar of Tulu Language
**buy Rev. T. Brigel**

An Introduction to the Grammar to the Kui or Kandh Language
**by Lingam Letchmajee**

Dravidic Studies Part I
" " II

History of Kannada Language
Kurukh Grammar
**by the Rev. Ferd Hahn**

Linguistic Survey of India
**by the G.A. Grierson.**

Studies in Dravidian philology
The Aryan affinities of Dravidian Pronouns

The Brahui Language
**by Denys Bray**

The Comparative Grammar of the Dravidian Languages
by Rev. Caldwell.

# திராவிட மொழியின் மூவிடப்பெயர்

## தோற்றுவாய்

உலகத்தில் பன்னூறு மொழிகள் வழங்குகின்றவாயினும் அவற்றுட் பலப்பல, தம்முள் தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன. இக்காலத்தில் மொழி நூலாராய்ச்சியாளர், அத்தொடர்பினை நோக்கி, மொழிகளெல்லாவற்றையுஞ் [1]சில இனங்களாக வகுத்திருக்கின்றனர். மொழிகளின் தொடர்பினை அறிதற்கு, அவற்றின் மூவிடத்துப்பெயர்களை நோக்குதல் இன்றியமையாததாகும். என்னெனின், எம்மொழியும் இப்பெயர்கள் இல்லாமல் அமைதல் அரிது. மொழிவழக்கின் தொடக்கத்தில், தன்னை யடுத்துள்ள பொருளைக்குறித்தும், தன் முன்னின்றானைக் குறித்தும், தன்னைக் குறித்தும் சொல்நிகழ்தல் இயல்பன்றே? ஆகலின், படர்க்கை முன்னிலை தன்மைப் பெயர்கள் மொழிவழக்கில் முதற்கண் அமைந்தவற்றுள் ஒரு பகுதிய என்னலாம். அதனால், ஈண்டு அப்பெயர்களைக்குறித்து ஆராய முற்படலாயினேன்.

## திராவிடவினத்து மொழிகள்

[2]தமிழ், [3]கன்னடம், [4]தெலுங்கு, மலையாளம், துளு,

---

1. (1) **இந்து ஐரோப்பிய மொழியினம்** - இவ்வினததில் வடமொழி, க்ரீக் முதலிய மொழிகள் பல சேர்ந்துள்ளன.
   (2) **ஸெமிடிக் மொழியினம்**
   (3) **யூரல் - ஆல்டேயிக் மொழியினம்**
   (4) **காகஸஸ் மொழியினம்**
   (5) **திராவிடமொழியினம்** முதலியன.
2. தமிழ்மொழியின் இனம் - குறவ அல்லது எருக்காலமொழி, இருள, கசு கைகாடி, பர்கண்டி.(இது கைகாடியோடு தொடர்புடையது).
3. கன்னடமொழியின் இனம் - கோலரீ அல்லது ஹோலியா, குறும்ப அல்லது குறும்வாரீ, படக (வடுகு).
4. தெலுங்குமொழியின் இனம் - கோம்டாவு, காமாட்டீ, தாஸரீ, பேரடீ, வட 2, 3, 4 க்ரியர்ஸன் லிங்குவிஸ்டிக் ஸர்வே. வால். IV.

குடகு, துத, கோத, கோண்டு, குயி(கொந்த்), [1]ஒராஒன், ராஜ் மஹால் என்னும் பன்னிரண்டு மொழிகளும் திராவிட மொழி யினம் என்பர்.[2] ப்ரஹுயி என்னும் மொழியிலும் திராவிட மொழியின் தொடர்பு சிறிது அமைந்துளது என அறியப்படு கின்றது. இவற்றுள் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்னும் நான்கு மொழிகளே இலக்கிய இலக்கண வளம் பெற்றுள்ளன. ஆகலின், இவற்றில்மட்டும் பழைய வடிவங் களையும் அறிதல் கூடும். ஏனைய மொழிகளெல்லாம் பேச்சு வழக்கில் மட்டுமே வழங்குதலின், அவற்றில், சொற்களின் பழைய வடிவங்களை அறிதல் அரிது. ஏனெனின், உலக வழக்கில், சொற்கள் நாளடைவில் உருமாறுதல் இயல்பாகும்.

## தன்மையொருமைப் பெயர்

### தமிழ்

இனி, முதற்கண், தன்மைப்பெயர்களை நோக்குவோம்: தமிழ் மொழியில் **யான், நான்** என்னும் இரண்டு சொற்கள், தன்மை யொருமைக்கண் வழங்குகின்றன. அவற்றுள் யான் என்பதுவே பண்டைச் செய்யுட்களில் காண்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனாரும் உயர்திணைப் பெயர்களைக் கூறிய விடத்து, யான் என்னும் பெயர் ஒன்றனையே கூறியுள்ளார்.[3] நன்னூலார், யான் நான் என்னும் இரண்டு பெயர்களையுங்[4] கூறியிருத்தலின், அக்காலத்திற்கு முன்னரே நான் என்னுஞ் சொல் வழங்கியதாகும்.

யான், நான் என்னுஞ் சொற்கள் இரண்டனுள், யான் என்பதுவே, **என்** எனத் திரிந்து, வேற்றுமையுருபுகளை யேற்கின்றது; நான் என்பது உருபுகளை ஏற்றல் இல்லை.

---

1. இது 'குருக்' மொழி என்றும் வழங்கப்படும். (குருக்மொழி யிலக்கணம். நூன்முகம்.) மால்டோமொழி இதனோடு தொடர்புடையது க்ரியர்ஸன் IV பக்கம்.*284*.
2. கால்ட்வெல் இலக்கணம், பக்கம். 6
3. பெயரியல் சூ. *8*
4. நன். பெயரியல். சூ. *28*

தன்மை யொருமை வினைமுற்றில் என், ஏன், அல் என்னும் விகுதிகளே பண்டு வழங்கின. பிற்காலத்தில், அல் விகுதி **அன்** எனத் திரிந்து வழங்குவதாயிற்று. அதனால், நன்னூலார் அன் விகுதியையும் உடன் கூறினார். இவ்விகுதி களைச் செய்தனென், செய்தேன், செய்வல், செய்வன் என்பவை போன்ற சொற்களில் காணலாகும்.

## கன்னடம்

கன்னடமொழியில், **ஆன்** என்னும் பெயர் ஒன்றே பண்டு வழங்கியது. பழைய இலக்கணங்களாகிய [1]'கர்ணாடக பாஷாபூஷணம்', [2]'காவ்யாவலோகனம்', [3]'ஶப்தமணிதர்ப்பணம் என்னும் இந்நூல்களில், இஃதொன்றே சொல்லப்பட்டுளது. ஆயினும், பிற்காலத்து இலக்கணமாகிய 'ஶப்தானு ஶாஸனம்' என்னும் நூலில், 288-ஆம் சூத்திரத்தின் உரையில், உரையாளர், கன்னடமொழியில் **நான்** என்னும் பெயரும் தன்மை யொருமைக்கண் உளது என்று கூறி, **ஆன், நான்** என்னுஞ் சொற்கள் வேற்றுமையுருபேற்ற உருவங்களைக் காட்டி யுள்ளார். அன்றியும் அவர், **உத்தரமார்க்கம்** என்றும் **தக்ஷிண மார்க்கம்** என்றும் மார்க்கம் இரண்டு உள என்றும், அவை [4]நிருபதுங்கன் நூலினால் அறிய வருகின்றன என்றும், அவ் விரண்டு மார்க்கங்களுள் உத்தரமார்க்கத்தைப் பின்பற்றிய பெரும்புலவர்கள் **நான்** என்னும் பெயரை அங்கீகரித்துள் ளனர் என்றும், [5]தக்ஷிணாமார்க்கத்தைப் பின்பற்றியவர்கள் அங்கீகரித்திலர் என்றும் எழுதியுள்ளார்.

முதற்காலத்தாகிய **ஆன்** என்னும் பெயர் **என்** எனத் திரிந்து உருபேற்றது; பிற்காலத்ததாகிய **நான்** என்னும் பெயர் **நன்** எனத் திரிந்து உருபேற்கின்றது. தன்மையொருமை வினை முற்றில் **என்** என்னும் விகுதியொன்றே வழங்குகின்றது.

---

1. சூ. 92
2. ஶப்தஸ்ம்ருதி. சூ. 36
3. 157
4. கவிராஜமார்க்கம். 2:51-53
5. 'ஏன் பக்ஷபாதினோஹி தாக்ஷிணாத்யா: கவிஜநாஇதி'

உ.ம். பந்தெ(ன்) = வந்தேன். இக்காலத்தில் **ஏன்** விகுதி, ஈற்றில் எகரம் பெற்று **ஏனெ** எனவும் வழங்குதல் உண்டு. உ.ம். பருத்தேனெ (= வருகின்றேன்).

## தெலுங்கு

தெலுங்கு மொழியி லுள்ள பழைய காப்பியங்களில், [1]**ஏனு**(ஏன்) என்னும் பெயர் காண்கின்றது. ஆயினும், வழக்கில் நிலைத்திருப்பது **நேனு** என்பதே. இவற்றுள் **ஏனு** என்னும் பெயர் வேற்றுமையுருபேற்றல் இல்லை; **நேனு** என்னும் பெயரே உருபுகளை யேற்கும். அஃது, இரண்டனுருபேற்கு மிடத்தில், நன் எனவும், ஏனைய உருபுகளை யேற்குமிடத் தில், **நன்** எனவும், ஏனைய உருபுகளை யேற்குமிடத்தில், **நா** எனவும் திரிகின்றது. தன்மையொருமை வினைமுற்றில் **நு**-விகுதி வரும்.[2] அஃது, இறந்த காலத்தில் **நி** எனத் திரியும்.[3] சேயுசுன்னா**நு** (செய்கின்றேன்), சேயகல**நு**(= செய்வேன்), சேசிதி**நி** (= செய்தேன்) என்று வரும். இனி, **நி**வ்விகுதி **ந**கரத் தோடு கூடிநின்று சேசிதி**நிந்** என வருதலும் உண்டு.[4]

## மலையாளம்

மலையாளமொழியில், **ஞான்** என்னும் பெயரே வழங்குகின்றது.[5] பழைய மலையாளத்தில் **யான்** என்பதும் உண்டு. வேற்றுமையுருபேற்ற வழி, **என்** எனத் திரிந்த உருவமே உளது. வினைச்சொற்களில் பால் காட்டும் விகுதியைச் சேர்த்து வழங்குதல் இல்லை. செய்யுட்களில் **ஏன்** விகுதி வருதல் உண்டு. [6]உ.ம். கும்பிடுன்**னேன்**.

---

1. 'ஏனு குர்வர்த்த மர்த்திநை.' பாரதம். ஆதி.1.95.
2. பாலவ்யாகரணம்.கிரயாப்கரணம்.சூ.9,10.
3. பாலவ்யாகரணம். கிரயாப்கரணம்.சூ.17.
4. ஆந்த்ரஶப்த சிந்தாமணி விமர்ஶனம். பக்கம். 196.பார.ஆதி.4:108.
5. குண்டர்ட் மலையாள இலக்கணம். பக்.35.
6. பாஷாநைஷத சம்பு. 1.

## துளு

துளு மொழியில், **யான்** என்றும் **யேன்** என்றும் பெயர் வழங்குகின்றது. அது, வேற்றுமையுருபேற்குமிடத்து, **என்** எனத் திரியும். வினைமுற்றுக்களில் **எ** என்னும் விகுதி வழங்குகின்றது.

இனி, **துத** முதலிய மொழிகளில் வழங்குந் தன்மை யொருமைப்பெயர்களை, டாக்டர் கால்ட்வெல் குறித்துள்ள வாறு ஈண்டுக் [1]குறிக்கின்றேன்:

துத மொழியில், **ஆன்** என்னும் பெயர் வழங்கு கின்றது. அஃது உருபேற்குமிடத்து **என்** எனத் திரிகின்றது. வினைமுற்றில் **என், எனி, இனி** என்னும் விகுதிகள் காண்கின்றன.

கோத மொழியில், **ஆனெ** என்று வழங்குகின்றது. அப் பெயர் உருபேற்குமிடத்து **என்** எனத் திரியும். வினைமுற்றில் வழங்கும் விகுதி **எ** என்பது.

கோண்டுமொழியில், பெயர்ச்சொல் **அன்னா**[2] என்று வழங்குகின்றது. அது, வேற்றுமையுருபேற்கும்போது, **நா** எனத் திரியும். [3]**ஆன்** அல்லது **ன** என்பது விகுதியாகக் காண்கின்றது.

[4]குயி அல்லது கொந்த் மொழியில், **ஆனு** என்பது பெயர்ச்சொல்லாக வழங்குகின்றது; உருபேற்கும்வழி, [5]**நா** எனத் திரிகின்றது. வினைச்சொல்லில் **இன், எ** என்பவை விகுதியாகக் காண்கின்றன.

ஒராஒன் மொழியில், [6]**எனன்** என்பது பெயராயுளது. வேற்றுமையுருபோடு கூடியவழி, **என்** எனக் காண்கின்றது.

---

1. கால்ட்வெல் இலக்கணம். பக்கம். 364.
2. நன்னா என வழங்குகின்றது. See Dravidic Studies. No.2.p.9.
3. அன், அ என்பது விகுதி. ,, ,, ,,
4. குயிமொழியிலக்கணத்திலும் ஆனு என்பதே உளது. பக்.11.
5. நன் என்றிருத்தலும் உண்டு. குயிமொழியிலக்கணம். பக்.11.
6. தன்மையொருமைப் பெயர் ஏன் என்பது. அஃது உருபேற்கும்வழி என் என்று திரியும். வினைமுற்றில் அன், என், ஒன் விகுதிகள் உள. (குருக்மொழியிலக்கணம். பக்.18; 34,35).

ராஜ்மஹால் மொழியில், **என்** என்பது பெயராக வழங்கு கின்றது. உருபேற்ற வழி, **ஒன்** (?) எனக் காண்கின்றது.

ப்ரஹு‌ஈயி மொழியில், **ஈ** என்பது பெயராகக் காண் கின்றது; உருபேற்றவழி, **க** அல்லது **கன்** எனக் காண்கின்றது. (இவை ஏனைத் திராவிட மொழிகளின் பெயர்களோடு தொடர் புடையனவாகக் காணவில்லை.)

இப்பெயர் முதலியன எளிதின் விளங்குதற் பொருட்டு ஈண்டு ஒருங்கே குறிக்கின்றேன்:

| மொழிகள் | தன்மை யொருமைப் பெயர் | உருபேற்றவழித் திரிந்த வடிவம் | விகுதி |
|---|---|---|---|
| தமிழ் | யான்<br>நான் | **என்** | என், ஏன்,<br>அல், அன் |
| கன்னடம் | ஆன்<br>நான் | **என்**<br>நன் | என், ஏனெ |
| தெலுங்கு | ஏனு<br>நேனு | நன், நா | நி, நு, நின் |
| மலையாளம் | ஞான் | **என்** | ஏன் |
| துளு | யான்<br>யேன் | **என்** | எ |
| துத | ஆன் | **என்** | என், எனி, இனி |
| கோத | ஆனெ | **என்** | எ |
| [1]கோண்டு | அன்னா | நா | ஆன், ன |
| [1]குயி (கொந்த்) | ஆனு | நா | இன், எ |
| ஒராஒன் | எனன்<br>[2]ஏன் | **என்**<br>**என்** | அன், என்<br>(பெண்), ஒன் |
| ராஜ்மஹால் | என் | ஒன்? | |
| ப்ரஹு‌ஈயி | ஈ | கன் | |

1. இவை வரவரத் தெலுங்குமொழியோடு தொடர்புடையவனாகின்றன. க்ரியர்ஸன். வால். IV. பக்கம். 284.

2. குருக் மொழியிலக்கணம். பக். 18: 34.45

இனி, இவ்வொருமைப் பெயர்களின் திறத்துக் கால்ட்வெல் முதலியோர் எழுதியிருப்பவற்றை நோக்குவோம்:

# 1. கால்ட்வெல் கருத்து

## பழைய வடிவம் நான் என்பதா, யான் என்பதா?

[1]திராவிடமொழியின் தன்மையொருமைப்பெயரினது வடிவத்திற்கு ஈடானது. தமிழிலுள்ள **நான்** என்பது என்று [2]முதற் பதிப்பிற்குட்பட்டது; ஆராய ஆராய, அதனினும் யான் என்பதுவே ஆதாரமுடையதெனப் புலனாயிற்று. நான் என்பதன் இறுதியிலுள்ள னகரமெய் ஒருமையைக் குறிக்க அமைந்தது; ந் + ஆன் முதலிலுள்ள நகரமெய் யாதேனும் ஓராற்றான் இடத்தைக் குறிக்க அமைந்ததாகும். தன்மை முன்னிலைப் பெயர்களிற் சேர்ந்துள்ள அ, இக்களே இடவேறுபாட்டைக் குறிப்பனவா யிருத்தலின், அவையே இப்பெயர்களின் தொல்லுருவம் என்று கருதுதல் கூடும்.

[3] டாக்டர் குண்டர்ட்டு, யான் என்னும் பெயரே நான் என்னும் பெயரினும் தொன்மையது என்று கூறினார். போப்பு, தாம் எழுதிய துதமொழியிலக்கணத்தில், திராவிடமொழித் தன்மைப்பெயரின் தொன்மை வடிவம் உறுதியாக அறிய இயலவில்லை என்றாராயினும், அவர் கருத்தும் குண்டர்ட்டின் கருத்தே. கோவர் (Gover) என்பவர், யான் என்னும் பெயரையே மேற்கொண்டு, யான் என்பதன் கணுள்ள யகரத்தை மூலம் அன்று என நீக்கி, ஆன் அல்லது ஏன் என்னும் வடிவினையே உண்மையான மூலம் என்றார். இவ்விருவர் கூற்றுக்களையும், தன்மையொருமைப் பெயர்களுள் நான் என்பதனினும் யான் என்பதுவும், யான் என்பதினினும் ஆன் என்பதுவும் தொன்மையன என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

## தொன்மையது யானா, ஆனா?

[4] **ஆன்** என்பது யான் என்று திரிதலினும், யான் என்பது

1. பக்கம், 364, 365.
2. மூன்றாம்பதிப்புப் பக்கம்.364.
3. பக்கம். 365.
4. 365, 366.

ஆன் என்று திரிதல் எளிமையும் இயல்பும் ஆகும். யாவர் என்பது யார் என்றாகிப் பின்னர், அதுவே ஆர் என்று திரிந்துளது. யாண்டு என்பது ஆண்டு என்று திரிந்திருத்தலும் நோக்கத்தகும். ய என்பது எ என்று எளிதில் திரிவதுபோல அ என்றும் எளிதில் திரிதல் இயற்கையே. யாவர் என்பது யார் என்றும் ஆர் என்றும் திரிதலோடு, எவர் என்றும் திரிகின்றது. இவற்றால், ய என்பது எளிதில் திரியுந் தன்மையது என்பது விளங்கும். ஆதலின், யான் என்பது ஆன் என்று ஆகும்.

## நான் என்பதற்கும் யான் என்பதற்கும் உள்ள தொடர்பு

[1] **நான்** என்பதனினும் யான் என்பதுவே தொன்மையது எனத் தோன்றுகின்றது. ஆனால், நான் என்பதுவும் மிகப் பழமையதே என்று கருதுகின்றேன். தமிழிலும் மலையாளத்திலும் யகரம் நகரமாதல் ஒருசார் வழக்கு. தமிழில், (பழமையதாகிய) [2]சொல்லிய என்பது சொல்லின, சொன்ன என்று திரிந்துவருதலை உதாரணமாகக் காட்டுதல் கூடும். ஆனால், இதில் வருதல்போல, பக்குவிட் டிசையாமைப் பொருட்டு நகரம் வருதல் மிகப் பழைய காலத்தே உளதாகலின், இது நேரிய உதாரணமாகாது. மேற்குறித்த வழக்கினை அறுதியாக நிலை யிடுவது தற்பவ உதாரணமே. வடசொற்களுள் யுகம் என்பது தமிழில் நுகம் என்றும், யம என்பது செய்யுட்களில் ஞமன், நமன், எமன் என்றும் வருகின்றது. இவற்றில் யகரம் திரிந்துளது. இவற்றால், தொன்மையதாகிய யான் என்பது ஓராற்றான் நான் என்றும், மற்றோராற்றான் ஆன் அல்லது ஏன் என்றும் திரியும் என்பது அறியப்படும். இத் தன்மைப் பெயர் உருபேற்குமிடத்து **என்** என்று நிற்கின்றது. **நான்** என்பது

---

1. *366, 367*

2. யகாரம் நகாரமாதல் கூடுமாயினும், சொல்லிய சொன்ன என்பவற்றில் யகாரம் நகாரமாய்த் திரிந்துளது என்றல் பொருந்துவதன்று. சொன்ன என்பது சொல்லின என்பதன் மரூஉ. ஆகலின், இது பழைய செய்யுட்களில் காணப்படவில்லை. சொல்லிய என்பது, பகுதியோடு இறந்த காலத்தைக் குறிக்கும் இகரம்மட்டுஞ் சேர்ந்த சொல். சொல்லின என்பது, அவ்விகரத்தோடு னகரமெய்யும் சேர்ந்த சொல். இத்துணையே வேறுபாடு. இரண்டிலும் ஈற்றகரம் பெயரெச்சப்பொருளதாகும்.

**என்** எனத் திரிதலினும் **யான்** என்பது என் எனத் திரிதல் நேரிதாகலின், **என்** என்பது யான் என்பதன் திரிபாகும். யா என்பது எ எனத் திரிதல் பெருவழக்கு. **யா**வர் - **எ**வர்; **யா**ங்கு - **எ**ங்கு. வடசொற்கள் தமிழில் வருமிடத்து, அவற்றின் யகரம் எகரமாகத் திரிகின்றது. **ய**ந்த்ர - எந்திரம். **ய**ஜமான் - **எ**சமான். யான் என்பது நான் எனத் திரிதற்கு இடைப்பட்ட வடிவம் ஞான் என்பது. அது மலையாளத்தில் வழங்குகின்றது. யகரத்தைச் சிறிதளவு மூக் கொலியாக ஒலித் தால் ஞகரமாகும். அவ்வொலி சிறிது அழுந்தின் நகாரமாகும்; அதுவே ஙகார மகாரங்களாதலும் கூடும்.

## யான், நான் இரண்டும் தொன்மைய

[1]**நான்,** நேனு, ஞான் என்னும் பெயர்களின் முதற்கணுள்ள நகரம் அல்லது ஞகரம், திராவிடமொழிகள் பலவற்றிலும் வினைவிகுதிகளில் மறைந்துபோகின்றது; ஈற்றிலுள்ள னகர மெய், ஒரோவழிக் கெடுவதாயினும், நிலைத்திருக்கின்றது. முதலிலுள்ள நகரம் அல்லது ஞகரம் யாதொருமொழியிலாதல் வினைவிகுதிகளில் காணப்படுதல் இல்லையாயினும், நான் என்பதன் முதற்க ணுள்ள நகரம் பிற்காலத்தில் தோன்றியது என்றற்கு ஆதாரம் சாலாது. நான் என்பது யான் என்பதன் திரி பாகலாம். ஆயின், அது மிகப் பழைய காலத்திலேயே நேர்ந் திருக்கலாம். ஆகவே, யான் நான் என்னும் இரண்டு பெயர்களும் ஒருங்கே வழங்கி வந்திருக்கக்கூடும். அதனால், பழையது எது, புதியது எது என்பது ஆராய்தல் வேண்டுவதன்று. இவ்விரண் டனுள், திராவிட மொழியிலுள்ள தொல்லுருவத்திற்கு மிக நெருங்கிய வடிவம் யாது என்பதுவே ஆராயவேண்டுவது. தமிழில் பழைய இலக்கண நூலில் யான், நான் என்னும் இரண்டு பெயர்களும் காண்கின்றன. உருபேற்குமிடத்து, ஒருமைப்பெயர் **என்** என்றே காணப்பட, பன்மைப்பெயர் **எம்** அல்லது **நம்** என்று காண்கின்றது. தெலுங்கு, புதிய கன்னடம், குயி, கோண்டு, இம்மொழிகளில் ஒருமைப்பெயர் நா, அல்லது நன் என்று திரி கின்றது; மலையாளத்தில் ஞான் என்பதன் ஞகரம் உரு பேற்கும் வழிக் கெட்டுவிடுகின்றது. துளுவில் பன்மைப்பெயர் நம என்று காண்கின்றது. தெலுங்கில் பன்மைப் பெயராகிய மேமு

---

1. 367,368

என்பது நேமு என்பதினின்று அமைந்தது. இவற்றால், குயி மொழியும் தமிழும், கோண்டும் மலையாளமும் தனித்தனி மொழியாகப் பிரிதற்கு முற்பட்ட பழைய காலத்தில், நான் என்பதுவும் யான் என்பதுவும் ஒருங்கே வழங்கின என்று அறியலாகும்.[1]தமிழில் மிக்க பழமைய எனப்படும் இலக்கி யங்கள் ஆயிர யாண்டுகட்கு மிக முற்பட்டன அல்ல. ஆனால், மூவாயிரயாண்டுகட்கு முன்னர், யான் என்பதைப் போலவே நான் என்பதுவும் வழங்கியது என்று அறுதியிடலாம். ஆயினும், அக் காலத்தும் நான் என்பது இரண்டாம் வடிவமாயும், யான் என்பதுவே முதல் வடிவமாயும் உண்மையதாயும் இருந்தன எனத் தோன்றுகின்றது. இவ்வுண்மையை ஓர் எடுத்துக்காட்டால் நிறுவுதல் கூடும். வேதத்தில் **அஸ்மே** (நாம்) என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அதனை யொட்டி, க்ரீக் மொழியிலும் **அம்மெஸ்** என்று வழங்குகின்றது. பிற்காலத்து வடமொழி நூல் களில், அஸ்மே என்னுஞ் சொல்லிற் கீடாக **வயம்** என்பதுவே காண்கின்றது. இதுபற்றி, வயம் என்பது பிற்காலத்தது என்று விரைவில் அறுதியிடுதல் கூடாது. என்னெனின், அச்சொல்லின் பகுதியாகிய **வா** அல்லது **வே** என்பதை ஜெண்டு (Zend) மொழியிலுள்ள **வஏம்** என்பதிலும், கோதிக்மொழியிலுள்ள **வெஇஸ்** என்பதிலும் காண்கின்றோம். அந்தக்காலம், ட்யூட் டானிய வகுப்பினர் கிழக்கினின்று பிரிந்துபோதற்கும் முற்பட்ட காலம் - கால வரலாறு அறியமுடியாத காலம் - ஆகும். மேற் கூறிய உதாரணத்தால், ஒரு சொல்லின் பழைய வடிவிற்கு ஈடாக மற்றொரு வடிவம் மக்களால் வழங்கப்பட்டு வரினும், அப் பழைய வடிவமும் அழியாமல் நிலைநிற்கும் என்பது அறிய லாகும். ஆகலின், ஒரு வடிவத்தின் தொன்மை, மற்றொரு வடி வத்தின் தொன்மையை மறுத்தற்குத் தக்க காரணமாகாது.

[2]டாக்டர் போப், நான் என்பதன் முதற்கணுள்ள நகரம் பிற்காலத்தில் சேர்ந்தது என்று கருதினும், நீன்(நீ) என்பதன் முதற்கணுள்ள நகரம் சொல்லின் மூலமானது என்பதில் ஐய மின்று என்று கருதுகின்றார். நீ என்னும் பெயர் உருபேற்கு மிடத்து, அப்பெயரின் முதற்கணுள்ள நகரம் பெரும்பாலும்

---

1. இக்காலத்து ஆராய்ச்சியாளர், தொல்காப்பியமும் சங்க நூல்களும் ஏறக் குறைய இரண்டாயிரம் யாண்டுகட்கு முற்பட்டவை என்பர்.

2. பக்கம். 369.

மறைந்துவிடுகின்றது; வினைவிகுதிகளிலும் காணவில்லை. அப்பெயர் துளுவில் **ஈ** என்றும், தெலுங்கிற் செய்யுட்களில் **ஈவு** என்றும்(நகரமின்றி) வழங்குகின்றது. இவ்வாறிருப்பவும், அவர் அந் நகரமெய், சிறிதும் ஐயமின்றி, சொல்லின் மூலமாயது என்பாராயின், **நான்** என்பதன் முதலிலுள்ள நகரம் சொல்லின் மூலமன்றாயினும், அது, மிகப் பழைய காலத்திலேயே இருந்தது என்று நாம் அறுதியிட லாகாதோ?

## தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து யாது?

[1]பழமையவாகிய திராவிடப் பெயர்களிற் சேர்ந்திருக்கும் உயிர் அகரமா, எகரமா என்று ஆராய்வோம்: தமிழ் மலை யாளங்களில் பன்மைக்கண் சில்வழிக் காணும் ஓ என்பது ஆம் என்பதிலுள்ள ஆகாரத்தினின்று தோன்றியதாகும். பெரும்பாலன வாகிய மொழிகளில், வேற்றுமையுருபேற்குமிடத்தும் வினை விகுதிகளிலும் **என்** என்று காணப்படுதலின், **ஏன்** என்பதுவே பெயராகும் எனத் தோன்றுகின்றது. பழைய தெலுங்கில் வழங்கும் **ஏனு** என்பதுவே அதற்குத் தக்க சான்றாகும். ஆயின், தென் னிந்தியாவிலுள்ள சீர்திருந்தாத மொழிகளிலும், பலவற்றில், நான் அல்லது ஆன் என்னும் பெயரே வழங்குகின்றது. எல்லா மொழி களிலும் - முக்கியமாகத் திராவிட மொழிகளில் - அகரம் எகர மாதல் இயல்பு. எந்த உயிரெழுத்துத் தொன்மையது, எந்த உயிரெழுத்து மரூஉ என்பதை வடமொழித் தற்பவங்களில் எளிதின் அறியலாகும். யகரம் எகரமாதலை மேலே காட்டி யுள்ளோம். மற்ற மெய்யெழுத்துக்களிலும் இவ்வாறு திரிதல் உண்டு. ஜப-செபம்; பல- பெலம். தன்மைப் பெயரின் முதல் வடிவம் **யெ** என்பதுவே என்றும், **ய** அன்று என்றும் டாக்டர் குண்டர்ட்டு கருதுவதாகத் தெரிகின்றது. ஆயினும் அவர், **எ** என்பது **அ** என்பதன் மற்றொரு வடிவம் என்று ஒப்புக் கொள்கின்றார்.

## [2]யான், நான் முதலியவற்றின் இறுதி னகரம்

[2]யான், நான் முதலிய பெயர்களின் இறுதியிலுள்ள னகரம்

---

1. பக்கம். 369.
2. 369, 370.

சொல்லின் மூலமாய தன்று. அஃது அப்பெயர்களின் முதற் கணுள்ள நகாரத்தினும் நிலைபேறுடையதாயினும், பன்மைக்கண் அறவே நீக்கப்படுகின்றது. பன்மையைக் குறிக்க, **உம்** என்னும் இடைச்சொல்லிலுள்ள **ம்** வருகின்றது. அது(ம்), னகரத்தோடு சேர்ந்திருத்தல் இல்லை. னகரம் சொல்லின் உறுப்பாயினும், இடத்தைத் தெளிவிப்பதாயிருப்பினும் அதனோடு மகரத்தைச் சேர்த்தெழுதுதல் வேண்டும். அவ்வாறன்றி, னகரத்திற்கு ஈடாக மகரத்தைச் சேர்க்கின்றோம். நான், நாம்; நீன், நீம்; தான், தாம் என்பவற்றை நோக்கின், இறுதி **ன்** ஒருமையைக் குறிப்பது என்பதும், **ம்** பன்மையைக் குறிப்பது என்பதும் தெளிவுறும். இவற்றால், னகார மகாரங்கள் இடத்தைக் குறிப்பன அல்ல என்றும், எண்ணைக் குறிப்பனவே என்றும் அறியலாகும்.

## னகரம் பால் காட்டுவதன்று

[1]**நான்** என்பதன் ஈற்றிலுள்ள னகரமெய் எண்ணைக் குறிப்பதுபோலப் பாலையுங் குறிப்பதா? அஃது ஆண்பால் விகுதிகளாகிய **அன், ன்** என்பவற்றோடு தொடர்புடையதா? தன்மை முன்னிலைப் பெயர்கள், இயல்பில் ஆண் பெண் இருபாற்கும் பொதுவாகும். ஆயின், இந்து ஐரோப்பிய மொழி களில், அவை வேற்றுமையுருபினை ஏற்கும்பொழுது ஆண் பாலுக்குரிய வடிவினை அடைகின்றன. திராவிட மொழிகளில் தன்மை முன்னிலைப் பெயர்க்கண் உள்ள னகரமும், அப் பெயர்களிற் பாலைக் குறித்தல்போன்று பாலைக் குறிப்ப தென்றோ, இன்னோசையின் பொருட்டுச் சேர்ந்ததென்றோ சொல்வது பொருத்தமன்று. இதுவும், தமிழ் மலையாளங் களில் ஒருமைப்பெயரில்(உரன், உரம்) காணும் அன் என்பதும் ஒன்றே என்று கொள்வது பொருந்தும். இறுதி னகரத்தின் தோற்றம் எவ்வாறாயினும், அது மிகப் பழையகாலத்திலிருந்தே பெயர் களில் சேர்ந்து வழங்கிவருகின்றது.

[2]நா, யா அல்லது ஆ என்பது தன்மைக்கும், நீ, யீ அல்லது ஈ என்பது முன்னிலைக்கும் தொல்லுருவமாகும் என்று

1. பக்கம். 370.
2. 371, 372

கொண்டால், இவ்விரண்டிடங்கட்கும் உள்ள முக்கிய வேறுபாடு அ(ஆ?) ஈ என்னும் உயிரெழுத்தில்தான் உளது. முதற்க ணுள்ள மெய்யெழுத்து இரண்டிடங்கட்கும் பொது. அவற்றோடு சேர்ந்த அகரம் தன்மையையும், இகரம் முன்னிலையையும் குறிக்கின்றன. இந் நியதி காரணமின்றி அமைவுற்றிராது. தன்மை முன்னிலை களிலுள்ள உயிரெழுத்துக்களும் சுட்டிலுள்ள உயிரெழுத்துக் களும் ஒருதன்மைய வல்ல. ஒரு தன்மைய வாயின், அகரச்சுட்டு அண்மையையும் இகரச்சுட்டுச் சேய்மையையுங் குறித்தல் வேண்டும் அல்லது, ஆ - முன்னிலையையும், ஈ - தன்மையையும் குறித்தல் வேண்டும். அவ்வாறு இல்லை. ஆகலின், சுட்டெழுத் துக்களின் நியதியைக்கொண்டு தன்மை முன்னிலையிலுள்ள **ஆ ஈ** க்களின் மூலத்தை அறிதல் அரிது.

[1]முதலுயிரெழுத்துத் தன்மையையும், இரண்டாமுயி ரெழுத்து முன்னிலையையும் குறிப்பவை என்று கொள்ளலாம். சீனமொழியில் அ இக்கள் முறையே தன்மை முன்னிலைகளின் தொல்லுருவம் என்று எட்கின்ஸ் என்பவர் கூறுகின்றார். தமிழ் மலையாளம் முதலியவற்றிற் காணும் உகரமும் தொன்மையதே யாகலாம். ஆகவே, முதன் மூன்றுயிர்களும் தன்மை முன்னிலை படர்க்கைகட்கு வழங்கின என்று கொள்ளல் வேண்டும். (அ - நான்; இ - நீ; உ - அவன், அவள், அது.)

## திராவிடம் ஒழிந்த பிற மொழிகளிற் காணுந் தொடர்பு

[2]உலகிலுள்ள மொழிகள் எல்லாவற்றிலும் தன்மை யொருமைப் பெயரை ஆராயின், அவை இரண்டு மூலங்களி னின்று அமைந்தனவாதல் புலனாகும். அவ்விரண்டாவன வடமொழியிலுள்ள **அஹ், ம** என்பன.

## ஸெமிடிக் மொழி

[3]ஸெமிடிக் மொழிகளுக்கும் திராவிட மொழிக்கும் இப்பெயரில் (நா) ஒற்றுமை காண்கின்றது. ஹீப்ரு - அனீ -

1. 373.
2. பக்கம் 373.
3.. 374.

அனோகி; எகிப்து - அனுக்; பாபிலோனியன் - அனகு, ஆனக, அன்கு. ஜெவிஷ்ஸிரியக் - அனா; கிறிஸ்டியன் ஸிரியக்-எனோ; எதியோபிக் - அனா; அரபிக்-அ்னா. அரமயிக்மொழியில் பன்மைப் பெயராகிய அனான் என்பதனோடும், எகிப்தில் பன்மைப் பெயராகிய அனென் என்பதனோடும் தமிழிலுள்ள நாம் என்பதனை ஒப்பிடலாம். ஸெமிடிக் ஸர்வநாமத்திற்கும் திராவிட ஸர்வநாமத்திற்கும் தெளிவான ஒற்றுமையிருந்த போதிலும், அது தற்செயலாக அமைந்ததன்று என்பது ஐயமாயுளது. தன்மையில் காணும் **அன்** என்பது, முன்னிலையிலும் படர்க்கையிலும் காண்கின்றது. தன்மைப்பெயரிலிருந்து இதனை (அன் என்பதை) நீக்கிவிடின், எஞ்சிய வடிவம் வடமொழி, க்ரீக், லத்தீன் முதலியவற்றோடு தொடர்புடையதாய்க் காணும். இஃது (அன்) இன்னோசைக்காக வந்தது என்று கருதுதல் உண்மையாகுமாயின், இதற்கும் திராவிட மொழியிலுள்ள **நா** அல்லது **அநா** என்பதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

[1]இனி, திராவிடங்களில் **ஞ ந அ** ஆகவும் திரியும் **ய** வ்வோடு, இந்து ஐரோப்பிய மொழிகளில் ந ஆகவும் வ அ ஆகவுந் திரியும் **ம** வ்விற்குத் தொடர்புளதோ என்று ஆராய்வோம்:

இந்து ஐரோப்பிய மொழிகளில், ம-ந ஆகத் திரிதலுண்டாகலின், அந்த மகரத்தோடு திராவிட மொழியிலுள்ள நகாரத்தை ஒப்பிடுவதாயின் ஐயத்திற்கு இடமில்லை. ஆயின், திராவிடத்தில் பழமையானது **ய** ஆதலின், பிற்பட்ட நகாரத்தை ஒப்பிடுதல் தகாது எனின், இந்து ஐரோப்பிய மொழிகளில் ந, வ, அ, என்பவை மகரத்தைப்போற் பழமையன வாயிருத்தல் போல, திராவிடத்திலும் நகாரம் யகாரத்தைப்போற் பழமையதே என்க. இந்து ஐரோப்பிய மொழிகளில் மகரத்தின் திரிபாகிய வடிவங்களுள் **ய** என ஒன்று இல்லை. இனி, மகரமும் இந்து ஐரோப்பிய மொழிகட்கே உரியதன்று; சிதியன் மொழிக்கும் உரியதாகும். **ஞ** ஆகத் திரியும் **ய** என்பதுவே பண்டு திராவிடர் வழங்கிய வடிவினதாகலாம்.

---

*1. 379*

## [1] சிதியன் மொழி

[2](1) சிதியன் மொழிகளிலுள்ள தன்மை யொருமைப் பெயர் ம- என்பதிலிருந்து தோன்றியதுவே. **ம, ங்க** என்றும் **ந** என்றும் திரிந்து திராவிடப்பெயரை ஒத்துளது. என்னை யெனின், **ம**, நகாரத்தோடு சேர்ந்து **மன்** என்று(வடமொழி அனுஸ்வாரம் போன்று) இருக்குமாகலின், திராவிடத்தி லுள்ள நான் என்பதனோடு மிக நெருங்கிய ஒப்புமையை யுடையதாகும். இந்து ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வாறு னகரம் சேர்தல் உண்டு. இம் மெல்லோசை, சிதியன் மொழி களில் மிகுதியாகவும் சிறப்பாகவும் காணப்படுகின்றது. துருக்கி யினத்தைச் சேர்ந்த கிழக்குத் துருக்கியில் - **மென்;** டர்க் கொமன்-மான். பின்னிஷ் இனத்தில் பின்னிஷில்-**மினா;** லரப்பிஷ் - **மொன்;** மாக்யர்-ஏன்.

[3](2) இவ்வினத்து மொழிகளிலும் மகரம் நகரமாகத் திரிதல் உண்டு. பின்னிஷில் தன்மையொருமைப்பெயர் **ம** அல்லது **மினா** என்பது. இது வேற்றுமைத்தொகையில் இசா**னி** (= **என்** தந்தை) என்றும், வினையில் ஒலே**ன்** (=**நான்** இருக் கிறேன்) என்றும் இருத்தலை நோக்கின், மகாரத்துக்கீடாக நகாரம் இருத்தல் அறியப்படும்.

மாக்யர் மொழியில் தன்மையொருமைப்பெயராக ஏன் என்பது உளது. இது, தமிழ் கன்னடம் இவற்றிலுள்ள ஏன், என் என்னுஞ் சொற்களோடு ஒப்பிடத்தக்கது.

சிதியன் மொழிகள் சிலவற்றின் ஸர்வநாமங்கள் திராவிட மொழியின் ஸர்வநாமங்களோடு ஒத்துள.

| | | |
|---|---|---|
| க்யூஅஸிகுமுக் மொழியில் | | - ந |
| மொதொர் | ,, | - நெ |
| கொரியன் | ,, | - ந அல்லது நஇ (நய்) |
| பாஸ்க் | ,, | - நெ அல்லது நி |

1. பக்கம். 380
2. இது தனிமொழியினம் அன்று என்பர்.
3. பக்கம். 381, 382, 383

கிழக்கு ஆசியமொழிகளில் **க்ந்** அல்லது **ந்க்** (ng) என்பது, ந் என்பதற் கீடாக வழங்குகின்றது. தமிழ் மலையாளங்களில் ந், ஞ் இவை மாறிவருதல் போன்று, சிலவிடத்து, **ந், க்ந்** தம்முள் ஒன்றற்கொன்று மாறிவருகின்றது.

காண்டன் சீன்மொழியில் - **ந்கொ**
பழைய சீனமொழியில் - **ந்க, க, கொ, கன், அ.**

பர்மிய மொழியில் **நா** அல்லது **ந்கா** (Nga) திபெத்திய மொழியில் எழுத்துவழக்கில் **நா** என்றும் பேச்சுவழக்கில் **க்ந்யா** என்றும் வழங்குவன ஒப்பிடத் தகுவன. வடகிழக்கு எல்லைப்புறத்திலும் மத்ய இந்தியமொழியாகிய கோல்ஸிலும், அங்க், உங்க், இங்க், அஇங்க் என ங்க் ஈற்று மொழிகள் காண் கின்றன. திபெத்தின் **நா**, (வழக்கில்) **ந்க** என்பவற்றோடு மலையாளத்திலுள்ள **ஞா** என்பதனை ஒப்பிடுதல் கூடும். அவ்வாறாயின், சீன மொழியிலுள்ள **ந்கொ** ஏன்பதும் தொடர் புடையதாகும்.

[1]*(3)* **ந**, அல்லது **ந்க** என்பது, **ய** அல்லது **அ** ஆகத் திரியும். அல்லது, **ந, ந்க** என்பவற்றிற்கு ஈடாக **ய**வ்வும் **அ**வ்வும் வழங்குகின்றன என்னலாம். இவற்றை, கிழக்கு ஆசிய மொழி களிலுள்ள **யா, யாஹ், யெர், ஆ** என்பவற்றினின்று கண் டறிதல் கூடும்.

சிதிய இனத்திலுள்ள தன்மையொருமைப்பெயரின் வடிவங்களுக்கும் திராவிடமொழியிலுள்ள தன்மையொருமைப் பெயரின் வடிவங்களுக்கும் ஒற்றுமையுளது என்று அறுதி யிடுதற்குக் காரணங்கள் உள. மேலும், சிதியன் மொழியின் (ம, ந,ப,ந்க, ய) உருவங்களும், இந்து ஐரோப்பிய மொழியின் ( ம , வ, ந, அ) உருவங்களும் வேறொரு பொதுமூலத்தினின்று தோன்றியிருத்தல் வேண்டும். அவ் விரண்டினத்தின் உருவங் களோடு திராவிட மொழியின் உருவங்கள் (ய, ந, அ) ஒத்திருத் தலை நோக்கின், அவற்றோடு தொடர்புடையது என்றல்

---

1. பக்கம். 383.

முறையாகும். இதனைமேற்கொள்ளின், இத்தன்மை யொருமைப் பெயர் - பெரும்பாலும் மா என்பதாகலாம் - சிதியன் இனத்திலிருந்து இந்து ஐரோப்பியக் குடிகள் பிரிந்து போனதற்கு முன்னர்ப் பொதுவாயிருந்த ஜேவெடிக் இனத்தினரது என்று அறுதியிடுதல் பொருந்தும் எனத் தோன்றுகின்றது.

## உ. கே.வி. சுப்பையா கருத்து

### தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகார ஏகாரங்கட்கு இடைப்பட்ட ஒலியினது

இனி, கே.வி.சுப்பையா அவர்கள் எழுதியிருப்பவற்றின் கருத்தாவது: பழைய தெலுங்கு, குருக், மால்டோ இம்மொழிகளில் தன்மையொருமைப் பெயரில் அடங்கியுள்ள உயிர் ஏகாரமாகும்; மற்றைய மொழிகளில் ஆகாரமாகும்.[1] இடைக்காலத் தமிழ், பிற்காலக்கன்னடம் இம் மொழிகளில் முதற்கண் நகாரஞ் சேர்ந்துளது. இந்த நகாரம் ஈற்று னகாரத்தால் வந்ததாகும்[2]. தன்மையிடத்தைக் குறிப்பது அவ்விரண்டும்(ஆ, ஏ) அல்ல எனத் தோன்றுகின்றது.[3] என்னை யெனின், மூலத் திராவிட மொழியிலுள்ள ஆகாரமும் ஏகாரமும் தமிழ் முதலிய மொழிகளில் திரிந்து வரவில்லை[4] அதனால், பண்டைக்காலத்தில் தன்மை யொருமைப்பெயர் ஆகார ஏகாரங்களுக்கு இடைப்பட்ட ஒலியுள்ளதாயிருந்திருத்தல் வேண்டும்.[5]

### ஆன் என்பது நான் என்றாதல்

[6]உயிரெழுத்தினை யடுத்து யாதேனும் ஒரு மெல்லெழுத்து இருப்பின் அதன் ஒலிபற்றி, அவ்வுயிரெழுத்தும் மெல்லொலி பெறுவதாகும். இவ்வொலி, பேச்சு வழக்கில்

---

1. Dravidic Stidies No. 2. Page 12
2. ,, ,, ,, 20.
3. ,, ,, ,, 15.
4. Dravidic Stidies No. 2. Page 14
5. " " " 15
6. " " " 21, 22

மட்டும் அறியப்படும். இத்தகைய ஒலியினைக் குறித்தற்கு வரி வடிவம் இல்லை. ஆகலின், அதனை எழுதும்பொழுது உயிரெழுத்தோடு கூடிய மெல்லொலியை முதற்கண் ஆக்கி எழுதுவர். **ஆ** என்பது நா, அல்லது **ஞா** என்று எழுதப்படும். பேச்சு வழக்கில் இருந்த மெல்லோசை சில காலத்தின் பின் கெடும்; உயிர்மெய்யெழுத்தாகவே வழங்கலாகும். இவ் வுண்மை அடியிற்காணும் உதாரணத்தாலும் அறியப்படும்.

| **தெலுங்கு** | **கன்னடம்** | **தமிழ்** | **மலையாளம்** |
|---|---|---|---|
| ஈ௦து | ஈஜு | நீந்து | நீந்து |
| ஈ௦கு | ஈகு | நீங்கு | நீங்ஙு |
| எண்ட்ரி | ஏடி, எண்ட்ரி | ஞெண்டு, நண்டு | ஞெண்டு |

தெலுங்கு மொழியிலுள்ள ஈ௦து, ஈ௦கு என்பவையே நீந்து, நீங்கு என்றாயின என்பது நன்கு விளங்குமன்றே?

இனி, தமிழில் காண்கின்ற யான் என்னும் பெயரில், யகாரம் எவ்வாறமைந்ததோ எனின், [1]தமிழ் முதலிய மொழிகளில் எ ஏ இ ஈக்கள், யெ யே யி யீக்கள் போன்று ஒலிக்கப் படும். அதனால், யான் என்பதன்கண் யகரம் தோன்றுவதாயிற்று.

[2]தன்மை யொருமை விகுதிகளுள் அல் என்பது அன் என்று ஆயிற்று. அல் விகுதி எதிர்காலத்திற்கே வரும் என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். பழைய மலையாளத்திலும் அன்விகுதி எதிர்காலத்திற்குரியதாகவே கூறப்படுகிறது. ஆதலின், அதுவும் (அகரமும்), எதிர்காலங் காட்டும் பகர வகரங்களின் வன்மையான் அமைந்ததுவே. அன் விகுதியமைந்த பின்பே அம் ஆம் என்னும் பன்மை விகுதி அமைபவாயின.

---

1. Dravidic Studies. No. 2. Page 16.
2. " " " 33.

# 3. லக்ஷ்மணராவ் கருத்து

இனி, ஸ்ரீ லக்ஷ்மணராவ்காரு தெலுங்கு மொழியில் எழுதியிருக்குங் கட்டுரையின் கருத்தினைச் சுருக்கி ஈண்டுக் குறிக்கின்றேன்:

## நான் என்பதன் பழைய ஒலி ந்யான் என்பது

தெலுங்கு மொழியில் நேன் என்பதுவே வழக்கில் உளது. அது, முதல் வேற்றுமையில் நேன் என்றும், மற்றைய வேற்றுமைகளில் நான் அல்லது நன் என்றும் உளது. இதனை நோக்கின், முதலுருவம் நான் என்பது எனவும், அது நேன் என்று மாறிற்று எனவும் தோன்றும். ஆயின், ஆராயந்தறியு மிடத்து, நான் என்பது ந்யான் என்று ஒலித்திருத்தல் வேண்டும் என்று தோன்றுகின்றது.[1] ஏன் என்பது, முதல் வேற்றுமை தவிர ஏனைய வேற்றுமைகளில் வழக்கிறந்தது. ஏமு என்னும் பன்மைப்பெயரும் இவ்வாறு வழக்கொழிந்தது.[2]

## ஏன் என்பதுவே முதலுருவம்

திராவிட மொழிகளுட் சிலவற்றில் ஏன் என்னும் பெயரும், சிலவற்றில் நான் என்னும் பெயரும் உள்ளன.[3] தன்மை யொருமைக்கண் இரண்டு பெயர்கள் மூலபாஷையில் வேண்டுதல் இல்லை; ஒன்றே அமையும்[4] இவற்றை நோக்கு மிடத்து, ஏன் என்பதுவே முதலுருவம் எனவும், நான் அல்லது நேன் என்பது பிற்பட்டது எனவும் தோன்றுகின்றது. நான் என்பது தமிழ்ச்செய்யுட்களிலும் பண்டு இல்லை; கன்னடத் திலும் முதலில் இல்லை. ஆயின், ஏன் என்பது பண்டே உளது. குயி, கொலாமி, குருக், மால்டோ இம்மொழிகளில் நான் என்பது இன்றளவும் இல்லை; ஆன், அல்லது ஏன் என்பது உளது. தெலுங்கில், பழைய செய்யுட்களில் ஏன் என்பது

1. லக்ஷ்மணராய வ்யாஸாவளி. பக்கம் 137.
2. ,, ,, 138.
3. ,, ,, 143.
4. ,, ,, 144.

காண்கின்றது.[1] அதுவே சிறப்பினதாகக் கொள்ளப்படுகின்றது. இவற்றால், மூல திராவிடமொழியில், முதலில் ஏன் என்ப தொன்றேயிருந்தது என்று கொள்ளுதல் தகும். ஆயினும், யான் ஆன் நான் என்பன வழங்குதலின், ஏன் என்பதன்கணுள்ள உயிர் ஆகார ஏகாரங்கட்கு இடைப்பட்டதாகும். நெடுங் கணக்கு ஏற்படும்போது இலக்கணம்வல்லோர் அவ்வொலியை மேற்கொள்ளாது விட்டிருப்பர்[2]. நான் என்பது ஏகாரம் பெற்று நேன் என்று தெலுங்கில் மட்டுமே வழங்குகின்றது. ஆதலின், முதற்கண் ந்யான் என்று இருந்திருக்கலாம்[3]. ஏன் என்னும் பெயரே முன்னிற்கும் னகாரத்தால் முதற்கண்ணும் நகாரம் பெற்று நேன் என் றாயிருக்கலாம்.[4] இவ்வாறே முன்னிலை யில் முதல் வடிவமாகிய ஈன் என்பதுவும் முதற்கண் நகாரம் பெற்று நீன் என்று ஆகியிருக்கிறது. பண்டு, தன்மையைக் குறிப்பது ஏகாரமே;[5] முன்னிலையை ஈகாரமும், படர்க்கையை ஆகாரமும் குறிப்பன[6] எனத் தோன்றுகிறது.

இனி, இத்தன்மை யொருமைப் பெயரின் உண்மைத் தன்மையை ஆராய்வோம்:

---

1. லக்ஷ்மணராய வ்யாஸாவளி, பக்கம் 146.
2. ,, ,, 147.
3. ,, ,, 148.
4. ,, ,, 149.
5. ,, ,, 150.
6. இது சரியான ஏகாரமாயின்றி, ஆ ஏக்களுக்கு இடைப்பட்டது என்று கூறியுள்ளார். பக்கம். 150.

# தன்மையொருமைப்பெயரின் ஆராய்ச்சி

## தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து யாது?

தன்மையொருமைப்பெயர், தமிழில் யான் நான் என்றும், துளுவில் யான் என்றும், பழங்கன்னடத்தில் ஆன் என்றும், புதுக்கன்னடத்தில் நான் என்றும், துளுவில் யான் என்றும், தெலுங்கில் நேன் (நேனு) என்றும், மலையாளத்தில் ஞான் என்றும் வழங்குகின்றாதாகலின், இப் பெயரின் தொல் வடிவம் யாது என்பது முதற்கண் ஆராய வேண்டுவதா யுளது.

மேலே கூறியிருப்பவற்றால், யான் நான் ஞான் என்னும் பெயர்களின் முதற்க ணுள்ள மெய்யும் இறுதிக் கணுள்ள மெய்யும் நீங்குந் தன்மைய என்பது அறியப்படும். ஆகலின், அவை இப்பெயரைக் குறிப்பனவாகா. அம் மெய் களைப் போல் நீங்காது, நிலைத்திருக்கும் எழுத்து யாதோ அதுவே இப் பெயரைக் குறிப்பதாகும். அவ்வாறு நிலைத் திருக்கும் உயிர் ஆகாரம் என்று சிலர் கூறுவர். அவர் கொள்கைக் குள்ள ஆதாரங்களை நோக்குவோம்:

## தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரம் என்பார்க்கு உள்ள ஆதாரம்

திராவிட மொழியினங்களுள், தமிழ், கன்னடம், மலை யாளம், துத, கோத, கோண்டு, குயி இவ்வேழு மொழியிலும் தன்மைப் பெயர்க்கண் ஆ என்னும் உயிரெழுத்தே சேர்ந்துளது. தெலுங்கு மொழியில் வழங்கும் நேனு என்னும் பெயரில் ஏகாரவுயிர் சேர்ந்திருப்பினும், அப் பெயர் உருபேற்கும்வழி, **நன்னுன்**, **நாசேத**, **நாகு**, **நாவலன**, **நா**, **நாய்ந்து** எனத் திரிந்த வற்றில், நன் அல்லது நா என்பதுவே காணுதலின், அதன் உண்மைவடிவம் நான் என்பதுவே யாகும். நான் என்பதுவே

நேன் (நேனு) என்று திரிந்துளது. இவ்வாறு, தமிழில் சொல்லின் முதற்கண் உள்ள ஆகாரம் தெலுங்கில் ஏகாரமாய்த் திரிதல் காணலாம்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| யாண்டு | ஏண்டு |
| யாறு | ஏறு |
| யாடு | ஏட |
| ஆள் (வினைச்சொல்) | ஏலு |

என்பன உதாரணங்களாகும். லக்ஷ்மணராவ்காரு, தமது கட்டுரையில், 'நேனு எனத் தெலுங்கில் முதல்வேற்றுமையில் மட்டுமே காணப்படுதலானும், ஏனைய வேற்றுமையுருபொடு கூடுமிடத்து நான் என்பதன் வடிவமே வழங்குதலானும் நான் என்பதுவே தொன்மை வடிவம் எனத் தோன்றுகின்றது (பக்.137.) என்றது ஈண்டு அறியத்தகும். இவற்றால், தெலுங்கு மொழியிலும் தன்மையொருமைப்பெயரில் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து ஆகாரமே என்று துணியலாகும். துளுமொழியில், **ஏன்** என்று சிலர் வழங்கினும் [1]துளு இலக்கணநூலில் யான் என்பதுவே குறிக்கப்பட்டிருத்தலின், அம் மொழியிலும் பெயரிற் சேர்ந்திருப்பது ஆகாரவுயிரேயாகும். இவற்றால், ஒராஒன், ராஜ் மஹால், ப்ரஹுயி என்னும் இம்மூன்று மொழிகளொழிந்தனைத் திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரமேயாதல் துணியப்படும். அன்றியும், திராவிட மொழிகளில் முன்னிலைப் பெயராய் வழங்கும் நீ நின் நீவு முதலிய சொற்களிளெல்லாம் ஆகாரவுயிரே சேர்ந்திருத்தலின், தன்மைப்பெயர்க்கண் ஆகாரவுயிரே சேர்ந்திருத்தல் வேண்டும். என்னையெனின், முதலுயிரெழுத்தினைத் தன்மைக்கும், இரண்டாமுயிரெழுத்தினை முன்னிலைக்கும் கொள்ளுதலே முறைமையாகும். இனமொழியில் அகரம் தன்மையையும், இகரம் முன்னிலையையுங் குறித்தல் ஈண்டைக்கு ஒப்பிடத்தகும்.

1. துளு இலக்கணம். பக்கம்.33.

இவை, தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரம் என்பார்க்கு ஆதாரமாகும். இனி, இக்கொள்கையை ஆராய்வோம்:

பழங்கன்னடம் முதலிய மொழிகளில் தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரமேயாகும் எனின், அம் மொழிகளில் அப்பெயர், வேற்றுமையுருபேற்கும்போது அன் என்றன்றே திரிதல் வேண்டும்? அவற்றுட் பெரும்பாலன வாகிய மொழிகளில் என் என்றே யிருத்தலானும், வினை விகுதிகளில் என் என்பதுவே காணுதலானும் அது பொருந் தாதாகும்.

## தெலுங்கில், தன்மையொருமைப்பெயர் உருபேற்கு முறை

ஆயின், தெலுங்கில் தன்மையொருமைப்பெயர் இரண்டனுருபினை யேற்ற வழி **நன்** என்றும், ஏனைய உருபு களையேற்ற வழி **நா** என்றும் திரிதலின், அப் பெயர் நான் என்பதுவே என்று கொள்ளப்படுமாகலின், அதிற் சேர்ந்திருக் கும் உயிர் ஆகாரமே எனின், அன்று. தெலுங்கு மொழியில் **ஏனு**(ஏன்) என்பது பழமையான பெயராயும் சிறப்பினதாயும் உளது. உருபேற்கும்வழி அது, முதல குறுகி, [2]அகரஞ் சேரப் பெறும். அதன் பின்னரே [3]ஏனைய உருபுகள் சேரும். இரண்ட

---

2. இவ் வகரம் ஆறனுருபு எனத் தோன்றுகின்றது. என்னையெனின், ஆறன்பொருளில் வேறு உருபு வருதல் இல்லை. 'யொக்க' என்னுஞ் சொல்லை ஆறனுருபொன்று இலக்கணநூல்கள் கூறினும், பண்டைச் செய்யுட் களில் அது யாண்டும் வந்திலது; பிற்காலத்தும் ஒரோவழி அருகியே வருகின்றது; வழக்கிற் பயில்வதின்று. கன்னடத்திலும் துளுவிலும் ஆறனுருபு அகரமே. தமிழிலும் ஆறனுருபு பன்மைப்பெயரை ஏற்கும் வழி அகரம் வருமன்றே?

3. தெலுங்கில் ஸர்வநாமம் ஒழிந்த பிறபெயர்களுள்ளும் ஒருமைப் பெயரோடு ஆறனுருபாக இகரமும்(நி என்று இலக்கணம் கூறும்), பன்மைப் பெயரோடு அகரமும் சேரும். அதன்பின்னரே ஏனைய உருபுகள் சேரும். ஆறனுருபாக, பின்னர் வேறு உருபு வருதல் இல்லை. உதாரணம் - ராமுனி, ராமுல என்பன. இவற்றோடு பிறவுருபுகள் சேரும்.

னுருபாகிய **ன்** (னு) சேருமிடத்து **எனன்** என்றும் **எனன்னு** என்றும் ஆகும். அவை முறையே **நன்** என்றும் **நன்னு** என்றுந் திரிந்துள்ளன; ஏனைய உருபுகள் சேர்ந்தவழி, **என** என்பது **நா** என்று திரிந்துளது என்று கோடல் அமையும். இனி, நேனு என்பது நான் என்று திரிந்த பின், உருபேற்கும்வழி இவ்வாறா யிற்று என்றலும் ஆம். இவற் றால், தெலுங்கு மொழியிலும் தன்மைப் பெயரில் ஆகாரம் சேர்ந்திலது என்பது அறியலாகும்.

## தன்மைப் பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஏகாரமே

தன்மையொருமைப்பெயர், தெலுங்குமொழியில் பழைய செய்யுட்களில் ஏன் என்று வழங்குதலானும், உருபேற்ற வழித் தமிழ் பழங்கன்னடம் மலையாளம் துளு துத கோத இம்மொழி களில் என் என்று காண்டலானும், இம் மொழிகளில் வினை விகுதிகளாய் என் அல்லது ஏன் என்பதுவே யிருத்தலானும், குயி மொழியில் **இன்** என்றும் தெலுங்குமொழியில் **நின்** என்றும் காணப் படும் விகுதியும் **என்** என்பதன் திரிபாகும் எனல் அமையு மாகலானும், ஏன் என்பதுவே பெயராதல் அறியப்படும். அன்றியும், தமிழ்மொழியில், [1]பொய்யனேன் [2]அடியனேன் என்பவற்றில் பொய்யன் அடியன் என்பவற்றோடு, தன்மை யொருமையைக் குறிக்க ஏன் என்னும் பெயர் சேர்ந்திருத்தலும், அவ்வாறே [3]கிளைஞரேம், [4]பெண்டிரேம் என்பவற்றில்; கிளைஞர் பெண்டிர் என்பவற்றோடு தன்மைப்பன்மையைக் குறிக்க ஏம் என்னும் பெயர் சேர்ந்திருத்தலும், கன்னட மொழியில், [5]'தௌ ஹித்ர**னெ**னா' என்னுமிடத்து தௌஹித்ரன் என்பதனோடு **என்** என்பது தன்மையொருமைக்கண் சேர்ந்திருத்தலும் மேற் கொள்கையை வலியுறுத்தும்.

---

1. திருமாலை.33
2. பெரிய திருமொழி. 5.8:3; கம்ப. உருக்காட்டுப்:23.
3. புறம். 144.
4. குறுந். 181.
5. சப்தமணி.2.

[1]டாக்டர் கால்ட்வெல்லும், வேற்றுமையுருபேற்றவழி **என்** என்று காண்டலின், **ஏன்** என்பதுவே பெயராகும் என்று கருத்துக் கொண்டார். [2]கேரள பாணினீய ஆசிரியர் தன்மைப் பெயரின் தொல் வடிவம் **என்** என்பது என்று கூறியுள்ளார். லஷ்மணராவ்காரும் **ஏன்** என்பதுவே முதலுருவம் என்றார். டாக்டர் குண்டர்ட்டும் தொல்வடிவம் **ய** அன்று, **எ** என்பதுவே என்றார். இவற்றால், தன்மைப்பெயரிற் சேர்ந் திருக்கும் **உயிர் ஏகாரமே என்பது அறிஞர் பலருக்கும் உடன்பாடாயிருத் தலும் நன்கு அறியப்படும்.**

## ஆ - படர்க்கையையும், ஈ - முன்னிலையையும், ஏ - தன்மையையும் குறித்தல்

ஆயின், உயிரெழுத்துக்களுள் இரண்டாமெழுத்து (இ, ஈ) முன்னிலைப் பெயரிற் சேர்ந்திருத்தலின், முதலெழுத்தே (அ,ஆ) தன்மைப்பெயரிற் சேர்ந்திருத்தல் வேண்டும் எனின், அது முறைமையாகலாமாயினும், முதலுயிரைப் படர்க் கைக்கும் இரண்டாமுயிரை முன்னிலைக்கும் வழங்குதலும் முறைமையாகலாமன்றே? பிற்காலத்தில், பன்மையைக் குறிப்பதாகக் கொண்ட ரகர மெய்யை முதலுயிராகிய அகரத் தோடு சேர்த்து அதனைப் (அர்) படர்க்கையிலும், இரண்டா முயிராகிய இகரத்தோடு சேர்த்து அதனை (இர்) முன்னிலை யிலும் விகுதியாகக் கொண்டுள்ளதனை நோக்கின், இம் முறைமை தெளிவுறும். வடமொழியில் படர்க்கையிடத்தைப் 'ப்ரதம புருஷ:' (முதற் புருஷன்) என்று வழங்குதல் ஈண்டைக்கு ஒப்பிடத்தகும். ஆயின், மூன்றா முயிரெழுத்தினைத் (உ, ஊ) தன்மைக்கண் வழங்கியிருத்தல் வேண்டும்: அவ்வாறன்றி, நான்காமுயிரை (எ, ஏ) வழங்கியதற்குக் காரணம் என்னை யெனின், கூறுவேன். அகரம் சேய்மையிடத்தையும், இகரம்

---

1. கால்ட்வெல். பக்கம். 369.
2. கேரளபாணினீயம். சூ. 52.

அண்மையிடத்தையும், உகரம் இவ்விரண்டற்கும் இடைப் பட்ட நடுவிடத்தையும் குறிப்பனவாகலின், முதன் முதலில் அகரத்தைப் படர்க்கைப் பொருட்கும், இகரத்தை முன்னிலைப் பொருட்கும், உகரத்தை அவ்விடைப்பட்ட விடத்துப் பொருட்கும் வழங்கி, தன்மைப்பொருட்டு (நான்கா முயிராகிய) எகரத்தை வழங்கியிருப்பர். நாளடைவில், சேய்மையண்மை கட்கு இடைப்பட்ட இடத்தின் வழக்கு ஒழிந்து போதல் கூடும். சுட்டுப் பெயர்களுள் உகரச் சுட்டுப் பெயர் நெடுங் காலத்திற்கு முன்னரே திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் வழக்காறற்றுப் போயினமை ஈண்டு எண்ணத்தகும். இவற் றால், ஆகாரத்தினையுடைய [1]தான் தாம் என்னும் படர்க்கைப் பெயர்களும், ஈகாரத் தினையுடைய நீன் நீம் என்னும் முன் னிலைப் பெயர்களும், ஏகாரத்தினையுடைய ஏன் ஏம் என்னுந் தன்மைப் பெயர்களும் நிலைத்திருப்ப, ஊகாரத்தினையுடைய பெயர்கள் பண்டே வழக்காற் றிருக்கும் என்று கொள்ளுதல் கூடும். ஏகாரம் தன்மைமையும் ஈகாரம் முன்னிலையையும் ஆகாரம் படர்க்கையையும் குறிப்பன என்று லஷ்மணராவ்காரு எழுதியிருப்பது, ஈண்டு நோக்கற்பாலது. இதுகாறும் கூறிய வற்றால், படர்க்கைப்பெயர்களில் ஆகாரமும், முன்னிலைப் பெயர்களில் ஈகாரமும், தன்மைப் பெயர்களில் ஏகாரமும் சேர்ந்துள்ளன என்பது விளங்கும். தெலுங்கிலுள்ள **நேனு** என்னும் பெயராலும் இது வலியுறும். ஆகலின், சுட்டுக் களும் படர்க்கை முன்னிலை தன்மைப் பெயர் களும் ஒரே தன்மையில் அமைந்துள்ளன என்பது போதரும். கால்ட் வெல், ஆகாரவுயிர் தன்மைக்கண் உளது என்று கொண்ட த னால், இவை ஒரு நியதியனவாக இல்லை என்பாராயினர்.[2]

இனி, மூலத்திராவிடத்திலுள்ள ஏன் என்பது தமிழில் யான் என்று வழங்கினமைக்குக் காரணம் யாது எனின்,

---

1. இவையே படர்க்கைப் பெயராதல் முன்னர் அறியப்படும்.
2. கால்ட்வெல், பக்கம். 372.

கூறுவேன். மொழி முதற்கண் எ எக்கள் யெ யேக்கள் போன்று ஒலித்தல் உண்டு. தெலுங்கு மொழியில், [1]மொழிமுதற்கண் எகரம் யெகரமா யொலிக்கும் என்பது இலக்கண நூலால் அறியப்படுகின்றது. இ ஈ எ ஏ நான்குமே யி யீ யெ யேக்களாய் ஒலிக்கும் என்றார் கே.வி. சுப்பையர். ஆகலின், [2]ஏன் என்பது யேன் என்று ஒலிக்கும். அதுவே நாளடைவில் யான் என்று ஒலிக்கப்படுவதாயிற்று. [3]துளு இலக்கண நூலில், பெயர்க்கண் **யான்** என்னும் வடிவமும் உருபேற்றவழி **யென்** என்னும் வடிவமும் குறிக்கப்பட்டுள்ளன. ஆயின், துளுமொழியினர் பலரை யான் வினாவிய போது, அவர்கள் **யேன்** என்பதுவே பெயர்என்றும், யான்என்பது இழிசினர் வழக்கென்றும் கூறினர். இவ்வாறே, தொல்காப்பியனார் காலத்திலாதல் அவருக்கு முற்பட்ட காலத்திலாதல் தமிழருள் சிலர் யேன் என்றும், பலர் யான் என்றும் ஒலித்திருப்பர். அவற்றுள் யான் என்பதனை இலக்கண நூலார் மேற்கொண்டிருத்தல் கூடும்.

## நான் என்பது ஞான் எனத் திரிதல்

யகரம் ஞகரமாகத் திரிதல் உண்டாதலின், யான் என்பது ஞான் எனத் திரிதல் கூடுமாயினும், நான் என்பதுவே ஞான் என்று திரிந்துளது என்றல் அமைவுடையதாகும். [4]கேரள பாணினீயத்தில், யான் என்பது நான் என்று திரிந்தது என்றும், நான் என்பதுவே பின்னர் ஞான் என்று ஆயிற்று என்றும் கூறப்பட்டுள்ளது. தமிழ் முதலிய மொழிகளில் நகர முதன் மொழியா யிருப்பவை. மலையாளமொழியில் ஞகர முதன் மொழியில் ஞகர முதன்மொழியாயிருத்தல் இதனை வலி யுறுத்தும்.

---

1. 'அத்ய : க்ரியாஸு பூதார்த்த த்யோதிநம் ஆத்யகம் விநாஸர்வ:'
(ஆந்த்ர ஶப்த சிந்தாமணி. 1:17)
2. யா, யாழ என்பவை எ, ஏழ என்பனவற்றின் திரிபாகும்.
3. பக்கம். 37.
4. சூ.52.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு | மலையாளம் |
|---|---|---|---|
| நாங்கூழ் | - | - | ஞாங்கூழ் |
| நாணல் | - | - | ஞாணல் |
| நாறு | நாறு | நாறு | ஞாறு |
| நாவல் | - | - | ஞாவல் |
| நெரி | - | - | ஞெரி |
| நெருக்கம் | - | - | ஞெருக்கம் |
| நொடி | - | - | ஞொடி |

என்று வழங்குகின்றன.

ஞான், நான் என்னுஞ் சொற்களிலும் யான் என்னுஞ் சொல் பழமையதே. ஆயின், இது, இவ்வெல்லாவற்றிலும் தொல்வடிவம் ஏன் என்பதுவே என்னுங் கொள்கையோடு மாறுபடுவதன்று.

மூலத்திராவிடமொழியில் **ஏன்** என்று இருந்த பெயர், தமிழில் **யான்** என்று திரிந்ததுபோல, பழங்கன்னடம் முதலிய மொழிகளில் **ஆன்** என்று திரிந்திருத்தல் கூடும்.

## தன்மையில் அம் விகுதிக்கு முற்பட்டது அன் விகுதி என்றல் அமையாமை

கே.வி.சுப்பையர், தமது கட்டுரையில், தமிழில் **அல்** விகுதி **அன்** விகுதியாகத் திரிந்த பின்னரே **அம்** விகுதி ஏற்பட்டது என்று எழுதியுள்ளார். அல் விகுதியே தன்மைக்கண் அன் விகுதியாகத் திரிந்தது என்பது [1]இளம்பூரணாருரையினால் அறியப்படுகின்றது. ஆனால், அன் விகுதி தன்மை

1. வினையியல். 6. உரை.

யிடத்தில் ஏற்பட்ட பின்னரே அம் விகுதி ஏற்பட்ட தென்றல் பொருந்துமாறில்லை. என்னெனின், தொல்காப்பியனார், தன்மை விகுதிகளைக் கூறியவழி, அல் விகுதியைக் கூறியுள்ளாரேயன்றி, அன் விகுதியைக் கூறினாரல்லர்; ஆயினும் அம் விகுதியைக் கூறியுள்ளார். இதனால், தொல் காப்பியனார் காலத்தில், தன்மைக்கண் அன் விகுதி இல்லா திருக்கவும், அம் விகுதியிருந்தமை அறியப்படும். னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் குறிப்பவாகலின், ஒருமை விகுதியாகிய அன் விகுதி அமைந்த பின்னரே பன்மை விகுதியாகிய அம் விகுதி அமைந்திருக்க வேண்டும் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆயின், தன்மைக்கண் அன் விகுதி யில்லாத கன்னட மொழியில், அம் விகுதியிருத்தற்குக் காரணம் யாது? நாம் ஏன்னும் பன்மைப் பெயரின் திரிபாகிய அம் என்பதுவே வந்துளது என்று கோடல் அமைதி.

## கால்ட்வெல் கொள்கை (தன்மைப் பெயர்க்கு மூலம் மா என்றல் அமையாமை)

கால்ட்வெல், தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரம் என்று கருதி, அதன் மூலவடிவினைக் கண்டறிய எண்ணி, பல்வேறு மொழிகளை ஆராய்ந்து திராவிடத்தன்மைப் பெயர்க் கெல்லாம் மூலமாயது ஜேவெடிக் இனத்தாருடைய மொழியி லுள்ள [1]மா என்பது ஆகலாம் என்றார்; ஸிதியன்மொழி யைச் சார்ந்த மாக்யர் என்னும் மொழியில் ஏன் என்பது தன்மைப் பெயராய் வழங்குகின்றது என்று கூறினார். அவ் வாறாயின், அதுவன்றோ திராவிடத்தன்மைப் பெயரோடு ஒத்தது? அன்றியும், அவர் எல்லாமொழிகளிலும் உள்ள தன்மைப் பெயர்க்கு [2]மூலமாயிருப்பவை அஹ், ம என்னும் இரண்டே யாகும் என்றார். மேல், யான் கூறியவாறு தன்மைப்பெயர்க்கு மூலம் ஏகாரமே என்பது கொள்ளப்படுமாயின், ஆகாரவுயிர் மூலமன்றாமாதலின், அதுபற்றி, கால்ட்வெல் கூறியன

1. கால்ட்வெல், பக்கம். 383.
2. கால்ட்வெல். பக்கம்.373.

பொருந்தா என்பது போதரும். படர்க்கை, முன்னிலை, தன்மை என்னும் இடத்துப் பெயர்களுக்கும், சுட்டு வினாக்களுக்கும் முதல் நான்கு உயிர்கள் மூலமாயிருக்கும் அமைதியும், ஒருமை பன்மைகளுக்கு முறையே னகர மகரங்களைக் கொண்டுள்ள ஏற்பாடும் கால்ட்வெல் காட்டிய பிற எந்த மொழியினத்திலும் காணப் படவில்லை. இவ்வமைதி திராவிட மொழிக்கு ஈடும் எடுப்பும் இல்லாததொரு தனிச்சிறப்பாகும் என்று [1]அறிஞர் கூறியுள்ளனர். ஆகலின், மாக்யர் மொழியிலுள்ள ஏன் என்பது தற்செயலாயமைந்த ஒற்றுமையேயாகும். அல்லாக்கால், அம்மொழியில், பன்மையில் ஏம் என்பதுவும், முன்னிலைக் கண் ஈன் அல்லது நீன் என்பதுவும், ஈம் அல்லது நீம் என்பதுவும், படர்க்கைக்கண் தான் அல்லது ஆன் என்பதுவும், தாம் அல்லது ஆம் என்பதுவும் இருத்தல் வேண்டுமன்றே? அவை அவ்வாறு இல்லை.

## நான் என்னும் பெயர்

நான் என்னும் பெயர் யான் என்னும் பெயர்போன்று தொன்மையதே என்று கால்ட்வெல் கூறினார். அவர், பழைய இலக்கணநூல் என்று குறித்தது நன்னூலையே. தொல்காப் பியத்தையும் சங்க நூல்களையும் அறிந்திருப்பாராயின், **யான்** என்பதுவே பழையது என்று எளிதிற் கண்டிருப்பார். திராவிட மொழிகளுள் நூல்வளம் பெற்ற, தமிழ் கன்னடம் முதலிய மொழிகளில், நான் என்னும் பெயர் பண்டு வழங்கியதாக அறியப்படவில்லை; ஆயின், தெலுங்கில் நேன் என்னும் பெயர் வழங்கியிருத்தல் கூடும். தெலுங்கர், ஒருமையைக் குறிக்கும் நகரத்தை முதற் கண்ணுஞ் சேர்த்து வழங்குதலே முறை என்று கருதி, (ந் + என் = நேன்) நேன் என்னுஞ் சொல்லை அமைத்து வழங்கியிருக்கலாம் எனத் தோன்று கின்றது. அவ்வாறே, பன்மையைக் குறிக்கும் மகரத்தைத் தன்மைப் பன்மைப்பெயரில் முதற்கண் அமைத்து மேமு (ம் + ஏம்) என்றும், மனமு என்றும், முன்னிலைப் பன்மைப் பெயரில் முதற்கண் அமைத்து **மீ**ரு (ம் + ஈர்) என்றும்

---

1. கால்ட்வெல். பக்.426; கேரளபாணினீயம். 52. உரை.

வழங்கினராவர். இவ்வமைதி அநாவசியகம் என்று ஏனையோர் மேற்கொள்ளவில்லையெனல் தகும். அதனானே, பன்மையைக் குறிக்கும் மகரத்தை முதற்கண் பெற்ற மேமு, மன்மு, மீரு என்னும் பெயர்கள் இன்றளவிலும் தெலுங்கொழிந்த ஏனைத் திராவிடங்களில் வழங்காவாயின போலும். ஆயின், [1]நான் என்னும் பெயரொன்று மட்டும், தன்னைப் புறக்கணித்திருந்த தமிழ்மொழியில் சங்ககாலத்தையடுத்த காலத்திலேயே புகுந்து ஒதுங்கி நின்று, நாளடைவில் இடம் பெற்று, பழமையதாகிய யான் என்பதனையும் வழக்கினின்றொழித்து, தானே அரசு செலுத்துதலையும், இவ்வாறே பிற்காலத்தில் கன்னடத்திலும் புகுந்து, பழமையதாகிய ஆன் என்பதனை அறவே ஒழித்து, தனிக்குடை தாங்கி, தமிழிற் போலப் பெயரளவில் மட்டும் நிற்றலின்றி உருபுகளை ஏற்று வழங்குதலையும் நோக்கின், [2]'அங்காடி மேய்ந்த, பழங்கன்றேறாதலும் உண்டு' என்பது மொழி வழக்கிலுங் காணப்படுவதொன்றாதல் போதரும். ஆயின், நூல் வளம் பெறாத துளு, துத, கோத முதலிய மொழிகளில் இன்றளவும் அது சென்றிலது.

ஞான் என்பது நான் என்று திரிந்தது என்றார் கால்ட்வெல். ஆன் என்பது ஈற்று னகரத்தின் சார்பினால் நான் என்றாயிற்று என்றார் ·கே.வி.சுப்பையா. அன்றியும் அவர், உயிரெழுத்தினை யடுத்து மெல்லெழுத்துத்திருப்பின், அவ்வுயிரும் மெல்லொலி பெறும் என்றும், அதனைக் குறித்ததற்கு வரிவடிவின்மையின், மெல்லொலியின் எழுத்தினை முதற்கண் ஆக்கி எழுதுவர் என்றும், அம்முறையின் ஆ:ன் என்பது நான் (ந் + ஆன்) என்று எழுதப்பட்டது என்றும் கூறினார். அவர், இதனை நிலைநிறுத்துவான் வேண்டி, தெலுங்கு கன்னடங்களில் முறையே ஈது, [3]ஈஜு என்று வழங்குவன முதற்கண் மெல்லெழுத்துப் பெற்று நீந்து என்றாயின என்றும், ஈ கு, ஈகு என்று வழங்குவன நீங்கு என்றாயின என்றும் உதாரணங் காட்டினார். இவை அமைவுடையனவாகத் தோன்றவில்லை. இவ்வுதாரணங்களால் இவர் கொள்கை வலியுறுவதன்று

1. இயற்பா. இரண்டாந்: 1
2. பழமொழி. 108
3. [illegible]

என்று, M. காலின்ஸ் என்பவர் எழுதியிருக்கின்றார்.[1] வளை என்பது அளை என்றும், சிப்பி என்பது இப்பி என்றும், நுன் என்பது உன் என்றும் முதற்கண் நின்ற மெய்கெட்டு வழங்குதல் போல நீந்து என்பது முதற்கண் நின்ற மெய்கட்டு ஈந்து (ஈ து) என்றாயதேயன்றி, ஈந்து என்பது நீந்து என்றாயதின்று. [2]'டாக்டர் கால்ட்வெல் நீந்து என்பது நீர் என்னுஞ் சொல்லின் அடியிற் பிறந்தது என்று கொண்டு, நீ என்பது பகுதி என்று கூறியிருப் பதும் நோக்கத்தக்கது. நீர் என்பதனை யொட்டி நீந்து என்னுஞ் சொல் தோன்றிற்று என்பதுவே அமைவுடையதாகத் தோன்று கின்றது.

## தன்மைப் பன்மைப்பெயர்

### தன்மைப் பன்மைப்பெயர் தமிழ்

முதற்கண், தமிழ் மொழியிலுள்ள தன்மைப் பன்மைப் பெயர்களை நோக்குவோம்: தமிழில், யாம், நாம் என்னும் இரண்டு பெயர்கள் தொன்றுதொட்டுப் பயின்று வருகின்றன. தொல்காப்பியனார் இவற்றையே கூறியுள்ளார்.[3] பிறகாலத் தில், யாம், நாம் என்னும் பெயர், கள் விகுதி சேரப்பெற்று, யாங்கள் நாங்கள் என்று வழங்கலாயின. இவற்றுள், யாம், [4]யாங்கள், நாங்கள் என்பவை மூன்றும் தன்னோடு படர்க்கை யாரைச் சேர்த்து வழங்குமிடத்தும், நாம் என்பது ஒன்று மட்டும் தன்னொடு முன்னின்றானைச் சேர்த்து வழங்குமிடத்தும் வருகின்றன. நாங்கள் என்பதுவும், நாம் என்னுஞ் சொல்லே போல முன்னின் றானைத் தன்னொடு சேர்த்துக் கூறும்வழியே வழங்குதல் வேண்டும். என்னையெனின், கள் விகுதி சேர்ந்த தனால் மட்டும் பொருள் வேறுபடுதல் முறையகன்றாகலின். யாம், யாங்கள்; தாம், தாங்கள்; அவர், அவர்கள் என்பவை, கள் விகுதியால் பொருள் வேறுபடாமை அறியத்தகும். இவ்வாறாக வும், நாம் நாங்கள் என்பவை மட்டும் தம்முட்பொருள் வேறுபட்டிருத்தல் வியப்பினைத் தருகின்றது.

'கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவா**நாம்**
வள்ளை யகவுவம் வா' (கலி. 42.)

---

1. Dravidic Studies. No. 2. Page. 47.
2. பக்கம். 200.
3. தொல். பெயர். 8.
4. யாங்கள், சூளா. துறவு:17

'அம்ம வாழி தோழி............
.............. இருங்கழிச் சேர்ப்பன்
தான்வரக் காண்குவ **நாமே**' (ஐங். 112.)

'உனை நோவ **நாங்கள்** உரைக்கிலோம்.'
(நாச்சியார் திருமொழி. 2:4)

என்பவற்றில், **நாம்** என்பது முன்னிலையையுளப் படுத்தியும், **நாங்கள்** என்பது முன்னிலையை விலக்கியும் வந்திருத்தல் காண்க. இனி, **நாங்கள்** என்னுஞ் சொல், நாம் என்னுஞ் சொல்லேபோன்று முன்னிலையை யுளப்படுத்தியும் வந்துளது.

'நாடு மின்னினி **நாங்கள்** செய்வதென்.' (சீவக. 1762.)

ஈண்டு நச்சினார்க்கினியர், 'கள், பகுதிப்பொருள் விகுதி' என்றெழுதியிருக்கின்றார். இதனை நோக்குமிடத்து, நாங்கள் என்னுஞ் சொல், தாங்கள், யாங்கள் என்பன போலவே, கள் விகுதி சேர்ந்தனாற் பொருள் வேறுபடாது, நாம் என்னுஞ் சொல்லின் பொருளிலேயே முதற்கண் வழங்கப்பட்டு, நாளடைவில் இவ்வாறு பொருள் வேறுபட்டிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

உருபேற்கும்வழி, யாம் என்னும் பெயர் **எம்** எனவும், நாம் என்னும் பெயர் **நம்** எனவும், யாங்கள் என்பது **எங்கள்** எனவும், நாங்கள் என்பது [1]**நங்கள்** எனவும் திரியும். **நங்கள்** என்பது முன்னிலையை உளப்படுத்தும்.

தன்மைப் பன்மை வினைமுற்றுக்களில், அம் ஆம் எம் ஏம் கும் டும் தும் றும் என்னும் எட்டு விகுதிகள் வரும் என்றனர் [2]தொல்காப்பியனார். நன்னூலார், ஓம் என்னும் விகுதியை யுங் கூட்டி, அவற்றுள், அம் ஆம் என்பவை முன்னிலையை யுளப்படுத்திய தன்மைப்பன்மைக்கும், எம், ஏம், ஓம் என்பவை (முன்னிலையை யுட்படுத்தாது) படர்க்கையை யுளப்படுத்திய தன்மைப் பன்மைக்கும், கும், டும் தும் றும் என்பவை முன் னிலையையும் .படர்க்கையையும் உளப்படுத்திய தன்மைப்

1. சூளா. துறவு:16
2. தொல். வினையியல்.5

பன்மைக்கும் வரும் என்று வகுத்தோதினார்.[1] இம்முறைமை பெரிதும் இயைபுடையதேயாயினும், செய்யுட்களில் இதற்கு மாறாய் வருதலும் காண்கின்றது.

'நிற்பழிச்சிச், சே**றும்** வாழியோ பெரும்பெயர்ப்
பறம்பே.' *(புறம்.113.)*

'நிற் றொழுதனம் வினவு**தும்**.' *(நற். 155.)*

'தோழீ, பண்டிவர் தம்மையும் கண்டறி**யோம்**.'
*(பெரிய திரு. 9.2:7.)*

இவற்றுள், றும் தும் விகுதிகள் முன்னிலையை உளப்படுத் தாமலும், ஓம் விகுதி முன்னிலையை உளப்படுத்தியும் வந்துள்ளன.

இனி, கன்னடமொழியை நோக்குவோம்:

### கன்னடத்துப் பெயர்

பழங்கன்னடத்தில், ஆ௦(ம்) என்பதொன்றே தன்மைப் பன்மையைக் குறித்து வழங்கியது. [2]**நாம்** என்னும் பெயரும் தன்மைக்கண் அருகி வந்துளது என்பர். நாவு என்பது இக்காலத்தில் வழங்குகின்றது. உருபேற்கும்வழி, **எம்** என்பதுவும், **நம்** என்பதுவும் காண்கின்றன.

தன்மைப் பன்மை வினைமுற்றுக்கண் வரும் விகுதி **எம், எவு** என்பவை. விதித்திற் பொருளில் அம் விகுதி வருகின்றது[3].

---

1. நன்னூல் வினையியல். 13.
2. See: History of Kannada Language. P. 84.
3. ஶப்தமணி தர்ப்பணம். சூ.240.

[1]'மனுஜ ப்ராகாராங்கனொள்
அனிபருமொந்தாகி தாகு**வம்** பல்குணனொள்.'
[2]'ஏ கெய்**வம்** பேழிமெந்தொ டெந்தர் பீஷ்மர்.'

என்னும் அடிகளில், தன்மைப் பன்மைக்கண் விதித்திற் பொருளில் **அம்** விகுதி வந்துளது.

## தெலுங்குப் பெயர்

இனி, தெலுங்கு மொழியை நோக்குவோம் : தெலுங்கு மொழியில், தமிழிலிருப்பன போன்று, முன்னிலையை யுளப் படுத்துந் தன்மைப்பன்மைக்கும் முன்னிலையை யுளப்படுத்தாது விலக்குந் தன்மைப்பன்மைக்கும் வேறு வேறு சொற்கள் உள்ளன. தன்மையோடு படர்க்கையைமட்டும் சேர்த்துக் கூறும் வழி, **ஏமு, நேமு, மேமு,** என்னுஞ் சொற்களும், தன்மையோடு முன்னிலையைச் சேர்த்துக் கூறும்வழி, **மனமு** என்னும் சொல்லும் வழங்கப்படும். இவற்றுள் மேமு, மனமு என்னும் இரண்டு சொற்களே வழக்கின்கண் வழங்குகின்றன; இவையே வேற்றுமையுருபுகளையும் ஏற்கின்றன. ஏமு, நேமு என்பவை வேற்றுமையுருபுகளை ஏற்பன அல்ல. மேமு என்னுஞ் சொல், இரண்டனுருபினை யேற்கும்பொழுது **மம்** எனவும், ஏனை யுருபுகளை யேற்குமிடத்து **மா** எனவும் திரிகின்றது. **மம்**முன், **மா**சேதன், **மா**கொறகு, **மா**வலன, **மா**, **மா**யந்து என்று இரண்டு முதலிய வேற்றுமைக்கண் வரும். தன்மைப் பன்மைக்கண், **மி, மு** என்னும் விகுதிகள் வழங்குகின்றன.

வச்சிதி**மி** - வந்தேம், வந்தாம்
வச்சினா**மு** - வந்தேம், வந்தாம்

என்பன காண்க. [3]வேண்டிக்கோடற்பொருளில் தன்மைப் பன்மைக்கண் **அமு** (அம்) விகுதி வருகின்றது.

---

1, 2. ஸப்தமணி தர்ப்பணம். சூ. 240. உதாரணச் செய்யுட்கள்.
'மனுஜ........குணனொன்' - மனுஜப்ராகாராங்கன் என்னுஞ் சிறப்புப் பெயரினையுடைய அர்ஜுனனோடு அனைவரும் ஒன்றாகித் தாக்குவம்.
'ஏகைவம்........பீஷ்மர்' - யாது செய்வம் கூறும் என, பீஷ்மர் (இவ்வாறு) கூறினார்.

3. பாலவ்யா. க்ரியா. 30.

வண்டுதமு (- சமைப்பாம்)

என்பது உதாரணமாகும்.

## மலையாளப் பெயர்

இனி, மலையாள மொழியை நோக்குவோம்: மலையாளத்தில் தன்மைப்பன்மைக்கண், தமிழ் தெலுங்குகளிற்போல முன்னிலையையுளப்படுத்தியும், நீக்கியும் வழங்குஞ் சொற்கள் உள்ளன. தன்மையோடு படர்க்கை முன்னிலைகளை உளப்படுத்தியவழி **நாம், நோம்** என்பனவும், முன்னிலையை யுளப்படுத்தாது நீக்கியவழி **ஞங்ஙள்** என்பதுவும் வழங்கும். இவை இரண்டு முதலிய வேற்றுமையுருபுகளை யேற்கும்வழி, நம்மை, நம்மொடு, நமக்கு, நம்மெக்காள், நம்முடெ, நம்மில் எனவும், ஞங்ஙளெ, ஞங்ஙளொடு, ஞங்கட்கு, ஞங்ஙளெக்காள், ஞங்ஙளுடெ, ஞங்ஙளில் எனவும் வரும். எங்ஙள், நம்மள் என்பனவும் வழங்குகின்றன. மலையாள மொழியில் திணை பாலிடங்களைக் காட்டும் வினைவிகுதி இல்லை. ஆயின், செய்யுட்களில் சில விடத்து விகுதி வருதல் உண்டு. அவை தமிழை யொத்து அமைந்துள்ளன.

## துளு

இனி, துளுமொழியை நோக்குவோம்: [1]துளுவில் **எங்குளு** என்னுஞ் சொல் முன்னிலையை விலக்கியும், **நம** என்னுஞ் சொல் முன்னிலையை உளப்படுத்தியும் வழங்குகின்றன. வேற்றுமை யுருபுகளை யேற்குமிடத்து இவை திரிதல் இல்லை. எங்குளென், நமன் என்னுந் தொடக்கத்தவாய் வரும். தன்மைப் பன்மை வினைமுற்றுகளில்[2] அ-விகுதி காண்கின்றது.

இனி, துத முதலிய மொழிகளில் வழங்குபவற்றைக் [3]கால்ட்வெல் கூறியுள்ளவாறு ஈண்டுக் குறிக்கின்றேன்:

---

1. துளு இலக்கணம். பக்கம்.33.
2. மகரமெய் கெட்டது என்று கொள்ளலாம்.
3. பக்கம். 364.

துத மொழியில், **ஆம்** அல்லது **ஓம்** என்பதும் **ஏம்** என்பதும் தன்மைப்பன்மைப்பெயராக வழங்குகின்றன. உருபேற்றவழி, **எம்** என்று காண்கின்றது. **ஆம்** என்பது உருபேற்புழித் திரியாது நிற்கும் என்பர் டாக்டர். போப். மெட்ஜ் என்பவர், தன்மைப்பெயர் ஆம் அன்று; அம் என்பதுவே என்பர். எமி, இமி என்பவை விகுதிகளாகக் காண்கின்றன.

கோத மொழியில், **ஆமெ ஏமெ நாமெ** என்பவை தன்மைப் பன்மைப் பெயர்களாய் வழங்குகின்றன; உருபேற்புழி **எம்** என்றும் **நம்** என்றும் திரிகின்றன. **எமெ ஏமெ** என்பவை வினைவிகுதிகளாகக் காண்கின்றன.

கோண்டு மொழியில், **அம்மாத்** என்பது பெயராகவும், **ஆம், அம், ஓம்** என்பவை விகுதிகளாகவும் காண்கின்றன. **அம்மாத்** என்பது, உருபேற்குமிடத்து **மா** எனத் திரிகின்றது.

குயிமொழியில், **ஆமு** என்பதுவே பெயராகவும் விகுதியாகவும் காண்கின்றது. அப்பெயர், உருபேற்கும்வழி **மா** எனத் திரிந்து வழங்குகின்றது. [4]ஆஜு என்னும் பெயர் உருபேற்கையில் அம்மா என்றாகும்.

[5]ஒராஒன் மொழியில் **எம்**(நாம்) என்பதுவே பெயராகக் காண்கின்றது. **எம்ஹி** (= எம்முடைய) என்று உருபேற்றுவரும்.

ராஜ்மஹால் மொழியில், **நம், ஓம்** (எம்) என்பவை பெயராகக் காண்கின்றன. **நம்கி** (= நம்முடைய), **எம்கி** (= எம்முடைய) என வரும்.

ப்ரஹுயி மொழியில், **நன்** என்பது பன்மைப் பெயராகவும், என் என்பது பன்மை விகுதியாகவும் காண்கின்றன.

இனி, இவையெல்லாம் எளிதிற் அறிதற்பொருட்டு ஒருங்கே குறிக்கின்றேன்:

---

1. இது முன்னிலையையும் உளப்படுத்தும். குயிமொழி இலக். பக்.13.

2. ஏம் என்பது முன்னிலையை உளப்படுத்தாத பெயர்; நாம் என்பது முன்னிலையை உளப்படுத்திய பெயர். வேற்றுமை யுருபேற்கும்போது எம், நம் என்று திரியும். (குருக் மொழியிலக். பக். 18.) ஏம், அம், ஓம் என்பன வினை விகுதிகளாகக் காண்கின்றன. (குருக்மொழி. பக். 34, 35.)

| மொழிகள் | பெயர்கள் | உருபேற்றவழித் திரிந்த வடிவம் | விகுதி |
|---|---|---|---|
| **தமிழ்** | யாம் | எம் | எம், ஏம் |
| | நாம் | நம் | அம், ஆம், கும், |
| | யாங்கள் | எங்கள் | டும், தும், றும்; |
| | நாங்கள் | நங்கள் | ஓம் (கள்) |
| | நாமள் | நம்மள் | |
| **கன்னடம்** | ஆம் | எம் | எம், எவு; அம் |
| | நாம் | நம் | |
| **தெலுங்கு** | ஏமு | | மி, மு; அம் |
| | மேமு | மம், மா | |
| | நேமு | | |
| | மனமு | மன | |
| **மலையாளம்** | ஞங்ஙள் | ஞங்ஙள் | |
| | எங்ஙள் | எங்ஙள் | |
| | நாம் | நம் | |
| | நோம் | நும் | |
| | நம்மள் | நம்மள் | |
| **துளு** | எங்குளு | எங்குள் | |
| | நம | நம | அ |
| **துத** | ஆம், ஓம் | எம் | |
| | ஏம் | ஆம் | எமி, இமி |
| **கோத** | ஆமெ | | |
| | ஏமெ | எம் | எமெ, ஏமெ |
| | நாமெ | நம் | |
| **கோண்டு** | அம்மாத் | மா | அம், ஆம், ஓம் |
| **குயி** | ஆமு | மா | ஆமு |
| | ஆஜு | அம்மா | |
| **ஒராஒன்** | எம் நாம், [1]ஏம் | [2]எம் | [3]ஏம், அம், ஓம் |
| **ராஜ்மஹால்** | நம் | நம் | |
| | ஓம் | எம் | |
| | எம் | | |
| **ப்ரஹுயி** | நன் | என் | |

1. குருக்மொழி. பக்.18. 2. எம், நம். குருக். பக்.18. 3. குருக்.பக் 34, 35.

இத் தன்மைப் பன்மைப்பெயர்களைக் குறித்து டாக்டர் கால்ட்வெல் கூறியிருப்பவற்றை முதலில் நோக்குவோம்:

யாம், நாம் என்பவற்றில் உள்ள மகரமெய் எண்ணுப் பொருளில் வரும் உம் என்பதிலிருந்து வந்ததாகும். ஆகலின், நா + உம் = நாம் என்றாயிற்று.[1] பன்மை வினைக்கன் காணும் மகரமெய்யும் தனியெழுத்தன்று; செய்தும்; கேள் + உம் = கேளும்.[2] தெலுங்கில் எண்ணும்மைப் பொருளில் வருகின்ற நு, யு என்பவையும் உ என்பதுவே.[3] மேமு என்பது உயர்வு குறித்த ஒருமை. மேமு என்பதன் திரிபாகிய **மா** என்பது, இன் னோசைக்காகச் சேர்ந்த எழுத்திேனாடு (நகரத்தோடு) கூடி **மனமு** என்றாயிருக்கலாம். அல்லது, பன்மைச் சொல்லே இரட்டித்து வந்திருக்கலாம்.[4] மேமு என்பதன் முதற்கணுள்ள மகரம் அச்சொல்லின் இறுதியிலுள்ள மகரத்தின் இன்னோசையைத் தழுவி வந்திருக்கலாம்.[5]

## தன்மைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி

### ஆம் என்பதுவே பன்மைப்பெயர் என்றற்கு ஆதாரம்

தன்மைப் பன்மைப்பெயராக, பழங்கன்னடத்திலும் துத கோத குயி இம்மொழிகளிலும் **ஆம்** என்பதுவே வழங்கு கின்றது. ஆகலின், ஆம் என்பதுவே பன்மைப் பெயரென்று. கோடல் தகும். ஆம் என்பது வேற்றுமை யுருபேற்றற்கண் அம் எனத் திரியும்; அது பின்னர், **எம்** என்று திரிந்திருக்கும். அகரம் எகரமாதல் இயல்பு என்று [6]கால்ட்வெல்லும் கூறியுள்ளார்.

---

1. பக்கம். 407
2. பக்கம். 408
3. பக்கம். 407
4. பக்கம். 415
5. பக்கம். 405
6. பக்கம். 369

## பன்மைப் பெயர் ஏம் என்பதுவே

ஏம் என்னும் பெயரே தெலுங்கு மொழியில் பழமை தாயுளது. பன்மைப் பெயர் வேற்றுமையுருபேற்றவழி, தமிழ் பழங்கன்னடம் துளு துத கோத ஒராஒன் ராஜ்மஹால் இம் மொழிகளில், **எம்** எனவே காண்கின்றது. வினைவிகுதி யாகவும் தமிழ், கன்னடம், துத, கோத, ஒராஒன் இம்மொழிகளில் ஏம், எம், என்பன உள. அன்றியும், [1]கிளைஞரேம், [2]பெண்டிரேம் என்பன போன்ற வற்றில் தன்மைப்பன்மையைக் குறிக்க ஏம் என்பதுவே சேர்ந்துளது. இவற்றால் ஏம் என்பதுவே பன்மைப் பெயராகும். யாம் என்பது உருபேற்றற்கண் யம் எனத் திரிந்து, பின்னர் **எம்** எனத் திரிதில் கூடுமாயினும் ஏம் என்பது எம் எனத் திரிதலே முறைமையும் எளிமையும் ஆகும். [3]முன் னிலையை யுளப்படுத்திக் கூறும் பன்மைப்பெயராகிய நாம் என்பது எழுவாயாகுமிடத்து ஆம் அம் விகுதிகள் வரும் என்றலையும், முன்னிலையை யுளப்படுத்தாத பன்மைப் பெயராகிய யாம் என்பது எழுவாயாகுமிடத்து ஏம் எம் என்னும் விகுதிகள் வரும் என்றலை யும் நோக்கின், ஏம் என்பதுவே (முன்னிலையை யுளப்படுத்தாத) தன்மைப் பன்மைப்பெயர் என்பது எளிதிற் புலனாகும். தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஏகாரமே என்பது, மேல், ஒருமைப்பெயரை ஆராய்ந்த வழிக் கூறப்பட்டதாகலின், தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரமன்றென்பது ஆண்டே பெறப்பட்டது.

## நாம் என்னும் பெயர்

தமிழலக்கண நூல்களில், தன்மைப் பன்மைப்பெயராக யாம் நாம் என்னும் இரண்டு பெயர்கள் கூறப்பட்டுள்ளனவே யன்றி, அவற்றின் பொருள் வேறுபாடு கூறப்படவில்லை. ஆயினும், முன்னிலையையுளப்படுத்தாத பன்மைக்கண் யாம்

---

1. புறம். 144.
2. குறுந். 181
3. நன்னூல், வினை. 13.

என்னும் பெயரும், முன்னிலையை யுளப்படுத்தும் பன்மைக் கண் நாம் என்னும் பெயரும் வழங்குகின்றன. யாம் என்பதன் தொன்மை வடிவினை மேலே யறிந்தோம்; இனி, நாம் என்பதன் அமைதியை நோக்குவோம்: நாம் என்பது தன்மை யோடு முன்னிலையையுளப் படுத்தும் பெயராகலின், அதில் தன்மைப்பெயரின் கூறும், முன்னிலைப்பெயரின் கூறும் சேர்ந்திருத்தல் வேண்டும். ஆகலின், முன்னிலையைக் குறிக்கும் [1]நகரத்தோடு (நீன் நீம் என்பவற்றில் முதற்கணுள்ள நகரம்) தன்மையைக் குறிப்பதாகிய ஏகாரத்தைச் சேர்த்து, இறுதியில், பன்மையைக் குறிக்கும் மகரத்தைக்கூட்டி, நேம் என்னுஞ் சொல் முதற்கண் அமைக்கப்பட்ட தாகலாம். அது தெலுங்கு மொழியிற் காண்கின்றது. நேம் என்பது நாம் என்று திரிந் திருக்கலாம், ஏம்(யேம்) என்பது யாம் என்று திரிந்ததுபோல். தன்மையோடு முன்னிலையை யுளப்படுத்தற்கண் வழங்கிய இப்பெயரே, பின்னர் அவற்றோடு படர்க்கையை யுளப்படுத் தற்கும் வழங்கிவந்திருத்தல் வேண்டும். பெயரின் முதற்கண் நிற்கும் நகரம் முன்னிலையைக் குறிப்பததாகக் கொண்டத னாற்போலும், நான் என்னும் பெயர், செந்தமிழில், தன்மைக் கண் ஏற்றுக்கொள்ளப் படாதாயிற்று.

## கன்னட மொழியில் உளப்பாட்டுப் பன்மையில் வேறுபாடு உளதா?

கன்னட மொழியில் தன்மைப் பன்மைக்கண், ஆம் என்னும் பெயர் ஒன்றேயிருத்தலின், தமிழ் தெலுங்கு மலை யாளங்களிலிருத்தல் போல, முன்னிலையை யுளப்படுத்துதலும் நீக்குதலும் ஆகிய வேற்றுமை அம்மொழியில் இல்லை யென்று [2]கால்ட்வெல் கூறியுள்ளார். கர்னாடக பண்டிதர், தம் மொழியில் தன்மையொருமைக்கண் ஆం(ன்) நான் என்னுஞ் சொற்கள் இரண்டு உள்ளனவாகலின், அவற்றின் பன்மை வடிவமே ஆம், நாம் என்பவை என்றும், இலக்கண நூலாரும்

---

1. முன்னிலைப் பெயரில் நகாரம், அதன் மூலமாயது என்று போப் கூறியுள்ளார். கால்ட்வெல். பக்கம்.369.

2. பக்கம். 414.

அவற்றிற்குப் பொருள்வேறுபாடு உளது என்று கூறிற்றிலர் என்றும், ஆகலின் அவற்றிற்குப் பொருள் வேற்றுமை யில்லை என்றும் கூறுகின்றனர். இதனை ஆராய்வோம்: கன்னட மொழியில் பண்டைக்காலத்தில் தன்மை யொருமைப் பெயராய் ஆం(ன்) என்னும் பெயர் ஒன்றே வழங்கி வந்துளது. நான் என்பது பிற்காலத்தில் புகுந்ததுவே. என்னை யெனின், பழைய காப்பியங்களில், பெயர்க்கண் ஆం(ன்) என்னும் வடிவமும், வேற்றுமையுருபேற்றவழி, என்னம், என்னிம், எனகெ, என்னத்தணிம், என்ன, என்னொள் என்னும் வடிவங் களுமே காணப்படுதலன்றி, பெயர்க்கண் நான் என்னும் வடிவமும், வேற்றுமையுருபேற்றவழி நன்னம், நன்னிம், நனகெ, நன்னத்தணிம், நன்ன, நன்னொள் என்னும் வடிவங் களும் காணப்படவில்லை. நான் என்னுஞ் சொல்லும் பழையதே என்று நாட்ட வந்த [1]'மஞ்சரீ மகரந்த' வ்யாக்யானாசிரியர் நன்னம், நன்னிம் நன்னிந்தெ நன்னிந்தம், நனகெ, நன்னத் தணிம் நன்னத் தணிந்தெ நன்னத்தணிந்தம், நன்ன நனது நனத்து, நன்னுது, நன்னொள் நன்னனல்லி என்று வேற்றுமை யுருபு சேர்ந்த வடிவங்களை எழுதினாரேயல்லாமல், அவற் றிற்குப் பழைய பிரயோகங்களைக் காட்டினாரல்லர். அன்றியும் அவர், 'உத்தர மார்க்க அனுகாமிகளால் நன் ஶப்தம் அங்கீகரிக்கப்படுகின்றது' என்றதனை நோக்கும்போது, அது தெலுங்கு மொழியிலிருந்து வந்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது. [2]லக்ஷ்மணராவ்காரும் இவ்வாறே கருத்துக் கொண்டுள்ளார். கன்னட மொழியில், கி.பி.9-ஆம் நூற் றாண்டில் எழுதப்பட்ட 'கவிராஜ மார்க்கம்' என்னும் நூல் இப்பொழுது வழங்குகின்றது. அதில், நான் என்னும் பெயராதல், அதன் திரிந்த வடிவமாதல் காணப்படவில்லை. இனி, இலக்கண நூலார் **ஆம் நாம்** என்னும் பெயர்களுக்குப் பொருள் வேற்றுமையுண்டென்று கூறிற்றிலராகலின், அவற் றிற்கு வேறுபாடு இல்லை என்று கூறுதல் அமைவுடையதாகத்

---

1. ஸப்தானுஸாஸனம். சூ, 288. வ்யாக்.
2. லக்ஷ்மணராய வ்யாஸாவளி பக்கம். 142.

தோன்றவில்லை. தமிழில், யாம் நாம் என்னும் பெயர்களுக்குப் பொருள் வேறுபாடு உளது என்று தொல்காப்பியனார் கூறிற்றிலர்; பன்மை விகுதிகளின் வேறுபாட்டினை வகுத்துக் கூறிய நன்னூலாரும் பெயர்க்கண் வேறுபாடு கூறினாரல்லர். நன்னூலுரையாசிரிய ராகிய மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயப் புலவரும் 'அம் ஆம் என்பன' என்னுஞ் சூத்திரத்திற்கு உதாரணம் காட்டுமிடத்து, அம் ஆம் என்னும் விகுதிகளுக்கு நாம் என்னும் பெயரையும் எம் ஏம் என்னும் விகுதிகளுக்கு யாம் என்னும் பெயரையும் முடிபினவாகக் காட்டாமல், எல்லாவற்றிற்கும் யாம் என்னும் பெயரையே காட்டியுள்ளனர். இவற்றால், யாம் நாம் என்ப வற்றிற்குப் பொருள் வேறுபாடு இல்லை என்று கூறுதல் இயலுமோ? யாம் என்னும் பெயர், முன்னிலையை யுளப்படுத்தி வந்துள்ள இடம் ஒன்றாதல் காணக் கிடைக்குமோ? ஆயினும், வேறுபாடு உளதென்றல் வெள்ளிடை மலையே. இவ்வாறே, கன்னட மொழியில் நாம் என்னும் பெயர், முன்னிலையை யுளப் படுத்தியே வந்துளதாகத் தெரிகின்றது.

[1]'....தனுஜெய பாவமம் மஹீ
ஶம் பகெ தீக ளீ கிறியவள் **நம கொந்தும** நிந்து
டென்னளின் னும்பகெ கல்வம்' (ஆதிபுரா. 3.26.)

[2]'விஷயாம்புதியொள் முழுகிர் **தெம்மய்**வருமம்'
(பார.9 . 15.)

[3]'நிம்மீ, பஸிறம்பொக் **கெம்மய்**வரன்' (,,.9. 16.)

[4]'நிம்மனுபலதொள மரிகேஸரிய புஜபலதொள **மெம**
**கிம்**பு வந்தது' (,. 9,17,. வசனம்)

---

1. 'மகளின் குறிப்பினை அரசன் ஆராய்ந்து, இப்பொழுது இச்சிறியவள் நமக்கு ஒன்றனையும் இன்னதென்னாள்; இன்னும் ஆராய்வம்' (என்று தேவிக்குச் சொன்னான்.)
2. 'விஷயங்களாகிய கடலுள் முழுகியிருக்கின்ற எங்க ளைவரையும்'.
3. 'உமது இவ் வயிற்றுட்புக்க எங்க ளைவரையும்'.
4. 'உமது சகாயத்தாலும் அரிகேஸரியின் (விஜயன்) தோள்வலத்தாலும் எங்கட்கு ஆனுகூல்யம் உண்டாயிற்று'.

[1]'கண்டு முண்டு **மெம**கின் னாதங்கெளாள் பாழியே.'
(,,.9. 22.)
[2]'முன்னின நெலனம் குடு**கெம**, கென்னர்' (பார. 9.41.)

என்பவற்றில், **நம்** என்பது முன்னிலையை யுளப்படுத்தியும், **எம்** என்பது முன்னிலையை யுளப்படுத்தாது நீக்கியும் வந்துள்ளன.

அன்றியும், கன்னட மொழியிலுள்ள பழங்காப்பியங் களில், தன்மை யொருமைப்பெயர் உருபேற்றவழி, என்னம், என்னிம், எனகெ, என்னத் தணிம், என்ன, என்னல்லி என்று என் என்னும் வடிவமொன்றே காணப்பட, பன்மைப் பெயர் உருபேற்றவழி எம்மம், நம்மம்; எம்மிம், நம்மிம்; எமகெ, நமகெ; எம்மத்தணிம், நம்மத்தணிம்; எம்ம, நம்ம; எம்மொள், நம்மொள் என்று **எம், நம்** என்னும் இரண்டு வடிவங்கள் காணப்படுகின்றன. மேலும், கன்னட மொழியையே பெரிதும் சார்ந்துள்ள துளு மொழியில் உளப்பாட்டுத் தன்மைக்கண் சொல் வேறுபாடு உளது. வட மொழியைச் சார்ந்த இந்து ஐரோப்பிய மொழிகளில் இல்லாத இவ்வேறுபாடு மஹா ராஷ்டிர மொழியிலும் குஜராத்தி மொழியிலும் காணுதற்குக் காரணம், திராவிடமொழி அல்லது ஆரிய மொழியல்லாத மொழியொன்று ஆதல் வேண்டும் என்பர் கால்ட்வெல்[3]. ஆகலின், கன்னட மொழியில் உளப்பாட்டுத் தன்மைக்கண் வேறுபாடு இருந்தமை துணியப்படும்.

இக்காலத்தில் அவ் வேறுபாடு இல்லை. யென்ப. பழைய செய்யுட்களில் இவ்வேறுபாடு உளதா இலதா என்பதை ஆராய்ந்து எவரும் அறுதியிட்டிலர். ஆயின், மஹாமஹோ பாத்யாய ஆர். நரஸிம்மாசாரியரவர்கள், பழங்கன்னடத்தில் மட்டுமேயன்றிப் புதுக்கன்னடத்திலும் இவ்வேறுபாடு உள தென்று எழுதியுள்ளார்.[4] யான் அறிந்தவளவில், நம் என்பது முன்னிலையை யுளப்படுத்தியும், எம் என்பது முன்னிலையை விலக்கியுமே வந்துள்ளன. ஆயின்,

---

1. 'பார்த்தும் அனுபவித்தும் எங்கட்கு இன்னும் அவர்களோடு (சேர்தல்) தருமமா?'
2. 'முன்னைய நிலனை எமக்குத் தருக என்னார்.'
3. கால்ட்வெல். பக்கம்.414.
4. History of kannada Language. P. 84.

[3]'குரு க்ருப ஶல்ய ஸிந்துஸூத ரப்பொடெ **நம்மய** பஷ மொந்திதம்
குருஸூதனீக **ளெள்மொ** ளகிலாஸ்த்ர விஶாரத ணப்பனும் கெலல்
கரியனு மொந்தி பாரதனு மங்கதகர்ணனெ' (பார.9.61.)

என்னும் ஓரிடத்துமட்டும் **எம்** என்பது முன்னிலையயும் உளப் படுத்தி வந்துளதாகக் காண்கின்றது. ஈண்டு, முன்னிலையை விலக்கி வந்ததாகப் பொருள் கொள்ளுதல் அமையுமாயினும், உளப்படுத்தியதாகப் பொருள் கோடலே சிறப்பதாயுளது. இவ்வாறு, நம் என்பது முன்னிலையை விலக்கிவந்தவிடம் காணக் கிடைத்திலது. அது கிடைக்குமேல், இச்சொற்களின் வேறுபாடு பழைய செய்யுட்களிலும் இல்லை என்னலாம். அவ்வாறாயினும், தமிழ் தெலுங்கு மலையாளம் துளு குயி இம் மொழிகளில் இவ்வேறுபாடு இருத்தலின், கன்னடத்திலும் பண்டைக்காலத்தில் வேறுபாடு இருந்திருத்தல் கூடும் என்றும் பிற்காலத்தில் ஒழிந்தது என்றும் கருதுதல் அமைதியாகும்.

## நாம், யாம் என்பனவற்றின் மகரம்

இனி, நாம் யாம் முதலிய சொற்களிலுள்ள மகர மெய்யினைக் குறித்து நோக்குவோம்: [2]டாக்டர் கால்ட்வெல் இம்மகரம் எண்ணுப் பொருளில் வருவதாகிய **உம்**மிலிருப் பது என்றார். அது பொருந்துமாறு இல்லை. என்னெனின், அவர் காட்டிய செய்கும் செய்தும் என்பனபோன்ற முற்றுச் சொற்களில் பன்மையைக் காட்ட **உம்** வந்துளது எனின் அமையுமாயினும், மகரவீற்று ஏவல் வினைமுற்றுச்சொற்களில் அவ்வாறு அமைதல் இன்று. கேண்மோ, சென்மே, உண்ம், தின்ம் என்பன போன்ற முன்னிலை வினைச்சொற்களில் பன்மையைக் குறித்ததற்குத் தனி மகரமெய்யேயன்றி **உம்**

---

1. இது, குந்திதேவியை நோக்கிக் கண்ணபிரான் கூறியது: 'குரு கிருபன் சல்லியன் சிந்துசுதன் என்னும் இவரோ நமது பக்கம்; குருசுதன் இப்பொழுது சேர்ந்தான். எல்லா அஸ்த்ரங்களிலும் தேர்ந்தவனாயவனும் வெல்லற்கு அரியவனும் எம்மிடம் பொருந்தி வாராதவனும் பிரசித்தி பெற்ற கர்ணனே.'

2. பக்கம். 407

வந்திலதன்றே? ஈண்டு **உம்**மின் உகரம் கெட்டது எனல் வேண்டும். அதனினும், மகரமே பன்மையைக் காட்டுவது எனக் கொள்ளுதல் அமைவுடையதாகும், திராவிட மொழி களில் னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையுங் குறித்தல் வழக்காறாகலின்.

## நாங்கள், யாங்கள் என்பவற்றில் கள்-விகுதி

இனி, தமிழ்மொழியில் யாம் நாம் என்பவை யாங்கள் என, **கள்** விகுதி பெற்று வழங்குதலை நோக்குவோம்: முற் காலத்தில், கள்விகுதி, உயர்திணைப் பெயர்களோடு சேர்ந்து வருதல் இல்லை; அஃறிணைப் பெயர்களிலும் பன்மையைக் குறித்தற்கு யாண்டும் எல்லாப் பெயர்களோடும் வருதல் இன்று. இஃது, ஆசிரியர் தொல்காப்பியனார்,

'கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
**கொள்வழி யுடைய** பலவறி சொற்கே.' *(பெயரியல்.15.)*

என்று கூறியதனால் அறியப்படும். ஆயின், அஃறிணைப் பெயர்கள் எல்லாவற்றிலும் **கள்** சேராக்கால் அவை பன்மை என அறியப்படுமாறென்னையெனின்,

'தெரிநிலை யுடைய அஃறிணை யியற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே'
*(பெயரியல். 17.)*

என்றதனால், அப்பெயர்கள் கொள்ளும்[1] வினையினால் அவை ஒருமை, பன்மை என்பது உணரப்படும். இவற்றால், முற்காலத் தில் அஃறிணைப் பெயர்க்கண்ணும் **கள்** விகுதி யாண்டும் வருதல் இல்லை என்பது பெறப்படுமாகலின், அஃது உயர் திணைப் பெயர்களிடத்து வந்தில தென்பது கூறாமலே விளங்கும். பண்டைச் செய்யுட்களில் யாண்டும் உயர்திணைப் பெயர் களிடத்துக் **கள்** விகுதி வந்திலாமையான் இது வலியுறும்.

---

1. வினையினாலும் அறியஇலாவிடத்துக் கள் விகுதி சேர்ந்துவரும் என்று கொள்க. அவன் நாயொடு வந்தான். சாத்தன் குதிரையை வளர்க் கின்றான் என்பனபோல்பவற்றில், வினையினால் ஒருமை பன்மை அறியப்படாமையின், இவ்விடங்களில் பன்மையை அறிவித்தற்குக் கள் விகுதி வேண்டுவதாகும்.

## தெலுங்கின் பன்மைப் பெயர்

இனி, தெலுங்கு மொழியில் வழங்குந் தன்மைப் பன்மைப்பெயர்களை நோக்குவோம்: முன்னிலையை யுளப் படுத்தாதவழி, ஏமு, நேமு, மேமு என்பனவும், உளப்படுத்திய வழி மனமு என்பதுவும் வழங்குகின்றன. இவற்றுள் ஏமு நேமு என்பவை முதல்வேற்றுமையில் மட்டுமே பண்டு வழங்கின; அக்காலத்தும் வேற்றுமையுருபுகளையேற்று வந்தில. இக்காலத்தில் வழங்குதலே இல்லை. மேமு என்பதொன்று மட்டுமே இக்காலத்தில் வழங்குகின்றது. அஃது இரண்டாம் வேற்றுமை யுருபினை ஏற்கும்போது **மம்** என்றும், ஏனைய வுருபுகளை யேற்கும்போது **மா** என்றும் காண்கின்றது. மேமு என்பது இறுதி மகரத்தால் முதலிலும் மகரமாய்த் திரியப் பெற்றது என்றார்[1] கால்ட்வெல். அதனையே பின்பற்றி எழுதி னார். [2]கே.வி. சுப்பையர். அஃது அமைவுடையதாகத் தோன்ற வில்லை.

## மேமு என்பதன் முதலிலுள்ள மகரமும் எண்ணைக் குறிப்பது

ஆன் என்பது முன்னின்ற நகரத்தால் நான் என்றா யிற்று என்றார்க்கு, ஆம் என்பது முன்னின்ற மகரத்தால் மாம், என்றாதல் மட்டுமே அமையும். நேமு என்பது முன்னின்ற மகரத்தால் மேமு என்றாயிற்று என்றல் அத்துணை அமைதி யாதல் இன்று. **ஏன்** என்பது, ஒருமையைக் குறிக்கும் நகரத்தை முதலிற் பெற்று, **நேனு** என்று ஆயதன்றே? அப்பெயரில் ஈற்று னகரத்தை நீக்கி, பன்மையைக் குறிக்கும் மகரத்தைச் சேர்க்க, நேம்(நேமு) என்றாகும். இது, [3]தெலுங்கில் வழங்கியுளது. ஈற்றில்மட்டும் மகரத்தைச் சேர்ந்து வழங்குதல் சாலாது என்றெண்ணி, தெலுங்கர், முதற்கண்ணும் மகரத்தைச் சேர்த்து, மேமு என்னும் பன்மைச்சொல்லை அமைத்திருப்பர் எனத் தோன்றுகின்றது. இதுவே சிறப்புடையது என்ற கொள்ளப் பட்டதனால் நிலைபெறுவதாயிற்று. 'பன்மைப்பெயரில்

---

1. பக்கம்.405.
2. Dravidic studies No.2: பக்கம் 7.
3. பாலவ்யாகரணம். ஆச்சிகபரிச். 24; ப்ரௌடவ்யா. ஸப்த.72

முதற்கண் நகாரம் இருத்தல் தகாது என்றும், மகாரமே இருத்தல் வேண்டும் என்றும் எண்ணி, நேமு என்பதனை விடுத்து, மேமு என்பது அமைக்கப்பட்டது'[1] என்று, ஸ்ரீ லக்ஷ்மண ராவ்காரு எழுதியிருத்தல் அறியத்தக்கது. முன்னிலைப் பன்மைப்பெயரிலும் (**மீரு**) இவ்வாறே முதற்கண் மகரத்தை அமைத்திருத்தல் காணலாகும். இவ்வமைப்பு தெலுங்கு மொழியில் மட்டுமே உளது. குயி மொழியில் வேற்றுமையுருபேற்கும் வழி **மிம்** என்பது காண்கின்றது.

## மனமு என்னும் பெயர்

முன்னிலையை யுளப்படுத்தற்கண் வழங்கும் மனமு என்பது, இன்னோசைக்காகச் சேர்ந்த எழுத்தினோடு அமைவுற்ற **மா** ஆகலாம் என்றும், அல்லது மா என்பதுவே இரட்டித்து வந்த என்றும், அல்லது மா என்பதுவே இரட்டித்துவந்த பெயராகலாம் என்றும் கூறினார் கால்ட்வெல்.[2] இரண்டு வடிவங்களின் (மா, நாம்) தடுமாற்றம் என்றார் கே.வி.சுப்பையர்[3]. ஆறாம் வேற்றுமையில் தமிழில் **நம்** என்றும், கன்னடத்தில் **நம்ம** என்றும் காண்பனவாதல், அவற்றின் தொல்லுருவமாகிய நம என்பதாதல், எழுத்து மாறி, தெலுங்கில் **மன** என்றமைந்துளதாகும் என்றும், ஆறாம் வேற்றுமையின்மேல், ஏனைய வேற்றுமையுருபுகள் சேர்ந்து வரும் என்றும் கூறினார் லக்ஷ்மண ராவ்[4]. இவற்றுள், கே.வி.சுப்பையர் கொள்கை பொருத்தமுடையதாகும் எனத் தோன்றுகின்றது.

## தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்

இனி, தமிழ்மொழியி லுள்ள தன்மைப் பன்மை வினைமுற்றுவிகுதிகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்: நன்னூலார்,

'அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்

---

1. லக்ஷ்மணராயவ்யாஸாவளி. பக்கம் 152.
2. பக்கம். 415
3. Dravidic No. 2. பக்கம். 7.
4. லக்ஷ்மண. பக்கம். 152.

உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை' (வினை. 13.)

என்னுஞ் சூத்திரத்தால் விகுதிகளை வகுத்துக்கூறியவாறு, தொல்காப்பியனார் கூறவில்லை. ஆயினும், நன்னூலார் வகுத்துக் கூறியிருத்தலின், அவர்காலத்திற்கு முற்பட்ட இலக்கியங் களில் இம்முறைமை பெரும்பான்மையா யிருத்தல் வேண்டு மன்றே? இனி, திருவள்ளுவர்காலத்தில் இந்நியதி யிருந்திலது என்றும், அதனால், திருக்குறளில், யாம் என்பதற்கு **எம்** விகுதியேயன்றி **அம்** விகுதியும் வந்துளது என்றும் கூறி, சில உதாரணங் காட்டினார் [1]கே. வி. சுப்பையர். அவர் கூறியவாறு இந்நியதி யிருந்திலதாயின், **எம்** விகுதி வரவேண்டியவிடத்து **அம்** விகுதி வந்ததுபோல, **அம்** விகுதி வரவேண்டியவிடத்து **எம்** விகுதி வந்திருத்தல் வேண்டுமென்றே? அவ்வாறு வந்த தற்கு ஒருதாரணமும் காட்டினாரில்லை. திருக்குறளில், [2]'இன்னம் யாம்' என்பதுபோன்ற விடங்களில், எம் விகுதியை அமைத்தே செய்யுள் செய்திருந்தார் என்றும், இவற்றில் எம் விகுதியை ஒலித்தலினும் அம் விகுதியை ஒலித்தல் எளிதாகலின், நாளடை வில் அஃது அம் விகுதியாக ஒலிக்கப்பட்டு, ஏடெழுதுவோ ராலும் அவ்வாறே எழுதப்பட்டது என்றும் கொள்ளுதல் அமைதியாகும்.

தமிழில் வழங்கும் விகுதிகளுள் **அம் ஆம்** என்பவை **நாம்** என்னுஞ் சொல்லின் பயனிலைக்கண் வரும் என்றதும், **எம் ஏம்** என்பவை **யாம்** என்னுஞ் சொல்லின் பயனிலைக்கண் வரும் என்றதும் அமைவுடையனவே. இனி, ஓம் எனப் பிற்காலத்தில் வந்த விகுதியையும், கும் டும் தும் றும் என்னும் விகுதிளையும் குறித்து ஆராய்தல் வேண்டும்: இவற்றுள், ஓம் விகுதி ஆம் என்னும் விகுதியின் திரிபாகும். **ஆன் ஆர்** என்பன, முறையே **ஓன் ஓர்** என்றாதல்போல, **ஆம்** என்பது **ஓம்** என்றாதல் அமையுமன்றே? அதனால் கால்ட்வெல்[3] கூறிய இக்கூற்றையே நாம் மேற்கொள்ளல் தகும். இனி, கும் டும் தும் றும் விகுதிகளை நோக்குவோம்: இவற்றுள்,

1. Dravidic studies No. 2. Page 3.
2. குறள். 790.
3. Dravidic studies. No. 2: 34, 35.

டும் றும் விகுதிகள் தும் விகுதியின் திரிபேயாகும். இது, [1]'துவ்விகுதி, தன் முன்னின்ற எழுத்து நோக்கி றுவ் விகுதி யாய்த் திரிந்ததெனினும் அமையுமாகாலானும்...... இதுவும் (டுவ்விகுதியும்) துவ்விகுதி திரிந்ததெனினும் அமையுமாக லானும்' என்று சங்க்ரநமச்சிவாயப்புலவர் எழுதியிருப்பதனாலும் அறியப்படும். ஆகலின், இயல்பாய விகுதி கும், தும் என்னும் இரண்டே. [2]கு- எதிர்காலத்தைக் குறிப்பது; து- இறந்தகாலம் எதிர்காலங் களைக் குறிப்பது. மகரம் பன்மையைக் காட்டுவது. குவ்வோடும் துவ்வோடும் னகரஞ் சேர்ந்து, ஒருமையைக் காட்டும். [3]மகரஞ் சேராதவழி ஒருமை என்பது அறியப்படு மாகலின், னகரஞ் சேர்தல் வேண்டா என்று தமிழில் விலக்கப் பட்டதுபோலும். தெலுங்கில், வத்து**ன்** (வருது), வத்து**ம்**; வ்ராயு**துன்** (வரைது), வ்ராயு**தும்**; என்பவற்றில் னகர மகரங்கள் இரண்டும் உள்ளன. கன்னடத்தில் [4]கும் விகுதியும் அதன் திரிபாகிய **கும் (ஹீம்)** விகுதியும் மூன்று காலத்திற்கும் மூன்று பாலுக்கும் மூன்று எண்ணுக்கும் வேறுபாடின்றி வரும். தமிழில் செய்**யும்** என்னும் முற்று மூன்று காலத்திலும் வந்தது. இவற்றை நோக்குமிடத்து, மிகப் பழைய காலத்தில் கும் தும் விகுதிகள் இரண்டே பன்மைக்கண் வழங்கின என்பதும், எம் ஏம் அம் ஆம் என்னும் விகுதிகள் பிற்காலத்திற் சேர லாயின என்பதும் புலனாதல் கூடும்.

## முன்னிலை யொருமைப்பெயர்

### தமிழ்

தமிழ்மொழியில் முன்னிலை யொருமைப்பெயராக **நீ** என்ப தொன்றே உளது. ஆசிரியர் தொல்காப்பியனாரும்

---

1. நன் 9.உரை
2. நன்.வினை, பத. 18.
3. 'யாங்காண்கு' என்று, 'கு' பன்மையெழுவாய்க்குப் பயனிலையாகக் கலித்தொகையில் (மருத.19) வந்துளது. அதனைப் பன்மை ஒருமை மயக்கம் என்றார் நச்சினார்க்கினியர்.
4. ஶப்தமணி தர்ப்பணம். 238 உரை.

அஃதொன்றனையே கூறியுள்ளார்.[1] அப்பெயர் உருபேற்கு மிடத்து **நின்** என்றாகும். இது,

'நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே.' (உருபி. 7.)

என்னுந் தொல்காப்பியத்தான் அறியப்படும். நன்னூலாரும்,[2] 'தாம் நாம்' என்னுஞ் சூத்திரத்தில்,

'யான் யாம், நீ நீர் என்எம் **நின்**னும் ஆம்'

என்றதனால், நீ என்பது **நின்** என்றாதல் பெறப்படும். ஆயினும், நின் என்பது **நுன்** எனவும், அது, பின்னர் **உன்** எனவும் திரிந்து வழங்குகின்றது.

'**நுன்**பழம் பகைதவ நூறு வாயென' (சீவக.324)
'**நுன**சீறடி நோவ நடந்துசெலேல்' (சீவக. 1517.)
'**நுன்**பதிப் பெயர்க்கு மளவையி னும்பயிர்'
(பெருங். 1.32:13.)

எனவும்,

'**உன்னை**யான் பிரிந்த நாளோ ரூழியே போன்ற
தென்றான்'
(சீவக.2100)

எனவும் வந்துளது.

முன்னிலை யொருமை விகுதியாக, இ, ஐ, ஆய் என்பன வழங்குகின்றன.

'அவற்றுள்,
முன்னிலைக் கிளவி,
இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்' (வினை.26.)

---

1. தொல். பெயரியல். 34,35
2. நன். உருபு.8.

என்னுந் தொல்காப்பியத்தான் இஃது அறியப்படும். உரைத்தி, உரைத்தனை, உரைத்தாய் என இவ் விகுதிகள் வரும். முன்னிலை யொருமை யேவல்வினைக் கண்ணும் இகர விகுதியே வருதலின், ஒருமைக்கு வரும் விகுதிகள் இம் மூன்றுமேயாகும்.

### கன்னடம்

கன்னட மொழியில், நீன் என்னும் பெயரே முன்னிலை யொருமையில் வழங்குகின்றது. அஃது, உருபேற்குமிடத்து **நின்** எனத் திரியும்.[1] முன்னிலையொருமை வினைமுற்றின் விகுதி, பழங்கன்னடத்தில் **அய்** என்பது. புதுக்கன்னடத்தில்[2] **ஈயே, எ** என்பவை வழங்குகின்றன. ஒருமை யேவலில் இகர விகுதி காண்கின்றது.

### தெலுங்கு

தெலுங்கு மொழியில், **நீவு** என்பது முன்னிலை யொருமைப் பெயராய் வழங்குகின்றது; செய்யுட்களில் **ஈவு** என்னுஞ் சொல்லும் காண்கின்றது. ஆயின், உருபேற்கும்போது **ஈவு** என்னுஞ் சொல்லின் தொடர்பு காணவில்லை; இரண்டனுருபினையேற்கும்பொழுது **நின்** எனவும், மற்றைய உருபுகளில் **நீ** எனவுமே இருக்கின்றது. முன்னிலையொருமை வினையில் [3]வு, வி, என்னும் விகுதியும், ஏவலொருமையில் **மு** விகுதியும் உள்ளன.

### மலையாளம்

மலையாள மொழியில் முன்னிலை யொருமைப்பெயர் **நீ** என்பது. உருபேற்குமிடத்தில் அது **நின்** எனத் திரிகின்றது.

---

1. கர்னாடக பாஷாபூஷ. சூ.92,93; ஶப்தமணிதர்ப்பணம். 157.
2. ஶப்தாதர்ஶம். பக்கம்.21.
3. பாலவ்யா. க்ரியா பரிச்சேதம். 9,18,29.

**துளு**

துளு மொழியில் முன்னிலையொருமைப்பெயர் **ஈ** என்பது. உருபேற்றவழி நின் என்பது காண்கின்றது.[1] வினை முற்றின் விகுதியாக **அ** ஒன்றே உளது.[2]

இனி, துத முதலிய மொழிகளில் வழங்கும் முன்னிலைப் பெயர் முதலியவற்றைக் கால்ட்வெல் இலக்கணத்திற் கண்டவாறு[3] குறிக்கின்றேன்:

துதமொழியில் **நீ** என்பது முன்னிலையொருமைப் பெயர். உருபேற்கும்பொழுது, அது **நின்** எனத் திரியும். **இ** அல்லது **எ** என்பது வினை விகுதியா யுளது.

கோத மொழியில் முன்னிலை யொருமைப்பெயர் நீ என்பது. அஃது உருபேற்கையில் **நின்** எனத் திரியும். வினைமுற்றில் இகர விகுதி வழங்குகின்றது.

கோண்டு மொழியில் **இம்மா** என்னுஞ் சொல் முன்னிலையொருமைப் பெயராய் வழங்குகின்றது. உருபேற்கையில் அது **நீ** என நிற்கின்றது. **நி,** அல்லது **இ** என்பது ஒருமை விகுதியாகக் காண்கின்றது.

குயிமொழியில் , **ஈனு** என்பது ஒருமைப்பெயராய் வழங்குகின்றது.[4] உருபேற்கும்போது, அது **நீ** என நிற்கின்றது. வினைமுற்றில் இகர விகுதி காண்கின்றது.

ஒராஒன் மொழியில் முன்னிலைப் பெயர்[5] **நீஎன்** என்பது வேற்றுமையுருபேற்பினும் அஃது அவ்வாறே நிற்கும்.

ராஜ்மஹால் மொழியில் முன்னிலை யொருமைப்பெயர் **நின்** என்பது. அது வேற்றுமை யுருபேற்குமிடத்தும் அவ்வாறே நிற்கும்.

1. துளு இலக்கணம். பக்கம். 37.
2. துளு இலக்கணம். பக்கம். 46.
3. கால்ட்வெல் இலக்கணம். பக்கம். 386, 387.
4. சிலவுருபுகளில் நின் என்பது காண்கின்றது. குயி இலக்கணம். பக்கம். 12.
5. நீன் என்பது பெயர். வேற்றுமையுருபேற்கும்பொது நின் என்றாகும். (குருக். பக்கம். 18); இறந்தகால நிகழ்கால வினைமுற்றில் ஆண்பாற்கு அஇ(ஐ) என்பதும், பெண்பாற்கு ஈ என்பதும் விகுதியாய் வரும்; எதிர் காலத்தில் இருபாற்கும் ஔ என்பது வருகின்றது. (குருக். இலக்கணம். 34, 35.)

ப்ரஹூயி மொழியில், **நீ** என்பது பெயர். அஃது உருபேற்குமிடத்து [1]**நா** எனத் திரியும்.

இனி, இவற்றை எளிதின் அறிவான்வேண்டி, ஈண்டு ஒருங்கே குறிக்கின்றேன்.

| மொழிகள் | பெயர்கள் | உருபேற்றவழித் திரிந்த வடிவம் | விகுதி |
|---|---|---|---|
| **தமிழ்** | நீ | நின், நுன், உன் | இ, ஐ, ஆய் |
| **கன்னடம்** | நீன் | நின் | அய்; இ. ஈயே, எ |
| **தெலுங்கு** | ஈவு , நீவு | நின், நீ | வு, வி; மு |
| **மலையாளம்** | நீ | நின் | |
| **துளு** | ஈ | நின் | அ |
| **துத** | நீ | நின் | இ, எ |
| **கோத** | நீ | நின் | இ |
| **கோண்டு** | இம்மா | நீ | நி, இ |
| **குயி** | ஈனு | நீ, [2]நின் | இ |
| **ஒராஒன்** | நீஎன், [3]நீன் | நீஎன், [4]நின் | [5]ஐ, ஈ, ஔ |
| **ராஜ்மஹால்** | நின் | நின் | |
| **ப்ரஹூயி** | நீ | நா [4]நே. | [6]உஸ், இஸ், எஸ், ஒஸ் முதலியன. |

1. 'நே' எனவும் காண்கின்றது. (ப்ரஹூயி இலக்கணம். பக்கம். 77)
2. குயிமொழி. பக்கம்.12.
3. குருக்மொழி. பக்கம்.18.
4. குருக்மொழி. பக்கம். 34,35.
5. ப்ரஹூயி இலக்கணம். பக்கம் 77.
6. ப்ரஹூயி இலக்கணம். பக்கம் 118, 124, 126 முதலியன.

## கால்ட்வெல் கொள்கை

இனி, இம் முன்னிலைப்பெயர்களைக்குறித்து டாக்டர் கால்ட்வெல் கூறியிருப்பவற்றை முதற்கண் நோக்குவோம்: [1]இந்து ஐரோப்பிய மொழியிலும் ஸிதியன் மொழியிலும் தன்மையிடத்திற் காணும் மா என்பது திராவிட மொழியில் தன்மைப்பெயரிலுள்ள நா என்பதற்கு மூலமாகலாமென்பது அறிந்தோம். அதனோடொப்ப, அவ்விரு மொழியிலும் முன்னிலையிற் காணும் த், ந் ஆகத் திரியுமாகலின், து அல்லது தி என்பதுவே திராவிட மொழியின் முன்னிலைப் பெயராய் நி என்பதற்கு மூலமாகும் எனின், அஃது அமை வுடையதாகத் தோன்றவில்லை. [2]**அஹ், ம** என்பவை தனித் தனியே தன்மைப் பெயர்க்கு மூலமாயினாற்போல, முன்னிலை யிலும் ஜேவெடிக் மொழியிலுள்ள து, நி, என்பனவும் தனித் தனியே தொல்லுருவமா யிருந்திருக்கலாம். இஃது ஐயப்பாடே.

[3]பெஹிஸ்துன் என்னுமிடத்திலுள்ள ஸிதியன் கல் வெட்டுகளில் நீ என்பது காண்கின்றது. ஆயின், பன்மைப் பெயர் காணப்படவில்லை.

ஆயினும், திராவிடமொழியிலுள்ள நீ என்பது ஸிதியன் மொழிச் சொல்லோடு தொடர்புடையது என்று துணியப்படும். அத்துணைத் தொடர்பு இந்து ஐரோப்பிய மொழிகளோடு காணப்படவில்லை.[4]

நா என்பது யா அல்லது ஆ என்பதிலிருந்து தோன்றி யிருப்பின், நீ என்பது ஈ என்னுந் தொல்லுருவினின்று தோன்றி யிருத்தல் வேண்டும். நீ என்பதனினும் ஈ என்பதுவே தொன்மையது.[5]

---

1. பக்கம்.391.
2. பக்கம்.392.
3. பக்கம்.392
4. பக்கம்.395.
5. பக்கம்.388.

# முன்னிலை யொருமைப் பெயரின் ஆராய்ச்சி

## முன்னிலையொருமைப் பெயரின் தொல்வடிவம் யாது?

இனி, முன்னிலை யொருமைப்பெயரின் தொன்மை வடிவம் யாது என்று ஆராய்வோம்: படர்க்கை, தன்மைப் பெயர்களாகிய தான் தாம், ஏன் ஏம் (யான், யாம்) நான் நாம் என்பவற்றில் னகரம் ஒருமையைக் குறித்து நிற்றல்போல, முன்னிலைப் பெயரிலும் னகரத்தை ஈற்றிலுடையதொரு பெயரே ஒருமையின்கண் அமைந்திருத்தல் வேண்டும். கன்னட மொழியில் நீன் என்னும் பெயர் உளது. அன்றியும், தமிழ் கன்னடம் மலையாளம் துளு துத கோத இம்மொழிகளில் இரண்டாம் வேற்றுமை முதலிய வேற்றுமையின் உருபுக்களை யேற்குமிடத்து நின் என்று உளது. தெலுங்கு மொழியில் இரண்டனுருபொடு கூடுமிடத்து நின் என்றே வழங்குகின்றது. இவற்றால் முன்னிலை யொருமைப் பெயரின் தொன்மை வடிவம் **நீன்** என்பதுவே ஆதல் தெளிவுறும். வேற்றுமை யுருபேற்கும்பொழுது நாம் என்பது நம் எனவும், தாம் என்பது தம் எனவும், நான் என்பது (கன்னடத்தில்) நன் எனவும், நெடு முதல் குறுகி வருதல்போல **நீன்** என்பதுவே நின் எனக் குறுகி வருகின்றது.

## தொல்காப்பினார் கூற்று

ஆயின், ஆசிரியர் தொல்காப்பினார்,

'நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே' (உருபி.7.)

என்றபடி, நீ என்பது **நி** எனக் குறுகி, னகரஞ் சேரப்பெற்று, **நின்** என்றாயிற்று எனக் கொள்ளாமோ எனின், அவர், தமிழில் இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் கூறினாரித்தனை என்க.

சொற்களின் அமைதியை அறிவித்தல் இலக்கணநூலாரின் கருத்தேயன்றி, சொற்களின் தொன்னிலையை ஆராய்ந்து அறிவித்தல் அவர் கருத்துமன்று; கடனுமன்று. நீ என்பதுவே இயல்பாய பெயராயின், **தீ** என்னுஞ் சொல் தீயினை, தீயை எனவும், **வீ** என்னுஞ் சொல் வீயினை, வீயை எனவும் வருதல்போல, அது, நீயினை நீயை எனச் சாரியை பெற்றும் பெறாதும் வருதல் வேண்டும். ஈகார வீற்றுப் பெயர், சாரியை பெற்றும் பெறாது வரும் என்பது,

> 'புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
> சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்
> தேருங் காலை உருபொடு சிவணிச்
> சாரியை நிலையுங் கடப்பா டிலவே' (உருபியல். 30.)

என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும். இம் முன்னிலை யொருமைப்பெயர் ஈகார வீற்றுப் பெயர்போலன்றி, தான், நான் முதலிய மெய்யீற்றுப் பெயர் போன்று நெடுமுதல் குறுகி வருதலின், இது, **நீன்** என்னுஞ் சொல்லேயாகும்.

கன்னடம் மலையாளம் துளு முதலிய மொழிகளில் நின் எனத் திரிந்த வடிவமே நிலைத்திருக்க, தமிழில் மட்டும் நின் என்பது நுன் எனத் திரிந்து, பின்னர் **உன்** எனத் திரிவ தாயிற்று. இக்காலத்தில் **உன்** என்பதுவே வழக்காறாக, ஏனைய இரண்டும் வழக்கொழிந்தன.

## முன்னிலை யொருமை வினையிற் காணும் இன்

இனி, நீன் என்பதுவே ஒருமைப்பெயயரன்பதைத் தமிழில் முன்னிலையொருமைவினையினாலும் தெளிதல் கூடும். எவ்வாறு எனின், மூவிடத்து வினைச்சொற்களிலும் உள்ள இறுதி நிலை (விகுதி) அவ்விடங்களின் பெயர்ச் சொற்களே யாதல் ஒருதலை. கண்டிசின், சென்றிசின் என்பன

போன்ற பழைய வினைச்சொற்களிற் காணும் **இன்** என்பது, **நீன்** என்னும் பெயரின் உறுப்பேயாகும்.

'காப்பும் பூண்டி**சின்** கடையும் போகலை' (அகம்.7.)
'பொன்னினுஞ் சிவந்தன்று கண்டி**சின்** நுதலே' (ஐங். 105.)
'பசந்தன்று கண்டி**சின்** நுதலே' (அகம்.376.)

என்னுமிடங்களில், [1] கண்டிசின் பூண்டிசின் என்பவை, காணுதி, பூணுதி என்னும் பொருளில் வந்துள்ளன. இவற்றிலுள்ள **இன்** என்பது **நீன்** என்னும் முன்னிலைப்பெயரின் உறுப்பே எனக் கொள்ளுதல் அமையும். காண்டி, கேட்டி என்பனபோன்ற சொற்களில், **நீ** என்னும் முன்னிலை யொருமையைப் பெயரின்க ணுள்ள இகரம் சேர்ந்துநின்று, அம் முன்னிலை யொருமையைக் குறித்தல்போல, கண்டிசின், பூண்டிசின் என்பனபோன்ற சொற்களில் **நீன்** என்னும் முன்னிலை யொருமைப்பெயர்க்க ணுள்ள **இன்** சேர்ந்து நின்று, அம் முன்னிலை யொருமையைக் குறித்தது. ஆசிரியர் தொல்காப்பியனார்,

'மியாஇக மோமதி இகும்**சின்** என்னும்
ஆவயி னாறும் முன்னிலை யசைச்சொல்' (இடை.26.)

என்னுஞ் சூத்திரத்தான், இது முன்னிலைக்கண் வருவது என்று கூறியது அறியத்தக்கது. இச் சூத்திரத்தில், **சின்** என்றதிலுள்ள **இன்** என்பதுவே பழைய முன்னிலை யொருமைப்பெயரைக் குறிப்பது. தங் காலத்தின்முன்னரே நீன் என்னும்பெயர் ஒழிந்தாகலின், தொல்காப்பியனார், கண்டிசின் என்பதுபோல் பவற்றிற் **சின்** என்பதனை அசைச்சொல்லாகக் கொள்வா ராயினர். இலக்கண நூலார், கண்டிசின் என்பது போன்ற சொற் களில் இன் எனப்பிரித்து அதனை முன்னிலையொருமை விகுதி என்னாராய், சின் எனப்பிரித்து அசைநிலையாகக் கொண்ட தனான், அஃது (இன்), முன்னிலையொழிந்த ஏனையிடங் களுக்கும் வருவதாயிற்று. அவற்றைக் கண்ட ஆசிரியர் தொல் காப்பியனார், மியா இக முதலிய ஆறு சொற்களும் முன்னிலைக் கண் வரற்குரியன என்று முதலில் கூறி, பின்னர்,

---

1. கண்டிசின் என்பது கண்டிகின் (கண்டீகின்) என்னுஞ் சொல்லின் திரிபு. ஈண்டுக்ககரம் சகரமாகத் திரிந்துளது. இவ்வுண்மை, இதனைக் குறித்து ஆராயுமிடத்து அறியப்படும்.

'அவற்றுள்,
இகுமும் **சின்**னும் ஏனையிடத் தொடுந்
தகுநிலை யுடைய என்மனார் புலவர்' (இடையி.27.)

என்பாராயினர். நன்னூலார்[1] 'யாகா பிறபிறக்கு' என்னுஞ் சூத்திரத்தில், சின் என்பது மூன்றிடத்தும் வருவதோ ரசைச்சொல் என்றே கூறியொழிந்தார்.

இக் கூறியவற்றால், கண்டிசின் என்பதுபோன்ற சொற்களில் **நீன்** என்னும் முன்னிலை யொருமைப்பெயரின் கூறாகிய **இன்** என்பதுவே இறுதிநிலையாக அமைந்துள்ளது என்பது நன்கு புலனாகும். ஆகவே, பண்டைக்காலத்து முன்னிலை யொருமைப் பெயர் **நீன்** என்பதுவே யாகும் என்றல் வலியுறும்.

## வினையெச்சத்தில் உள்ள 'இன்' விகுதி

செயின், வரின், என்பனபோன்ற வினைச்சொற்கள் மிக்க பழங்காலத்தில் முன்னிலை யொருமை வினைமுற்றுக் களே. அவற்றிலுள்ள **இன்** விகுதியும் **நீன்** என்னும் பெயரின் கூறேயாகும். அவையெல்லாம், செந்தமிழில் வினையெச்சமாகக் கொள்ளப்பட்டன. நீன் என்னும் ஒருமைப்பெயரில் னகரத்தை விலக்கியதனான், அப் பெயரின் கூறாகிய இன் என்பதுவும் முன்னிலை யொருமை வினைக்கண் வரலாகாது என்று விலக்கி, அதனை வினையெச்சமாக அமைத்தனர் என்று உய்த்துணர்தல் தகும். கன்னட மொழியில் முன்னிலைப் பன்மை யேவலில், செய்**யிம்**, கே**ளிம்** என இம் விகுதி வருகின்றது. அது **நீம்** என்பதனைக் குறிப்பது. அம்முறையில், ஒருமைக்கண் **இன்** என்பது வருதலன்றே அமைதி?

## வழக்கின்கண் முன்னிலையிற் காணும் 'ஏன்' விகுதி

நீன் என்பதுவே மூலத்ராவிடத்துப் பெயர் என்பது இக்காலத்துத் தமிழிலுள்ள முன்னிலைவினை வழக்கானும் உணரப்படும். என்னையெனின், வழக்கில்,[2] முன்னின்றானை

---

1. நன். இடை. 22.
2. இது பன்மைக்கண்ணும் கேட்கப்படுகின்றது.

நோக்கிப் பேசுமிடத்தில்,'இரேன், சொல்லேன், கேளேன்' என்பனபோல்பவை வழங்குகின்றன. இரு, சொல், கேள் என்னுஞ் சொற்கள், ஏன் விகுதி பெற்று, இரேன், சொல்லேன், கேளேன் என்று அமைந்துள்ளன. ஏன் என்னும் விகுதி தன்மை யொருமைக்கண் வருவதாகலின், அது, முன்னிலை யொருமைக் கண் வருதல் அமையாதன்றே? ஆகலின், ஈண்டுக் காணும் ஏன் விகுதி இயல்பாயதன்று; ஒன்றன் திரிபாதல் வேண்டும். இது யாதன் திரிபாகும்? நீன் என்னும் ஒருமைப்பெயரின் கூறாகிய **ஈன்** அல்லது, **இன்** என்பதுவே வழக்கின்கண் **ஏன்** எனத் திரிந்து வழங்குகின்றது என்று கொள்ளுதல் அமைதி. அவ் வாறாயின், ஈன் விகுதி திரியாது இரீன், சொல்லீன், கேளீன் என்றன்றே வருதல் வேண்டும் எனின், நீ என்னும் பெயரின் கூறாகிய இகரம் சேர்ந்துளனவாகிய இராதி, சொல்லாதி, கேளாதி என்னுஞ் சொற்களில் இகரம் ஏகாரமாகத் திரிந்து, இராதே, சொல்லாதே, கேளாதே என்று வழங்குதல்போல, இரீன் முதலிய சொற்களிலும் ஈகாரம் ஏகாரகமாகத் திரிந்து, இரேன் முதலியனவாய் வழங்குகின்றன என்று கொள்ளுதல் வேண்டும்.

இக் கூறியவற்றால், செயின் என்னும் வாய்பாட்டு வினைச்சொற்களிலுள்ள இவ் விகுதி நீன் என்பதன் கூறே என்பதும், வழக்கில், செய்யேன் கேளேன் என்பனபோல் பவற்றிலுள்ள ஏன் விகுதியும் நீன் என்னும் ஒருமைப்பெயரின் கூறாகிய ஈன் அல்லது இன் என்பதன் திரிபு என்பதும் அறியப்படுமாகலின், நீன் என்பதுவே பழைய வடிவம் என்றல் தெளிவுறும்.

### நீன் என்பதன்கண் உள்ள நகரம்

நீன் என்னும் பெயரில் முதற்கணுள்ள நகரத்தைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்: மேலே, கால்ட்வெல் கருத் துக்களை ஆராய்ந்தவற்றால், இந் நகரம் இந்து ஐரோப்பிய மொழிகளில் முன்னிலைப் பெயரிற் காணுந் தகாரத்தின் திரிபன்று என்பதும், ஸிதியன் மொழியிற்காணும் நகாரத்தின் தொடர்பாகும் என்பதும் போதரும். ஆயின், இந் நகாரம் சொல்லின் மூலமாயது எனத் தோன்றுகின்றது. டாக்டர் போப்பும் இவ்வாறே கூறியுள்ளார். தான் தாம் என்னும் படர்க்கைப்

பெயரில் தகாரம் முதற்கண் சேர்ந்திருத்தல் போல முன்னிலைப்பெயரில் நகாரம் முதற்கண் சேர்ந்துளது என்று கோடல் அமைதி. **த**ந்தை **நு**ந்தை **எ**ந்தை; **தாய் ஞாய் யாய்**; **த**வ்வை **நு**வ்வை **எ**வ்வை; **த**ம்பி **நு**ம்பி **எ**ம்பி என்னும் முறைப்பெயர்கள் படர்க்கை முன்னிலை தன்மையிடத்தன வாகலின், தகரம் படர்க்கை முன்னிலை தன்மையிடத்தன வாகலின், தகரம் படர்க்கையிடத்தையும், நகரம் முன்னிலை யிடத்தையுப் குறிப்பனவென்பது நன்கு விளங்கும்.

> 'இளையோள் தந்தை' (புறம். 341.)
> '**நு**ந்தைதொல் வியனகர்' (குறிஞ்சிக்கலி.21.)
> '**எ**ந்தையும், நிலனுறப் பொறாஅன்' (அகம்.12.)

என்னுமிடங்களில், தந்தை (தன் + து + ஐ) என்பது தன் அப்பு என்றும், நுந்தை என்பது நின்அப்பன் என்றும், எந்தை என்ப என்அப்பன் என்றும் பொருள் தருகின்றன. இவ்வாறே,

> '**தா**யி றூவாக் குழவிபோல' (புற.4.)
> [1]'**ஞா**யையும் அஞ்சுதி யாயின்' (முல்லைக்.7.)
> '**யா**யே கண்ணினுங் கடுங்கா தலளே'(அக.12.)

என்னுமிடங்களில், தாய் என்பது தன்அன்னை என்றும், ஞ என்பது நின்அன்னை என்றும், [2]யாய் என்பது என் அன்ன என்றும் பொருள் பயக்கின்றன.

> 'நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
> **தா**யென்று முதுமறை பரவினும்,

---

1. ஞகரம், நகரத்தின் திரிபாகும்.

2. 'யாய் என்பது தன்மையொடு ஒட்டுதலின், முறைப் பெயரெனி உயர்திணையாம்.' (பெய.26.நச்.உரை.) ஆயின், 'யாய் வருக ஒன் (முல்லைக்.16.) என்றுமிடத்துமட்டும் யாய் என்பது, நின்தாய் என் பொருளில் வந்துளது. 'யாய் வருக' என்பதற்கு, நச்சினார்க்கினியர், ' வருக' என்று பொருளெழுதி யிருத்தலின், 'ஆய் வருக ஒன் என்பது உண்மையான பாடாமா யிருக்கலாம்.

**யா**யென் றல்ல தியாந்துணியலமே'
(தொல்.செய். 149. பேரா.மேற்கொள்.)

என்பதனாலும்,

'**யாயும் ஞாயும்** யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்' (குறுந்.40.)

என்பதனாலும், தாய் ஞாய் யாய் என்பனவற்றின் வேறுபாடு அறியப்படும்.

'செய்யவள், **தவ்வை**யைக் காட்டிவிடும்.' (குறள், 1 7.)
'நும்மினுஞ் சிறந்தது **நுவ்வை** யாகுமென்
றன்னை கூறினள்.' (நற். 172.)
'தண்டுறை யூரனை எவ்வை எம்வயின்' (ஐங் .88.)

என்னுமிடங்களில், தவ்வை என்பது தன் அக்கை என்றும், [1] நுவ்வை என்பது நும்அக்கை என்றும், எவ்வை என்பது என் அக்கை என்றும் பொருள் தருகின்றன. இதுகாறுங் காட்டிய உதாரணங்களால் நகாரம் முன்னிலையைக் குறிப்பது நன்கு தெளிவுறும்.

நீன் என்பதுவே ஒருமைப்பெயராயின், அதன்கண் உள்ள இறுதினகரம் தமிழில் கெடுதல் ஏன்? யான் நான் தான் என்னுஞ் சொற்களில் இறுதி னகரம் கெடாது நிற்றல்போல, நீன் என்னும் சொல்லின்கண்ணும் கெடாதிருத்தல் வேண்டு மன்றே? அஃது இல்லாதொழிந்ததற்குக் காரணம் என்னை எனின், கூறுவேன்.

## நீன் என்பதில், ன் விலக்கப்பட்டதன் காரணம்

மூலத் திராவிட மொழியில், ஒருமையைக் குறித் தற்கு னகரமும், பன்மையைக் குறித்தற்கு மகரமும் அமைக்கப் பட்டன. பிற்காலத்திற் செய்யப்பட்ட சீர்திருத்தம் பலவற்றுள்,

1. நுவ்வை என்பதற்கு 'நுமமுடன் பிறந்த தங்கை' என்று எழுதியுள்ள பொருள் பொருந்தாமை செய்யுளை நோக்கின் புலனாகும்.

னகரம் ஆண்பாலைக் குறித்தற்கும், மகரம் அஃறிணையைக் குறித்தற்கும் அமைத்ததுவும் ஒன்று. அதனானே மரன், குளன், நிலன் முதலிய சொற்களில் [1] னகரத்திற்கீடாக மகரத்தைச் சேர்த்து வழங்கலாயினர். இம்முறையில், நீன் நீம் என்னும் முன்னிலைப் பெயர்களிலுள்ள னகர மகரங்கள் ஒழிக்கப் பட்டன. அற்றேல், யான் யாம் என்னுந் தன்மைப்பெயரிலும், தான் தாம் என்னும் படர்க்கைப்பெயரிலும் னகர மகரங்களை நீக்காதிருக்க, முன்னிலைப் பெயர்களில் மட்டும் அவ்வெழுத் துக்களை நீக்கியது ஏன் எனின், அதன் காரணம் கூறுவேன். தன்மைக்கண் அஃறிணை வழக்கே இன்மையின், யான் என்னும் பெயரை (னகர மிருத்தலின்) ஆண்பாற்பெயர் என்றும், யாம் என்னும் பெயரை (மகர மிருத்தலின்) அஃறிணைப்பெயர் என்றும் கருத இடன் ஏற்படாது. படர்க்கைக்கண், தான் தாம் என்னும் பெயர்கள் இருதிணைக்கும் பொதுவாயினும், அவை, முன்னர் வரும் வினைமுற்றால் வேறுபாடு அறியப் படுமாகலின், அவற்றுக்கண்ணும் ஐயந் தோன்றாது. சுட்டுப் பெயர்கள் உயர்திணையில் அவன், அவள், அவர் என்றும், அஃறிணையில் அது, அவை என்றும் வேறு வேறாக அமைக்கப் பட்டனவாகலின் அவற்றில் மயக்கம் உண்டாதற்கு இடமே இல்லை. ஏனை முன்னிலைக்கண் இருதிணை வழக்கும் உள வாகலானும், வினைமுற்றால், வேறுபாடறிதல் இயலாதாக லானும், நீன் என்னும் பெயரை (னகரம் இருத்தலின்) உயர் திணை ஆண்பாற் பெயரென்றும், நீம் என்னும் பெயரை (மகரம் இருத்தலின்) அஃறிணைப் பெயரென்றும் கொள்ள இடனிருத் தலின் மயக்கம் நேருமாகலான், ஆண்டு, னகரம் ஒழிக்கப் பட்டது; மகரத்தை ஒழித்து அதற்கீடாக இர் என்னும் பன்மை விகுதி சேர்க்கப்பட்டது. பன்மையைக் குறிப்பதாகக் கொண்ட ரகர மெய்யை (முதலுயிரெழுத்தாகிய அகரத்தோடு சேர்த் தமைத்த அர் என்னும் விகுதியைச் சுட்டின்கண் கொண்ட தனால்,) இரண்டாமுயிரெழுத்தாகிய இகரத்தோடு சேர்த் தமைத்த இர் என்னும் விகுதியை முன்னிலைக்கண் அமைக்க லாயினர். செந்தமிழ் இவ்வாறு அமைப்பினும், அஃது(நீயிர்) உலக வழக்கில் யாண்டும் நிலைபெற்றிலது. இன்றும் சில விடங்களில் நீம் என்னுஞ் சொல்லையே வழங்குகின்றனர்.

---

1. 'மகரத் தொடர்மொழி' (மொழி மரபு.49.) என்னுஞ் சூத்திரத்தான் இவ்வுண்மை அறியப்படும்.

பன்மையைக் குறிக்கும் இர் என்பது இல்லாவிடின் ஒருமை என்பது போதருமாகலின், ஒருமையைக் குறிக்க விகுதி வேண்ட என்று விடுத்தனராவர். ஆயின்,

> '**தன்மை** முன்னிலை வியங்கோள் வேறிலை
> உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை'
> (*நன். வினை. 11.*)

என்பதனால், தன்மைக்கண்ணும் அஃறிணை வழக்கு உளதாதல் பெறுதுமால் எனின், நன்னூலார் இவ்வாறு கூறினாராயினும், ஆசிரியர் தொல்காப்பியனார் முன்னிலையிடம் மட்டுமே இரு திணைக்கும் பொது எனக் கொண்டுள்ளார். அஃது [1]'அவ்வழி, அவனிவ னுவன்', [2]'இயற்பெயர் சினைப்பெயர்' [3]'நீயிர் நீ என' [4]'முன்னிலை வியங்கோள் என்னுஞ் சூத்திரங்களான் அறியப் படும். அதனால், பண்டைக் காலத்தில் தன்மையிடத்தில் அஃறிணை வழக்கு இன்மை தெளிவாகும்.

மேற்கூறியவாறு செந்தமிழில் அமைந்துள்ள முறையில், நீன் என்னும் முன்னிலைப்பெயர்க்கண் மயக்கம் நேருமாகலின், அதன்கண் நின்ற னகரத்தை யொழித்தல் அக்காலத்தில் இன்றி யமையாததாயிற்று. அல்லாக்கால், நீன் என்பதன் னகரம் உலக வழக்கில் கெடுதல் கூடுமாயினும் செய்யுட்களில் இல்லாதொழி தற்கு ஏது இல்லை. தமிழ்நாட்டில் சிலவிடங்களில், **நீன்** என்னுஞ் சொல் இன்றும் வழங்குதல் அறியத்தக்கது.

### நீய்

நீ என்னுஞ் சொல்லை[5] நீய் என்று எழுதுதலும் உண்டு எனத் தெரிகின்றது. அது, வழக்கில் **நீயி** என்று வழங்குகின்றது. இவற்றால், கால்ட்வெல் 'முன்னிலை யொருமைப்பெயர் **நீய்** எனக் காண்கின்றது. இதன்கண் உள்ள யகரமெய், வந்தாய் வந்தோய் என்னுஞ் சொற்களிலுள்ள ஆய் ஓய் என்பவற்றிலும்

---

1. பெயர்.8.
2. பெயர்.20.
3. பெயர்.34.
4. வினை.25.
5. மலையாளத்தில் நீயி என்று எழுதுதலும் உண்டு.

காண்கின்றது[1] என்றார். ஆயின், நீய் என்னும் பெயரை இலக் கண நூலார் எவரும் கூறிற்றிலர்.

## தெலுங்குப் பெயர் நீவு

தெலுங்கு மொழியில், முன்னிலை யொருமைப்பெயர் நீவு என வழங்குதலை நோக்கின், அது, **நீம்** என்னும் முன் னிலைப் பன்மைப் பெயரின் திரிபாகும் என்பது புலனாகும். தமிழ் மொழியில் மெய்யீற்றவாக வழங்குஞ் சொற்கள், தெலுங்கு மொழியில் உகரம் பெற்று வழங்குதல் வழக்கு. மகாரம், வகார மாகத் திரிதல் மரபே. ஆகவே, நீம் என்பது நீமு, நீவு என வருதல் அமையும். பழங்கன்னடத்தில் **நீம்** என வழங்கிய சொல்லே புதுக் கன்னடத்தில் **நீவு** என வழங்குதல் ஈண்டைக்கு அறியத் தக்கது. முன்னிற்போனை உயர்வுப்படுத்திக் கூறுதல் யாண்டும் வழக்கே யாகும். ஆகலின், நீம் என்னும் பன்மைப் பெயரே தெலுங்கில் ஒருமைக்கு வழங்கலாயிற்று. ஆங்கில மொழியில், பண்டு, பன்மைக்கு வழங்கிய, 'யு' (You) என்பது பிற்காலத்தில் ஒருமைக்கு வழங்குதலும் இதனை வலியுறுத்தும். இனி, வச்சிதிவி (வந்தாய்), செப்பிதிவி (செப்பினாய்) என்பவற்றில் காணும் வகாரமும் முன்னிலைப்பெயரின் கூறாகிய **இம்** என்பதிலுள்ள மகாரத்தின் திரிபு எனக் கொள்ளுதல் அமையும். தெலுங்கில் முன்னிலை **யொருமையேவற்கண்,** பாடுமு, ஆடுமு, செப்புமு, தெம்மு என்று வழங்குஞ் சொற்கள், தமிழில் முன் னிலைப் பன்மையேவலாய் வழங்குகின்ற பாடும், ஆடும், செப்பும், தம் என்னுஞ் சொற்களே. இதனால், தமிழில் பன்மைக்கு வழங் குஞ் சொற்கள் தெலுங்கில் ஒருமைக்கு வழங்குவன உள என்பது அறியப்படு மன்றே? தெலுங்கு மொழி யில், நீவு என்னுஞ் சொல் நகரமெய் இல்லாதே, ஈவு என்று செய்யுளில் வருகின்றது. துளு மொழியிலும் நகரமெய் இல்லாமல் வழங்குகின்றது.

## முன்னிலை யொருமை விகுதி

இனி, தமிழில் உள்ள முன்னிலை யொருமை விகுதி யைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்: முன்னிலை யொருமைக் கண் வரும் விகுதிகள் **இ, ஐ, ஆய்** என்னும் மூன்றுமே. இது,

---

1. பக்கம். 384

[1]'அவற்றுள்,
முன்னிலைக் கிளவி,
**இ ஐ ஆய்** என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்'

என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். இவற்றுள் இகரவிகுதி, நீ என்னும் பெயரின் கூறு என்பது மேலே கூறியவற்றால் போதரும். ஆகலின், ஏனைய இரண்டனையே இனி நோக்குதல் வேண்டும்.

## ஐ விகுதியின் உண்மை வடிவம்

ஐ என்பது, அய் என்பதன் திரிபு. அதுவே நீண்டு ஆய் எனவும் வழங்குகின்றது. இவ்வுண்மை ஏனைய விகுதிகளை நோக்கின் வலியுறும். என்னையெனின்,

| | | | | |
|---|---|---|---|---|
| படர்க்கை | ஆண்பால் | - | அன் | ஆன் |
| ,, | பெண் | - | அள் | ஆள் |
| ,, | பலர் | - | அர் | ஆர் |
| தன்மை | ஒருமை | - | என் | ஏன் |
| ,, | பன்மை | - | எம் | ஏம் |
| முன்னிலை | பன்மை | - | இர் | ஈர் |

இவற்றை நோக்கின், விகுதிகள் குறில் முதலவாயும் நெடில் முதலவாயும் இருக்கும் என்பது போதரும். போதரவே, முன்னிலை ஒருமைவிகுதியாகிய **ஐ ஆய்** என்பவை, **அய் ஆய்** என்பனவே யாதல் தானே புலனாகும். அன்றியும், ஐ என்பது அகரமும் யகரமும் கூடியதாகலானே, அது குறிற்பின் யகரமுள்ள மொழிகள் போல விதி பெறுவதாயிற்று.

கை(கய்) + மலை = கைம்மலை
மெய் + மொழி = மெய்ம்மொழி

என்பன காண்க.

---

1. தொல். வினை.26.

[1]'**குறில்வழி யத்தனி ஐ**நொது முன்மெலி மிகலுமாம்'

என்று நன்னூலார் விதித்திருப்பது இவ்வுண்மையை உணர்த்தும்.

இனி, ஐகாரவீற்றுப் பெயர்கள் விளியேற்கும் முறைமையை நோக்கினும், **ஐ** என்பது **அய்** என்பதன் திரிபே என்பது போதரும். அன்**னை** - அன்**னாய்**; கிள்**ளை** - கிள்**ளாய்** என்னுமிடங்களில் ஐகாரம் **ஆய்** எனத் திரிந்துளது எஃபது அமைதியன்று. தோன்**றல்** - தோன்**றால்**; மக்**கள்** - மக்**காள்** என்பவற்றில், லகர ளகரவீற்றுப் பெயர்களின் ஈற்றயல் அகரம் ஆகாரமாயிற்று என்பதுபோல, அன்னாய், கிள்ளாய் என்பவற்றிலும் யகரவீற்றுப் பெயரின் ஈற்றயல் அகரம் ஆகாரம் ஆயிற்று என்றலே முறைமையாகும். என்னெனின், ய, ல, ளக்கள் ஓரினங்களாகலின், அவ்வீற்று மொழிகளெல்லாம் விளிக்கண் ஒரேவிதி பெறுதலே முறைமை என்க. இவ்வாறாயின், அன்னை என்பது அன்னய் என யகார வீறாகும். அதன் ஈற்று **அய், ஆய்** என நீண்டு விளிக்கண் வருதல் இயல்பே. இக் கூறியவற்றால், **ஐ** என்பது அய் என்பதன் திரிபே என்பது நன்கு விளங்கும்.[2]

## ஐ விகுதியின் பொருள்

இனி, ஐ என்பதன் பொருள் யாது? அது முன்னிலை ஒருமைக்கண் வருதல் எற்றிற்கு என்று நோக்குவோம்: அய் என்பது, அய்யன் என்னுஞ் சொல்லின் முதல்நிலை. அது(அய்) தலைமையைக் குறிக்கும். தலைமையுடையானைக்குறித்துப் பழைய நூல்களில் வந்துளது.

'என்**னைக்** கூரிஃ தன்மை யானும்' (புறம்.85.)
'என்**னை**முன் னில்லன்மின் தெவ்விர்' (குறள்.771.)

என்னுமிடங்களில், ஐ(அய்) என்பது தலைவன், அரசன் என்னும் பொருளில் வந்துளது. அன்றியும், ஐயன் (அய்யன்) என்பது அண்ணன் என்னும் பொருளிலும் பண்டைச் செய்யுட்களில் வந்துளது.

---

1. உயிரீற்றுப் புணரியல்.8.
2. இதன் விரிவினை, யான் எழுதியுள்ள 'ஐகார ஔகாரம்' என்னுங் கட்டுரையிற் காணலாகும்.

'கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் **னையர்**'
(சிலப். கானல். 17.)
'பன்மீன் வேட்டத் தென்**னை**யர் திமிலே' (குறுந். 123.)
'இவள் தன்**னை** மாரே' (புறம். 342.)

என்பன காண்க. இவற்றால், **ஐ** என்பது பெரியோரைக்குறித்து வழங்குதல் அறியப்படும்.

## ஔ விகுதி

இவ்வாறே, அவ் (ஔ) என்பது அவ்வை என்பதன் முதனிலையாகும். அஃது, அக்கையைக் குறிப்பது.

'தண்டுறை யூரனை [1]**எவ்வை** எம்வயின்' (ஐங். 88.)
'அம்ம வாழி பாண **எவ்வை**க்கு' (ஐங். 89.)

என்னுமிடங்களில், எவ்வை என்பது 'எம் அக்கை' என்னும் பொருளில் வந்துளது. '**தவ்வை**யைக் காட்டிவிடும்' என்பதில் தவ்வை என்பது தன் அக்கை என்னும் பொருளதாதலும் ஈண்டு அறியத்தக்கது. இக்கூறியவற்றால் அய் (ஐ), அவ்(ஔ) என்னும் முதல்நிலைகளின் பொருள் தெளிவாகும்.

கன்னட மொழியில் மகடூஉவினை நோக்கிக் கூறுமிடத்து [2]ஔ(அவ்) விகுதியை யமைத்து வழங்கும் வழக்குப் பழைய காப்பியங்களிலும் காண்கின்றது. அதுவும் இக்கொள்கைய்யை வலியுறுத்தும்.

[3]'உஸிர்**தெள** நீம் நின்ன நிர்வேகமம்' (ஆதிபுராண.3:44.)
[4]'ஸ்ரீமதி யாகி புட்டி**தெள**'(ஆதிபுராண. 3:83.)
[5]'அதுவ௦ கேள்**வெள** மஹோத் ஸாஹதிம்' ( ,, 3:84.)

---

1. இந்நூலின் அரும்பத அகராதியில், 'எவ்வை - எமது தங்கை' எனப் பொருளெழுதப்பட்டுள்ளது. இக்காட்டியவை பரத்தை கூற்றாகலானும், பரத்தையையே தலைவி 'எங்கை' என்பதல்லது, பரத்தை, தலைவியை எங்கை என்னாலாகலானும், எமது தங்கை என்பது பொருந்தாது.
2. பஸவ புராணம். 12:33; 47:20, 27: குமார வ்யாஸ பாரதம். ஆதிபர்வம். 10:18. காண்க. (இவை பிற்காலத்தவை.)
3. 'சொல்லினை நீ நின் நிர்வேகத்தை.'
4. 'ஸ்ரீமதியாகிப் பிறந்தாய்.'
5. 'அதனையும் கேட்பாய் அதிக உற்சாகத்தோடு.'

[1]'இன்னெத்த [2]**வோபௌ** பரபவிஸிதபெம் நின்ன னிம
காவ னாவொo'
(கதாயுத். 9.15.)

என்பவை மகடூஉ வினை நோக்கிக் கூறியனவாகலின், ஔ (அவ்) விகுதி வந்தது. ஆடூஉ வினை நோக்கிக் கூறும்வழி, உஸிர்தை, புட்டி**தை**, கேள்**வை** போ**பை** என்று ஐ விகுதி வருமேயன்றி, ஔ விகுதி வருதலே இல்லை.

தெலுங்கு மொழியில் முன்னிலை யொருமைக் கண் **அவு** என்பது வரும். ஆயின் அது, கன்னடத்திற் போலன்றி, ஆண்பாற் கண்ணும் வருகின்றது.

'பாலுண்ட**வு** நியமவ்ரத
ஶீலுண்ட**வு**' (பாரத. ஆதிபருவம். 3 : 106.)

என்று வருதல் காண்க. தமிழ் மொழியில் **ஐ** (அய்) என்ப தொன்றே வழங்குதலானும், தெலுங்கு மொழியில் **ஔ** (அவ் = அவு) என்பதொன்றே வழங்குதலானும், கன்னட மொழியில் அவ் விரண்டும் காணுதலானும், மூலத்திராவிட மொழியில் **ஐ** (அய்) ஔ (அவ்) என்னும் இரண்டும் வழங்கி யிருத்தல் வேண்டும் எனக் கொள்ளுதல் தகும்.

பழைய காலத்தில், தமிழிலும் ஆடூஉ முன்னிலை வினைக்கண் **அய்** (ஐ) என்பதைச் சேர்த்தும், மகடூஉ முன்னிலை வினைக்கண் **அவ் (ஔ)** என்பதைச் சேர்த்தும் வழங்கினர் எனவும், பிற்காலத்தில், படர்க்கைக்கணன்றி முன்னிலைக் கண்ணும் அஃறிணை வழக்கு வருதலின் அவ் வேறுபாடு வேண்டா என ஒழிக்கப்பட்டது எனவும், அதனானே ஆசிரியர் தொல்காப்பியனார்,

---

1. 'இப்பொழுது எங்குப் போவாய்?(யான்) பரிபவிக்கின்றேன். நின்னை இனிக் காப்பவன் யாவன்?'

2. போபௌ என்பதன் முதற்கணுள்ள பகரம், 'எந்த' என்னும் அகரவீற்றும் சொன்முன் வந்ததனால், வோபௌ என வகரமாய்த் திரிந்தது.

'**ஔ**என வரூஉம் உயிரிறு கிளவியும்
* * *

முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே'
(தொகைமரபு. 10.)

என்று விலக்கினார் எனவும் உய்த்துணர்தல் கூடும்.

இதுகாறும் கூறியவற்றால் அய் என்னும் விகுதியின் வரலாறு அறியப்படும். இ-என்பது, நீ என்னும் ஒருமைப்பெயரின் கூறு என்பது மேலேயே கூறப்பட்டது. ஆகவே, ஒருமை விகுதியைக்குறித்து முற்றும் கூறியவாறாயிற்று.

## முன்னிலை யசைச்சொல் - சின்

முன்னிலைக்கண் வரும் கண்டிசின் என்பதுபோன்ற சொற்களின் [1]சின் என்று பிரித்தல் தக்கதன்று; இன் என்று பிரித்தலே அமைதி. இது, நீன் என்னும் முன்னிலையொருமைப் பெயரின் கூறு என்று மேலே கூறியுள்ளேன்.

இனி, கண்டிசின் என்பதுபோன்ற சொற்களின் உண்மைத் தன்மையை ஈண்டு ஆராய்வோம்: கண்டிசின் என்பது ( கண்டு + ஈகு + இன்) என்பதன் திரிபாகும்.

கண்டிசின் என்பதன் தொல்லுருவம் கண்டிகின் என்பதுவே எனல் எவ்வாறு பெறப்படும் எனின், முன்னிலைக்கண், **கண்டிகும்** என்னுஞ் சொல்லும் அசைநிலையாய் வழங்குதலானும், அது பண்டு முன்னிலைப் பன்மையில் வழங்கியதாகுமாதலானும், அதற்கேற்ற ஒருமைவினை கண்டிகின் என்பதே யாகும் என்க.

அஃதேல், கண்டிகின் என்பதில், ககரம் சகரமாய்த் திரிதல் எவ்வாறு அமையும் எனில், கூறுவல்.

---

1. இசின் என்று பிரித்தனர் உரையாசிரியர் சிலர்

## கண்டிகின் என்பதில் கிகரம் திரிந்ததன் காரணம்

தமிழ் மொழியில், த்த-ச்ச ஆகவும், ந்த-ஞ்ச ஆகவும், ந-ஞ ஆகவும், த-ச ஆகவுந் திரிந்து வழக்கிற் பயின்றும், செய்யுளில் அருகியும் வழங்குதல் அனைவரும் அறிந்ததுவே. இதற்குக் காரணம் யாது? மேல்நின்ற எழுத்துக்களானே இத்திரிபு உண்டாகின்றது. **நட**த்தினான், **கா**த்தான், நி**று**த்தான், **பூ**த்தது, **கோ**த்தான் என்பனபோல்பவற்றில் த்த-திரியாதே யிருக்க, அடி**த்**தான், **நீ**த்து, அ**டை**த்தான் என்பனபோல்பவற்றில் த்த-ச்ச ஆகத் திரிந்து வழங்குதலும், **நட**ந்தான், இ**ரு**ந்தான், **மோ**ந்தான் என்பனபோல்பவற்றில் ந்த-திரியாதே யிருக்க, பி**ழி**ந்தான், **நீ**ந்தினான், அ**லை**ந்தான் என்பனபோல்பவற்றில் ந்த-ஞ்ச ஆகத் திரிந்து வழங்குதலும், இருக்குநர், வெள**வு**நர் என்பனபோல் பவற்றில் ந-திரியாதேயிருக்க, அரிநர், வ**லை**நர் என்பனபோல் பவற்றில் நகாரம் ஞகாரமாய்த் திரிந்து வழங்குதலும், வ**ரு**தி, **போ**தி என்பவற்றில் த-திரியாதே யிருக்க, பெ**ரி**து, ப**ழை**து என்பவற்றில் த-ச ஆகத் திரிந்து வழங்குதலையும் ஆழ்ந்து நோக்கின், மேல்நின்ற எழுத்துக்களானே இவை திரிப வாயின என்பது தானே போதரும். உயிரெழுத்துக்களுள் இ ஈ எ ஏ ஐ இவ் வைந்தெழுத்துகளும் தாலுவில் (இடையண்ணத்தில்) பிறப்பன வாகலின், அவை 'தாலவ்யம்' எனப்படும். த, நக்கள் பல்லி னிடத்துப் பிறப்பனவாகலின் 'தந்த்யம்' எனப்படும். தாலவ்யங் களுக்கு முன்னர் வருந் தந்த்யம் தாலவ்யமாகவே மாறி வழங்குகின்றன. இடையண்ணத்திற் பிறக்கும் எழுத்துக்களைச் சாரப் பல்லினதடியிற் பிறக்கும் எழுத்துக்களை யொலித்தல் அருமையும், அவற்றையே இடையண்ணத்தில் ஒலித்தல் எளிமையுமா யிருத்தலின், மக்கள், இவ்விடங்களில் தந்த்யங் களைத் தாலவ்யங்களாக ஒலிக்கின்றனர்; உ ஊ ஒ ஓ ஔ இதழிடையே பிறப்பனவாகலின் அவற்றின்முன் வருந் தந்த்யம் தந்த்யமாக ஒலித்தல் எளிமையாகலின் அதனை அவ்வாறே வழங்குகின்றனர். மெய்யெழுத்துக்களுள் யகாரம் தாலவ்ய மாகலின் அதனையடுத்து முன் வருந் தந்த்யம் தாலவ்யமாகவே திரிந்து வழங்குகின்றது. தேய்ந்து, தேய்த்து என்பவை **தேஞ்சி**, **தேச்சி** என்றாதலின் காரணம் இதுவே.

மேற்காட்டியவாறு தாலவ்யங்களுக்கு முன் வருந் தநக்கள் சஞக்களாய்த் திரிதல்போலவே, ககரமும் சகரமாகத் திரிதல் உண்டு. திகைத்தான் என்பது [1]திசைத்தான் என்று செய்யுளில் வழங்குகின்றது. மொழி முதற்கண் இ ஈ எ ஏக்கள் ஊரப்பெற்ற ககரம் சகரமாய்த் திரிதலும் ஈண்டைக்கு நோக்கத்தகும்.

| கன்னடம் | தமிழ் | தெலுங்கு | மலையாளம் |
|---|---|---|---|
| கெய் | செய் | சேயு, செய்யு | செய் |
| கெலவு | சில | கொன்னி | சில |
| கெத்தல் | சிதல் | செதலு | சிதல் |
| கேரி | சேரி | - | சேரி |
| கிரெ | கீரை | கூர | சீர |

என்பன காண்க.

இதுகாறும் கூறியவற்றால் கண்டிகின் என்னும் முன் னிலை யொருமை வினையே கண்டிசின் என்றாயிற்று என்பது தெளிவாகும். ஆகவே, அவ்வினையின் விகுதி இன் என்பதும், அது, நீன் என்னும் பெயரின் கூறு என்பதும் அறியப்படும்.

# முன்னிலைப் பன்மைப்பெயர்

## முன்னிலைப் பன்மைப்பெயர் - தமிழ்

இனி, முன்னிலைப் பன்மைப் பெயரை நோக்குவோம்: தமிழ் மொழியில் நீயிர் என்பதொன்றே முன்னிலைப் பன்மைப் பெயர் என்று தொல்காப்பியத்திற் கூறப்பட்டுளது. நன்னூலில், அதனோடு, நீவிர் நீர் என்னும் இரண்டு பெயர்களும் கூறப்பட் டுள்ளன. பிற்கால இலக்கியங்களில் இவையேயன்றி, **நீங்கள்** என்னும் பெயரும் பயின்று வந்துளது. தொல்காப்பியனார், **நும்** என்பதுவே வேற்றுமையுருபேற்கும் பெயர் என்றும்

---

1. கம்ப. அயோத். கைகேசிசூழ். 19

அதுவே அல்வழிக்கண் **நீயிர்** எனத் திரியும்[1] என்றும் கூறினார். நன்னூலார், நீர் என்னும் பெயர் வேற்றுமை யுருபேற்குமிடத்து நும் எனத் திரியும்[2] என்றும், நீயிர் நீவிர் என்பன உருபுகளை யேற்கா[3] என்றும் கூறினார். ஆயினும், முன்னிலைப் பன்மைப்பெயர் வேற்றுமையுருபேற்குமிடத்து, நும் என நிற்கும் என்பது ஆசிரியரிருவருக்கும் உடன்பாடே யாதல் தெளிவாகும். நீங்கள் என்பது வேற்றுமையுருபேற்கும் வழி [4]நுங்கள் எனத் திரிகின்றது. நும் என்பது **உம்** என்று வழங்குகின்றது; அவ்வாறே நுங்கள் என்பது உங்கள் என்று வருகின்றது. பண்டைச் செய்யுட்களில் நும் என்பதொன்றே வழங்குவதன்றி, நுங்கள், உம், உங்கள் என்பன வழங்க வில்லை; [5]பிற்காலத்தில் வழங்கலாயின.

முன்னிலைப்பன்மை விகுதியாய் வருபவை இர் ஈர் என்பவையே. மின் என்பது ஏவற்பன்மைக்கண் வரும். ஆயின், பிற்காலத்துச் செய்யுட்களில் ஏவற்பன்மைக்கண் உம் விகுதி பயின்றுவந்துளது. இவ்விகுதிகளோடு கள் விகுதி சேர்ந்து வருதலும் உண்டு.

'நீர் நையாதே, கோளிலி யரன் பரதமே கூ**றுமே**'
(அப்பர். 'நாளுநம்'.)
'இன்று நீர்கழிந் **தீர்களால்**' (சூளா. அரசி. 226)
'இதுவோ தகவென் றிசை**மின்களே**' (திருவிருத். 30)

## கன்னடப் பெயர்

இனி, கன்னட மொழியை நோக்குவோம்: கன்னடத்தில், நீம் என்பதுவே முன்னிலைப் பன்மைப்பெயர். அது நீவு எனப் புதுக் கன்னடத்தில் வழங்குகின்றது. நீம் என்பது உருபேற்கும் போது நிம் எனத் திரியும். இப்பன்மைக்கு வரும் விகுதி **இர்** என்பதொன்றே. ஆயின், அஃது இக்காலத்தில் [6]இரி, ஈரி

1. தொல். எழுத்து. 326.
2. நன். உருபு. 8
3. நன். பெயர். 37
4. 'நுங்கள்': சூளா. தூது 70.
5. 'உங்கள்': சூளா. முத்தி. 24.
6. ஶப்தாதர்ஶம், பக்கம். 21

எனவும் திரிந்து வழங்குகின்றது. ஏவற்பன்மைக்கண், **இம்** என்பது பழங்கன்னடத்தில் வழங்கிவந்தது. இக்காலத்தில் அது பயில் வதின்று.

## தெலுங்குப் பெயர்

தெலுங்கு மொழியில் மீரு, ஈரு; [1]மீரலு, ஈரலு என்பன முன்னிலைப் பன்மைப்பெயராய் வழங்குகின்றன. ஆயினும், மீரு என்பதுவே பயில்வது; வேற்றுமையுருபேற்குமிடத்தில் **மிம்** எனவும் **மீ** எனவும் நிற்கும். **மிம்**முன் = நும்மை; **மீசேத** = நும்மால்; **மீ**கு = நுமக்கு; **மீ**வலன் = நும்மின்; **மீ** = நும; மீயந்து = நும்மிடம் என வரும். முன்னிலைப் பன்மை விகுதி **ரு**. அது, ரி என்று திரிதல் உண்டு.

| | |
|---|---|
| செப்பெத**ரு** / செப்புசுன்னா**ரு** | *(= செப்புகின்றீர்)* |
| செப்பoகல**ரு** | *(= செப்புவீர்)* |
| செப்பிதி**ரி** | *(= செப்பினீர்)* |

என்று வரும். விதித்தற்பொருள் முதலியவற்றில், **டு** வரும். அதற்குமேல் அநுஸ்வாரம் இருக்கும்.

செப்புoடு *(= செப்புமின்)*

## மலையாளப் பெயர்

மலையாள மொழியில் நிங்ஙள் என்பதொன்றே வழங்குகின்றது. அஃது உருபேற்கும்போதும் அவ்வாறே நிற்கும். ராமசரிதத்தில் [2]**நீம்** என்னுஞ்சொல் காண்கின்றது. விதித்தற் பொருள் முதலியவற்றில் **இன்** விகுதி வரும். முன்னிலை வினைமுற்றுக்களில் திணைபால் உணர்த்தும் விகுதி வருதல் இல்லை.

1. பாலவ்யா. ஆச்சிக. 24
2. ராம. 32

## துளுப் பெயர்

[1]துளு மொழியில் ஈர், நிகுளு என்பவை பன்மைப் பெயராய் உள்ளன. அவை வேற்றுமையுருபுகளை யேற்கும் பொழுது திரிதல் இல்லை. முன்னிலைப் பன்மை வினைமுற்றில் அர்[2] விகுதி வருகின்றது. மள்பு**வர்** (= செய்கின்றீர்) என்பது போல்பவற்றில் அர் விகுதி வருதல் அறியலாகும்.

இனி, [3]துத முதலிய மொழிகளில் வழங்குபவற்றை நோக்குவோம்:

துத மொழியில் நிம என்பது பன்மைப் பெயராகக் காண்கின்றது. அஃது உருபேற்கும்பொழுது நிம் என நிற்கும். பன்மையைக் குறித்தற்கும் ஒருமை விகுதியே வருகின்றது; தனி விகுதி இல்லை.

கோத மொழியில் நீமெ (நீவெ) என்பது பெயராகக் காண்கின்றது. அது வேற்றுமையுருபேற்கும்போது நிம் எனத் திரியும். பன்மை விகுதிகளாய் வருபவை **இரி, ஈரி** என்பன.

கோண்டு மொழியில், இம்மாத் என்பது பெயராய் வழங்குகின்றது. அஃது உருபேற்கும்பொழுது **மீ** எனத் திரியும். **ஈத்** என்பது பன்மை விகுதியாகக் காண்கின்றது.

குயி மொழியில், ஈரு என்பது பெயராகக் காண்கின்றது. அஃது உருபேற்கும் பொழுது [4]**மீ** எனத் திரியும். ஏரு, ஆரு என்பன விகுதிகளாக வருகின்றன.

[5]ஒராஒன் மொழியில் ஆஸு என்பது பெயராகக்

---

1. துளு இலக். பக்கம். 37
2. துளு இலக். பக்கம். 46
3. கால்ட்வெல் இலக்கணம். பக்கம். 386
4. 'மின்' எனவும் காண்கின்றது. குயிமொழி யிலக்கணம். பக்கம். 12.
5. நீம் என்பது பெயர். அஃது உருபேற்கும்போது நிம் எனத் திரியும். (குருக் மொழியிலக்கணம். பக்கம். 18). அட்டவணையில், நிம் என்பதும் குறிக்கப் பட்டுளது. கால்ட்வெல் இலக். பக்கம். 417.

காண்கின்றது. அஃது ஆஸ் எனத் திரிகின்றது. [1](இறந்தகால நிகழ்கால வினைகளில் ஆண்பாற் பன்மைக்கு **அர்** விகுதியும் பெண்பாற் பன்மைக்கு **ஐ** விகுதியும், எதிர்கால வினையில் அவ்விரண்டற்கும் **ஓர்** விகுதியும் வருகின்றன).

ராஜ்மஹால் மொழியில் **நின** என்பது பன்மைப் பெயராகக் காண்கின்றது. உருபேற்குமிடத்து, அது **நிம்** எனத் திரிகின்றது.

ப்ரஹூயி மொழியில் **நும்** என்பது பெயராகக் காண்கின்றது. அது, வேற்றுமையுருபேற்கும்போதும் நும் (நுமா = நும்முடைய) என்றே உளது. [2]பன்மை விகுதியாக **ரி** என்பது காண்கின்றது.

இவையெல்லாம் எளிதின் அறிதற்பொருட்டு, ஈங்கு ஒருங்கே குறிக்கின்றேன்:

---

1. குருக்மொழி யிலக்கணம். பக். 34, 35
2. இரெ, ஏரெ, ஒரெ முதலியன காண்கின்றன. (ப்ரஹூயி இலக்கணம் பக்கம். 124, 125, 126 முதலியன.

## முன்னிலைப் பன்மைப்பெயர்

| மொழிகள் | பெயர்கள் | உருபேற்றவழித் திரிந்த வடிவம் | விகுதி |
|---|---|---|---|
| **தமிழ்** | நீயிர் (நீம்) | | இர், ஈர் |
| | நீவிர் | | மின் |
| | நீர் | நும், உம் | உம் |
| | நீங்கள் | நுங்கள், உங்கள் | கள் |
| **கன்னடம்** | நீம் | நிம் | இர்; இம்; |
| | நீவு | | இரி, ஈரி |
| **தெலுங்கு** | ஈரு | | |
| | மீரு | மிம், மீ | ரு, ரி; |
| | மீரலு | | டு |
| | ஈரலு | | |
| **மலையாளம்** | நிங்ஙள் [1]நீம் | நிங்ஙள், [1]நிம் | இன் |
| **துளு** | ஈரு | ஈர் | அர் |
| | நிகுளு | நிகுள் | |
| **துத** | நிம | நிம் | இ, எ |
| **கோத** | நீமெ, நீவெ | நிம் | இரி, ஈரி |
| **கோண்டு** | இம்மாத் | மீ | ஈத் |
| **குயி** | ஈரு | [2]மீ | ஏரு, ஆரு |
| **ஒராஒன்** | [3]ஆசு, நிம் | [4]ஆஸ் | [5]அர், ஐ, ஓர் |
| **ராஜ்மஹால்** | நின | நிம் | - |
| **ப்ரஹூயி** | நும் | நும் | ரி, [6]இரெ, ஏரெ, ஓரெ |

1. குண்டர்ட் இலக்கணம். பக்கம். 36.
2. 'மின்' எனவும் காண்கின்றது. (குயி இலக்கணம். பக். 12)
3. நீம். குருக்மொழி யிலக். பக். 18.
4. நீம். குருக்மொழி இலக். பக். 18
5. குருக்மொழி யிலக். பக். 34, 35
6. ப்ரஹூயி இலக். பக். 124, 5, 6.

# முன்னிலைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி

## முன்னிலைப் பன்மைப் பெயரின் தொல்லுருவம் யாது?

இனி, இம் முன்னிலைப் பன்மைப்பெயர்களைக் குறித்து ஆராய்வோம் :

மலையாள மொழியில் நிங்ஙள் எனவும், துளு மொழியில் நிகுளு எனவும் வழங்குபவை நீங்கள் என்னும் பெயரின் திரிபேயாகும். தமிழ், தெலுங்கு, குயி இம்மொழிகளில் முன் னிலைப் பன்மைப்பெயர் மகரவீற்றவாய்க் காணப்படா விடினும், உருபேற்றவழித் தமிழில் **நும்** எனவும், தெலுங்கில் **மிம்** எனவும், குயி மொழியில் **மீ** எனவும் மகரத்தோடு கூடிய வடிவம் காணப்படுதலானும், ஏனைய மொழிகளில் இப்பெயர் மகரவீற்றதா யிருத்த லானும் தமிழ் முதலிய் மொழிகளிலும் மகரவீற்றுப் பெயரே முதற்கண் வழங்கியிருத்தல் வேண்டும் என்று கொள்ளுதல் கூடும். யான், யாம்; தான், தாம் என்னுந் தன்மை படர்க்கைப் பெயர்களில் னகரம் ஒருமையையும் மகரம் பன்மையையும் குறித்தல்போன்று, முன்னிலைப் பெயரிலும் நீன் என்பது ஒருமைப் பெயராயும் நீம் என்பது பன்மைப்பெயராயும் மூலத் திராவிட மொழியில் வழங்கின.

## தொல்காப்பியனார் கூற்று

ஆசிரியர் தொல்காப்பியனார் நும் என்பதனை இயற் பெயராகக் கொண்டு, நீயிர் என்பதனை அதன் திரிபு என்றார் அவர்,

'அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர

இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே'

(புள்ளிமயங். 31)

என்று கூறியது இலக்கியங் கண்டதற்கு இலக்கணமாதலே யன்றி, உண்மைத் தன்மையைக் கூறியவாறாதல் இன்று. என்னெனின், யான் யாம் நாம் என்பன போன்ற பெயர்கள் அல்வழிக்கண் திரிதலின்றி இயல்பாயும் வேற்றுமைக்கண் திரிந்தும் வழங்குதலானும், நீ என்னும் ஒருமைப்பெயர்க்கும் வேற்றுமையருபேற்குமிடத்தேயே திரிபு கூறினாராகலானும் என்க.

## பிரயோக விவேகமுடையார் கூற்று

இனி, 'வடநூலில் எழுவாய் வேற்றுமை இவ்வாறிருக்கும் என்றறிதற்கு, **நும்** என்னும் ஒரு பெயரை மாத்திரம் எழுவாய் வேற்றுமை யாக்காது பிராதிபதிகமாக்கி, பின்னர், நும்மை நுங்கண் என இரண்டு முதல் ஏழிறுதியும் வேறுபடுத்து வேற்றுமையாக்கினாற்போல, ''அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை'' என்னுஞ் சூத்திர விதிகொண்டு நீயிர் என வேறுபடுத்து, எழுவாய்வேற்றுமை என்னும் பிரதமாவிபக்தி ஆக்குவர். இவ்வாறு, நின் தன் தம் என் எம் நம் என்பனவற்றையும் பிராதிபதிகமாக்கி, பின், நீ தான் தாம் யான் யாம் நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய்வேற்றுமை ஆக்காமையானும், ''எல்லாம் நீயிர் நீ'' என்றும், பெயரியலுள், ''நீயிர் நீ என வரூஉங் கிளவி'' என்றும், பெயர்ப் பிராதிபதிகமாகச் சூத்திரஞ் செய்த லானும், ''அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை'' என்னுஞ் சூத்திரத்தை, வடமொழிக்கு எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்று தமிழ் நூலார் அறிதற்கே செய்தார் என்க' என்று [1]பிரயோக விவேகமுடையர் கூறியவாறு, நும் என்பது பிராதி பதிகம் என்றும், நீயிர் என்பது பிராதிபதிகம் முதல் வேற்றுமை யுருபு ஏற்ற உருவம் என்றும் கொள்ளுதல் அமையும் எனின்,

1. பிரயோக. 7 உரை.

அது பொருந்தாது. என்னெனின், ஆசிரியர், வட மொழியில் இஃது இவ்வாறிருக்கும் என்பதைத் தமிழர்க்கு அறிவிக்குங் கருத்தினராயின், அதனைக் கிளந்தோதுவர்; அவ்வாறு ஓதாமை யானும், பிராதிபதிகத்தோடு உருபு சேர்ந்து எழுவாய் வேற்றுமை யாகும் என்னாராய்,

'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்றுநிலையே' *(வேற்.4.)*

என்றும், எட்டு வேற்றுமைகளைக் கூறுமிடத்து, அவைதாம்,

'பெயர் ஐ ஒடு கு
இன்அது கண்விளி என்னும் ஈற்ற' *(வேற்.3.)*

என்றும் கூறினாராகலானும் எங்க. இவற்றால், நும் என்பது முன்னிலைப்பன்மை இயற்பெயர் எனவும் நீயிர் என்பது அதன் திரிபெயர் எனவும் கொள்ளுதல் பொருந்தாது என்பது நன்கு விளங்கும்.

## நீயிர் என்பதன் அமைதி

இனி, நீயிர் என்னுஞ் சொல்லின் அமைப்பினை நோக்குவோம்: இதைக் குறித்துக் கால்ட்வெல் கூறுவதாவது: [1] வடமொழியில் 'யுஷ்மே' என்னுஞ் சொல் ( யு + ஸ்மே), நீயும் அவர்களும் என்னும் பொருளதாய் அமைந்திருத்தல் போலத் [2] தமிழிலும் நீயிர் என்பது, (நீ +இவர்) நீயும் இவரும் என்னும் பொருளில் அமைந்திருக்கலாம். அல்லது, நீங்கள் இருவர் (நீ + இர்) என்னும் பொருளில் முதற்கண் அமைவுற்று, பின்னர், பலரைக் குறிக்கவும் வந்திருக்கலாம் என்பது.

நீயிர் என்பது செந்தமிழில் அமைந்த சொல்லே யாகும். அவ்வாறன்றி, நீயிர் என்பதுவே பழையதாகிய பெயராயின், அது வேற்றுமையுருபுகளை யேற்கும்வழி **நும்** எனத் திரியாது. உருபேற்றவழி நும் என்பது காணப்படுதலின், மூலமான பெயர்

---

1. பக்கம்: 406
2. பக்கம். 407.

மகரவீற்றதாயே இருத்தல் வேண்டும். பண்டைமொழியில் மகரவீற்றதாய் வழங்கிய இப்பெயர், செந்தமிழில் ரகர வீற்றதாக அமைவுற்றது. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய முன்னிலைப் பெயர்கள் னகார மகார ஈற்றன வாயிருப்பின் மயக்கத்துக்கிடனாகும் என்பது மேலேயே கூறப்பட்டதன்றே? ஆகலின், முன்னிலைக்கண் [1]மகரவீற்றுப் பெயர் ரகரவீற்றதாக வழங்கப்பட்டது என்பது அறியப்படும். அவ்வாறு வழங்கியபோது, ரகரத்திற்குமேல் முதலெழுத் தாகிய அகரத்தைச் சேர்த்து **அர்** எனப் படர்க்கையிலும், இரண்டாமெழுத்தாகிய இகரத்தைச் சேர்த்து **இர்** என முன் னிலையிலும் அமைத்தனராவர் என்பதும் மேலே கூறப் பட்டுளது.

தமிழ்மொழியில் பன்மைக்கண் உள்ள அர் ([2]அவர்) என்பது வடமொழியில், பலரைக் குறிப்பதாகிய அஸ் என்பதனோடு ஒற்றுமையுடையதாயிருக்கின்றது[3] என்று கால்ட் வெல் கூறியுள்ளார். படர்க்கைப் பலர்பாலில் **பலரைக்** குறிக்கும் அர் என்பதனையும், முன்னிலைப் பன்மையில் **இருவரைக்** குறிக்கும் இர் என்பதனையும் அமைத்துள்ளனர் என்பது ஒருதிறப்பட்ட முறையன்று. முன்னிலைக்கண் இருவரைக் குறிக்குஞ் சொல்லைச் சேர்த்தனராயின், படர்க்கைக் கண்ணும் இருவரைக் குறிக்குஞ் சொல்லையே சேர்த்தனராதல் வேண்டும். என்னையெனின், இப்பெயர்கள் யாதேனும் ஒரு முறைமையின் அமைந்தனவேயாகும். முன் னிலைப் பன்மைக்கண் **இர்** என்னும் விகுதியைச் சேர்த் துள் ளனர் என்றலினும், அஃது, இருவர் என்னும் பொருளுள்ள சொல் எனக் கொள்ளுதல் அமைதியாகுமாயினும், அம்முறை படர்க்கைக்கண் பொருந்தாமையின், அதனையேற்றுக் கொள் ளுதல் இயலாதாகின்றது. இனி, இர் என்பது இவர் என்பதன் திரிபு எனக் கொள்ளுதல் கூடுமாயின், அது பொருந்துவாகும்.

---

1. அவ்வாறு மாற்றியும், ஒரோவழி நீம் என்னும் பெயர் வந்துளது. சீவக. விமலை, 44. பாக்க.
2. கால்ட்வெல் இலக்கணம். பக்கம்.406.
3. ,, ,, பக்கம். 164.

## நீர் என்னுஞ் சொல்

இனி, நன்னூலார் கூறியவாறு நீர் என்பதுவே நும் எனத் திரியும் எனக் கொள்ளுதல் அமையாதோ எனின், அதுவும் அமையாது. என்னெனின், நீர் என்பது நீயிர் எனத் திரிதல் திரிபாகலானும் நும் என்பது நீயிர் எனத் திரிதல் அமையாததுபோன்றே நீர் என்பது நும் எனத் திரிதலும் அமை யாதாகலானும் என்க. நீர் என்பது நீயிர் என்பதன் திரிபாய வாறு என்னையெனின், நீ என்னும் ஒருமைப்பெயரின்முன் **இர்** என்பது சேருமிடத்து யகரவுடம்படுமெய் தோன்ற, நீயிர் ( நீ + ய் + இர்) என்றாயிற்று. திராவிட மொழிகளில் நெடி லீற்றுமொழிமுன் வருங்குறில் கெடுதலும் வழக்காறாகலின், இர் என்னும் விகுதியின் முதல் கெட, நீர் என்றாயிற்று. போயி னான், போனான்; ஆவினை, ஆனை; மூவுழக்கு, மூழக்கு[1] என்பவற்றில், நெடில்முன் வந்த குறில் கெடாதும் கெட்டும் இருந்தல் காண்க. இவற்றால், நீயிர் என்பதன்க ணுள்ள இகரம் கெட்ட சொல்லே நீர் எனல் தெளிவாகும்.

தொல்காப்பியனார், நும் என்பதனை இயற்பெயராகக் கொண்டு அதுவே நீயிர் எனத் திரிந்தது என்றது அமைதியன்று எனக் கருதி, அதற்கு நேர்மாறாக, நீர் என்பதுவே இயற்பெயர் என்றும் அதுவே நும் எனத் திரிந்தது என்றும் நன்னூலார் கூறியதுவும் அமைதியன்று என்பது மேற் கூறியவற்றான் அறியப்படும்.

ஆகலின், நீம் என்பதுவே இயற்பெயர் எனவும், அது வேற்றுமையுருபேற்கும்வழி நிம் எனத் திரிந்தது எனவும், பின்னர், (நின் என்பது **நுன்** எனத் திரிந்தாங்கு) நிம் என்பது நும் எனத் திரியலாயிற்று எனவும், அது தொல்காப்பியனார் காலத்தில் வழக்காற யிருந்த தெனவும் கொள்ளுதலே அமைதி யாகும். நுன் என்பது பிற்காலத்தில் உன் எனத் திரிந்ததுபோல, நும் என்பதுவும் **உம்** எனத் திரிந்தது; பின்னர், **கள்** விகுதி பெற்று உங்கள் என்றாகி வழங்குகின்றது. யாம் என்பதனோடு

---

1. 'மூழக் குழக்குத் தினை தந்தாள்'. அவ்வையார் தனிப்பாடல்.

**கள்** விகுதி சேர்ந்து நாங்கள் எனவும், நாம் என்பதனோடு **கள்** விகுதி சேர்ந்து நாங்கள் எனவும், **தாம்** என்பதனோடு **கள்** விகுதி சேர்ந்து **தாங்கள்** எனவும் வழங்குதல் போல, **நீம்** என்பதனோடு **கள்** விகுதி சேர்ந்து நீங்கள் என்றாதலேயன்றி, நீயிர், அல்லது நீர் என்பதனோடு **கள்** விகுதி சேர்ந்து நீங்கள் என்றாதல் இல்லை. இதனாலும் நீம் என்பதுவே இயல்பாய பெயர் என்பது போதரும்.

## நீவிர் என்னுஞ் சொல்

இனி, நீவிர் என்னுஞ் சொல் எவ்வாறமைந்தது என்று நோக்குவோம்: **நீம்** என்னும் பெயரோடு இர் விகுதி சேர்ந்து **நீமிர்** என்றாகி, அதுவே **நீவிர்** எனத் திரிந்துளது எனத் தோன்றுகின்றது. தமிழ்நாட்டினுள் இராமநாதபுரத்தை அடுத்த இடங்களில் **நீமிர்** என இன்றும் வழங்குதல் இதனை வலியுறுத்தும். பழங்கன்னடத்தில் வழங்கிய நீம் என்பது புதுக் கன்னடத்தில் நீவு என்று திரிந்து வழங்குதல்போல, நீம் என்பது முதலில் நீவு எனத் திரிந்து, பின்னர் இர் விகுதியோடு சேர்ந்து நீவிர் என்றாயிற்று எனினும் அமையும். எவ்வாறாயினும், நீவிர் என்பதற்கு முதல்நிலை நீம் என்பதுவே யாதல் உளங்கொளத் தக்கது. நீம் என்பது நீவு எனத் திரிந்து, அதுவே தெலுங்கு மொழியில் ஒருமையைக் குறித்து வழங்குதல் ஈண்டு அறியத்தகும். நீமிர் அல்லது அதன் அதன் திரிபாகிய நீவிர் என்பது, பன்மையைக் குறிக்கும் மகர மெய்யோடு இர் விகுதி கூடிய சொல்லாகலின், பன்மையைக் குறிக்கும் எழுத்தின்மேல் பன்மையைக் குறிக்கும் விகுதியைச் சேர்தல் தகுதியன்று எனக் கருதி மகரமெய்யை நீக்கி, நீயிர் (நீ+இர்) என்னுஞ் சொல்லை அமைத்தனராவர்.

## முன்னிலைப் பன்மை விகுதி

இனி, முன்னிலைப் பன்மை விகுதியை நோக்குவோம்: இர், ஈர் என்னும் விகுதிகள் நீயிர் என்னும் பெயர்க்கண் உள்ள இர் என்பதும், அதன் திரிபும் ஆகும். செய்யும், இரும் என்பன போன்ற ஏவலிற் காணும் **உம்** விகுதி பண்டைச் செய்யுட்களில் காணவில்லை; ஆசிரியர் தொல்காப்பியனார், நன்னூலார் முதலிய இலக்கண நூலாருங் கூறிற்றிலர்.

ஆகலின், இவ்வாறு வருதல் இலக்கண நூலார்க்கு உடன்பாடன்று என்பது அறியப்படும். தொல்காப்பியனார் மகர வீறு முன்னிலைக்கண் வாராது என்று கூறியுள்ளார்.[1] ஆயினும், பண்டைச் செய்யுட்களில்,

'உண்**ம்**என இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்' (புறம்.178.)
'இரும்பே ரொக்கலொடு தின்**ம்**எனத் தருதலின்' (புறம்.150.)

என்று, மகரவீற்றுவினைச்சொல் முன்னிலைக்கண் வந்துளது. இச்சொற்களை நோக்குமிடத்து, மகரமெய் பன்மையைக் குறிப்பது என்பது போதரும். என்னையெனின், செய்கு, வருது என்பன போன்ற தன்மை யொருமை வினைச்சொற்களோடு மகரமெய் சேர்ந்து, செய்கும் வருதும் என்றாகித் தன்மைப் பன்மையைக் குறித்தல்போல, உண், தின் என்னும் முன்னிலை யொருமை வினைச்சொல்லோடு மகரமெய் சேர்ந்து முன்னிலைப் பன்மை வினையைக் குறிக்கின்றது என்க. இம் மகரம், நீம் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர்க்கணுள்ள மகரமே யாதல் எளிதின் உணரப்படும். செந்தமிழில், நீம் என்னும் பெயர்க்கண் நின்ற மகரத்தை யொழித்ததனான், உண்ம், தின்ம் என்பனபோல வினைக்கண் வரும் மகரமும் வரலாகாதென்று இலக்கண ஆசிரியரால் விலக்கப்பட்டது என்பது உய்த்துணர்தல் கூடும்.

செய்யும், இரும் எனப் பிற்காலத்தில் வழங்கிவரும் உம்மீற்றைக் குறித்து, [2]டாக்டர் கால்ட்வெல் கூறுவது :- செய்யும் என்னும் முற்றுவினையிலும் செய்யும் ஏவல் வினையிலும் உம் உளது. ஆயினும், எதிர்காலங் குறிக்கும் **உம்**மை ஏவல் உம் என்றற்கு இடையூறு உளது. முன்னிலை யேவலில் பகுதி யோடு உம் சேரும்; படர்க்கை முற்றில் சாரியையோடு உம் சேரும். உ-ம்: இரும்; இருக்கும். ஆயின், இவ் வேறுபாடு, செய்யும் வாழும் என்பவற்றில் இல்லை. உம்மை இரண்டும் உருவத்தால் ஒத்திருப்பினும் பொருளில் வேறுபடுகின்றன; முன்னிலையிற் பன்மையையும், படர்க்கையில் எதிர்காலத்தையும் குறிக்கின்றன என்பது.

---

1. தொகை மரபு. 10.
2. பக்கம்.532.

ஆயின், இவ் உம் விகுதி செய்யிம் இரிம் என்னும் பழைய சொற்களில் உள்ள இம்மின் திரிபு என்றல் அமைதி யாகும். கன்னட மொழியில் இம் விகுதியே வழங்கியது ஈண்டைக்கு அறியத்தகும். இவ் இம் விகுதி நீம் என்னுஞ் சொல்லின் கூறாதல் ஒருதலை. ஆகலின், இம் அல்லது ஈம் என்னும் விகுதியே இயல்பாயது எனவும், உம் விகுதி அதன் திரிபு எனவும் கொள்ளுதல் பொருந்தும்.

## மின் விகுதி

### கால்ட்வெல் கருத்து

இனி, மின் விகுதியை நோக்குவோம்: இதனைக் குறித்து, [1] டாக்டர் கால்ட்வெல் கூறுவது: - மின் என்பது மினீர் என்றும் வரும். அது பன்மை இரட்டித்தது. மலையாளத்தில் ஏவற்பன்மைவினை, [2]முதலெதிர் காலத்தில் அமைப்புப் போன்று அமைக்கப்படும்; மலையாளத்திலும் தமிழிலும் பகுதி யோடு வ், ம், ப் இவ் விடைநிலைகளுள் ஏற்பதொன்றனைச் சேர்த்து எதிர்கால வினையெச்சம் அமைக்கப்படும். தமிழ் மலையாளங்களிலுள்ள எதிர்கால வினையெச்சத்தோடு மலை யாள ஏவற்பன்றையை ஒப்பிடுக.

| எதிர்கால வினையெச்சம். | மலையாள ஏவற்பன்மை |
|---|---|
| வருவான் | வருவின் |
| [3]காண்மான் | காண்மின் |
| கேட்பான் | கேட்பின் |

இவற்றால், எதிர்கால வினையினின்று ஏவல் அமைக்கப் பட்டதென்பது தெளிவாகும். ஆனால், ஆன் என்பது இன் என மாறியுளது. இத்துணையே வேறுபாடு. தமிழில் எதிர்கால வினையெச்சத்தில் மெல்லெழுத்திற்குமுன், மகரத்திற் கீடாகப் பகரம் காண்கின்றது; மற்றவிடத்து மலையாளத்தில் வ், ம் அல்லது ப் இருக்க, தமிழில் மகரமொன்றே உளது.

---

1. பக்கம். 532,3. 2. First future. 3. ராமசரிதம்.21.

மலையாளம் - கேட்பின்
இலக்கியத் தமிழ் - கேண்மின்

தமிழ்ச் செய்யுட்களில் எதிர்மறை யேவற்கண், ஒரோ வழி, மலையாளத்திற் போலப் பகரம் உளது. அற்பீர் (அல்+பீர்). இவற்றால், எதிர்காலத்தோடு இன் என்பதனைச் சேர்த்தோ, அல்லது ஆன் என்பதனை இன் என்று மாற்றியோ மலையாளத்திலும் செந்தமிழிலும் ஏவற் பன்மைவினை முற்று அமைக்கப்பட்டது என்றல் வலியுறும். இன் என்பது முன்னிலைப் பன்மைப்பெயரின் எஞ்சிய பகுதியெனத் தோன்று கின்றது. இதற்கு மூலம் யாதாயினும், தமிழ் மலையாளங் களில் உள்ள **இன்**னும், கன்னடத்திலுள்ள **இம்**மும் ஒற்றுமை யுடையதெனத் தெரிகின்றது. எதிர்காலத்தினின்று ஏவலை அமைத்தல் உண்டென்பது ஹீப்ருமொழியினாலும் அறியப் படும் என்பது.

## மின் விகுதியின் ஆராய்ச்சி

### மின் விகுதியின் அமைதி

ஏவற்பன்மையிற் காணும் இன் என்பது ஆனின் திரிபாகலாம் என்று கால்ட்வெல் கருதியது அமைதியன்று; முன்னிலையின் கூறு என்றலே அமைதியாகும். மின் என்பது மகர மெய்யோடு இன் சேர்ந்ததுவே. அம் மகரம், பன்மையைக் குறிப்பது. செய், இரு என்பனபோன்ற வினையின்முன் மகரஞ் சேர்ந்துசெய்ம், இரும் என்பனபோன்று பன்மை யேவல் வழங்கின என்பது மேலே கூறியுள்ளேன். செந்தமிழில், நீம் என்னும் முன்னிலைப்பன்மைப்பெயரின் மகரம் நீக்கப்பட் டதனால், முன்னிலைப் பன்மைவினையிலும் மகரம் வாரா தென்று விலக்கப்பட்டது. அவ்வாறே, முன்னிலை யொருமை யேவலில் செயின், காணின் என்று இன் விகுதி பெற்றுவந்த சொற்கள் ஏவல்வினையாகக் கொள்ளப்படாமல் எச்ச வினை களாகக் கொள்ளப்பட்டன. அவ்விரண்டனையுஞ் சேர்த்து **மின்** என்று ஒரு விகுதியாக்கி, அதனைப் பன்மையேவலில் வழங்க

லாயினர் என்று கொள்ளுதல் அமைதியாகும். **மார்** என்னும் பலர்பால் விகுதியும் இவ்வாறே பன்மையைக் குறிக்கும் **ம்** என்பதனோடு **'ஆர்' (அவர்)** என்பது சேர்ந்து அமைக்கப் பட்டதாதல் அறியத்தக்கது.

இவை இத்தகைய வேறுபாட்டு வடிவமாகலின், செய்யுட் களிலும் நாளடைவில் அருகுவதாயிற்று. மலையாளத்தில் இருக்குவின், செய்வின் என்னும் பன்மையேவலில் மகரம் வகரமாகத் திரிந்துளது. இவ்வாறே மகரம் வகரமாகத் திரிதல் உண்டு. புண்ணிய**மும்** பாவ**மும்** என்பது மலையாளத்தில், புண்ணிய**வும்** பாவ**வும்** என்று வழங்கும்.[1] இனி, வகரமும் கெட்டு **இன்** என்பது மட்டும் வழங்குதல் உண்டு. [2]இருக்**கின்,** செய்**யின்** என்றும் வரும். கால்ட்வெல் கூறியவாறு இவ் **இன்**னும் கன்னடத்திலுள்ள **இம்**மும் ஒற்றுமையுடையதன்று. **இன்** முன்னிலையொருமை யேவலில் வரற்குரியதாகலின், நீன் என்னும் ஒருமைப்பெயரின் கூறு; **இம்** கன்னடத்திற் பன்மைக் கண்ணே வருதலின், நீம் என்னும் பன்மைப்பெயரின் கூறு. இதுவே அமைவுடையதாதல் எளிதின் அறியப்படும்.

'டாக்டர் கால்ட்வெல், மினீர்

என்பது பன்மை இரட்டித்துவந்தது என்றார்.[3] அது, மின் என்னும் என்னும் விகுதி யோடு நீர் என்னும் பன்மைப்பெயர் சேர்ந்து வந்தது; நாளடை வில், நீர் என்னுஞ் சொல் விகுதியளவில் நிற்பதாயிற்று.

## 'மோ' விகுதி

மோ என்னும் விகுதி பழைய தமிழில், சிலவழி, முன்னிலையேவ லொருமைக்கண் வருவது என்றார் கால்ட் வெல்.[4] அதுவும் அமைவுடையதாகத் தோன்றவில்லை. மோ என்பது பன்மையைக் குறிக்கும் மகரமெய்யோடு ஓகாரஞ்

---

1. கேரளபாணினீயம்.சூ.25
2. ,, ,, சூ.103. உரை பார்க்க
3. பக்கம். 532.
4. பக்கம். 531.

'மாமறை மாக்கள் வருகுலங் கேண்மோ' (மணி.13.93.)

என்பதுபோன்ற இடங்களில் இவ்வுண்மை நன்கு தெளியப் படும். கேண்மோ என்றது கேளும் என்னும் பொருளது. ஆகலின், ஈண்டு ஓகாரம் அசையாகும். நீம் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயரின் மகரம் ஒழிக்கப்பட்டதனால் முன்னிலைப் பன்மை வினைக்கண்ணும் மகரம் கொள்ளப்படாதாகவே, இலக்கண நூலார், மோ என்பதனை முன்னிலை யசை என்றனர். அசையெனப் பட்டதனான், 'கண்டது மொழிமோ' என்று முன்னிலையொருமைக்கண்ணும் வருவ தாயிற்று. இவற்றால், மோ என்பது தனி விகுதியன்று எனல் அறியப்படும்.

## முன்னிலையசை - இகும்

இனி, அசைநிலைச் சொற்களுள் ஒன்றாகிய 'இகும்' என்பதைப்பற்றியும் ஈண்டு ஆராய்தல் ஆவசியக மாகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார்,

'மியாயிக மோமதி' (இடை. 26.)
'**இகுமும்** சின்னும்' (இடை. 27.)

என்னுஞ் சூத்திரங்களிற் கூறியிருத்தலை நோக்கின், **இகும்** என்பது முதலில் முன்னிலைக்கண்ணே வழங்கி வந்தது எனவும் நாளடைவில் அஃது ஏனை இரண்டிடங்களிலும் வழங்கலாயிற்று எனவும் புலனாகும். ஆகவே, அது முன்னிலைச் சொல்லே என்பது வலியுறும். அதனால், இகும் என்பதுவும் ஈண்டு ஆராய்தற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கண்டிகும் என்பது காண் என்னும் பொருளிற் பயின்று வந்துளது.

'மெல்லம் புலம்ப **கண்டிகும்**'
'**கண்டிகும்** மடவரல் புறவின் மாவே' (ஐங்.419.)

என்மிடங்களில், கண்டிகும் என்பது **காண்** என்னும் பொருளில் வந்துளது. இகும் என்பது அசையாயின், காணிகும்

என்று வருதலே அமையும்; முதனிலை விகாரப்பட்டும் இடையே ஒற்றுத்தோன்றியும் வருதல் வேண்டாவன்றே? ஆதலின், இகும் என்பதனை அசைநிலையாகக் கொள்ளுதல் அமைதி யாதலின்று.

கண்டிகும் என்பது கண்டீகும் என்னுஞ் சொல்லின் திரிபு. அது, கண்டருளும் என்னும் பொருளதாகும். ஆகவே, அது முன்னிலைப் பன்மைக்கே யுரிய சொல்லாதல் நன்குணரப் படும். நீம் என்னும் பெயர் முன்னிலைப்பன்மைக்கண் வழங்கிய காலத்தில், கண்டிகும் என்பது அப்பன்மைக்கு உரிய வினைச்சொல்லாய்ப் பயின்றுவந்தது. அப்பெயர் முன்னிலைக் கண் விலக்குண்ட காலத்தில், முன்னர் பொருட்பொலி வுடைய தாயிருந்த இகும் (ஈகும்) என்னுஞ் சொல் அசைநிலையாகத் தள்ளப்பட்டது. படவே, அது முன்னிலைக் கண்ணேயன்றி ஏனையிடங்களிலும் வருவதாயிற்று. தன்மைக்கண் அஃறிணை வழக்கு இன்மையான், கும், டும், தும், றும் என்னும் இம் மகரவீற்று விகுதிகள் விலக்கப்படாமல் கொள்ளப்பட்டன; முன்னிலைக்கண் அஃறிணை வழக்கு உண்மையான் ஆண்டு விலக்கப்பட்டன. அம்முறையில் இகும் என்பதும் விகுதி யாகக் கொள்ளப்படாதாயிற்று. இவற்றை நோக்குகையில், கன்னடத்திற்போலவே பண்டு தமிழிலும் கும் முதலிய விகுதி கள் மூன்றிடங்களுக்கம் வழங்கி வந்தன என்னும் உண்மை புலனாகும்.

இக் கூறியவாற்றால் இகும் என்பது முன்னிலைப் பன்மைக்கண் வழங்கிய வினைச்சொல்லே என்பது தெளிவாகும். இச்சொற்கள் உள்ள மகரம் நீம் என்னும் பெயர்க்கண் உள்ள பன்மையை உணர்த்தும் மகரமே என்பதும் எளிதின் அறியப்படும்.

கண்டிகும் என்னுஞ்சொல்லில், இறுதியிலும் அதன் மேலிடத்திலும், இதழிற் பிறக்கும் மகரமும் உகரமும் இருத் தலின், உகரவுயிர் ஊர்ந்த ககரம், கண்டிகின் என்பதில் கிகரம் திரிந்ததுபோல, திரிந்திலது என்னலாம்.

### கன்னட முன்னிலைப்பன்மை

இனி, கன்னட மொழியில் முன்னிலைப் பன்மைப் பெயரை நோக்குவோம்: நீம் என்பதொன்றே அம்மொழியில் முன்னிலைப் பன்மைப்பெயர். அது நீவு என்று திரிந்துளது. புணர் மொழிக்க ணன்றித் தனிமொழிக்கண்ணும் மகாரம் வகார மாதல் கன்னடத்தில் உண்டு. [1]தாம**ரெ - தா**வ**ரெ; தி**மி**ர்- தி**வி**ர்; தெ**ம**ர் - தெ**வ**ர்; ஸா**மி** - ஸா**வி** என்பன உதாரண மாகும். தமிழிலும் மகாரம் வகாரமாகத் திரிந்து வழங்குதல் உண்டன்றே?

கன்னடத்தில் முன்னிலை ஏவற் பன்மைவினைக்கண் உள்ள **இம்** விகுதி நீம் என்னும் பன்மைப்பெயரின் கூறாதல் ஒருதலை. முன்னிலைப்பன்மைவினையில் உள்ள இர் விகுதி நியீர் அல்லது மீரு என்னுஞ் சொல்லின் உறுப்பாகும். முன்னிலைப்பெயர்க்கண் இர் என்பது சேராதிருக்க, வினைக்கண் சேர்ந்திருத்தலை நோக்குமிடத்து, அது தமிழினின்றாதல், தெலுங்கினின்றாதல் போயிருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

## மீரு என்னும் பெயர்

### கால்ட்வெல் கருத்து

இனி, தெலுங்குமொழியிலுள்ள முன்னிலைப் பன்மைப்பெயரை நோக்குவோம்: மீரு ஈரு என்பவை தெலுங்கிற் பன்மைப் பெயராயுள்ளன; அவற்றோடு, பன்மையைக் குறிக்கும் **லு** சேர்ந்தும் வரும். அவற்றுள் மீரு என்பதுவே வழங்குகின்றது. அதுவே வேற்றுயுருபினை ஏற்கும். அப்பெயரைக் குறித்துக் கால்ட்வெல் கூறுவது: [2] - முன்னிலைப் பன்மைப்பெயரில் மகரத்திற்கு ஈடாக உள்ள ரகரம், அப்பெயர் உருபேற்கும்வழிக் கெட்டுவிடுகின்றது. ஆறாம் வேற்றுமையில் **மீ** என்றே

1. ஶப்தமணி.சூ.114. உரை
2. பக்கம். 405.

நிற்கின்றது; இரண்டாம் வேற்றுமையில் **மிம்மு** என்று ஆகின்றது. இவ்வாறே தன்மைப் பன்மைக்கண் **மா** எனவும் **மம்மு** எனவும் காண்கின்றது. **மா, மீ** என்பவற்றை நோக்கு மிடத்து, இவை முறைமாறாய் அமைந்துள்ளன எனவும், பிற்காலத்தில் உண்டானவை எனவும் தோன்றுகின்றது. நகரத்திற்கு ஈடாகத் தெலுங்குப்பன்மையில் மட்டும் (மேமு, மீரு) மகரம் நிற்றற்குக் காரணம் யாது? நேமு, நீமு அல்லது நீரு என இருக்கத்தக்கவை ஈற்றினிற்கும் மகாரத்தின் இன்னோசையைத் தழுவி மேமு, மீமு (மீரு) என்று ஆயின என்பது.

## மீரு என்பதன் ஆராய்ச்சி

### மீரு என்பதன் அமைதி

இனி, மீரு என்பதனைக்குறித்து ஆராய்வோம்: மீரு என்பது இரண்டனுருபேற்குமிடத்து **மிம்மு** எனத் திரிதலின், இதன் தொன்மையுருவம் **மீம்** (மீமு) என்பதேயாகும். என்னையெனின், நீர் என்பது நிம் அல்லது நும் எனத் திரியாதவாறு போல, மீர்(மீரு) என்பது மிம் எனத் திரிதலும் அமையாதன்றே? ஆயின், பழையகாலத்துத் தமிழிலும் கன்னடம் முதலியவற்றிலும் நீம் என்றேயிருக்க, தெலுங்கில்மட்டும் மீம் என்றாகியது எவ்வாறுஎனின், தமிழ் கன்னடம் முதலியவற்றில் முறையே யாம் ஆம் என்றிருக்க, தெலுங்கில் மட்டும் முதலிலுள் மகரம் பெற்று **மேம்** என்றாயவாறு போல, ஈண்டும் ஆயிற்று என்க. அஃதாவது, **நீ** என்னும் முன்னிலைப்பெயர்க்கண், ஒருமையைக் குறிக்க னகர மெய்யையும், பன்மையைக் குறிக்க மகரமெய்யையும் முதலில் சேர்த்து வழங்கினர். அதனால், நீன் நீம் என்னும் பெயர்கள் அமைந்தன. பன்மையைக் குறித்தற்கு இறுதிமகரம்மட்டுமே அமையும் எனக் கொண்டு தமிழர் முதலியோர் அமைதியுற்றனர். தெலுங்கர் ஒருமையைக் குறித்தற்கு முதற்கண்ணும் நகரமெய் இருத்தலின், பன்மையைக் குறித்தற்கு முதற்கண்ணும் மகரமெய் இருத்தலே அமைதி எனக் கொண்டு அதனை முதற்கண் அமைத்து, **மீம்** என வழங்கினராவர். **மீம்** என்னுந் தொல்லுருவினோடு, பின்னர், பன்மையைக்

குறிக்கும் **ரு** சேர்ந்து **மீம்ரு** என்றாகி, அதன் இடைநின்ற மகர மெய் கெட, மீரு என்றாயிற்று எனக் கொள்ளுதல் அமைதி யாகும். பன்மையைக் குறிக்கும் ரகரத்தைக் கன்னடர் முன்னிலைப் **பன்மைவினைக்** கண் மட்டும் வழங்க, தெலுங்கர் பெயர்க்கண்ணுஞ் சேர்ப்பாராயினர். முன்னிலைப் பன்மை வினைக்கண் இர், இரி, ரு என்பவை விகுதிகளாகக் காண் கின்றனவாயினும், ஏவல் முதலிய பொருளில் வரும் **வி**னைக் கண்[1] **டுவ்** விகுதியே காண்கின்றது. டுவ் விகுதி சேர்ந்தசொல், வழக்கில், **அண்ட்ரி, அண்டி** என்னும் ஈற்றதாய் வழங்கு கின்றது. அண்டி என்பது உயர்வினைக் குறித்து வருவது என்றார் கால்ட்வெல்[2]. டு-துவ்வின் திரிபே.

### மலையாளப் பன்மை

இனி, மலையாள மொழியை நோக்குவோம்: மலை யாளத்தில் **நிங்ஙள்** என வழங்குவது நீங்கள் என்பதன் திரிபே யாகும். பழைய செய்யுளாகிய ராமசரிதத்தில்[3] நீம் என்னும் உருவம் காண்கின்றது. அது, நிம்மோடு நிம்மிலும் என உரு பேற்றும் வந்துளது. முன்னின்றானை உயர்வுபடுத்திக் கூறுதற் கண், **அத்தேகம்** என்று வழங்குகின்றது[4] என்றார் கால்ட் வெல். அத்தேகம் என்பது படர்க்கையிடத்தானை உயர்த்திக் கூறுதற்கண் வருதலேயன்றி, முன்னின்றானைக் கூற வருவ தன்று. முன்னிலையை யுயர்த்திக்கூறுமிடத்து,[5] அங்நுன்னு, அவிடுன்னு என்பவை வரும். தமிழிலும் வழக்கில் 'அவ்விடம், இவ்விடம்' என வழங்குதல் உளதன்றே? தாங்கள் என்னுஞ் சொல்லை, மலையாளம் தமிழ் இரண்டிலும் உயர்வு குறித்து முன்னிலைக்கண் வழங்குதல் உண்டு.

மலையாள மொழிக்கண் ஏவற்பொருள் முதலிய வற்றில் வினைக்கண் வழங்கும் **வின்** அல்லது **இன்** விகுதி, **மின்** என்னும் விகுதியின் தொல்வடிவமாகும். மின் விகுதி

---

1. இதன் பொருள், முன்னர்ச் சுட்டுப்பெயரை ஆராயும்வழி அறியலாகும்.
2. பக்கம். 531.
3. செய்யுள். 32.
4. பக்கம். 372.
5. 'அங்கத்தெ' எனவும் வழங்கும்.

வழங்குதலும் உண்டு. [1]காண்மின் என்று வருதல் அறிக. அவ் விகுதிகளுள் ஒன்றாதல் வாராவிடத்தில் ஒருமை என்பது அறியப்படுமாகலின், ஒருமைக்கு விகுதி கொள்ளப்படா தாயிற்று.

## துளு மொழிப் பன்மைப் பெயர்

துளுமொழிக்கண் **ஈரு, நிகுளு** என்னும் பெயர்கள் காண்கின்றன. இவற்றுள், **நிகுளு** என்பது நிங்கள் என்னுஞ் சொல்லின் திரிபே என்பதில் ஐயமின்று. ஈரு என்னுஞ் சொல் தெலுங்கிலும் குயிமொழியிலும் உளது. ஆயின், குயி மொழி யில் வேற்றுமையுருபேற்றவழி **மீ** என்பதேயன்றி ஈரு என்பது காணப்படவில்லை. துளு மொழியிலோ ஈரென், ஈரெட்து, ஈரெகு, ஈரெட்து, ஈரெ, ஈரெடு என வேற்றுமையுருபேற்ற வழியும் **ஈர்** என்பது காண்கின்றது.[2] ஈர் என்பது குயி முதலிய மொழியிலும் காணுதலின் இதுவும் மிக்க பழமையதேயாகும். இம்மொழிகளில், முன்னிலைப் பெயரின் முதல் நகாரம் அல்லது மகாரம் கெட்டுளது.

தமிழ் முதலிய மொழிகளில் அர் விகுதி படர்க்கைக் கண்ணும் இர் விகுதி முன்னிலைக்கண்ணும் வழங்குனவாக வும், துளு மொழிக்கண் அர்விகுதி முன்னிலைக்கண்ணும் **எர்** விகுதி (இஃது **இர்** என்பதன் திரிபாகும்) படர்க்கைக் கண்ணும் வழங்குதல்[3] வியப்பாகின்றது. ஏவல் முதலிய பொருட்கண் காணும் [4]**லெ** என்னும் விகுதி **அல்** விகுதியின் திரிபாகலாம்.

இத்துணையுங் கூறியவாற்றால், மூலத் திராவிட மொழி யில் முன்னிலைப் பன்மைப்பெயராக முதற்கண் வழங்கிய பெயர் நீம் என்பது எனவும், பின்னர், முதற்கண்ணும் மகரம் சேர்த்து மீம் எனச் சிலர் வழங்கினர் எனவும், அதன்பின்னர், பன்மைக்கு மகாரமேயன்றி ரகாரமும் சேர்க்கலாயினர் எனவும் அறியலாகும்.

---

1. கேரளபாணிணீயம். சூ. 103. உரை.
2. துளு இலக்கணம். பக்கம். 37.
3. துளு இலக்கணம். பக்கம். 46.
4. துளு இலக்கணம். பக்கம். 52.

# படர்க்கைப் பெயர்

இனி, படர்க்கைப் பெயர்களை நோக்குவோம்:

## தமிழ்

தமிழில், தான் என்பது ஒருமைப்பெயராயும், தாம் தாங்கள் என்பன பன்மைப் பெயராயும் உள்ளன. வேற்றுமை யுருபேற்கும் வழி, அவை முறையே தன், தம், தங்கள் என்றிருக்கும். தான் என்பது முக்கூற்றொருமைக்கும், தாம் தாங்கள் என்பவை இருகூற்றுப்பன்மைக்கும் வரும். தாங்கள் என்பது உயர்வு குறித்து முன்னிலைக்கண்ணும் வழங்கு கின்றது. ஒருமை வினைமுற்றில் அன் ஆன்; அள் ஆள்; [1]து என்பனவும், பன்மை வினைமுற்றில் அர் ஆர் ப; அ; ஆ என்பனவும் விகுதிகளாய் உள்ளன.

## கன்னடம்

கன்னடத்தில், தான் என்பது ஒருமைப்பெயர். அஃது ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால்களைக் குறித்து வரும். தாம் தாங்கள் என்பவை பன்மைப் பெயர். தாம் என்பது தாவு என்று வழங்குகின்றது. தாம் முதலியன பலர்பாலுக்கும் பலவின் பாலுக்கும் வரும். வேற்றுமையுருபேற்கும்போது, தன், தம், தங்கள் என்று திரிந்திருக்கும். தாம் தாங்கள் என்பவற்றை உயர்வு கருதி, முன்னிலைக்கண் வழங்குதல் உண்டு. ஒருமை வினையில் அன் (அ0), அள், உது என்பனவும், பன்மை வினையில் அர், உவு என்பனவும் விகுதிகளாய் வரும்.

## தெலுங்கு

தெலுங்கில் ஒருமைக்கண் தான் என்பதுவும், பன்மைக் கண் தாமு (தாம்), தமரு, தாரு என்பனவும் வழங்குகின்றன. இவை 'ஆத்மார்த்தகம்' எனப்படுகின்றன. வேற்றுமையுரு

1. டு, றுக்கள் துவ்வின் திரிபு.

பேற்கும்போது, தான் என்பது தன் என்றும், தாமு என்பது தம் என்றும் நிற்கும். ஏனையவை திரிதல் இல்லை. தமரு என்பது உயர்வு குறித்து முன்னிலைக்கண் வழங்கப்படும். [1]தானு, தாமு என்பவை ஒரோவழித் தன்மைக்கண்ணும் வருதல் உண்டு.

**மலையாளம்**

மலையாளத்தில் ஒருமைக்கண் தான் என்பதுவும், பன்மைக்கண் [2]தாங்ஙள் தங்ஙள் தாங்கள் என்பனவும், [3]தம்மள் தாம் (தோம்) என்பனவும் வழங்கும். இவற்றுள் [4]தாம் என்பது இப்போது வழக்கில் இல்லை. இவை வேற்றுமை யுருபேற்கும் போது, முறையே, தன் தங்ஙள் தங்கள் என்று நிற்கும். தான் என்பது முன்னிலையொருமையில் வரும். [5]தாங்கள் என்பதும் உயர்வு கருதி முன்னிலைக்கண் வழங்க வரும். [6]தங்ஙள் என்பது முன்னிலையோடு முடிதலும் உண்டு.

'தங்ஙள் தங்ஙள்க் காஶ யுள்ள பதார்த்தங்ஙள் தங்ஙள்
தங்ஙள் சுமந்நீடு**வின்'**
(ம.பா.)

என்பது உதாரணமாகும்.

[7]தான் என்பது பன்மையிலும் வழங்கப்பட்டுளது.

'தனிக்குதான் போந்ந ஜனங்ஙள்' (கே. ரா.)
'தன்னெத்தான் மறந்நுள்ள காமுகன்மார்' (ம. பா.)

என்பன காண்க. ஆயின், இவ்வாறு பன்மை குறித்து வருவது அமைவுடையதன்று.

---

1. ப்ரௌட வ்யா. ஶப்த. 78
2. குண்டர்ட் இலக். பக். 36
3. கேரளபாணி. சூ. 52. உரை.
4. ,, சூ. 52. ,,
5. கேரளபாணி. சூ. 52. உரை
6. குண்டர்ட் இலக். பக். 174
7. குண்டர்ட் இலக். பக். 173

### துளு

[1]துளு மொழியில், தான் என்பது முக்கூற்று ஒருமை யிலும், தன்குளு என்பது இருகூற்றுப் பன்மையிலும் வழங்கு கின்றது. வேற்றுமை யுருபேற்கும்போது, இவை முறையே, தன், தனுகுள் என்றிருக்கும். இப்பெயர்கள், தமக்கு முதலில் வந்துள்ள படர்க்கைப் பெயர் அல்லது, சுட்டுப் பெயர்களைக் குறித்து வரும். இவற்றுள் பன்மைப் பெயர் உயர்வு குறித்து முன்னிலையொருமைக்கண் வழங்கப்படும்.

### குயி

[2]குயி மொழியில் தானு என்பது ஒருமைப்பெயராயும், தாரு என்பது பன்மைப் பெயராயும் த்ரை என்பது பெண் பாற் பெயராயும், வழங்குகின்றன. உருபேற்குமிடத்து, தானு என்பது தான என்றும் சிலவழி **த்ரா** என்றும், தாரு என்பது தார என்றும் நிற்கும். தானு என்பது படர்க்கைப் பெயரைக் குறித்தே வரும்; சிலவிடத்தில் சுட்டுப்பொருளிலும் வரும்; **தன்மை முன்னிலைகளைக் குறித்து வருதலே இல்லை.**

### ஒராஒன்

[3]ஒராஒன் மொழியில், தான் என்பது ஒருமைப்பெயராயும், தாம் என்பது பன்மைப்பெயராயும் வழங்குகின்றன. வேற்றுமையுருபேற்கும்போது, இவை முறையே, தன், தம் என்றிருக்கும். இப்பெயர்கள் படர்க்கைப்பெயரோடு வருவது உண்டு; [4]**தன்மை முன்னிலைகளில் அவ்வவ் விடப்பெயர் களே வரும்.**

யான் **என்** வீட்டுக்குப் போனேன்
யாம் **எம்** வீட்டுக்குப் போனேம்

---

1. துளு இலக். பக். 33, 34
2. குயி இலக். பக். 14
3. குருக் இலக். பக். 24
4. " பக். 25

நாம் **நம்** வீட்டுக்குப் போனோம்
நீ **நின்** வீட்டுக்குப் போனாய்
நீயிர் **நும்** வீட்டுக்குப் போயினீர்

என்பன போன்று வரும்.

### ப்ரஹூயி

[1]ப்ரஹூயி மொழியில் **த** என்பது ஒருமைப் பெயராயும், **தா** என்பது பன்மைப் பெயராயும் உள; 2, 4, 6 - ஆம் வேற்றுமைகளிலும் இவ்வடிவினவாயே நிற்கின்றன. மற்றைய வேற்றுமையுருபு ஏற்கும்போது முதற்கண் **ஈ** என்பதும் அதன் முன் உருபும், உருபின்முன் இப்பெயரும் அமைந்திருக்கின்றன.

ஈ டீ த - தன்னிடம்
ஈ டீ தா - தம்மிடம்

என்பன காண்க.

இவற்றை எளிதின் அறியவேண்டி, ஈண்டு ஒருங்கே குறிக்கின்றேன்:

---

1. ப்ரஹூயி இலக்கணம். பக். 78.

| மொழிகள் | ஒருமை | பன்மை | வேற்றுமை யுருபேற்றவழித் திரிந்த வடிவம் |
|---|---|---|---|
| தமிழ் | தான் | தாம், தாங்கள் | தன், தம், தங்கள் |
| கன்னடம் | தான் | தாம், தாவு, தாங்கள் | தன், தம், தங்கள் |
| தெலுங்கு | தானு | தாமு, தமரு, தாரு | தன், தம் |
| மலையாளம் | தான் | தாங்ஙள், தங்ஙள், தாங்கள், தாம், தம்மள் | தன், தங்ஙள், தங்கள், தம் |
| துளு | தான் | தன்குளு | தன், தணுகுள் |
| குயி | தானு, த்ரை | தாரு | தான, த்ரா, தார |
| ஒராஒன் | தான் | தாம் | தன், தம் |
| ப்ரஹூயி | த | தா | |

மேற்குறித்தவாற்றால் தான் தாம் என்னும் பெயர்கள் ப்ரஹூயி ஒழிந்த எல்லா மொழிகளிலும் ஒரு தன்மையவா யிருத்தல் உளங்கொளத்தக்கது. இவையே பழையனவாய படர்க்கைப் பெயர்கள். என்னையெனின், மிகப் பழைய காலத்

தில் திராவிட மொழிகளில் - தமிழிலும் - திணை வேறுபாடு இருந்திலது; பால் வேறுபாடும் இல்லை; எண் வேறுபாடு மட்டுமேயிருந்தது என்பது மேலே காட்டப்பட்டது. அதனானே, மூவிடத்துப் பெயர்களும் எண் வேறுபாட்டளவில் அமைப வாயின.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| படர்க்கை | தான் | தாம் |
| முன்னிலை | நீன் | நீம் |
| தன்மை | ஏன் | ஏம் |

ஆயின், தான் தாம் என்பவை,

அவன்தான் சொன்னான்
அவர்தாம் சொன்னார்
இராமன்தான் சொன்னான்
இராமர்தான் சொன்னார்
நீதான் சொன்னாய்
நீர்தாம் சொன்னீர்
நான்தான் சொன்னேன்
நாம்தாம் சொன்னோம்

என்று, தமிழில் மூவிடத்துப் பெயர்களோடும் வருதலின், அவை படர்க்கைப் பெயரெனல் அமையாது; பொதுப்பெயர் என்றல் அமையும் எனின், அற்றன்று. மேற்காட்டிய உதா ரணங்களில், தான் தாம் என்பவை தேற்றப் பொருளில் வந்த இடைச்சொற்களாகக் கொள்ளப்படுதலன்றி, பெயர்ச் சொற்க ளாகக் கொள்ளப்படமாட்டா.

அவன் தன்னைக்குறித்து வருந்தினான்
நீ நின்னைக்குறித்து வருந்தினாய்

நீ உன்னைக்குறித்து வருந்தினாய்
யான் என்னைக்குறித்து வருந்தினேன்

என்னுமிடங்களிலும்,

நின்மகன் நின்னொடு வந்தான்
உன்மகன் உன்னொடு வந்தான்
என்மகன் என்னோடு வந்தான்

என்னுமிடங்களிலும் மூவிடத்துப் பெயர்களோடு அவ்விடத்துப் பெயர்களின் திரிபாகிய தன், நின், உன், என் என்னுஞ் சொற்களே வந்திருத்தல் காண்க. இவ்விடங்களில், நின், உன், என் என்ப வற்றிற்கு ஈடாகத் தன் என்பதனை வழங்குதல் இல்லை. குயி மொழியிலும் ஒராஒன் மொழியிலும் **தான், தாம்** என்பவை **தன்மை முன்னிலையிடங்களில் வழங்க வாராமை** ஈண்டு அறியத்தக்கது. இவற்றால், தான் என்னும் பெயர் படர்க்கைக்கே உரியதாதல் போதரும். தாம் என்னும் பெயரும் இவ்வாறேயாகும். இவற்றைக் குறித்து, ஆர். சாமி நாதையரவர்கள் பரக்க எழுதியிருப்பது[1] நோக்கத்தக்கது.

இனி, தான் தாம் என்னும் பெயர்களைக் குறித்து ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருப்பவற்றை நோக்குவோம்: அவர்,

'இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி **தானே தாமே**
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே' *(பெய. 20)*

என்னுஞ் சூத்திரத்தால், தான் தாம் என்னும் பெயர்களை இருதிணைக்கும் பொதுப்பெயராகக் கூறியுள்ளார். இருதிணைப் பொதுப்பெயர் என்றதனால், அவை [2]**தன்மைக்கண் வாரா** என்பது தேற்றம். அன்றியும்,

---

1. The Aryan Affinities of Dravidian Pronouns'.(p. 193-195) of Third Oriental Conference.

2. தொல்காப்பியனார், தன்மையிடத்தில் அஃறிணைச் சொல்வழக்குக் கொண்டிலாதது மேல் கூறப்பட்டுளது.

'தாமென் கிளவி பன்மைக் குரித்தே' *(பெய. 30)*

என்னுஞ் சூத்திரத்திற்கு உதாரணமாக, உரைகாரர்,

'தாம் **வந்தார்;** தாம்**வந்தன**'

என்பன காட்டியிருத்தலானும்,

'தானென் கிளவி யொருமைக் குரித்தே' *(பெய. 31)*

என்னுஞ் சூத்திரத்திற்கு உதாரணமாக,

'தான்**வந்தான்;** தான்**வந்தாள்;** தான்**வந்தது**'

என்பன காட்டியிருத்தலானும், தாம் தான் என்பவை படர்க்கையிடத்திற்கே உரியவாதல் அறியப்படும். அன்றியும், ஆசிரியர் தொல்காப்பியனார், எல்லாரும் எல்லீரும் என்னும் படர்க்கை முன்னிலைப்பெயர்கள் வேற்றுமை யுருபேற்றலைக் கூறுமிடத்து,

'**தம்**மிடை வரூஉம் **படர்க்கை மேன**
**நும்**மிடை வரூஉம் **முன்னிலை மொழிக்கே**' *(உருபி. 19)*

என்று கூறியிருத்தலை நோக்கின், **தாம்** என்பது படர்க்கையிடத்ததே யாதல் நன்கு அறியப்படும்.

கன்னட மொழியிற் பயிற்சி மிக்க இலக்கண நூலாகிய 'ஶப்தமணி தர்ப்பண'த்தில், தான் தாம் என்பவை படர்க்கைப் பெயர்கள் என்பது கூறப்பட்டுளது.

[1]'திளி **தா** நீனா னெம்பர்த்
தளம்பிகள் **ப்ரதம** மத்யமோத்தம புருஷங்
களவு..................' *(235)*

என்பது நோக்கத்தகும். அஃதேல், தாம் தாங்கள் என்பவை

---

1. 'தெளிக, தான் நீன் ஆன் என்னும் பொருளுடையன (முறையே)படர்க்கை முன்னிலை தன்மை என்னும் இடத்தன.'

முன்னிலைக் கண்ணும் வழங்குதலின், அவற்றைப் படர்க்கைப் பெயர் என்றல் அமையாது எனின், கூறுவேன். மலையாள மொழியில் உயர்வு கருதிப் பன்மைக்கண் அங்ஙுன்னு, அவிடுன்னு முதலிய சொற்களை வழங்குதல் உண்டு. தமிழிலும் உயர்வு குறித்து, தாங்கள், அவ்விடம், இவ்விடம், யஜமான், முதலாளி முதலிய சொற்களை முன்னிலைக்கண் வழங்குதல் உண்டன்றே? இவ்வாறு தெலுங்கிலும் தாமு, தமரு, தொர (துரை), யஜமானுலு (யஜமான்கள்) முதலிய சொற்களை வழங்குவர். இவற்றுள் தாங்கள் என்பதனை முன்னிலைப் பெயர் என்று கொள்ளின், அதனோ டொப்ப வழங்குகின்ற அவிடுன்னு, அவ்விடம், முதலாளி, தொர (துரை) முதலிய பெயர்களையும் முன்னிலைப் பெயரென்று கொள்ளுதல் வேண்டுமன்றே? அவையெல்லாம் முன்னிலைப் பெயர்கள் ஆகுமோ? வடமொழியிலும் உயர்வு கருதி முன்னிலைக்கண் 'பவான்' என்னுஞ் சொல்லை வழங்குதல் உண்டு. ஆயினும், அது முன்னிலைச் சொல்லாகக் கொள்ளப் படவில்லை.

[1]'யுஷ்மத்யுபபதே ஸமாநாதிகரணே ஸ்த்தாநிந்யபி மத்யம:'

என்னுஞ் சூத்திரத்தால், [2]'வினை விகுதியாற் சொல்லப்படுகின்ற காரகத்தைச் சொல்லும் **யுஷ்மத்** பதம் வெளிப்படத் தோன்றி யிருப்பினும் தோன்றாதிருப்பினும் வினைச்சொற்கு **முன்னிலை விகுதி** வரும்' என்றும்,

[3]'அஸ்மத் யுத்தம:'

என்னுஞ் சூத்திரத்தால், மேற்கூறியவாறு வரும் **அஸ்மத்** பத வினைக்குத் **தன்மை விகுதி** வரும் என்றும் கூறி,

[4]'சேஷே ப்ரதம:'

என்னுஞ் சூத்திரத்தால் **ஒழிந்த எல்லா வினைச் சொற்க**

---

1. பாணினீயம். 1. 4 : 105
2. ஸித்தாந்தகௌமுதி.
3. பாணினீயம். 1. 4 : 107
4. பாணினீயம். 1. 4 : 108

**ளுக்கும் படர்க்கை விகுதி வரும்** என்று விதித்திருத்தலின், **பவான்** என்னுஞ் சொல் முன்னிலைக்கண் வழங்கப்படினும், அதன் வினைக்குப் **படர்க்கை விகுதி**யே வரும் என்பது அறியப் படும்.

'பவான் [1]ஜீவதி'

என்று, படர்க்கை விகுதி வருதலன்றி,

'பவான் [2]ஜீவஸி'

என்று, முன்னிலை விகுதி வாராது. இக்கூறியவற்றால், 'பவான்' என்பது முன்னிலைக்கண் வழங்கப்படினும் படர்க்கைப் பெயரே யாதல் தெளிவாகும். நன்னூலார்,

[3]'தன்மை யானான் யாநாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
**அல்லன படர்க்கை** எல்லாம் எனல்பொது'

என்று கூறியிருப்பதும் ஈண்டைக்கு நோக்கத்தகும். இதனால், தாம் தாங்கள் என்பன படர்க்கைச் சொல்லே என்பது அறியப் படும். அவற்றை உயர்வு கருதி முன்னிலைக்கண் வழங்குதல் போலவே மலையாளம் முதலிய மொழிகளிலும் உயர்வு கருதி வழங்குகின்றனர் என்று கோடலே அமைதி. இவ்வாறே, முன் னிலைக்கண் ஒற்றுமை கருதி 'நாம்' என்னுஞ் சொல்லை வழங்குதல் உளது. 'உங்கள் பையன்' என்னும் பொருளில், 'நம் பையன்' என்று வழங்குகின்றோமன்றே? இனி, முன்னிலை யொருமைக்கண் நகைக் குறிப்புத் தோன்ற நாம் என்னுந் தன்மைப் பன்மைப்பெயரை வழங்கியிருத்தலும் காண்கின்றது.

[4]'மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேம்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும்
ஆபோற் படர்தக **நாம்.**'

---

1. ஜீவிக்கின்றான்.
2. ஜீவிக்கின்றாய்.
3. பெயரியல். 28.
4. கலி. மருத. 16.

[1]'செங்கயல்போற் கருநெடுங்கட் டேமருதா
மரையுறையும்
நங்கையிவ ரெனநெருநல் நடந்தவரோ **நாம்** என்ன'

என்பன காண்க.

இக் கூறியவற்றால், யாதேனும் ஒரு காரணங் கருதி முன்னிலைக்கண் பிறவிடத்துப் பெயர்களை வழங்குதல் உண்டென்பதும், அதுபற்றி அவை முன்னிலைப் பெயராகா என்பதும் அறியப்படும். அறியப்படவே, தாம் தாங்கள் என்பனவும், முன்னிலைக்கண் வழங்கப்படினும், முன்னிலைப் பெயரல்ல என்பது தெளிவாகும்.

இனி, தான் தாம் என்பவை சுட்டுப்பெயரோடும் பிறபெயரோடும் சேர்ந்து நிற்றலின் அவற்றைப் படர்க்கைப் பெயர் எனல் அமையாது; சாரியைச் சொற்கள் என்றலே தகுதி எனின், அதுவும் பொருந்தாது. என்னை யெனின், கூறுவேன். அவன் அவள் அவர் அது அவை என்னுஞ் சொற்கள் முதலிற் கூறிய பொருளையும் உலகறிந்த பொருளையும் **சுட்டுதற்கண்** வருவனேயன்றி, முதற்கண் வழங்க வாரா; தான் தாம் என்னுஞ் சொற்கள் அத்தகையனவல்ல; முதற்கண் வரும்.

'யாரும் இல்லை **தானே** கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ' (குறுந். 25)

என்றும்,

'**தனக்**கியா னுயிரும் ஈவேன் **தான்** வரப் பழியு நீங்கும்'
(சீவக. 2147)

என்றும்,

'கள்ளத்தால் நம்மைக் கொல்லக் கருதினா னாமுந்
**தன்னை**' (சீவக. 2149)

என்றும்,

1. கம்ப. சூர்ப்பணகைப். 119

**தான்** விரும்பி, ''நீர் கூறிய மொழி எங்ஙனே' என்று வினாவ, அவரும்' என்றும்,

> 'வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
> தீம்பால் படுதல் **தாமஞ்** சினரே' *(அகம். 26)*

என்றும்,

> '**தாம்**வீழ்வார் மென்றோள்' *(குறள். 1103)*

என்றும்,

> '**தாம்**வீழ்வார் தம்வீழப் பெற்றவர்' *(குறள். 1191)*

என்றும்,

> '**தா**முறு காமத் தன்மை தாங்களே உரைப்பது'
> *(கம்ப. சூர்ப்பண. 45)*

என்றும், சுட்டுப்பெயர்போல் முன்னர் வந்ததனைச் சுட்டுதலின்றி, முதற்கண் வந்திருத்தல் காண்க. வழக்கிலும் இவ்வாறு வருதல் உண்டு.

இவ்வாறு, தான் தாம் என்பவை தனியே வழங்குதல் உளதாகலின், அவற்றைப் பெயர் என்றற்கு இழுக்கில்லை. தனியரசு செலுத்திய அரசன், தன் பதம் இழந்து மாற்றரசனுக்குக் குற்றேவலாளாய்ச் சமைந்ததுபோல, **தான், தாம்** என்னும் இப்படர்க்கைப் பெயர்களும் ஒரோவழிச் சுட்டுப் பெயரையும் பிறபெயரையும் சார்ந்து சாரியை என்னுமாறும், சில வழி அசைநிலை என்னுமாறும் நிற்பவாயின.

இனி, நாம் என்னும் பெயர் திரிந்து எல்லாரும் என்னும் படர்க்கைச் சொற்கண் சேர்ந்து, எல்லார்தம்மையும் என்று வருதல்போன்று, நாம் நீம் என்பன [1]நம் [2]நும் எனத் திரிந்து தன்மை முன்னிலைச் சொற்கண் சேர்ந்து, எல்லாநம்மையும்,

---

1. தொல். உருபியல். 18.
2. ,, ,, 19.

எல்லீர்நும்மையும் என்று வருகின்றன. தாம் என்பது சாரியை எனப்படுமாயின், நாம் நீம் என்பனவும் சாரியை எனப்படு மன்றே? அவையே ஆண்டு **இடவேறுபாடு** குறித்தலின் அவற்றைச் சாரியை என்றல் தகாது.

சுட்டுப்பெயர்கள் இடத்தின் சேய்மை அண்மையைக் குறிப்பவை. தான் தாம் என்பவை அவ்வாறு குறிப்பன அல்ல. ஆங்கிலத்தில், **தாட்** (That), **திஸ்** (This), **தோஸ்** (Those), **தீஸ்** (These) என்பவை இடத்தின் சேய்மை அண்மைகளை உணர்த்தி நிற்ப, **இட்** (It), **தே** (They) என்பவை அவ்வாறு உணர்த்தாமலிருப்பன ஈண்டு அறியத்தக்கன. இவற்றாலும் அவை பழைய படர்க்கைப் பெயர்களே யாதல் நன்கு புலனாகும்.

தாம் என்னும் பெயரோடு அன், அள், அர் முதலிய விகுதிகள் சேர்ந்து, இடையே கிழமையைக் குறிக்கும் அகரஞ் சேரப்பெற்று, [1]தமன் தமள் தமர் முதலியனவாய் வழங்கு கின்றன. ஆயின், தமர் என்பதொன்றே தெலுங்கு முதலிய மொழிகளில் காண்கின்றது. தெலுங்கில், தமர் என்பது தமரு, தாரு என்றும் வழங்கும். அவற்றின் பொருள் **தாம்** என்பதுவே. கன்னடத்தில், தமர் என்பது தனித்து வழங்குதல் இல்லை; தமர்மனை என்னுந் தொகைச் சொல்லில் மட்டுமே காண் கின்றது. தமர்மனை என்பது தாய்வீடு என்னும் பொருளது. தமன், தமள் முதலிய பெயர்களின் இடையே அகரஞ் சேர்தல் எற்றிற்கு எனின், தாம் என்னும் பெயர் வேற்றுமையுருபேற் றற்கண் அன்றி முதல் குறுகாதாகலானும், தாம் என்பதனோடு அன் அள் து இவ்விகுதிகள் சேர்தற்கு இயைபின்றாகலானும், தமன் முதலிய பெயர்கள் கிழமைப்பொருள் உணர்த்துதலானும் இடையே ஆறனுருபாகிய அகரஞ் சேர்ந்தது என்றல் தகும்.

---

3. இத்தகைய பெயர்கள் பிரித்துக் கூறப்படா என்பர் தொல்காப்பியனார்: எச்சவியல். 14.

# சுட்டுப் பெயர்

## தமிழ்

இனி, சுட்டுப் பெயர்களை நோக்குவோம்: தமிழ் மொழியில், அஃறிணை யொருமைக்கண் அது இது உது, அஃது இஃது உஃது என்பனவும், பன்மைக்கண் அவை இவை உவை, அவ் இவ் உவ்[1] என்பனவும், உயர்திணை ஆண் பாலில் அவன் இவன் உவன் என்பனவும், பெண்பாலில் அவள் இவள் உவள் என்பனவும், பலர்பாலில் அவர் இவர் உவர்[2] என்பனவும் முற்காலத்தில் வழங்கின. பன்மையைக் குறிக்குங் **கள்** விகுதி அக்காலத்தில் பன்மைப்பெயர்களோடு சேர்ந்து வழங்கிற்றிலது.

அஃறிணை யியற்பெயரும் ஒரோவழியே கள் விகுதி பெறும் என்பது 'கள்ளொடு சிவணும்' என்னுஞ் சூத்திரத் தாற் போதருதலின், [3]அவைகள் இவைகள் உவைகள் என்றும், அவர்கள் இவர்கள் உவர்கள் என்றும் [4]பண்டு வழங்கின வல்ல என்பது நன்கறியப்படும்.

## கன்னடம்

கன்னட மொழியில், ஒருமைக்கண் அது இது உது என்பனவும், பன்மைக்கண் அவு இவு உவு, அவுகள் இவுகள் உவுகள் என்பனவும், ஆண்பாற்கண் அவன் இவன் உவன், [5]ஆதன் ஈதன் ஊதன் என்பனவும், பெண்பாற்கண் அவள் இவள் உவள், [6]ஆகெ ஈகெ ஊகெ என்பனவும், பலர்பாற்கண் [7]அவன்திர் இவன்திர் உவன்திர், அவள்திர் இவள்திர் உவள்திர், அவர் இவர் உவர், [8]அவர்கள் இவர்கள் உவர்கள், [9]ஆதംகள்

---

1. தொல். பெயரியல். 13
2. தொல். பெயரியல். 8
3. சூளா. சீய. 166
4. திருக்குறளில் 'கள்' விகுதி வந்துளது (குறள். 263, 919). இதனை ஸ்ரீ L.V. ராம ஸ்வாமி ஐயரவர்களும், டாக்டர் P.S. சுப்ரமணிய ஶாஸ்த்ரியாரவர்களும் எழுதியிருக்கின்றார்கள்.
5. ஶப்தமணி. 161
6. ஶப்தமணி. 165
7. ஶப்தமணி. 107
8. ஶப்தமணி. 111
9. ஶப்தமணி. 161.

ஈதஂகள் ஊதஂகள் என்பனவும் பண்டு வழங்கின. இக்காலத்தில் உகரச்சுட்டு வழக்கின்மையின் அதனடியாகப் பிறந்த பெயர் களெல்லாம் வழக்கிறந்தன.

## தெலுங்கு

தெலுங்கு மொழியில் அஃறிணை யொருமைக்கண் **அதி அத்தி இதி இத்தி** என்பனவும், பன்மைக்கண் அவி அவ்வி இவி இவ்வி என்பனவும், உயர்திணை ஆண்பாற் கண் வாஂடு அதஂடு ஆதஂடு வீஂடு இதஂடு ஈதஂடு என்பனவும், பெண்பாற்கண் அஃறிணை யொருமைப்பெயர் போலவே **அதி அத்தி இதி இத்தி** என்பனவும் ஆமெ ஆபெ ஆகெ ஈமெ ஈபெ ஈகெ என்பனவும், பலர்பாற்கண் [1]வாரு வாரலு வாண்ட்ரு வீரு வீரலு வீண்ட்ரு என்பனவும் காண்கின்றன. இவற்றுள் அதஂடு ஆதஂடு இதஂடு ஈதஂடு என்னும் ஆண்பாற் பெயர்களும், ஆமெ ஆபெ ஆகெ ஈமெ ஈபெ ஈகெ என்னும் பெண்பாற் பெயர்களும் [2]உயர்வு குறிக்க வருபவை.

## மலையாளம்

மலையாள மொழியில் ஒருமைக்கண் அது இது என்பனவும், பன்மைக்கண் அவ [3]அதுகள் அவகள் இவ இதுகள் இவகள் என்பனவும், ஆண்பாற்கண் அவன் இவன் என்பனவும், பெண்பாற்கண் அவள் இவள் என்பனவும், பலர்பாற்கண் அவர் அவர்கள் இவர் இவர்கள் என்பனவும் வழங்குகின்றன.

## துளு

[4]துளுமொழியில் ஒருமைக்கண் அவு[5] இந்து உந்து என்பனவும், பன்மைக் கண் உந்தெகுளு **ஐகுளு** என்பனவும்,

---

1. ஆந்த்ர பாஷா. 71
2. பாலவ்யாகரணம், ஸர்வநாம ப்ரகரணம். சூ. 24 உரை.
3. வ்யாகரணமித்ரம். 112 - ii
4. துளு இலக். பக். 33
5. இது பன்மைச்சொல் ஒருமைக்கண் வந்ததாகும்.

ஆண்பாற்கண் **ஆயெ இம்பெ** என்பனவும், பெண்பாற்கண் ஆள் மோள் என்பனவும், பலர்பாற்கண் ஆர் **ஆகுளு** மேர் மோகுளு என்பனவும் வழங்குகின்றன.

[1]துத மொழியில் ஒருமைக்கும் பன்மைக்கும் அதம் இதம் என்பவை வழங்குகின்றன.

[2]குயி மொழியில், ஒ, ஆ, ஏ; இ என்பவற்றோடு ஆண்பாலில் **அன்ஜு** என்பதுவும், பெண்பாலிலும் ஒன்றன் பாலிலும் **ரி** என்பதுவும், ஆண்பாற் பன்மையில் **ஆரு** என்பதுவும், பெண்பாற் பன்மையிலும் பலவின்பாலிலும் **வி, வஸ்க** என்பனவும் சேர்த்து வழங்கப்படும்.

[3]கோண்டு மொழியில் ஆண்பாலில் **ஓர்** என்பது வழங்குகின்றது. இது, பண்டு பன்மைப்பெயராகும். பழைய ஒருமைப்பெயர் **ஒன்** என்பது, ஓர் என்பதுவே பலர்பாலிலும் வழங்குகின்றது. ஆயினும், பன்மையைக் குறிக்க **'க்'** சேர்க்கப் படுகின்றது. **ஓர்க்** = அவர்கள். பெண்பாலிலும் ஒருமையிலும் **அத்** என்பது வழங்குகின்றது. அவற்றின் பன்மை **அவூ** (அவூ) என்பது.

[4]ஒராஒன் மொழியில் ஆண்பாலில் **ஆஸ் ஈஸ்** என்பனவும், பெண்பாலிலும் ஒருமையிலும் **ஆத் ஈத்** என்பனவும், பலர்பாலில் (ஆண்பாற்கும் பெண்பாற்கும்) **ஆர், ஈர்** என்பனவும், பலவின்பாலில் **அப்றா இப்றா** என்பனவும் காண்கின்றன. அம்மனிதன் என்னும் பொருளில் **ஹூஸ்** என்பதும், அம் மனிதர் (ஆண், பெண்) என்னும் பொருளில் **ஹூர்** என்பதும், அவள் அது என்னும் பொருளில் **ஹூத்** என்பதும், அவை என்னும் பொருளில் **ஹூப்றா** என்பதும் வழங்குகின்றன. இவை உகரச் சுட்டுப் பெயர்களாகும்.

---

1. கால்ட்வெல். பக். 426.
2. குயி இலக்கணம். பக். 10.
3. க்ரியர்ஸன். பக். 481.
4. குருக் இலக்கணம். பக். 19, 20, 21.

[1]ப்ரஹூயி மொழியில் **தா, ஏ, ஒ** என்பன சுட்டுக் களாயுள்ளன. இவற்றுள் **ஒ** என்பது உகரச்சுட்டுப் போன்றது; தா ஏக்களின் இடைப்பட்டவிடத்துப்பொருளை உணர்த்த வரும். அப்பெயர்கள் பன்மையில் **தாவ்க்** (dafk) **ஏவ்க் ஒவ்க்** என்று உள்ளன. ஒருமையில், 2, 4-ஆம் வேற்றுமையில் **தாதெ ஏதெ ஒதெ** என்றும், 3-ஆம் வேற்றுமையில் தாறட் (தாதட்), ஏறட் (ஏதட்), **ஒறட்** (ஒதட்) என்றும், 6-ஆம் வேற்றுமை யில் **தானா, ஏனா, ஒனா** என்றும் இருக்கின்றன; பன்மையில், 2, 4-ஆம் வேற்றுமையில் **தாவ்தெ ஏவ்தெ ஒவ்தெ** என்றும், 6-ஆம் வேற்றுமையில் **தாவ்தா ஏவ்தா ஒவ்தா** என்றும் உள்ளன.

இவை எளிதின் அறிதற்பொருட்டு ஈங்கு ஒருங்கே குறிக்கின்றேன்:

1. ப்ரஹூயி இலக்கணம். பக். 83, 4.

# சுட்டுப் பெயர்

| | தமிழ் | கன்னடம் | தெலுங்கு | மலை |
|---|---|---|---|---|
| ஒன்றன் பால் | அது<br>இது<br>உது<br>அஃது<br>இஃது<br>உஃது | அது<br>இது<br>உது | அதி, அத்தி<br>இதி, இத்தி | அது<br>இது |
| பலவற்றுப்பால் | அவை, அவ் | அவு | அவி, அவ்வி | அவ, அதுகள் |
| | இவை, இவ் | இவு | இவி, இவ்வி | இவ, இதுகள் |
| | உவை, உவ்<br>அவைகள்<br>இவைகள்<br>உவைகள் | உவு<br>அவுகள்<br>இவுகள்<br>உவுகள் | | <br>அவகள்<br>இவகள் |
| ஆண் பால் | அவன் | அவ0, ஆத்0 | வாடு, அத0டு<br>ஆத0டு | அவன் |
| | இவன் | இவ0, ஈத0 | வீடு, இத0டு<br>ஈத0டு | இவன் |
| | உவன் | உவ0, ஊத0 | | |
| பெண் பால் | அவள் | அவள், ஆகெ | அதி, அத்தி,<br>ஆமெ, ஆபெ, ஆகெ | அவள் |
| | இவள் | இவள், ஈகெ | இதி, இத்தி<br>ஈமெ, ஈபெ, ஈகெ | இவள் |
| | உவள் | உவள், ஊகெ | | |
| பலர் பால் | அவர் | அவர், அவன்திர், அவள்திர் | வாரு,<br>வாண்ட்ரு | அவர் |
| | இவர் | இவர், இவன்திர், இவள்திர் | வீரு,<br>வீண்ட்ரு | இவர் |
| | உவர் | உவர், உவன்திர், உவள்திர் | வீண்ட்ரு | |
| | அவர்கள்<br>இவர்கள் | அவர்கள், ஆத0கள்<br>இவர்கள், ஈத0கள், உவர்கள், ஊத0கள் | வாரலு<br>வீரலு | அவர்கள்<br>இவர்கள் |

| | துளு | குயி | கோண்டு | ஒராஒன் | ப்ரஹூயி |
|---|---|---|---|---|---|
| ஒன்றன் பால் | அவு<br>இந்து<br>உந்து | ஆரி<br>ஏரி<br>இரி<br>ஒரி | அத்<br>[1]இத் | ஆத்<br>ஈத்<br>ஹொத் | த்ா<br>ஏ<br>ஓ |
| பலவற்றுப்பால் | ஐகுளு<br>உந்<br>தெகுளு | ஆவி<br>ஆவஸ்க<br>ஏவி<br>ஏவஸ்க<br>இவி<br>இவஸ்க<br>ஒவி<br>ஒவஸ்க | அஊ,[2] அவ்<br>[2]இவ் | அப்றா<br>இப்றா<br>ஹூப்றா | |
| ஆண் பால் | ஆயெ<br>இம்பெ | ஆஅன்ஜூ<br>ஏஅன்ஜூ<br>இஅன்ஜூ<br>ஒஅன்ஜூ | ஓர், ஓன் | ஆஸ்<br>ஈஸ்<br>ஹொஸ் | |
| பெண் பால் | ஆள்<br>மோள்<br>(இழிசினர் வழக்கு) | ஆரி<br>ஏரி<br>இரி<br>ஒரி | அத் | ஆத்<br>ஈத்<br>ஹொத் | |
| பலர் பால் | ஆர்<br>மேர்<br>ஆகுளு<br>மோகுளு | ஆஆரு<br>ஏஆரு<br>இஆரு<br>ஒஆரு<br>(ஆண் பன்மை)<br>ஆவி<br>ஆவஸ்க<br>ஏவி<br>ஏவஸ்க<br>இவி<br>இவஸ்க<br>ஒவி<br>ஒவஸ்க<br>(பெண் பன்மை) | ஓர், ஓர்க்<br>(ஆண் பன்மை)<br>அஊ<br>(பெண் பன்மை) | ஆர்<br>ஈர்<br>ஹொர்<br>(ஆண் பெண் பன்மை) | |

1. கால்ட்வெல். பக். 424. 2. கால்ட்வெல். பக். 425.

## சுட்டுப்பெயரின் ஆராய்ச்சி

இனி, சுட்டுப்பெயர்களைக் குறித்து ஆராய்வோம்: அஃறிணை உயர்திணை என்னும் பாகுபாடு தமிழிலும் தெலுங்கிலுமே உளது. தெலுங்கர் உயர்திணையை 'மஹத்' என்றும், அஃறிணையை 'அஹமத்' என்றும் வழங்குவர். கன்னடத்திலும் மலையாளத்திலும் ஆண்பால் பெண்பால் அலிப்பால் என வடமொழியை ஒட்டி வழங்குவர்.

### ஒன்றன்பாற் பெயர் 'அது' முதலியன

அஃறிணை யொருமைப்பெயர் தமிழ் கன்னடம் மலையாள மொழிகளில் உகரவீறாகக் காண்கினும், அஃது இயல்பில் மெய்யீறு எனத் தெரிகின்றது. [1]கோண்டு மொழியிலும் ஒராஒன் மொழியிலும் முறையே **அத், இத்; ஆத், ஈத்** என்று மெய்யீறாகவே வழங்குதலானும், மலையாள தேசத்துள் வட நாட்டவர் அத இத என்று அகரவீறாக ஒலிப்பினும் அவை மெய்யீறென்பது விளங்கத் தகாரத்தின்மேல் அரைப்புள்ளி யிடுதலானும், தெலுங்கு மொழியில் **அதி இதி** என இகர ஈறாகக் காண்டலினாலும் இப்பெயர்கள் முதலில் மெய்யீறாயிருந்தன எனவும், பின்னர் யாதேனும் ஓர் உயிர் சேரப் பெற்றன எனவும் கருதுதல் தகும். தமிழ் மொழியில் 'அதா அன்று' என்னுஞ் சொல்லின் அமைதியை நோக்கின், தமிழிலும் ஒருகாலத்தில், வடமலையாளத்திற் போன்று, **அத** என்று வழங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். என்னையெனின், அத என்னுஞ் சொல் லோடு அன்று என்பது சேர்ந்து (அத + அன்று) அதான்று என்று அமைந்துளது. இரண்டு அகரஞ்சேர்ந்து ஓர் ஆகாரமாயிற்று, [2]மராடி ( மர + அடி), [3]தனாது (தன + அது) என்பவற்றிற்போல.

---

1. கால்ட்வெல். பக்கம். 424.
2. தொல். புள்ளி. 16. பார்க்க.
3. தனாது என்பதில் ஆது என்பது வேற்றுமையுருபு என்றல் தகுதியன்று. தான் என்பது தன் எனத் திரிந்து, 'ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்' என்பதனால் அகரம் பெற்றுத்தன என்றாகும். அதனோடு அது என்னும் உருபு சேர, தன + அது = தனாது என்றாயிற்று. ஆறனுருபு வரும்போது அகரஞ் சேர்தல் இல்லாத சாத்தன், இராமன் முதலிய பெயர்களில் ஆது உருபு காணப் படாதனானும் இவ்வுண்மை அறியப்படும்.

'அதாஅன்று' என்பதில் உள்ள அகரம், வருமொழி இன்னது என அறிதற்கு அடையளமாக எழுதப்படுவது. இனி, சிறாஅர் என்னுஞ் சொல்லிலும் சிறு என்பது பண்டு **சிற** என வழங்கி யிருத்தல் வேண்டும் எனல் கூடும். அதனானே, அர் விகுதியோடு கூடியபோது (சிற + அர் = ) சிறாஅர் என்றாயிற்று. ஆண்டும் இறுதி ரகரத்தின் மேல் நிற்கும் அகரம் அறிகுறியளவில் நிற்பதுவே. சிற என்பது சிறு என்றாய பின்னர் உண்டாகிய சொல்சிறுவர் என்பது. அகரம் இவ்வாறு அறிகுறியாய் நிற்றலை மகாஅர் என்னுஞ் சொல்லிலுங் காணலாம். மக + அர் = மகாஅர் என்று ஆயிற்று. ஆண்டும், மகாஅர் என்பதில் உள்ள அகரம் அறிகுறி யளவே நிற்பது. இவற்றால், வடமலையாளிகள் வழங்குதல் போன்றே பழைய காலத்தில் தமிழிலும் அத, இத, உத என வழங்கினர் என்பது பெறப்படும். ஆகவே, அவை இயல்பில் மெய்யீற்றன என்பது புலனாகும். அது, இது என்பவற்றில் உகரவொலி நன்கு கேட்கப்படவில்லை என்று [1]**லீலா திலகம்** கூறுவது அறியத்தக்கது. [2]டாக்டர் கால்ட்வெல் அது இது முதலியவற்றில், த் இன்னோசைக்காக வந்ததன்று; அஃறிணை யொருமையைக் குறிக்கும் அளவில் நிற்பது என்று கூறியுள்ளார்.

## பலவின்பாற் பெயர் 'அவை' முதலியன

அஃறிணைப் பன்மைப்பெயர், மலையாளத்தில் **அவ** என்றும், தெலுங்கில் **அவி** என்றும், கன்னடத்தகில் **அவு** என்றும், தமிழில் **அவை** என்றும் வழங்குகின்றன. ஆகலின், அதன் தொல்வடிவம் **அவ்** என்றிருந்திருக்கும் எனத் தோன்றுகின்றது. தமிழில் **அவ் இவ் உவ்** என்று மெய்யீற்றனவாயும் இருத்தல் இதனை வலியுறுத்தும். கோண்டு மொழியிலும் **அவ் இவ்** என வகரமெய்யீற் றவாய் இருக்கும்.[3] இவ்வாறு மெய்யீற்றல்லாக்

---

1. லீலா. 3.5: உரை
2. கால்ட். பக். 424.
3. பக்கம். 425.

கால், ஒவ்வொரு மொழியில் ஒவ்வோர் உயிர் பெற்று வழங்கு தற்குக் காரணம் இல்லை.

தன்மை முன்னிலை படர்க்கைகளில் பன்மையைக் குறித்தற்கு மகர மெய் காணுதலின், ஈண்டும் பன்மையைக் குறிக்க மகரமெய்யே யிருத்தல் அமைவுடையது. மகரத்திற்கு ஈடாக வகரம் நிற்கின்றது. இதனை நோக்கும்பொழுது, ஈண்டு மகரம் வகரமாய்த் திரிந்ததோ என ஐயம் உண்டாகின்றது. கன்னடத்தில், எம் என்பது எவு என்றும், நீம் என்பது நீவு என்றும், நாம் என்பது நாவு என்றும் திரிந்திருத்தலை நோக்கின், அம் என்பதே **அவு** எனத் திரிந்துளது என்னலாமன்றே? இஃது இன்னும் ஆராய்ந் தற்குரியது.

துளுமொழியிற் காணும் ஐகுளு என்பது கன்னடத் திலுள்ள அவுகள் என்பதன் திரிபாகும். குயிமொழியிலுள்ள ஆவி என்பது தெலுங்கிலுள்ள அவி என்பதன் நீட்சியாகும். ஒராஓன் மொழியிலுள்ள அப்றா இப்றா ஹுப்றா என்பவை தமிழிலுள்ள அவற்று இவற்று உவற்று என்பவற்றோடு ஒப்பிடத் தக்கன.

## 'அஃது' முதலிய பெயர்

இனி, அஃது இஃது உஃது என ஆய்தவெழுத்தோடு துவ்வீற்றொறுமைப்பெயரைக் குறித்துச் சிறிது நோக்குவோம்: இப் பெயர்கள் தமிழொழிந்த ஏனைத் திராவிடமொழிகளிற் காணவில்லை. ஆகலின், இதன் உண்மை கண்டறிவது அரிதா யுளது.

அது இது உது என்னுஞ் சுட்டுப்பெயர்ப்பொருளில், வேறுபாடொன்றுமின்றியே, அஃது இஃது உஃது என்னும் பெயர்கள் அமைந்திருக்கமாட்டா. என்னையெனின், இப்பெயர் கள் வேண்டுந்துணையேயன்றி மிகை பட அமைதல் இல. ஆகலின், யாதேனுஞ் சிறிதளவு வேறுபாடு இருத்தல் வேண்டும். அதுவே இங்கு ஆராய்தற்பாலது.

வகர வீற்றுச் சுட்டுப்பெயர்க்குமுன் வல்லினம் வருமாயின், அவ்வகரமெய் ஆய்தமாகத் திரியும். அது,

'வேற்றுமை யல்வழி **ஆய்த** மாகும்' (புள்ளி. 84)

என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தால் அறியப்படும். இம்முறைப் படி அவ், இவ், உவ் என்னுஞ் சுட்டுப்பெயர்களுக்குமுன் **துவ்** விகுதி வரின், அஃது இஃது உஃது' என்றாதல் கூடும். ஆயின், அவ் முதலிய பன்மைப் பெயர்களுக்கு முன் ஒருமை யைக் காட்டுந் துவ் விகுதி வருதல் எற்றிற்கு என்று வினவ லாம். துவ் விகுதி ஒருமையை மட்டுங் குறிப்பதன்று; உடைமைப் பொருளைக் குறிக்கும்; உயர்வுப் பொருளையுங் குறிக்கும். துவ்விகுதி ஆண்பாற் பெயரோடும் பெண்பாற் பெயரோடுஞ் சேர்ந்தும் வந்துளது. (அது, முன்னர் அப்பெயர் களைக் குறித்து ஆராய்வுழிக் காட்டப்படும்.) ஆகலின், பன்மைப் பெயர்க்கு முன்னும் வருதல் அமையும். தம்முடையது, நம்முடையது என்னும் பொருளில், தாம் நாம் என்னும் பன்மைப் பெயரைச் சார்ந்து தமது, நமது என்று துவ்விகுதி வருதல் போன்று, அவற்றினுடையது என்னும் பொருளில் அவ் என்னும் பன்மைப் பெயரைச் சார்ந்து அஃது (அவ்து) என்று துவ் விகுதி வருதல் அமைதியாகலாம். அவ்வாறாயின், [1]அஃது என்பது அவற்றினது என்னும் பொருளில் முதற்கண் வழங்கி வந்தது; பின்னர், நாளடைவில் அது என்னும் பொருளளவில் நிற்பதாயிற்று என்று கொள்ளல்வேண்டும். இதுபற்றி இன்னும் ஆராய்தல் வேண்டும். 'அஃது' முதலிய வற்றில், ஆய்தம் எளிதின் ஒலித்தற்கு இடையே தோன்றியது என்பது பொருந்துவதன்று. அவ்வாறாயின், அவ்வடிவமன்றே நிலைத்திருத்தல் வேண்டும்? அஃது அறவே யொழிந்தது ஏன்? எளிதின் ஒலிக்க இயலா விடத்தன்றே தோன்றல் விகாரம் வருதல் முறை? அது இது என்று இன்றுகாறும் எளிதின் ஒலிக்கப் பட்டு வருஞ்சொல்லின் இடையே, வறிதே ஆய்தம் தோன்றியது என்றும், பின்னர் அது வீழ்ந்தது என்றும் கூறுதல் அமைதியாகுமா?

---

1. 'முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான'. (குற்றியலு. 18)
என்பதன் கருத்து நன்கு விளங்கவில்லை.

## ஆண்பாற் பெயர்

இனி, ஆண்பாற் பெயர்களை நோக்குவோம்: அஇ உ என்னுஞ் சுட்டுக்களோடு [1]அன் விகுதி சேர்ந்து, வகரந் தோன்றப் பெற்று, அவன் என்றாயிற்று என்றார் கால்ட்வெல்.[2] சுட்டுக் களுக்குமுன் உயிரெழுத்துவரின் வகரமெய் தோன்றி இரட்டுக மாலின், அ+அன் அவ்வன் என்றாகுமே யன்றி, அவன் என்றாகாது என்றும், அதனால் கால்ட்வெல் கூற்றுப் பொருந் துவதன்றென்றும் கூறி, சுட்டுக்கள், பண்டு, அவ் இவ் உவ் என வகரவீற்றனவாயிருந்தன என்றும், அவ் + அன் = அவன் என்றாயிற்று என்றும் கூறினார் ஸி.பி. வெங்கடராமையர்.[3] ஆயின், அவ் இவ் முதலியவற்றின்முன் உயிர் முதன்மொழி வரினும், தனிக்குறிலினை யடுத்து நின்ற அவ்வகரம் இரட்டு மாகலின், அவர் கூறிய மறுப்பு பொருந்துவதன்று.

## தெலுங்கு

அவன் என்பது தெலுங்கில் வான் எனத் திரிந்து, பின்னர், டுவ் விகுதி பெற்றும், இவன் என்பது வீன் எனத் திரிந்து டுவ் விகுதி பெற்றும், முறையே வாண்டு வீண்டு என்றாயின. இனி, டுவ் விகுதியின் உண்மைத்தன்மை யாது என்பதனைக் குறித்து ஆராய்தல் வேண்டும்.

வான்(அவன்) என்னும் பெயருடன் பன்மையைக் குறிக்கும் ரு-சேர, **வான்ரு = வாண்ட்ரு** என்றாகுமென்றும், பின்னர், பன்மை விகுதியாகிய ருவ்வினை நீக்க, வாண்ட் = வாண்டு என்றாகுமென்றும், ஆகலின், வாண்டு என்பது பன்மையினின்று அமைக்கப்பட்ட ஒருமைப்பெயர் என்றும் **வேட்டூரி ப்ரபாகரஶாஸ்திரியார்** எழுதியுள்ளார்.

அவன் என்பது, அ + ஆன் என்பவற்றான் அமைந்தது என்றும், [4]வான் (அவன்) என்பதில் ஈற்று னகரம் இனமாகிய

---

1. அன், ஆண் என்பதன் திரிபு என்றார். ஆ ஆண் (குயி) = அவன், பக்கம். 226
2. பக்கம் 424.
3. Dravidic Studies. No. 1 Page. 9
4. Studies in Dravidian Philology Page 96

றுகர வொலியோடு ஒலித்து, பின்னர், டு என்னும் ஒலியைப் பெற்றது என்றும், [1]அவன் என்பது முறையே, அவனு, அவன்டு, வான்டு, வாண்டு, வாம்டு, வாடு என்றாயிற்று என்றும் கூறுவர். வான் (அவன்) என்பதன் ஈற்று னகரம் இனமாகிய **று** சேரப் பெற்றதாயின், அதுவேபோல், தான்நேன் என்பவற்றின் னகரமும் இனமாகிய **று** சேரப்பெறல் வேண்டுமென்றே? அவ்வாறின் மையின், று-னகரத்தின் ஒலிபற்றி வந்ததென்றல் அமைதியாதலில்லை.

அவன் இவன் என்னும் பெயர்களோடு துவ் விகுதி சேர்ந்து, அவன்று = வான்று = வாண்டு, இவன்று = வீன்று = வீண்டு என்பவை அமைந்தன எனத் தோன்றுகின்றது. அவன்று என்பது தெலுங்கில் வான்று என்றாதல் அமையும். **அகது** = **காது**; **அந**டு = **நா**வுடு என்றாயினாற்போல, **அவ**ன்று = **வா**ன்று என்றாகு மன்றே? இனி, மூன்று = மூ**ண்டு**, ஞா**ன்று** = நா**ண்டு** என்று திரிந்தாங்கு, வா**ன்று** = வா**ண்டு** என்று எளிதில் திரியும். தமிழிலும் **ன்ற** என்னும் ஒலி **ண்ட** என்னும் ஒலியாதல் உண்டன்றே? ஒன்றி= ஒ**ண்டி**, தொ**ன்று**கிழவன் = தொ**ண்டு** கிழவன். வாண்டு என்பதில் ணகரம் நன்கொலியாமையின் வா௦டு என்று வழங்கலாயிற்று. வாண்ட்ரு என்னும் பலர்பாற் பெயரைக் குறித்து முன்னர்க் கூறுவேன்.

## படர்க்கைப் பெயரில் 'து' சேர்தல்

அவன் முதலிய பெயர்கள் துவ் விகுதியோடு சேர்ந்து தெலுங்கில் வழங்குதல்போல, படர்க்கைப் பெயர் துவ் விகுதியோடு சேர்ந்து தமிழிலும் வழங்குதல் உண்டு. ஆடூஉ (ஆள் + து) மகடூஉ(மகள் + து), அழிதூஉ.(அழி + து), பெண்டு (பெண்+து) இருட்டு(இருள் +து) என்பவற்றில், து-சேர்ந்திருத்தல் எளிதின் அறியப்படும். கன்னடமொழியில் அவன் இவன் உவன் முதலிய பெயர்களோடு பன்மைக்கண் து-சேர்தல் உண்டு. அவந்திர், இவந்திர், உவந்திர் முதலிய பன்மைப் பெயர்களில் து - சேர்ந்திருத்தல் காணலாகும்.

---

1. Studies in Dravidian Philology Page. 98.

அவந்திர் = அவன் + து + இர்

இவந்திர் = இவன் + து + இர்

உவந்திர் = உவன் + து + இர்

என்று அமைந்துளது. ஆயின், அவந்திர் என்பதனை அவன் + திர் என்று பிரித்து, திர் என்பதனை விகுதி என்று [1] இலக்கண நூல்கள் கூறுகின்றன. அதனினும், திர் என்பதனைத் **து** + இர் எனப் பிரித்து, இர் என்பதனையே விகுதி என்று கோடல் அமைவுடையதாகும். தமிழிலும் புத்தேளிர், கேளிர், மகளிர் முதலிய பலர்பாற் பெயர்களில் இர் விகுதி சேர்ந்துளதன்றே? ஆயின், கன்னடத்தில் இவ்வாறு பன்மைப்பெயரோடு **து** - சேர்ந்துளது காணப்படுகின்றதேயன்றி, தெலுங்கிற்போல, ஒருமைப்பெயரோடு **து** - சேர்ந்திருத்தல் காணப்படவில்லை.

## துவ் விகுதியின் பொருள்

குயிமொழியில் ஆண்பாற்பெயர்கள் ஜுவ்வீற்றவாய் உள்ளன. கும்பாரென்ஜு, கும்பாரன்ஜு - (குயவன்) ராஜென்ஜு, ராஜன்ஜு - (அரசன்)

என்பன உதாரணம். சுட்டுப் பெயர்களும் இவ்வாறே ஜுவ்வீற்றவாய் உள.

ஆ அன்ஜு

இ அன்ஜு

ஒ அன்ஜு

இவை, அவன் இவன் உவன் என்னும் பெயர்களோடு **து**- சேர்ந்தனவாய அவந்து இவந்து உவந்து என்னும் பெயர்களின் திரிபாகும். கன்னடத்தில் **ஒந்து** என்பது துளுவில் **ஒஞ்சி** என்றும், தெலுங்கில் **பிந்த** என்பது தமிழில் **பிஞ்சி**

1. கர்னாடக பாஷா பூஷணம்.42.
காவ்யாவலோகனம். ஶப்தஸ்ம்ருதி : 18
ஶப்தமணி தர்ப்பணம்.107.

என்றும் வழங்குவன ஈண்டு ஒப்பிடத்தக்கன. அவன் முதலிய சொற்களோடு சேர்ந்த **து-டு** ஆய்த்திரிந்து தெலுங்கிலும், ஜுஆய்த் திரிந்து குயிமொழியிலும் வழங்குகின்றதாகும். குயி மொழியில் ஜுஆய்த் திரிந்து குயிமொழியிலும் வழங்குகின்றதாகும். குயிமொழியில் ஜுவ்வீற்று மொழிகள், நிலைமை அல்லது ஜாதியைக் குறிப்பனவாயுள்ளன.[1] இப்பொருள் தெலுங் கிற்கும் அமைதல் கூடும். அன்றி, உயர்வு குறிப்பதும் ஆகலாம். தெலுங்கில் முன்னிலைப் பன்மையேவல் விகுதியாக டு(து) வருதல் ஈண்டு அறியத்தக்கது. இஃது இன்னும் ஆராய்தற்குரியது.

## 'அதoடு' முதலிய பெயர்கள்

இனி, தெலுங்குமொழியிலுள்ள அதoடு, ஆதoடு, இதoடு, ஈதoடு என்னும் பெயர்களையும், கன்னடமொழியிலுள்ள ஆதo(ன்), ஈதo(ன்), ஊதo(ன்) என்னும் பெயர்களையுங் குறித்துச் சிறிது நோக்குவோம்: அகர இகரச் சுட்டுக்களோடு தான் என்னுஞ் சொல் சேர்ந்து ஆதன் அதன்டு முதலியன அமைந்தன என்பர். [2]அ, இக்களோடு சேர்ந்துள்ள **த** வடமொழித் தொடர்பினதாகலாம் என்றார் கால்ட்வெல். ஆயின், அவற்றின் அமைதி வேறுவகையாகத் தோன்றுகின்றது. அதoடு, ஆதoடு முதலியவற்றிலுள்ள **டு**வ்விகுதி, துவ்வின் திரிபே. டுவ்விகுதி நீங்கின், அதன், ஆதன்; இதன், ஈதன் என்பவை எஞ்சி நிற்கும். இவற்றில் உள்ள ஆகார ஈகாரங்கள் அகர இகரங்களின் நீட்சியே. ஆகலின், அதன் இதன் என்பவையே முதற்கண் அமைந்த பெயராகும். அவை, அது இது என்னும் பெயர்களோடு அன் விகுதி சேர்ந்தமைந்தவை என்பது எளிதின் அறியப்படும். கன்னடத்தில் உள்ள ஆதo(ன்), ஈதo(ன்) ஊதoன் என்பவையும் இவ்வாறே அது, இது, உது என்னும் பெயரோடு அன் விகுதி சேரப்பெற்றமைந்த அதன், இதன், உதன் என்பவற்றின்ற திரிபாகும். இவற்றை நோக்குகையில், முதற்கண் அது, இது, உது என்னும் பெயரோடு அன் விகுதி சேர்த்து ஆண்பாற்பெயரை அமைத்தனர் எனவும், பின்னர், அஃறிணை

1. குயி இலக். பக். 3
2. கால்ட்வெல். பக்கம். 441.

யொருமைச் சுட்டுப்பெயரின் அடியாக அமைந்த உயர்திணை யாண்பாற் பெயரை வழங்குதல் வழு எனக் கருதி, (ஒருமையைக் குறிக்குந் **து**வ்வினை நீக்கி,) அ, இ, உ என்னுஞ் சுட்டுக் களோடு அன் விகுதி சேர்த்து அவன் இவன் உவன் என்று ஆண் பாற் பெயரை அமைக்கலாயினர் எனவும் தோன்றுகின்றது. இவ்வாறமைத்தனவும் கன்னடம் முதலிய மொழிகளில் வழங்க லாயின. வழங்கவே. ஆதன் ஆத0டு முதலிய பெயர்கள் உயர்வு குறித்து வருவனவாகக் கொள்ளப்பட்டன. அவ் விருவகையா னமைந்த பெயர்களும் தெலுங்கிலும் கன்னடத்திலும் நிலைத் திருப்ப, தமிழ்மொழியில் அதன், இதன், உதன் என்னும் பெயர்கள் இல்லாதிருத்தலை நோக்கின், அவை, செந்தமிழ் முறைக்கு மாறாகலின் விலக்கப்பட்டன என்பது புல னாகாமற்போகாது. ஒருத்தன் என்னுஞ் சொல்லில் (ஒரு + து + அன்), து- சேர்ந்திருத்தலின் அதனை நீக்கி, ஒருவன் என்னுஞ் சொல்லை மேற்கொண்டமை அறியத்தக்கது. மேற்கூறியவற் றால், தெலுங்கில் வா0டு, வீ0டு, மக0டு, ராமு0டு என்பன போன்ற ஆண்பாற் பெயர்களெல்லாவற்றிலும் னகரமெய் யோடு துகரஞ் சேர்ந்துளது என்று தெளிதல் கூடும்.

அவன் இவன் உவன் என்பன பழங்கன்னடமொழி யில் அவ0, இவ0, உவ0 என்று வழங்கினவாயினும், அவை [1]மகரவீற்றனவல்ல; னகரவீற்றனவே. என்னை எனின், அவற்றின் முன்னர் உயிர் முதன் மொழிகள் வருமிடத்து, அவற்றிலுள்ள புள்ளி (அநுஸ்வாரம்) னகார மாகின்றதனை நோக்கின், அப் புள்ளினகாரத்திற்கு ஈடாக நின்றதே யாகும் என்பது நன்கு விளங்கும்.

அவ0 + அரச0 = அவ**ன**ரசு0
இவ0 + ஆவ0 = இவ**னா**வ0
உவ0 + எல்லித0 = உவ**னெ**ல்லித0

என வரும். அன்றியும், அவ0, இவ0 என்பன புதுக் கன்னடத் தில் அவ**னு**, இவ**னு** என்று வழங்குகின்றன. பழங்கன்னடத் தில் மெய்யீற்றவாயிருந்த சொற்கள் புதுக்கன்னடத்தில் உகர வீற்றவாய் வழங்குதல் வழக்கு. அம்முறையில், புதுக்

1. மகரவீறாகக் கொண்டுள்ளார். கால்ட்வெல் பக்கம். 226; Studies in Dravidan Philology . Page. 99.

கன்னடத்தில் அவ**னு** இவ**னு** என னுகரவீற்றவாய் வழங்கும் பெயர்கள் பழங்கன்னடத்தில் அவன் இவன் என னகரமெய் யீற்றனவே யாகும். இதனாலும் மேற்கூறிய உண்மை வலியுறும். ஆயின் னகாரத்திற் கீடாகப் பழங்கன்னடத்தில் புள்ளியிட்டு வழங்கியது எற்றிற்கோ எனின், அவன் இவன் முதலிய பெயர்களில் ஈற்று நகரத்தின் ஒலி நன்கு கேட்காமையின் அதற்கீடாகப் புள்ளியை வழங்கினர் என்க. தமிழிலும் அவன், இவன் என்பவற்றிலுள்ள னகாரமெய் உலகவழக்கில் நன்கு கேட்காமையும், அவனா, இவனா என்பனபோல்பவற்றில் னகாரவொலி நன்கு கேட்குதலும் ஓர்ந்தறியத்தகும். இக் கூறிய வற்றால், பழங் கன்னடத்தில் அவo இவo உவo என்று எழுதி னும், அப்பெயர்கள் இயல்பில் னகார வீற்றனவே என்பது நன்கறியப்படும்.

இவன் என்பதில் வகரம் மகரமாகி, பின்னர் **ம்ப** என்றாகி, துளுவில் **இம்பெ** என்னுஞ் சொல் அமைந்துளது என்றார் கால்ட்வெல்[1] மோள் (உமள் = இவள்), மோர் (இமர் = இவர்), மோகுளு (இவர்கள்) என்பவற்றை நோக்கின், வகரத்திற் கீடாக மகரம் உண்மை அறியலாகும். கோண்டுமொழியி லுள்ள ஓர், ஓன் என்பவை உவர், உவன் என்பவற்றின் திரிபாகலாம்.

இனி, பெண்பாற் சுட்டுப்பெயர்களைக் குறித்து நோக்குவோம்:

## பெண்பாற் பெயர்

அவள் இவள் உவள் என்னும் பெயர்கள், சுட்டுக் களோடு ஆள் அல்லது அள் சேர்ந்து அமைந்தவை. இவை தமிழிலும் பழங்கன்னடத்திலும் ஒருதன்மையவா யுள்ளன. உவள் என்பது மட்டும் மலையாள மொழியில் இல்லை. மலையாள மொழியில் இலக்கியங்கள் தோன்றுங்காலத்தில் உகரச்சுட்டு வழக்கு வீழ்ந்தது. தமிழிலும் உகரச்சுட்டின் வழக்கு நெடுங்காலத்தின் முன்னரே வீழ்ந்ததன்றோ? தெலுங்கு மொழி யில் அவள் இவள் என்னும்பெயர்களும் இல்லை. அவற்றிற்

---

1. பக். 426.

கீடாக அஃறிணை யொருமைப்பெயர்களையே வழங்கு கின்றனர். ஆயின், [1]பெண்பாலரை உயர்த்துக்கூறுமிடத்து, ஆமெ (ஆஅம்மெ), ஆபெ(ஆஅப்பெ), ஆகெ(ஆஅக்கெ) என்று கூறுகின்றனர். பெண்பாற்பெயர்களை அஃறிணைப் பெயர்கள் (அமஹத்) என்றே இலக்கண நூல் கூறுகின்றது.

[2]'ஸ்த்ரீ ப ஜடாந்விநாந்யே மஹதாக்யா:'

(ஆந்த்ர ஶப்த. 3.9.)

என்பது ஆந்த்ர ஶப்த சிந்தாமணி.

## திணைப் பாகுபாடு

தெலுங்கு மொழியில் ஆண்பாற் பெயரொன் றனையே உயர்திணைப் பெயராகக் கொண்டிருத்தலையும், குயி, ஒராஒன் மொழிகளில் பெண்பாற்கும் ஒன்றன்பாற்கும் ஒரு சொல்லையே வழங்குதலையும், தமிழ் மொழியில் விரவுப் பெயர்கள் வழங்கியிருத்தலையும் கன்னடத்திலும் மலையாளத் திலும் உயர்திணை அஃறிணை என்னும் பாகுபாடே இல்லா திருத்தலையும் நோக்கின், பண்டைக்காலத்தில் திராவிட மொழி களில் ஒருமைபன்மை என்னும் பாகுபாடு இருந்ததேயன்றி, உயர்திணை அஃறிணை என்னும் பாகுபாடு இருந்திலது என்றும், பின்னர், முதற்கண் ஆண் மக்களை மட்டுமே உயர்திணைப் பொருளாக எண்ணினர் என்றும், அதன்பின் நெடுங்காலங் கழித்தே பெண்பாலரையும் உயர்திணைப் பொருளாகக் கொண் டனர் என்றும், அதனைத் தெலுங்கர் முதலியோர் மேற்கொண் டிலர் என்றும் உய்த்துணர்தல் கூடும்.

தமிழிற் காணும் விரவுப்பெயரால் இவ்வுண்மை உணரப் படுமாறு என்னை எனின், கூறுவேன். சாத்தன் என்னுஞ் சொல் ஓர்ஆண்மகனையும் ஓர் ஆண்பாற்பொருளையும், சாத்தி என்னுஞ் சொல் ஒரு பெண்மகளையும் ஒரு பெண்பாற்பொருளை யுங் குறித்து வழங்கினமை நோக்கின், பண்டைக்காலத்தில்,

---

1. கன்னடத்தில் ஆகெ, ஈகெ, ஊகெ என்பவை வழங்குகின்றன.

2. பெண்மகள் விலங்கு அறிவில்பொருள்கள் ஒழிந்த மற்றையன 'மஹத்' (உயர்திணை) என்று சொல்லப்படும்.

உயர்திணை அஃறிணை என்னும் பாகுபாடு இருந்தில்து என்பது புலனாகுமன்றே? அன்றியும், டு து று ஈற்று வினைச்சொற்கள் உயர்திணை யொருமைக்கும் அஃறிணை யொருமைக்கும் பொதுவாய் வழங்குதலையும், நடப்ப என்பன போன்ற அகர வீற்று வினைச்சொற்கள் உயர்திணைப் பலர்பாலுக்கும் அஃறிணைப் பலவற்றுப்பாலுக்கும் பொதுவாய் வழங்குதலையும், வியங்கோள்வினை முதலியவை இருதிணைக்கும் ஒரன்ன உரிமையவாய் வழங்குதலையும் நோக்கின், இவ்வுண்மை எளிதின் உணரலாகும்.

## பலர்பாற் பெயர்

இனி, பலர்பாற் பெயரைக் குறித்து ஆராய்வோம்: தமிழ், கன்னடம், மலையாளம் இம்மொழிகளில், பலர்பாலைக் குறித்தற்கு ரகரமெய் வருகின்றது. தெலுங்கு மொழியில் சுட்டுப்பெயர் முதலியவற்றில் ரகரமெய் காணப்படினும், பலர்பாலையும் பலவற்றுப்பாலையுங் குறித்தற்கு **லு** வருகின்றது. தமிழ் கன்னடங்களில் பன்மையைக் குறிக்குங் '**கள்**' என்பதில் ககரம் நீங்க, நின்ற ளகரமெய் **லு** ஆயிற்று என்று[1] கூறுகின்றனர். அஃதாவது - எலிகள், கிளிகள் என்னும் பெயர்களில் பன்மை யைக் குறிப்பது ளகரமெய் என்று கொண்டு, எலுக, சிலுக என்பவை இயற்பெயராகக் கொண்டனர் என்பதாம். இவ்வாறாயின், தமிழ்ப்பன்மைப் பெயர்களிலிருந்து தெலுங்கில் இயற்பெயர்கள் (ஒருமைப்பெயர்கள்) தோன்றின எனல் வேண்டும். இஃது இன்னும் ஆராய்ந்து அறுதியிடத் தக்கது.

கன்னட மொழியில் பன்மைப் பெயரைக் குறித்தற்கு **'இர்'** விகுதி வருகின்றது என்பதும், அதனை, 'து + இர் ' எனப் பிரித்து இர் என்பதுவே பன்மை விகுதி என்றல் அமைதியாகும் என்பதும் மேலே கூறப்பட்டன. தெலுங்கில் வழங்கும் 'வாண்ட்ரு' என்பதும் இர் விகுதி பெற்றதுவேயாகும். கன்னடத்திலுள்ள **அவந்திர்** என்பதுவே தெலுங்கில் **வாண்ட்ரு** என்று திரிந்துளது என்பது எளிதின் அறியப்படும். அவந்திர் வாந்திரு = வாந்த்ரு = வாண்ட்ரு.

---

1. ஸந்தி.பக்கம். 76, 77. ப்ரபாகர ஶாஸ்த்ரியும் இவ்வாறே கூறுவர்.

# சுட்டு

இனி, சுட்டுக்களைக்குறித்து ஆராய்வோம்: ஆசிரியர் தொல்காப்பியனார்

[1]'அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு'

என்று கூறியிருத்தலின், அ இ உ என்னும் மூன்று குறில்களும் சுட்டுக்களாதல் அறியப்படும். ஆயின், அ இக்கள் செய்யுட்களில் நீண்டு வருதல் உண்டு என்பது,

[2]' நீட வருதல் செய்யுளு ளுரித்தே'
[3]' சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே'

என்னுஞ் சூத்திரங்களால் அறியப்படுகின்றது.

கன்னடத்தில், ஆ ஈ ஊ என்னும் நெடில்களே சுட்டுக்களாயுள்ளன. அது இது உது என்னும் பெயர்கள் தொகைநிலைக்கண் அவ்வாறு திரிந்தன என்று[4] இலக்கண நூல் கூறும்.

தெலுங்கில், ஆ ஈக்களே சுட்டுக்களா யுள்ளன. அவை[5] புணர்நிலைக்கண் வருமொழியொற்று இரட்டும்வழி முதல் குறுகி நிற்கும்.

மலையாள மொழியில் [6] அ, ஆ, இ, ஈக்கள் காண்கின்றன. [7]அ ஆ இ ஈ உ ஊக்கள் சுட்டு எனப் பெயர்பெறும். உ ஊக்கள் வழங்குதல் இல.

---

1. நூன்மரபு. 31.
2. உயிர்மயங்கியல். 6.
3. ,, ,, 36.
4. ஶப்தமணி. 180.
5. ஆந்த்ரஶப்த. ஹலந்தபரிச்.20.
6. வ்யாகரணமித்ரம். பக்கம்.95; கேரளபாணி. 52. உரை.
7. கேரளகௌமுதி. சூ. 14.

[1]துளு மொழியில் ஆ ஈ என்னும் நெடில்களே உள்ளன; குறில் இல்லை.

[2]குயிமொழியில் ஆ ஏ ஓ இ என்பவை பெயர்க்கு முதலிற் சுட்டுப் பொருளைத் தந்து நிற்கின்றன. அவற்றுள் ஓ என்பது உகரச் சுட்டின் திரிபாகும் எனத் தோன்றுகின்றது.

[3]ஒராஒன் மொழியில் ஆ ஈ ஊ என்பவை ஒருமைப் பொருளைச் சுட்டி வழங்குகின்றன.

[4]ப்ரஹூயிமொழியில் தா, ஏ ஓ என்பவை சுட்டா யுள்ளன. அவற்றுள், ஓ உகரச்சுட்டுப் போன்றது. எ இகரச் சுட்டின் திரிபாகலாம்.

இவற்றால், ப்ரஹூயி ஒழிந்த எல்லா மொழிகளிலும் ஆ ஈ முதலிய நெடில்களே சுட்டுகளாய் அமைந்துள்ளன என்பதும், தமிழ் தெலுங்கு மலையாள மொழிகளில்மட்டும், அ இ உ என்னுங் குறில்களும் உள்ளன என்பதும் போதரும். அ இ உ என்னுங் குறில்களை சுட்டுப்பொருளில் ஒலித்தல் அரிதாத லும், ஆ ஈ ஊ என நெடிலாக ஒலித்தல் எளிதாதலும் உளங்கொளற் பாலன. இவற்றால், சுட்டுக்கள் ஆ ஈ ஊ என்னும் நெடில்கள் என்பதும், புணர்மொழிக்கண் ஒற்றிரட்டும்வழி அவை குறுகி நிற்கும் என்பதும், அதுபற்றி அவை அ இ உ என்னுங் குறில்கள் என்று தமிழலக்கண ஆசிரியராற் கூறப்பட்டன என்பதும் போதருதல் கூடும்.

## வினாப்பெயர்

### தமிழ்

இனி, வினாப் பெயர்களை நோக்குவோம்: தமிழ் மொழியில் யா, யாவது, யாவை, யாவன், யாவள், யாவர் என்னுஞ் சொற்களும், எவன், எவள், எவர், எது, எவை என்னுஞ் சொற்களும் வினாப்பெயராய் வழங்குகின்றன. எவன்

---

1. துளு இலக். பக். 34
2. குயி. இலக்கணம். பக்கம்.10.
3. குருக். இலக்கணம். பக்கம். 20,21.
4. ப்ரஹூயி இலக்கணம் . பக்கம். 83, 4.

என்பது ஏன், என், என்னை என்ன என்று திரிந்துளது. இவற்றுள், யாவர் என்னும் பலரறி சொல் வகரங்கெட யார் என்றாகும் என்றும், யாது என்னும் ஒன்றறி சொல்லின் இடையே வகரம் தோன்ற யாவது என்றாகும் என்றும், ஆசிரியர் தொல்காப்பியனார்,

'பலரறி சொன்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொன்முன் யாதென் வினாவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியில் திரியுமன் பயின்றே' (தொகை. 30.)

என்னுஞ் சூத்திரத்தில் கூறியுள்ளார்; அன்றியும்,[1] யாது, எவன் என்னுஞ் சொற்கள் அறியாப் பொருளை வினாதற்கு வரும் என்றும், அவற்றுள், [2]யாது என்னுஞ் சொல் அறியாப் பொருளை யேயன்றி அறிந்த பொருளையும் ஐயந்தீர்தற்கு வினாவ வரும் என்றும் கூறியிருக்கின்றார்.

## கன்னடம்

கன்னடமொழியில் ஆவ௦(ன்), ஆவள், ஆவர், ஆவுது, ஆவுவு என்பனவும், ஏன், ஆர் என்பனவும் வினாப்பொருளில் வரும். இவை புதுக் கன்னடத்தில் யாவனு, யாவளு, யாவரு, யாவுது, யாவுவு, ஏனு, ஆரு என்று வழங்கும். இவற்றுள் **ஏன்** என்னுஞ் சொல் இயல்பில் ஒருமைச்சொல் என்றும், அது பன்மைக்கும் வருந் தன்மையதாயிற்று என்றும், **ஶப்தமணி தர்ப்பணம்**[3] என்னும் இலக்கண நூல் கூறுகின்றது.

## தெலுங்கு

தெலுங்கு மொழியில் எவ௦டு, எவ்வ௦டு, எவ்வா௦டு, ஏவா௦டு, ஏ௦டு என்பனவும், எவரு, எவ்வரு, எவண்ட்ரு, எவ்வண்ட்ரு, எவ்வாரு, எவ்வாரலு, எவ்வாண்ட்ரு, ஏவாரு, ஏவாரலு, ஏவாண்ட்ரு, ஏரு என்பனவும், எதி, எத்தி, ஏதி, ஏயதி, எய்யதி, எவி, எவ்வி, ஏவி, ஏயவி, எய்யவி என்பனவும், ஏமி என்பதும் வினாப்பொருளில் வருகின்றன.

---

1. சொல். 31
2. சொல். 32
3. சூ. 89

**மலையாளம்**

மலையாளமொழியில் யாவன், யாவள், யாவர், யாது, யாவ, ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவ, எவன், எவள், எவர், எது, எவ என்பனவும், ஆர், எந்து என்பனவும் வினாப்பொருளவாய் வரும். இவற்றுள், யாவன் ... யாவ என்பன வழக்கில் இல்லை.

[1]துளுமொழியில் யார் என்னும் பொருளில் யேர் என்பதுவும், யாது என்னும் பொருளில் வா, தா, வோவு என்பவையும், என் என்னும் பொருளில் **தா**னெ, **தாத**வு, யெஞ்சித்தி என்பவையும் வழங்குகின்றன. ஏன் என்னும் பொருளில் தாயெ என்பது வழங்குகின்றது.

[2]குயிமொழியில், எஸ்தி அல்லது இஸிதி என்பதனோடு ஆண்பாலொருமையில் அன்ஜு என்பது சேர்ந்துவரும்; அப்பன்மையில் ஆரு என்பது சேரும்; பெண்பாலொருமையிலும் ஒன்றன்பாலிலும் ஆரிஎன்பதும் அவற்றின் பன்மையில் ஆவி என்பதும் சேர்ந்துவரும்.

| | | |
|---|---|---|
| எஸ்தன்ஜு | - | அவன் யார்? |
| எஸ்தாரு | - | அவர் யார் ? |
| எஸ்தாரி | - | அவள் யார்? அது யாது? |
| எஸ்தாவி | - | அவர்(பெண்) யார்? அவை யாவை? |

[3]இம்பை அல்லது உம்பை என்பதும் ஆண்பாலொருமையில் யாவன் என்னும் பொருளில் வினாப் பெயராய் வரும்.[4] 'என்' என்னும் பொருளில் **இன்ன** என்பது வருகின்றது. அதனோடு ஆரி என்பது சேர்ந்து இன்னாரி என்று சில்வழி வரும்.

**ஒராஒன்**

ஒராஒன் மொழியில், [5] யார், யாது என்னும் பொருளில்

1. துளு இலக்கணம். பக்கம். 34
2. குயி. இலக்கணம். பக்கம். 13
3. குயி. இலக்கணம். பக்கம். 14
4. குயி. இலக்கணம். பக்கம். 13.
5. குருக். பக்கம். 25.

நே, ஏகா என்பவையும், என், யாது என்னும் பொருளில் எந்த்ர், எந்த்ரா, ஏக்தா என்பவையும் வழங்குகின்றன. இவற்றுள் நே என்பது ஆண்பால் பெண்பால்களுக்கு வினாவ வரும். ஏகா என்பது எல்லாப்பால்களுக்கும் வரும்.[1] எந்த்ர் என்பது வியத்தற் பொருளிலும் வழங்கப்படும்.

## ப்ரஹுயி

ப்ரஹுயி மொழியில் [2]யார் என்னும் பொருளில் **தேர்** என்பதும், என் என்னும் பொருளில் **அந்த்** என்பதும், யாது என்னும் பொருளில் **அரா** என்பதும் உள்ளன. அவற்றுள், தேர் என்பது மக்களைமட்டும் வினாதற்கு வரும்; அந்த் என்பது உயிரில் பொருளை வினாதற்கு வரும்; அரா என்பது இரு வகைப் பொருளையும் வினாதற்கு வரும்.

இவற்றை எளிதின் அறிதற்பொருட்டு ஈங்கு ஒருங்கே குறிக்கின்றேன்:

---

6. குருக். பக்கம். 26.

7. ப்ரஹுயி. பக்கம். 86.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு | மலையாளம் | துளு | குயி | ஒராஒன் | ப்ரஹுயி |
|---|---|---|---|---|---|---|---|
| யாவன்<br>எவன் | ஆவ<br>யாவனு | ஏவாடு, எவடு,எவ்<br>வடு, எவ்வாடு, ஏடு. | யாவன், ஏவன்;<br>எவன் | | எஸ்தன்ஜு<br>இம்பை, உம்பை | நே, ஏகா | தேர் |
| யாவள்<br>எவள் | ஆவள்,<br>யாவளு | எதி | யாவள், ஏவள்;<br>எவள் | | எஸ்தாரி | நே, ஏகா | தேர் |
| யாவர்<br>எவர் | ஆவர்,<br>யாவரு | ஏவாரு, ஏவாரலு,<br>ஏவாண்ட்ருலு;எவரு,<br>எவ்வரு, எவண்ட்ரு,<br>எவ்வண்ட்ரு, எவ்வாரு,<br>எவ்வாரலு, எவ்வாண்ட்ரு. | யாவர்<br>ஏவர்;<br>எவர் | யேர் | எஸ்தாரு<br>எஸ்தாவி | | |
| யார் | ஆர், ஆரு | ஏரு | ஆர் | | | | அரா |
| யாது<br>எது | .... | ஏதி, எதி, **எத்தி** | யாது, ஏது;<br>எது | வா, தா,<br>வோவு | எஸ்தாரி | எந்த்ர், எந்தரா<br>ஏக்தா, ஏகா | அந்த்,<br>அரா |
| யாவது | ஆவுது,<br>யாவுது | ஏயதி, எய்யதி | | **தாளெ**<br>**தாதவு, தாயெ** | | | |
| யா, யாவை<br>எவை | ஆவுவு,<br>யாவுவு | ஏவி, எயவி, எய்யவி;<br>எவி எவ்வி. | யாவ; ஏவ;<br>எவ | யெஞ்சித்தி | எஸ்தாவி | ஏகா | |
| | | | | | இன்ன | எந்தர், எந்த்ரா, | அந்த் |
| எவன்,<br>ஏன்,என்<br>என்னை,<br>என்ன | ஏன்,<br>ஏனு | ஏமி | எந்து | | இன்னாரி | ஏக்தா | |

# வினாப்பெயரின் ஆராய்ச்சி

## தொடர்புடை வினாப்பெயர்

இனி, இப்பெயர்களைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்: யாவன், யாவள், யாவர், யாவது, யாவை என்னும் பெயர் களைத் தொடர்புடை வினாப்பெயர் என்னலாகும். அஃதாவது, தொடர் பினைக் காட்டி வருபவை என்பதாம். 'இவ்வுலகின் முத்தொழில் களையும் விளையாட்டாக வுடையவன், **யாவன், அவன்** நமக்குச் சரண்' என்பதுபோல வரும்.

இவ் வினாப்பெயர், இவ்வாறு தொடர்பினைக் காட்டி வருதலே அமைதி. ஆயின், அம்முறை யிழந்து, தனியே வினாப் பொருளில் மட்டும் இவை வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழியிலுள்ள யாவன் முதலிய வினாப்பெயர் களை நோக்குமிடத்து, **யா** என்பதே வினாப்பொருளைத் தருஞ் சொல் எனவும், அதனோடு அவன், அவள், அவர், அது, அவை என்னும் பெயர்களைச் சேர்த்து, யாவன் முதலியவற்றை அமைத்தனர் எனவும் புலனாதல் கூடும். ஆண்டு, மொழிமுதல் அகரம் கெட யாவன், யாவள், யாவர், யாது, யாவை என்றாயின. என்னை யெனின், நெட்டெழுத்தின்முன் குறின் முதலதாகிய, சொல்வரின், அதன் முதலி லுள்ள குறில் கெடுதல் உண்டாக லின் என்க. [1]ஒருமா + அரை = ஒருமாரை , [2]ஆ + இன் + ஐ = ஆனை, நீ+ இர் = நீர், மூ + உழக்கு = மூழக்கு, [3] ஏ + அல்= ஏல், போ + இன்+ஆன் = போனான் என்பவற்றில் வருமொழி முதற்கண் உள்ள குறில் கெட்டுப் புணர்ந்துள்ளன. இவை கெடாக்கால், முறையே ஒருமாவரை, ஆவினை, நீயிர், மூவுழக்கு, ஏவல், போயினான் என்று இருக்கும். இனி, யா என்பதனொடு அன், அள், அர், அது, ஐ என்னும் விகுதிகளைச் சேர்க்க, யாவன், யாவள், யாவர், யாவது, யாவை என்னும் வினாப்பெயர்கள் அமைந்தன எனினும் அமையும்.

---

1. தொல். தொகை: சூ.29. நச். உரை.
2. ,, புணர்: 18
3. சீவக. 1057; பெருங். 1.32:15

ஆசிரியர் தொல்காப்பியனார்,[1] யாது என்னுஞ் சொல்லி னிடையே வகரம் தோன்ற யாவது என்னுஞ் சொல் ஆகும் என்று கூறினார். அவ்வாறன்றி, (யாவர் என்பதன் வகரம் கெட யார் என்றாகும் என்று விதித்தாங்கு) யாவது என்பதன்கண் வகரம் கெட யாது என்றாகும் என்று விதித்திருப்பின் அமைவினதாகும்.

தமிழில் தன்மைப்பெயர்களில் உள்ள யகர ஆகாரம் தெலுங்கில் ஏகாரமா யிருத்தல்போலவே, வினாப்பெயர் களிலும் தமிழில் உள்ள யகர ஆகாரம் ஏகாரமாய்த் தெலுங்கில் காண்கின்றது. அதனால், **யாவன்** என்பது **ஏவாஂடு** என்றுளது. ஏவாஂடு என்னுஞ் சொல்லை நோக்கின், தமிழிலும் **யா** என்பதனோடு **அவன்** என்னுஞ் சொல்லைச் சேர்ந்திருக்கலாம் என்று மேற்கூறியது வலியுறுதல் கூடும். **ஏவாஂடு** என்பதில் ஏகாரம் குறுக, வகாரமிரட்டித்து **எவ்வாஂடு** என்றாகும். **எவஂடு** என்பது எவன் என்னுஞ் சொல்லோடு டுவ்விகுதி(து) சேர்ந் தமைந்த சொல்லாகலாம். ஏஂடு என்பது எவஂடுஎன்பதன் மரூஉ. இவ்வாறே பிறவுங் காண்க.

## தமிழ் 'எவன்' தெலுங்கு 'ஏமி'

எவன் என்பது, பிற்காலத்தில், யாவன் என்னும் பொருளுடைய வினாப் பெயராய் வழங்கினும், பண்டைக் காலத்தில் அது வினைக்குறிப்பாகவே எண்ணப்பட்டது. எவன் என்பது மருவி **ஏன்** என்று வழங்குவதாயிற்று. ஏன் என்னும் பொருளில் தெலுங்கு மொழியில் **ஏமி** என்பது வழங்குகின்றது. **ஏமி** என்பது **ஏம்** என்னுஞ் சொல்லோடு இகரஞ் சேர்ந்து வந்துளதாதல் ஒருதலை. [2]செய்யுட்களில் இகரம் கெட்டு வழங்கும். ஏம் என்பது **எவம்** என்பதன் மரூஉ ஆகும். ஆகவே, **ஏன் ஏம்** என்னும் இரண்டு சொற்களையும் ஒருங்கு நோக்கின், மூலத் திராவிடத்தில் ஒருமையை வினாதற்கு எவன்(ஏன்) என்னுஞ் சொல்லையும், பன்மையை வினாதற்கு எவம்

1. தொகைமரபு. 30.
2. மனுசரி. 2:17.

(ஏம்=ஏமி) என்னுஞ் சொல்லையும் அமைத்திருக்கலாம் எனவும், அவற்றுள் **எவன்** (ஏன்) என்பது தமிழ் முதலியவற்றிலும், **எவம்** (ஏம் = ஏமி) என்பது தெலுங்கிலும் நிலைபெறுப வாயின எனவும் புலனாதல் கூடும். தமிழ்மொழியில் படர்க்கை நாற்பாலில் செய்யும் என்னும் முற்று வழங்க, தெலுங்கு மொழியில் அந் நாற்பாலிலும் செய்யு**ன்** என்னும் முற்று வழங்குகின்றது.

| **தமிழ்** | **தெலுங்கு** |
|---|---|
| அவன் செப்பு**ம்** | வாடு செப்பு**ன்** |
| அவள் செப்பு**ம்** | அதி செப்பு**ன்** |
| அது செப்பு**ம்** | அதி செப்பு**ன்** |
| அவை செப்பு**ம்** | அவி செப்பு**ன்** |

என்பன காண்க. இவற்றை நோக்கின், செய்யுன் செய்யும் என்னும் இருவகை முற்றுக்களும் முறையே ஒருமை பன்மையைக் குறித்து மூலத் திராவிட மொழியில் வழங்கின என்றும், அவற்றுள் **செய்யும்** என்பது தமிழிலும், **செய்யுன்** என்பது தெலுங்கிலும் நிலைத்தன என்றும் அறிதல் கூடும். இவற்றால், மேற்கூறிய ஏன், ஏம் (ஏமி) என்பவற்றின் உண்மை வலியுறுவதாகும்.

### கன்னடம் 'ஏன்'

கன்னடமொழியில் ஏன் என்னுஞ் சொல்லையே ஒருமை பன்மை இரண்டற்கும் வழங்கினும், ஏன் என்பது ஒருமைக்கு உரிய சொல்லே என்றும், அதுவே பன்மைக்கும் வழங்குவ தாயிற்று என்றும் இலக்கணநூலார் அறிந்து கூறியிருப்பது பாராட்டத்தக்கது. கன்னடத்திற்போலவே தமிழிலும் எவன் என்பதைப் பலவின்பாலுக்கும் வழங்கினராவர்.

தமிழில் **யான்** என்றிருப்பது பழங்கன்னடத்தில் **ஆன்** என்றிருத்தல் போல, தமிழில் யாவன் யாவள் என்னுந் தொடக்கத்தன, பழங்கன்னடத்தில் ஆவன், ஆவள் என்னுந் தொடக்கத்தனவாய் வழங்கின. கன்னடத்திலுள்ள ஏன் என்னுஞ் சொல், தமிழில் ஏவன் என்பதன் திரிபாய் வழங்குகின்ற **ஏன்** என்னுஞ் சொற் போன்றதாகும்.

## மலையாளம் 'எந்து'

**எந்து** என்னுஞ் சொல், **என்** என்பதனோடு து - சேர்ந்து அமைந்தது. தமிழில் **என்** என்பதனோடு அது என்னும் பெயர் சேர்ந்து **என்னது?** என்று இக்காலத்தில் வழங்குகின்றது.

இதுகாறும் தமிழ் முதலிய மொழிகளிற் காணும் வினாப்பெயர்களைக் குறித்து ஆராய்ந்தோம்; இனி, இவ் வினாப்பெயர்கட்கு அடியாயிருக்கும் எழுத்து யாது என்று நோக்குவோம்:

## வினாப் பெயர்களிற் சேர்ந்திருக்கும் உயிர் ஏகாரம்

**யா** ஒன்றே பழைய வினாவெழுத்தென்றும், எ-அதன் திரிபு என்றும், யா தன்னொலியிற் குன்றி **யே** ஆகும் என்றும் [1]கால்ட்வெல் கூறியுள்ளார். திராவிட மொழிகளில் சுட்டுப் பெயர் கட்கு அகர இகர உகரங்கள், ஆ ஈ ஊக்கள் அடியா யிருத்தலான், வினாப்பெயர்க்கு எகர ஏகாரம் அடியாதல் முறையாகும். மேல், தன்மைப் பெயர்களைப் பற்றி ஆராய்ந்தவழி, ஏ என்பது யே என்றொலிக்கப்பட்டு, பின்னர், யா என்றாதல் கூடும் என்பது அறியப்பட்டதன்றே? அவ்வாறே, வினாக்களிருந்த ஏகாரமும் தமிழிலும் பழைய மலையாளத்திலும் யா ஆயிற்றென்பது கொள்ளப்படும். தமிழிலும் பிற்காலத்துச் செய்யுட்களில், ஏவன் ஏவள் ஏவர் ஏது முதலியனவாய் வழங்குதல் அறியத்தக்கது.

---

1. பக்கம். 424, 3.

ஏவன் ஏவள் முதலிய பெயர்களே, பின்னர், செந்தமிழில் யாவன் யாவள் முதலியவாயும், கன்னடத்தில் ஆவo, ஆவள் முதலிய வாயும் வழங்கப்பட்டனவாதல் புலனாகும். ஆந்த்ரஶப்த சிந்தாமணியின் விதிப்படி தெலுங்கில் யெவoடு யெவ்வoடு என்பனவே பழமையவாகும். துளுவில் **யேர்** என்று முதற்கண் யகரவொலியுடன் வழங்குவது ஈண்டு ஒப்பிடத்தகும்.

இவற்றால், வினாப்பெயர்கட்கு அடியாயிருப்பது ஏகாரவுயிரே யாகும் என்பது அறியப்படும். தமிழ் மொழிக்கண் யகரவரியில் **யா** ஒன்றொழிய, ஏனைய பதினோர் எழுத்தும் மொழிமுதற்கண் வாராமையும், கன்னடத்தில் யகர வரியில் ஒன்றேனும் மொழிமுதற்கண் வாராமையும், தெலுங்கிலும் 'யொக்க' [1]என்னுஞ் சொல் லொழிய வேறு சொல்லின்கண் முதலில் யகர மெய் வருதலின்மையும் நோக்கின், தமிழ்மொழி யிற்காணும் யா என்பதும் ஏகாரத்தின் திரிபே யாகும் என்பது எளிதிற் றெளியலாகும். ஆகவே, இயல்பாக யகர வரியில் ஒரெழுத்தாதல் மொழிமுதற்கண் வருதல் இல்லை என்பது நன்கு புலனாகும்.

## வடமொழியில் தொடர்புடை வினாப்பெயர்

| | ஒருமை | இருமை | பன்மை |
|---|---|---|---|
| ஆண்பால் | **ய:** | யௌ | **யே** |
| பெண்பால் | யா | **யே** | **யா:** |
| அலிப்பால் | **யத்** | யே | யாநி |

இவை வடமொழியில் தொடர்புடை வினாப்பெயராய் உள்ளன. இவற்றுள், யே யா என்பவற்றிற்கும் திராவிட மொழி

1. 'யொக்க' என்பதும் இலக்கியங்களில் யாண்டும் வந்திலது; இலக்கண நூலிற் கூறப்பட்டுளது. (ஆந்த்ரஶப்த. அஜந்த பரிச்:6) அஃது, ஒக்க (ஒரு) என்பதன் மரூஉவாகும்.

யிலுள்ள ஏ யா என்பவற்றிற்கும் வேறுபாடில்லை எனவும், யத் என்பதுவே யாது என்று திரிந்தது எனவும் தோன்றலாம். ஆயின், திராவிட மொழியில், உயிரெழுத்துக்களுள் முதற் கணுள்ள அ இ உ (ஆ ஈ ஊ ) என்னும் மூன்று எழுத்துக்களைச் சுட்டுப்பெயர்கட்கு அடியாகக் கொண்டிருத்தலின், அவற் றிற்கு அடுத்த நான்கெழுத்தாகிய எகரத்தை (ஏகாரத்தை) வினாப்பெயர்கட்கு அடியாகக் கொண்டனர் என்று கொள் ளுதல் அமைதியாகும். அன்றியும், வினாப்பெயர்கள், ஏ என்பதனோடு அவன் அவள் என்னுந் தொடக்கத்தன வற்றைச் சேர்த்தமைத்தனவா யிருத்தலானும் அவை திராவிட மொழியில் அமைக்கப்பட்டனவே யாதல் தெளிவுறும்.

இனி, தொடர்புடை வினாப்பெயர்களல்லாத எவன், ஏமி, (எவம்), எந்து, இன்ன என்னுந் திராவிட வினாச் சொற்கட்கும், வடமொழியிலுள்ள,

| | **ஒருமை** | **இருமை** | **பன்மை** |
|---|---|---|---|
| ஆண்பால் | கஃ | கௌ | கே |
| பெண்பால் | கா | கே | காஃ |
| அலிப்பால் | கிம் | கே | காநி |

என்பவற்றிற்கும் யாதொரு தொடர்பும் இன்மை அறியத்தகும்.

ஏன் ஏம் (ஏமி) என்பவற்றிற்கு மூலமாகிய **எவன் எவம்** என்னும் வினாச்சொற்களை நோக்கின், அவையே தொன்மைய **எவன்** எனவும், தான் தாம் என்னும் படர்க்கைப் பெயர் முதலிய பெயர்கள் அமைந்த காலத்தேயே அமைந் தவை எனவும், யாவன் யாவள் முதலிய தொடர்புடை வினாப்பெயர், அவன் அவள் முதலிய சுட்டுப்பெயர்கள் அமைந்தபின்னர், வடமொழித் தொடர்புடை வினாப்பெயரை நோக்கி அமைக்கப்பட்டவை யெனவும் தோன்றுகின்றது. என்னையெனின் , எவன், எவம் என்பவற்றில் படர்க்கை முதலிய மூவிடத்துப் பெயரிற்போல எண்வேறு பாடன்றிப் பால் வேறுபாடு இன்மையாலும், யாவன் யாவள் முதலியவற்றில்

சுட்டுப்பெயரிற்போலப் பால்வேறுபாடு உண்மையானும் என்க.

சுட்டு விளாக்களின் அமைதியைக்குறித்துக் கால்ட்வெல் முதலியோர் கூறியிருப்பவற்றை எழுதி, இப் பகுதியை முடிக்கின்றேன்.

'தமிழ்மொழியில் சுட்டுக்களும் வினாவும் முறைமைய வாயும், செப்பமுடையவாயும் அமைந்துள்ளன '.[1]

'அ- சேய்மையி லிருப்பதனையும், இ- அடுத்திருப் பதனையும், உ- நடுவே யிருப்பதனையும் குறிக்கின்றன. எ-வினாப்பொருளது. இவ்வாறு மூலஸ்வரங்களையே பொருட் பொருத்தம் நோக்கி, ஸர்வ நாமங்களாக்கி அமைத்ததன் ஸ்வாரஸ்யம் **வாசாமகோசரம்.** இத்துணை ரஸிகத்வமும் ஸெகர்யமும் லாகவமும் யோஜிப்பும் எல்லாம் அமைந்துள்ளதோ ரேற்பாடு வேறு எந்த மொழியினத்திலும் இல்லாதிருப்பது திராவிட மொழிக்கு நியாயமான அபிமானத்திற்குக் காரணமாகிய மிக்க மேன்பாடாகும் என்று எல்லா மொழிநூலாரும் உடன்பட்டுள்ளனர்.'[2]

## சுட்டின் அடியிற் பிறந்த சொற்கள்

இனி, சுட்டின் அடியிற் பிறந்த சில சொற்களைக்குறித்து ஆராய்வோம்: அவையாவன - அங்கு , ஆங்கு; இங்கு, ஈங்கு; உங்கு, ஊங்கு; ஆங்கண் ஈங்கண் ஊங்கண்; ஆண்டு, ஈண்டு; அன்று, இன்று; அற்று, இற்று; அனைத்து, இனைத்து; அன்ன, இன்ன; அந்த, இந்த; அம்பர், இம்பர் உம்பர் முதலியன. முதற்கண், அங்கு ஆங்கு என்னுந் தொடக்கத்துச் சொற்களை நோக்குவோம்:

1. கால்ட்வெல் இலக்கணம். பக்கம். 426.
2. கேரளபாணினீயம். சூ.52. உரை.

## 'ஆங்கு' முதலியன

ஆங்கு, ஈங்கு, ஊங்கு என்னுஞ் சொற்களல்லாமல், [1]அங்கு, இங்கு, உங்கு என்னுஞ் சொற்கள் பழைய செய்யுட்களில் வந்திலாமையானும், தொல்காப்பியனார், (சுட்டுச் சினை நீடிய) ஆங்கு முதலிய சொற்களுக்கே இலக்கணங் கூறினாராகலானும், அவற்றையே தம் நூலில் வழங்கினாராகலானும், ஆங்கு ஈங்கு ஊங்கு என்னுஞ் சொற்களே தொன்மைய என்றும், அங்கு இங்கு உங்கு என்பவை பிற்பட்டவை என்றும் கொள்ளுதல் தகும். ஆகலின், ஆங்கு முதலியவற்றைக் குறித்து ஆராய்தலே சாலும்.

ஆங்கு, ஈங்கு, ஊங்கு என்பவை, தமிழொழிந்த ஏனைத் திராவிட மொழிகளில் வழங்கவில்லை. ஆயின், கோண்டு மொழியில் **அக இக** என்று வழங்குபவை ஆங்கு, ஈங்கு என்பவை யாகும் என்று கால்ட்வெல் கருதியுள்ளார் எனத் தெரிகின்றது. அன்றியும் அவர், கன்னடமொழியில் ஆக, ஈக என்று வழங்கு பவற்றையும் குறித்திருக்கின்றார்.[2] ஆக, ஈக என்று புதுக் கன்னடத்தில் வழங்குஞ் சொற்கள், ஆகள், ஈகள் என்னும் பழங்கன்னடச் சொற்களின் திரிபாகலின், அவை ஆங்கண், ஈங்கண் என்னுஞ் சொற்களோடொத்தவை என்றல் சால அமைதியாகும். தமிழில் மெல்லின மெய்யெழுத்தோடு சேர்ந்திருக்குஞ் சொற்கள் கன்னடமொழியில் அம் மெய் யெழுத்தின்றி வழங்குதல் பெருவழக்கு.

| | |
|---|---|
| நீங்கு | நீகு |
| ஓந்தி | ஓதி |
| மருந்து | மர்து |
| விருந்து | பிர்து |

முதலியன காண்க. கோண்டு மொழியில் வழங்கும் அக இக

---

1. பழைய நூல்களுள் கலித்தொகையில் மட்டும், 'ஆருயி ரெஞ்சுமன் அங்கு நீ சென்றீ' (நெய். 28.) என்று வந்துளதாகத் தெரிகின்றது. இப்பாடம் ஆராயத்தக்கது.

2. பக்கம். 432.

என்னுஞ் சொற்களும் ஆங்கு ஈங்கு என்பவற்றோடு ஒத்தன வல்ல என்று கொள்ளுதல் தகும்.

மலையாளத்தில் அங்நு. இங்நு. என்று வழங்குபவை தமிழில் அங்கு, இங்கு என்று வழங்குபவற்றின் திரிபாகும்.

இனி, ஆங்கு முதலிய சொற்களின் இயல்பினை ஆராய்வோம்:

ஆங்கு, ஈங்கு, ஊங்கு என்னுஞ் சொற்கள் ஆன், ஈன், ஊன் என்பவற்றோடு, கு-விகுதி சேர்ந்து அமைந்தவை எனத் தோன்றுகின்றது.

'**ஆன்** வந்தியையும் வினைநிலையானும்'
*(தொல்.வினை. 35.)*

என்றும்,

'**ஈவோர்** வடிவிற் காண்டல் இல்லென' *(சிலப்.பதிக: 53)*

என்றும் வந்துள்ளவற்றை நோக்கின், ஆன், ஈன் என்பவை அவ்விடம், இவ்விடம் என்னும் பொருளனவாதல் அறியப் படும். ஆசிரியர் தொல்காப்பியனார்,

'மன்னுஞ் சின்னும் **ஆனும் ஈனும்**
............... என்மனார் புலவர்' *(புள்ளி. 38)*

என்னுஞ் சூத்திரத்தில், ஆன் ஈன் என்பவற்றையே கூறியிருத் தலின் ஊன் என்னுஞ் சுட்டுச்சொல் அவர் காலத்தில் வழங்கிற்றிலது என்று கருதுதல் அமையும். ஆசிரியர் கூறாமை யின், நச்சினார்க்கினியர், 'இயல என்றதனான், ஊன் என்னுஞ் சுட்டு, ஊன் கொண்டான் என இயல்பாய் முடிதல் கொள்க' என்று எழுதுவாராயினார்.

இவற்றால், ஆன் ஈன் என்னுஞ் சுட்டுச்சொற்கள் உண்மை அறியப்படும். அதனான், அவற்றோடு கு-சேர்ந்த

சொற்களே ஆங்கு ஈங்கு ஊங்கு என்பவை என்று கோடல் அமையும்.

ஆயின், ஆன் ஈன் ஊன் என்பவற்றோடு கு- சேரின், ஆன்கு, ஈன்கு, ஊன்கு என்றமையுமேயன்றி ஆங்கு ஈங்கு ஊங்கு என்றமையுமா றில்லை. எனின், அற்றன்று; னகரம், தனக்கு முன் வரும் வல்லெழுத்தின் இனமெல்லெழுத்தாய்த் திரிதல் உண்டென்க. **தேன்குடம்** = தேங்குடம்; ந**ன்**செய் = நஞ்செய் (நஞ்சை); முன்து = மு**ந்**து; உட**ன்**பாடு = உட**ம்**பாடு என்பன போல்பவை காண்க. தெங்கு என்பதன் முதனிலை **தென்** என்பதுவே ஆகும். அதனோடு, கு-சேர்ந்து தெங்கு என்றாயது. என்னை எனின், தென்னை, தென்னஞ்சோலை என்பவற்றால், தென் என்பதுவே முதனிலை என்பது அறியப்படும். தெங்கு என்பதுவே இயல்பாய சொல்லாயின், தென்னை என்று வருதல் அமையாதன்றே? இவற்றால், ஆங்கு முதலிய சொற்களின் உண்மைத்தன்மை அறியப்படும்.

ஆங்கு ஈங்கு என்பவற்றின் முதனிலை ஆன் ஈன் என்பவை யாதல் போல, அங்கு இங்கு என்பவற்றின் முதனிலை அன் இன் என்பனவேயாதல் உய்த்துணரப்படும். [1]அன்ன(அங்கே), இன்ன (இங்கே) என்று வழங்கும் வழக்கானும் இஃது அறிதல் கூடும்.

இவ்வாறாகலின், அகு இகு என்பவை மெல்லோசை பெற்று, அங்கு இங்கு என்பவை தோன்றியிருக்கும் என்று [2]கால்ட்வெல் கருத்துக் கொண்டது அமைவுடையதாகத் தோன்ற வில்லை.

### 'ஆங்கண்' முதலியன

இனி, ஆங்கண் ஈங்கண்; அங்கண் இங்கண் என்னுஞ் சொற்களை நோக்குவோம்: ஆங்கண் முதலிய சொற்கள் ஆன்

1. 'அன்ன வந்தான் ராமன், இன்ன வந்தான் ராமன்' என்பது வழக்கு. அன்னா, இன்னா என்று வழங்குதலும் உண்டு.
2. பக்கம். 432

முதலியவற்றோடு கண் என்னும் ஏழனுருபு சேர்ந்தவை முதலியன என்பது,

> 'வல்லெழுத்து முதலிய வேற்றுமையுருபிற்
> கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்'
>
> (தொல். புணரியல்.12.

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், உரையாசிரியர், 'மெய் பிற தாதலை எடுத்தோதாது மிக்கதனை எடுத்தோதிய வதனால், மிக் புணர்ச்சியல்லனவும் ஈண்டேகொள்க. பொற்கு பொற்கண் ஆங்கண் ஈங்கண் ஊங்கண், அவற்கு, இவற்கு நுங்கள கொற்றற்கு சாத்தற்கு என வரும்.

'அவன்கண் சாத்தன்கண் என்புழி இயல்பும் இதனானே கொள்க.

[1]குன்றிய புணர்ச்சி வந்தவழிக் கண்டு கொள்க.'

என்று எழுதியிருத்தலான் அறியப்படும். ஈண்டுக் காட்டியவற் லெல்லாம் உள்ள உருபுகள் நான்கனுருபும் ஏழனுருபுமே. அ வருபுகள் வந்தவழி நிலைமொழி யீறு திரிந்தவற்றிற்கே இவ உதாரணமாகக் காட்டப்பட்டன. இவற்றுள், பொற்கு என்ப முதல் ஊங்கண் என்பதுவரை அஃறிணைப் பெயரும், அ இவற்கு என்பவை உயர்திணைப்பெயரும், நுங்கண் கொற் சாத்தற்கு என்பவை விரவுப்பெயரும் ஈறு திரிந்தமைக்கு . ரணமாகக் காட்டப்பட்டன. ஆகலின், ஆன் ஈன் ஊன் என்ப 'கண்' உருபொடு கூடுமிடத்து, னகரம் ஙகரமாகத் திரி பெற்று, ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்றாயின என்பது அறி படும். மேல், ஆங்கு ஈங்கு என்பவற்றில் னகரம் ஙகரமா திரிந்தது என்றதும் இதனால் வலியுறும்.

இனி, ஆங்கண் ஈங்கண், அங்கண் இங்கண் என்ப முறையே, ஆங்கு ஈங்கு அங்கு இங்கு என்பவற்றோடு அ சேர்ந்து அமைந்தனவாகும், நடுவண் என்பது போல.

செய்யுட்களில் அங்கண் இங்கண் எங்கண் என்

1. இவ்வாக்கியம் அச்சுப் புத்தகங்களில் இல்லை; ஏடுகளில் உளது.

சொற்கள் வந்தவிடத்து, அவை சுட்டினோடும் வினாவி னோடும் கண் என்னும் பெயர்ச்சொல் சேர்ந்தமைந்தவை எனக் கருதி, மெலித்தல் விகாரம் பெற்று வந்தன என்று சிலர் கூறுகின்றனர். விகாரம் பெற்று வந்தனவாயின், ஒராவழி அருகியே வருதலின்றி, யாண்டும் பயின்று வாரா. பிற்காலத்தில் எதுகையின் பொருட்டு, அக்கண் இக்கண் எக்கண் என்று மிக அருகியும் வந்திருத்தல் கூடும்; அங்கண் இங்கண் எங்கண் என்பவை யாண்டும் பயின்று வருகின்றன. இவற்றால், மேல் யான் கூறியவாறு கோடல் அமைவுடையதாதல் அறியப்படும்.

சுட்டோடு ட், **ட்** (డ్), த் (ద్); ச், ஜ் முதலியன சேர்ந்து வரும் என்றும், அவ்வழி அவற்றினிடையே வல்லெழுத்தின் இனமாகிய மெல்லெழுத்துத் தோன்றும் என்றும் [1]கால்ட்வெல் கூறினார். அம்முறைப்படி, சுட்டினோடும் வினாவினோடும் **ட்** (డ్) சேர்ந்து, இடையே ணகாரம் தோன்றப் பெற்ற சொற்களே ஆண்டு ஈண்டு யாண்டு என்றல் அவர்தங் கொள்கை. யாண்டு என்பதன் முதலுருவம் யாடு என்பதாயிருத்தல் வேண்டும் என்று அவர் எழுதியுள்ளார். தெலுங்கு மொழியில் ஆட, ஈட, ஏட என்று வழங்குதலின், தமிழிலும் ஆடு ஈடு யாடு என்று முதலில் வழங்கியிருத்தல் வேண்டும் என்று அவர் எண்ணினார் எனத் தெரிகின்றது. ஆயின், ஆட ஈட ஏட என்பவை ஆஎட(ஆயிடை), ஈஎட(ஈயிடை), ஏஎட (யாஇடை) என்பவற்றின் திரிபினவாகும். ஆஅம்மெ, ஈஅம்மெ என்பவை ஆமெ, ஈமெ என்றமைந்தன ஈண்டு ஒப்பிடத்தகும்.

## 'ஆண்டு' முதலியன

ஆண்டு ஈண்டு என்பவை எவ்வாறு அமைந்தன என்று நோக்குவோம்: ஆ + அண் + து = ஆண்டு என்றாகியிருக்கலாம். [2]எத்தண்து (= எத்தணது - எவ்விடத்தது) என்று கன்னடத்தில் வழங்குதல் ஈண்டு அறியத்தக்கது. **அண்- இடப்பொருளது.** அதனை, அவண் இவண் நடுவண் என்பவற்றால் அறியலாகும். து- உடைமைப் பொருளது. ஈண்டு முதலியனவும் அவ்வாறே கொள்ளத்தகும். அவ்வாறு கொள்ளின், ஆண்டு என்பது அவ்விடத்தது என்னும் பொருளதாயிருந்தது: பின்னர்,

---

1. பக்கம். 433.
2. ஶப்தமணி. 160.

அவ்விடம் என்னும் பொருளளவில் நிற்பதாயிற்று எனல் வேண்டும். 'அவ்விடத்தில்' என்னும் பொருளுடைய ஆங்கண் என்னுஞ்சொல், 'அவ்விடம்' என்னும் பொருளளவில் நிற்பது கருதத்தகும். நெட்டெழுத்திற்குமுன் வருங் குற்றெழுத்துப் பெரும்பாலும் கெடுதல் வழக்கு. அது, மேலே உதாரணங் காட்டி விளக்கப்பட்டுளது. அதனால், ஆண்டு ஈண்டு என்பவை, நெடின்முன் வந்த குறில் (அ) கெட்டு அமைந்தவை எனக் கருதுதல் தகும். இவற்றின் உண்மைத்தன்மை இதுவெனத் துணிய இயலவில்லை. ஆயினும், டுவ்வீற்றெல்லாம் துவ் வீற்றின் திரிபே யாகலின், ஆடு, ஈடு என்பவை இடையே மெல்லெழுத்துத் தோன்றப்பெற்று, ஆண்டு ஈண்டு என்றாயின என்றல் அமைதியன்று.

இனி, அன்று இன்று முதலிய சொற்களை நோக்கு வோம்:

## 'அன்று' முதலியன

அன்று முதலிய சொற்களில் உள்ள **ன்று** என்னும் ஒலி, **ன்னு** என்று மலையாளத்திலும், **ந்து** என்று தெலுங்கு கன்னடங் களிலும் ஒலிக்கின்றது. அச்சொற்களை ஈங்குக் குறிக்கின்றேன்:

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | தெலுங்கு | துளு |
|---|---|---|---|---|
| அன்று | அன்னு | அந்து | அந்து | ஆனி |
| இன்று | இன்னு | இந்து | இந்து | இனி |
| என்று | என்னு | எந்து | எந்து | ஏனி |

இவற்றுள் தெலுங்கில்மட்டும் அந்து இந்து எந்து என்பவை இடப்பொருளில் வழங்குகின்றன. தமிழில், இடப் பொருளில் வழங்குகின்ற [1]ஆங்கு என்பது காலப்பொருளிலும் வழங்கியிருத்தலை நோக்குமிடத்து, ஒருமொழியில் காலப் பொருளில் வழங்குஞ் சொற்கள் மற்றொரு மொழியில் இடப்பொருளில் வழங்குதல் நேரலாம் என்பது போதரும்.

---

1. 'நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ'. (குறிஞ்.3.)

'காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்'.(நெய்.7.)

இனி, அன்று இன்று என்று என்னுஞ் சொற்களின் அமைதியை நோக்குவோம்: அது இது எது என்னுஞ் சொற்கள் மெல்லெழுத்துத் தோன்றப் பெற்று அந்து இந்து எந்து; அன்று இன்று என்று என்பன முதலிய சொற்களாய் அமைந் திருத்தல் வேண்டும்[1] என்றும், தமிழில் அல் முதலியவற்றோடு து விகுதி சேர்ந்து (எதிர்மறை வினையில்) அன்று முதலியன அமைந்திருக்கலாம் என்றல் கூடுமாயினும் அது பிறமொழிகளால் வலியுறுமாறில்லை[2] என்றும் கால்ட்வெல் கூறியுள்ளார். அன்றியும் அவர், [3] அன்று, இன்று முதலிய சொற்கள் அம், இம் என்பவற்றிலிருந்தேனும், அல் இல் என்பவற்றிலிருந் தேனும் தோன்றியிருக்கலாம் என்றும் எழுதியுள்ளார். இவை அம், இம் முதலியவற்றிலிருந்து தோன்றியிருக்கலாம் எனின், அம் இம் முதலியவற்றிற்குத் திராவிட மொழிகளுள் எந்த மொழியிலாதல் காலம் அல்லது இடம் பொருளாதல் வேண்டும். அஃது அறியப்படாமையின், அவ்வாறு கோடல் அமைவதன்று. அன்றியும், தெலுங்கில் அங்கு என்னும் பொருளில் **அல** என்பதும், அவ்விதம் இவ்விதம் என்னும் பொருளில் [4] **ஆலா ஈலா** என்பனவும் வழங்குகின்றன என்று கால்ட்வெல் கூறி யுள்ளார். இவை தெலுங்குநாட்டில் சில விடங்களில்மட்டும் வழக்கில் உள்ளனவே யன்றி யாண்டும் வழக்குடையன அல்ல; [5]செய்யுட்களிலும் வந்தில.

கன்னடத்தில் அல்லி இல்லி உல்லி எல்லி என்று வழங்குபவை அல் இல் உல் எல் என்னும் மெய்யீற்றுச் சொற்களின் திரிபாகும். தெலுங்கில் [6]உல்ல என்று வழங்குவதும் இத்தகையதே யாகும். மெய்யீற்றுச் சொற்கள் யாதேனும் ஒருயிர் சேரப்பெற்று உயிரீறாதல் வழக்கு. ஆகலின், அல்லி இல்லி

---

1. பக்கம். 433.
2. ,, 436
3. ,, 428
4. ஆலா ஈலா என்பவை ஆலாகு, ஈலாகு என்பவற்றின் மரூஉ..
5. செய்யுட்களில், அல, அல்ல என்பவை பிரசித்தி (உலகறி சுட்டு) அர்த் தத்திற் பயில்கின்றன.
6. 'உல்ல தெல்லனி துரகோத்தமு வாலம்பு'. பாரத. ஆதி. 2:34.

முதலியவற்றின் தொல்வடிவ மாகிய அல் இல் முதலிய வற்றினின்று அன்று இன்று முதலிய சொற்கள் தோன்றி யிருக்கலாம் எனல் அமையும்.

அன்று இன்று முதலிய சொற்களில் 'ன்று' திரிந்தது போலவே வேறு சொற்களிலும் திரிந்திருத்தல் காணலாகும்.

| **தமிழ்** | **கன்னடம்** | **தெலுங்கு** | **மலையாளம்** |
|---|---|---|---|
| பன்றி | பந்தி | பந்தி | பன்னி |
| ஒன்று | ஒந்து | - | ஒன்னு |

என்பன காண்க.

## 'அற்று' முதலியன

இனி, அற்று இற்று என்னுஞ் சொற்களை ஆராய்வோம்: முதற்கண், அற்று இற்று என்னுஞ் சொற்கள் தெலுங்கு முதலிய மொழிகளில் எவ்வாறு வழங்குகின்றன என்று நோக்குவோம்,

| **தமிழ்** | **தெலுங்கு** | **கன்னடம்** |
|---|---|---|
| அற்று | அட்டு<br>அடு<br>அட்லு | அ0து(அன்து) |
| இற்று | இட்டு<br>இடு<br>இட்லு | இ0து(இன்து) |

என்பன வழங்குகின்றன. அற்று என்பது ( அன் +து), அன் என்னுஞ் சொல்லினடியிற் பிறந்தது; முன் வந்த துகரத்தின் வல்லோசையால் னகரம் ற்கரமாய்த் திரிந்தது. னகரம் திரியாதே **அன்து** என்று கன்னடத்தில் வழங்குகின்றது. அற்று என்பது தெலுங்கில் அட்டு என்று ஒலிக்கின்றது. அடு, என்பது அதன் திரிபு. அட்லு என்பது பன்மை விகுதி சேர்ந்த வடிவம். தமிழில்

றகாரம் இரட்டித்து வருஞ் சொற்கள் தெலுங்கில் டகாரம் இரட்டித்தனவாய்த் திரிந்து வழங்கும்.

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| பற்**று** | பட்டு |
| சுற்**று** | சுட்டு |
| புற்**று** | புட்ட |

என்பன காண்க.

அன்னது என்பது அற்று என்பதன் மற்றொரு வடிவம். அன் என்பதனோடு **து** சேர்ந்தது அற்று என்பது; அன் என்பதனோடு **அது** என்பது சேர்ந்தது அன்னது என்பது. ஆகலின், அன்னது என்பதைப் பெயராகவும் அற்று என்பதை வினையாகவும் வழங்குதல் அமைதி. அற்றது என்பது அத்தன்மைத்தது என்னும் பொருளது. இது தெலுங்கில் 'அட்டிதி' என்று வழங்குகின்றது.

## 'அனைத்து' முதலியன

இனி, அனைத்து முதலியவற்றை நோக்குவோம். இத்தொடக்கத்துச் சொற்களை ஈண்டு ஒருங்கே தருகின்றேன்:

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| அனைத்து | அனிது | அந்த |
| இனைத்து | இனிது | இந்த |
| எனைத்து | எனிது | எந்த |

அனைத்து என்பது அவ்வளவினது என்னும் பொருளது. கன்னடத்திலும் இப்பொருளே உளது. தெலுங்கில்மட்டும், அந்த என்பது அவ்வளவு என்னும் பொருளில் வழங்குகின்றது. புதுக் கன்னடத்தில் வழங்கும் அ०த்தா என்பது அ०ஹு என்னும் பழைய சொல்லின் திரிபாகும். அ०தஹ என்பது அ०தப்ப (அ०து+ அப்ப) என்பதன் மரூஉ. இது,

[1]'அ௦தஹ ணி௦தஹ ணு௦தஹ
ணெ௦தஹ ணெந்தி௦து ப **த்விருக்தி கெ ஹத்வம்'**

என்னுஞ் சிறப்புவிதிச் சூத்திரத்தான் அறியப்படும். 'அ௦தப்பன், இ௦தப்பன், உ௦தப்பன், எ௦தப்பன் என்பவற்றிலுள்ள இரண்டு பகாரத்திற்கு ஹகாரம் வந்த அ௦தஹன் இ௦தஹன் உ௦தஹன் எ௦தஹன் என்றாகும் என்பது இச் சூத்திரத்தின் கருத்து. பகாரம் ஹகாரமாய்த் திரியும் என்பது,

[2]'ஸந்த பகாரக்கெ ஹகா
ரந் தொரெ கொள்கும் விகல்பதிம்'. *(ஶப்தமணி.170.)*

[3]'பே ஹோ வா' *(கர்ணாடக பாஷா. 114.)*

என்பவற்றால் அறியப்படும். அ௦தப்ப, அந்தஹ என்பவற்றிற்கு அத்தன்மையுள்ள என்பது பொருளாகலின், அ௦த்தா என்பதும் அப் பொருளிலேயே வழங்குகின்றது.

## தெலுங்கு 'அந்த'

தெலுங்கில் வழ்ங்கும் அந்த என்பது அந்து என்பதன் திரிபு. குற்றியலுகரவீற்றுச் சொற்கள் தெலுங்கில் பெரும்பாலும் அகரவீறாக வழங்குகின்றன.

| | |
|---|---|
| புற்று | புட்ட |
| பாட்டு | பாட |
| யாடு | ஏட |
| (மரக்)கொம்பு | கொம்ம |

என்பவை உதாரணங்கள். இம்முறையில், அந்து என்னுங் குற்றுகரவீற்றுச் சொல் அந்த என்று அகரவீற்றுச் சொல்லாய் அமைந்துளது.

1. ஶப்தமணி தர்ப்பணம். 171.
2. 'சேர்ந்த பகாரத்திற்கு ஹகாரம் உறழ்ச்சியாய் வரும்.
3. பகாரத்திற்கு ஹகாரம் உறழ்ச்சி.

## தமிழ் - 'அந்த'

தமிழில் வழங்கும் அந்த இந்த எந்த என்னுஞ் சொற்கள், தெலுங்கிற்போல, அன்து இன்து என்து என்னுஞ் சொற்களின் மரூஉவாய் அமைந்தனவாகும். தெலுங்கில் அன்த என்னும் ஒலியதாய் வழங்குஞ்சொல் தமிழில் அந்த என்னும் ஒலியதாய் வழங்கும். தெலுங்கில் சன்த என்பது தமிழில் சந்தை என்று வழங்குதல் அறியத்தகும். குற்றியலுகரம் அகரமாதல் தமிழிலும் உளது. ஆங்கு என்னுங் குற்றுகரவீற்றுச் சொல் [1] ஆங்க என அகர வீற்றதாயும் உளதன்றே?

**அந்த** முதலிய சொற்கள் அன்து முதலிய சொற்களின் மரூஉவாதலின், அவை பண்டைச் செய்யுட்களில் வந்தில. அந்த என்னுஞ் சொல், முதன்முதலில் மணிமேகலையில் இடம் பெற்றுளதெனத் தெரிகின்றது. ஆண்டும்,

[2]'காலா லந்தக் கருங்கனி சிதைத்தேன்'

என்பதில், அஃறிணை யொருமைப் பெயரையே சுட்டி வந்திருத்தல் நோக்கத்தக்கது.

அன்னது, அல்லது அனைத்து என்னும் பொருளதாகிய அந்த என்னுஞ் சொல் முதற்கண் அஃறிணை யொருமைப் பெயருக்கு அடையாகிநின்று, பின்னர், தன்பொருள் இழந்து சுட்டளவில் அமைந்து, ஏனைப்பெயர்களையும் சுட்டலாயிற்று என்பது உய்த்துணரற்பாலது. 'இந்த' முதலிய சொற்களும் இவ்வாறேயாகும்.

தமிழில், 'அந்த வீடு உங்கட்குப் போதுமா?' 'இந்தச் சிறு பையனா இப்படிப் பேசினான்?' என்னும் இக்காலத்து வழக்கிலும் அந்த இந்த என்பவற்றிற்கு அவ்வளவு இவ்வளவு என்னும் பொருள் அமைவதாதல் அறியத்தக்கது.

---

1. 'ஆங்க வுரையசை' என்பது தொல்காப்பியம். (இடை.29.)
2. மணிமேகலை. 17:34.

அந்த, இந்த, எந்த என்னுஞ் சொற்களின் வரலாறு இவ்வாறாயின், அவற்றை அ, இ, எ என்னுஞ் சுட்டு வினாக்களின் மரூஉ என்று கூறுங்கூற்று[1] அமைவதன்று.

டாக்டர் குண்டர்ட், அந்த இந்த என்னுஞ் சொற்கள் அம் இம் என்பவற்றினின்று தோன்றியிருக்கும் என்றார்.[2] கால்ட்வெல் கன்னடத்தில் வேற்றுமையுருபாயுள்ள இம் என்பதினின்று இந்த என்பது தோன்றியிருக்கலாம் என்று கருத்துக்கொண்டார்.[3] ஆயினும், அது இது எது என்னுஞ் சொற்கள் மெல்லோசை பெற்று அந்த, இந்த, எந்த என்று திரிந்திருப்பனவாகும் என்பதே அவர்கொள்கை[4] அக்கொள்கை பொருந்தாமை மேலே கூறியிருப் பவற்றால் தெளிதரல் கூடும்.

அந்த இந்த என்னுஞ் சொற்கள் கன்னடத்திலும் மலையாளத்திலும் இல்லை. அவற்றிற்கீடாக ஆ, ஈ என்னுஞ் சுட்டுக்களையே வழங்குகின்றனர்.

## 'அம்பர்' முதலியன

இனி, அம்பர் இம்பர் என்னுஞ் சொற்களை நோக்கு வோம்: அம்பர் இம்பர் எம்பர் என்பன தமிழிலும் மலை யாளத்திலும் வழங்குகின்றன என்று கால்ட்வெல் எழுதி யுள்ளார்.[5] மலையாளத்தில் அம்பர் இம்பர் என்பவை இடப் பொருளில் வழங்குபவல்ல. உம்பர் என்னுஞ் சொல் வானுலகர் (வானவர்) என்னும் பொருளில் வழங்குவது. இனி, உம்மரம் என்று ஒரு சொல் பயில்கின்றது. அது முற்றம், வாயிற்படி என்னும் பொருளை யுடையது. எம்பர் என்னுஞ் சொல்லே இல்லை.

அம்பர் இம்பர் என்பவை சுட்டின் அடியாக **ம்ப** என்னும் ஒலி சேர்ந்து அமைந்தவை என்றும், **அர்** என்பது அல் என்பதனை ஒப்பது என்றும் கால்ட்வெல் கூறியுள்ளார்.[6] இவை

---

1. ஆறுமுக நாவலர் காண்டிகை. சூ. 267; உரை
2. கால்ட்வெல். பக்கம். 428.
3. ,, ,, 428.
4. ,, ,, 428
5. ,, ,, 433, 4.
6. ,, ,, 433, 4.

இடப்பொரு ளவாகிய அன் இன் என்பதனோடு (கு,து - சேர்ந்தாங்கு,) பு- சேர்ந்து, அதனோடு அர் விகுதி சேரப்பெற்றன வாகும் எனத் தோன்றுகின்றது.

## 'அதோ' முதலியன

அதோ, இதோ என்று இக்காலத்தில் வழங்குஞ் சொற்களை நோக்கின், அவை அதோள், இதோள் என்னுஞ் சொற்களின் மரூஉ என்பது புலனாகும். மெய்யீற்றுச் சொற்கள் ஈற்றுமெய் கெட்டு வழங்குதல் உண்டு. [1]தம்பின் என்பது தம்பி என்று வழங்குதல் அறிக.

'அல்வழி யெல்லாம் உறமென மொழிப '(புள்ளி.103.)

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'அதோட் கொண்டான், இதோட் கொண்டான், உதோட்கொண டான், எதொட்கொண்டான்.......' என்று எழுதியிருத்தலின், அதோள் இதோள் முதலிய மெய்யீற்றுச் சொற்கள் உண்மை அறியப்படும். இம் மெய்யீற்றுச் சொற்கள் இகரவுயிர் சேரப் பெற்று அதோளி இதோளி உதோளி எதோளி என்றும் வழங்கின.

'சுட்டுமுத லாகிய இகர விறுதியும்
எகர முதல் வினாவின் இகர விறுதியும்' (தொகை. 17.)

என்னுஞ் சூத்திரத்தால் அதோளி முதலிய சொற்களின் உண்மை அறியலாகும். இவை முதல் நீண்டு வருதலும் உண்டு.

[2]'ஈதோளிக் கண்டேனால்.'

என்பது கலித்தொகை.

அது என்னுஞ் சுட்டுப்பெயரோடு உள் என்னுஞ் சொல் (வேற்றுமையுருபு) சேர்ந்து அதுள் என்றாகிப் பின்னர்,

---

1. தம்முன் என்று வழங்குஞ் சொல்லை நோக்கின், தம்பின் என்பதுவே உண்மையான சொல் என்பது புலனாகும்.

2. முல்லைக்கலி.17.

அதொள், அதோள் என்று மருவியிருக்கலாமோ என ஐயம் உண்டாகின்றது. 'இதோள்' முதலியனவும் இவ்வாறாகும்.

சீவக சிந்தாமணியில்,

'மற்**றிதா**[1] தோன்றுகின்ற, சோலைசூழ் வரையின்'*(1232)*

என்னுமிடத்து **இதா** என்னுஞ்சொல் வந்திருத்தலின், அதா என்னுஞ்சொல்லும் வழங்கியிருக்கும் என்று கருதுதல் கூடும். அதா இதா என்னுஞ் சொற்கள் அது இது என்னுஞ் சுட்டுச் சொற்களின் திரிபு என்று கொள்ளுதல் தகும். வடமலையாளத்தில், அது இது என்னுஞ் சொற்கள் **அத இத** என்று அகர வீற்றனபோன்று வழங்குதல் ஈண்டைக்கு அறியத்தக்கது.

## 'ஆங்கனம்' முதலியன

இனி ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம் என்னுஞ் சொற்களை ஆராய்வோம்:

இச்சொற்கள்,

'**ஆங்கனம்** விரிப்பின் அளவிறந் தனவே
'**பாங்குற** உணர்ந்தோர் பன்னுங் காலை'
(தொல். செய்யுள். 51.)
'**ஆங்கனந்** தணிகுவ தாயின் **யாங்கும்**' (நற். 322.)
'**ஈங்கனம்** செல்க தானென என்னை
**யாங்க**றிந் தனனோ தாங்கருங் காவலன்' (புறம். 208.)
'**ஈங்கனம்** வருபவோ **தேம்பாய்** துறைவ' (குறுந். 336.)
'**யாங்கனம்** ஒத்தியோ **வீங்கு**செலன் மண்டிலம் ' (புறம். 8.)
'**யாங்கனம்** மொழிகோ **ஓங்கு**வாட் கோதையை ' (,, 49.)

என்று தொல்காப்பியத்திலும் பழைய செய்யுட்களிலும்,

'**ஆங்கன** மன்றியும் ஆயிழை கேளாய்' (மணி.2:58.)
'**ஆங்கன** மன்றியும் அணியிழை கேளாய்' (,, 3:26.)

---

1. இதா என்பதைத் திசைச்சொல் என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார்.

**'ஆங்கன** மாகிய அணியிழை இதுகேள்' ('' *11:36.*)
**ஈங்கனம்** கனையிரு ளெல்லை நீந்தினான்' (*சீவக. 1942.*)
**'இங்கனம்** இவர்க ளேக' ('' *1113.*)

என்று பழைய காப்பியங்களிலும் வந்துள்ளன. இவையெல்லாம் எதுகைத் தொடையில் அமைந்திருத்தல் நோக்கத்தக்கது. இவை, பிற்காலத்தில் ஆங்ஙனம் ஈங்ஙனம் யாங்ஙனம் என்றும், அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் என்றும் மருவி வழங்கலாயின. ஆயின், நன்னூலார்,

'சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே' (*எழுத். 51.*)

என்று சூத்திரஞ்செய்து, அங்ஙனம் முதலியவற்றை அமைத்தார். அதுவே காரணமாகப் பிற்காலத்தார் இம் மரூஉ வடிவங்களைக் கைக்கொண்டு தொல்வடிவங்களை அறவே கைவிட்டனர். நன்னூலார்கொள்கையின்படி அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் என்பன அமையா. அவ்வாறாகவும், பழைய நூல்களிலேயே ஆங்ஙனம் ஈங்ஙனம் என்று எழுதி வர லாயினர். அதனால் இக்காலத்தில் அச்சிற் பதிப்பித்தோர் தொல்காப்பியத்திலேயே 'ஆங்கனம்' என்பதை 'ஆங்ஙனம்' என்று[1] பதிப்பிக்கலாயினர். பிற நூல்களைப் பற்றிக் கூறுதல் ஏன்?

அங்ஙனம் என்பது நன்னூலார் கொள்கையின்படி, அ +ஙனம் என்று பிரிக்கப்படும். ஙகரம் மொழிமுதற்கண் வருவதன்றென்பது தொல்காப்பியத்தாற் புலனாகும். இனி, ஆங்கனம் ஈங்கனம் என்பவற்றை ஆ + கனம், ஈ + கனம் என்று பிரிப்பின், கனம் என்பதன் பொருள் ஈண்டைக்குப் பொருந்தாது. ஆகலின், அவ்வாறு பிரித்தலும் அமைவதன்று. ஆங்கனம் என்பதை ஆங்கு + அனம் என்று பிரித்தல் அமைதி. அனம் என்பது தனம் என்பதன் மரூஉவாகும். ஆகலின், ஆங்கனம் என்பது அத்தகைய தன்மை, அப்படிப்பட்ட தன்மை என்னும்

---

1. பவானந்தம்பிள்ளையவர்கள் பதிப்பிலும், ஸ்ரீமத், ரா. ராகவையங்கார வர்கள் பதிப்பித்த செய்யுளியலிலும் 'ஆங்கனம் விரிப்பின்' என்னுஞ் சூத்திரம் காண்க.

பொருளில் முதற்கண் வழங்கி, பின்னர், அத்தன்மை என்னும் பொருளில் அமைவதாயிற்று என்று கொள்ளுதல் தகும். நன்கனம்(நன்கு + அனம்), செவ்வனம் என்பவற்றை நோக்கின், நிலைமொழியோடு அனம் என்பதுவே சேர்ந்துளது என்பது தெளிவுறும்.

இக்கூறியவற்றால், ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம் என்பனவே தொன்மொழிகள் என்பதும், அங்ஙனம் இங்ஙனம் யாங்கனம் என்பன மரூஉமொழிகள் என்பதும், அதனால் அவற்றை அ+ஙனம், இ+ ஙனம், எ+ ஙனம் என்று பிரித்தல் பிற்காலத்து வழக்கே என்பதும் தெளிவாகும்.

### பல

பல என்பது தமிழில் பல பல்ல என்றும், மலையாளத்திற் பல என்றும், கன்னடத்தில் பலவு என்றும் தெலுங்கில் பலு என்றும், [1] குயிமொழியில் ஹார என்றும் வழங்குகின்றது. ஹார என்பது பல என்பதன் திரிபு எனத் தோன்றுகின்றது. பகாரம் ஹகாரமாதல் கன்னடத்தில் வழக்கு. லகாரம் ரகாரமாதல் உள்ளதொன்றே. பல என்பது உயர்திணைப் பொருளைக் குறித்தற்கண் தமிழில் பலர் பல்லவர் என்றும், மலையாளத்தில் பலர் என்றும், கன்னடத்தில் பலர் பலவர் பலம்பர் என்றும், தெலுங்கில் பலுவுரு என்றும் வழங்கும். உயர்திணைப் பெயருக்கு அடைமொழியாகும்போது கன்னடத்திலும் தெலுங்கிலும் இவையே வரும். தமிழிலும் பலரரசர் என்று வருதலே பழைய வழக்கு. பிற்காலத்தில், பல அரசர் என்று வருவதாயிற்று. அரசர் என்னும் உயர்திணைச் சொற்குப் பல என்னும் அஃறிணைச் சொல் அடையாதல் அமைதியன்று. இது கருதியே, நச்சினார்க்கினியர். [3] 'பல்சங்கத்தார் பல் சான்றோர் பல்லரசர் என்றார்போல்வன ரகரவீறும் அதன் முன்னின்ற அகரமும் கெட்டுப் பிற செய்கைகளும் பெற்று முடிந்தன' என்று எழுதுவாராயினர்.

---

1. A Grammer of the Kuvi Language. P.77.
2. எழுத். 153. உரை

### சில

சில என்பது தமிழில் சில சில்ல என்றும், மலையாளத்தில் சில என்றும், கன்னடத்தில் கெலவு என்றும், தெலுங்கில் கொன்னி என்றும், [1]குயிமொழியில் கொத்ஸெக என்றும் வழங்குகின்றது. கன்னடத்தில் வழங்குங் கெல என்பதன் திரிபே சில என்பது என்று கருதப்படுகின்றது. பல சில என்பவை பலவின்பாலைக் குறிக்கும் அகர விகுதி சேர்ந்தவை; அவற்றின் முதனிலை பல் சில் என்னும் லகரவீறே. தெலுங்கில் வழங்குங் கொன்னி என்பதன் கொல் என்பதாகும். சில என்பது உயர்திணைப் பொருளைக் குறிக்குமிடத்துத் தமிழர் சிலர் சில்லர் என்றும், மலையாளத்தில் சிலர் என்றும், கன்னடத்தில் கெலவரு என்றும், தெலுங்கில் கொந்தறு என்றும் வழங்கும். கன்னடத்திலும் தெலுங்கிலும் உயர்திணைப் பெயருக்கு அடையாக, முறையே, கெலவரு கொந்தறு என்பவையே வரும்.

### பிற

பிற என்பது அஃறிணைப் பன்மைப்பெயர். இஃது, அஃறிணை யொருமையில் பிறிது என்றும், உயர்திணையில் பிறன் பிறள் பிறர் என்றும் வருதலால் அறியலாகும். பிற என்பது கன்னடத்திலும் தெலுங்கிலும் 'பெற' என்று உளது. இகர எகரங்கள் தம்முள் மாறுதல் பெருவழக்கன்றே?

### எல்லாம் என்னுஞ் சொல்

இனி, எல்லாம் என்னுஞ் சொல்லை நோக்குவோம்: எல்லாம் என்னுஞ் சொல் மலையாளத்தில் இவ்வாறே வழங்குகின்றது; தெலுங்கில் **எல்லன்** (எல்லனு) என்று னகரவீற்றதாய் வழங்குகின்றது. [2]'ஸர்வபர்யாயமான **எல்ல** என்னும் மொழி **நகரவீற்ற**தாகிய அவ்யயம்' என்பதனால் இஃது அறியப்படும். கன்னட மொழியில், எல்ல என்னுஞ் சொல் நீண்டு **எல்லா** என்று வருதலும் உண்டு. இது,

---

1 A Grammer of the Kuvi Language P.77.

2 பாலவ்யாகரணம். ஸந்தி. 24

[1]'ஸவநிஸிகும் **எல்ல** சப்தக்
கெவிகல்பதெ **தீர்க்கவிதி**'

என்பதனால் அறியப்படும். இஃது அஃறிணை யொருமையில் எல்லது என்றும், ஆண்பாலில் எல்லம் (எல்லன்) என்றும், பலர்பாலில் எல்லர் என்றும் வரும்.

'**எல்ல** தெனிப்பாவசனமாது' (ஶப்தமணி.162.)
[2]'**எல்லங்க** மெல்ல தனமும, நெல்லெடெயொளம்'
[3]'**எல்லரு மாகர்ணன**0தி ரேம் சாகிகளே'

என்பன காண்க.

இவற்றை ஆராயும்போழ்து, எல்லாம் என்னுஞ் சொற்கு முதனிலை **எல்** என்பதுவே எனவும், அஃது எல்ல என்று வரும் எனவும், அதனோடு முற்றுப்பொருளதாகிய **அம்** சேர்ந்து எல்லாம் (எல்ல +அம்) என்றாயிற்று எனவும் தோன்றுகின்றது. முற்றுப் பொருளில் **உம்** என்பதேயன்றி **அம்** என்பதுவும் கன்னட மொழியில் உளது.

[4]'அமு மெம்பி**வெரடு** மமர்கும்
**ஸமுச்சயார்த்ததொள்**'

என்பது அறிக. தமிழிலும் பண்டு **அம்** என்பது முற்றும்மைப் பொருளில் வழங்கியது எனத் தெரிகின்றது.

---

1. ஶப்தமணி. 186. 'எல்ல என்னுஞ் சொற்கு (ஸமாஸத்தில்) நெடில் உறழ்ச்சியாகும்' என்பது பொருள்.

2, 3 . ஶப்தமணி. 162. உதாரணம்.

4 . ஶப்தமணி. 329. 'உம்மைப் பொருளில் அம், உம் என்னும் இவ்விரண்டும் வரும்'.

[1]'பலா அஞ் சிலா அம் என்மனார் புலவர்'

என்பதில், பல+அம் = பலா +அம்; சில+அம்=சிலாஅம் என்று அமைந்துள்ளன. ஈண்டு அம் என்பது உம்மின் பொருளதாகும். பலாஅஞ்சிலா அம் என்பவற்றின் சொன்னிலை பல சில என்பன என்று உரையாளர் கூறியுள்ளனர். ஆகலின், பலாஅம் என்பது பலவும் என்றும், சிலாஅம் என்பது சிலவும் என்றும் பொருள் படும். ஆயின், பல+அம்=பலா(அ)ம் என்றாதல் கூடுமோ எனின், கூடும். மகாஅர் (மக+அர்), மராஅடி (மர + அடி), பராஅரை (பர + அரை) என்பவைபோன்றவை காண்க. எல்லாம் என்னுஞ் சொல்லும் இம் முறையின் (எல்ல + அம்) அமைந்ததாகலாம். இனி, எல்ல என்பதனோடு பன்மையைக் குறிக்கும் மகரஞ் சேர்ந்து எல்லம் என்றாகி, அதுவே எல்லாம் எனத் திரிந்து வழங்கிற்று என்றல் அமையும். எவ்வாறாயினும் , எல்லாம் என்பது பிரிக்கமுடியாத தனிச் சொல் அன்று என்பது தெளிவு. எல்லாரும், எல்லீரும், எல்லேமும் என்னும் மூவிடத்துப் பெயர்களை நோக்கின் இவ்வுண்மை எளிதின் அறியப்படும். என்னையெனின்,

எல்ல + ஆர்(அவர்)+உம் = எல்லாரும்
எல்ல + ஈர் + உம் = எல்லீரும்
எல்ல + ஏம் + உம் = எல்லேமும்

என்று அமைந்துள்ளன. நிலைமொழி யீற்றுக் குறில் கெடுதல் உண்டென்பது மேலே விளக்கப்பட்டதன்றே? இனி, நிலைமொழி யீற்று மகரம் கெட்டு எல்லா என நின்று அமைந்தன எனக் கொள்ளினும் அமையும். நெடிலீற்றின் முன் நெடில் வரின், நிலைமொழி யீற்று நெடில் கெடும்.

செய்யான் = செய் + ஆ + ஆன்
செய்யீர் = செய் + ஆ + ஈர்
செய்யேம் = செய் + ஆ + ஏம்

---

1. தொல்.எழுத். சூ. 213. ந, இளம். உரைமேற்கோள்.

முதலிய எதிர்மறை வினைச்சொற்களின் அமைதியை நோக்கின், இவ்வுண்மை புலனாகும்.

எல்லாம் என்பது பலவின்பாற்பெயர். அஃது உயர்திணைக்கண் வருதல் தகாது; பலர்பாலுக்கு வரின் எல்லாரும் என்றாகிவரும்; தன்மைக்கண் வரின் எல்லேம் என்றாகிவரும். ஆனால், அஃறிணையை உளப்படுத்திக் கூறுந் தன்மைப் பன்மைக்கண்மட்டும் எல்லாம் என்பது வருதல் கூடும். இது,

> [1]'தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
> துயர்திணை மருங்கின் ஆக்க மில்லை'

என்னுந் தொல்காப்பியத்தான் அறியப்படும். ஆசிரியர் தொல் காப்பியனார் இவ்வாறு கூறி விலக்கியிருக்கவும், இச்சொல் பண்டைச் செய்யுட்களிலேயே பலர்பாலில் வழங்குவதாயிற்று.

> [2]'புல்லினத் தாயர் மகளிரொ **டெல்லாம்**
> ஒருங்கு விளையாட'

> [3]'புலவ **ரெல்லாம்** நின்னோக் கினரே'

என்பன காண்க. இவ்விடங்களில், எல்லாரும் என்று வருதலே அமைவுடையது. இத்தகைய இடங்களில், தெலுங்கிலும் புதுக் கன்னடத்திலும் முறையே, எல்லருன், எல்லரு என்னுஞ் சொல்லே வரும்; எல்லன், எல்லவு என்னுஞ் சொற்கள் வாரா. தமிழிலும் இம்முறைப்படி வழங்குதலே தக்கதாகும்.

---

1. சொல்.பெயர். 33.
2. கலி.111.
3. புறம். 42.

# அனுபந்தம்

*(பக்கம் 34.)*

'எந்து யுகந்தரசரிதம
நந்தா னினகறியெபேழ்தெ னல்லதெயுமத்
தொந்தம் பகெ **நாம**ந்தொட
வந் தம் பரதிலக மெம்ப விஶ்ருதவன தொள்'.

*(ஆதி.3.82.)*

'முன்பேழ்த **நம்**மிர்வர குருகளப்ப பிஹிதாஶ்ரவ பட்டாரக.'

*(ஆதி.3.82. வசனம்.)*

இவற்றில் நாம் என்பது முன்னிலையை உளப்படுத்தி வந்திருப்பது காண்க.

*(பக்கம். 40 தொடர்ச்சி)*

உன் என் தன் என்பவற்றிற்கு எழுவாய்வேற்றுமையுருபு கொடுத்து, முறையே அவற்றை நீ நான் தான் என ஆதேசமாக்க வேண்டும் என்றும், நான் என்பதற்கு யான் என்பது ஆதேசம் என்றும், நாம் என்பதற்கு யாம் என்பது ஆதேசம் என்றும், நீர்கள் என்பது நீயிர்கள் நீவிர்கள் என ஆதேசமாகத்திரிதலும் உண்டு என்றும், நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம் என்றும், நாங்கள் என்பது யாங்கள் என ஆதேசமாம் என்றும், உங்களை என்பது நுங்களை என ஆதேசமாம் என்றும் வீரசோழியம்[1] கூறும். இவை இலக்கண நெறிக்கும் மொழிநூலமைதிக்கும் மாறாயுள்ளன வாகலின், பொருந்தாக் கூற்றுக்கள் என்று விடுக்க.

★★★

---

1. வீரசோழியம். வேற்றுமை. 9-உரை.

# சொல்லகராதி


அ

'அஃது' முதலிய பெயர் - 115
அகநானூறு - 58, 61, 105
அதOடு'முதலிய பெயர்கள் - 120
அதா அன்று - 114
'அதோ'முதலியன - 150
அதோள் - 150
அதோளி - 150
அப்பர் தேவாரம் - 73
'அம்பர்' முதலியன - 149
அல - 144
அவ்வை - 68
அவ்வையார் தனிப்பாடல் - 82
அவந்திர் - 119, 124
அவு - 69, 114
'அற்று' முதலியன - 145
'அன்று' முதலியன - 143
அன்ன வந்தான் ராமன் - 140
'அனைத்து' முதலியன - 146
அOதஹ - 147

ஆ

ஆ-படர்க்கையையும், ஈ - முன்னிலை யையும், ஏ-தன்மையையும் குறித்தல் - 25
ஆகள் - 138
ஆங்க - 148
'ஆங்கண்' முதலியன - 140
'ஆங்கனம்' முதலியன - 151
'ஆங்கு' முதலியன - 138
'ஆண்டு' முதலியன - 142
ஆண்பாற்பெயர் - 117
ஆதன் - 120
ஆதOடு - 121
ஆதி புராணம் - 43, 68, 158
ஆந்த்ரபாஷா பூஷணம் - 108
ஆந்த்ரஶப்த சிந்தாமணி- 27, 123, 125, 135
ஆந்த்ரஶப்த சிந்தாமணி விமர்ஶனம் - 4
ஆம் என்பதுவே பன்மைப் பெயர் என்றற்கு ஆதாரம் - 39
ஆலா- 144
ஆன் என்பது நான் என்றாதல் - 17

இ

இசின் - 70
இதா - 151
இயற்பா - 31
இராமநாதபுரம் - 83

ஈ

ஈகள் - 138
ஈதோளி - 150

உ

உத்தரமார்க்க அனுகாமிகள் - 42
உத்தரமார்க்கம் - 3
உரையாசிரியர் (இளம்பூரணர்) - 141
உல்ல - 144

எ

'எல்லாம்' என்னுஞ் சொல் -154
எவ்வை - 68

ஏ

ஏன் என்பதுவே முதலுருவம் - 19

ஐ

ஐங்குறுநூறு- 33, 58, 62, 68, 88
ஐயன் - 67
ஐ விகுதியின் உண்மை வடிவம் - 66
ஐ விகுதியின் பொருள் - 67

ஒ

ஒன்றன்பாற்பெயர் 'அது' முதலியன - 113

ஔ

ஔ விகுதி - 68

க்

க்ரியர்ஸன் லிங்குவிஸ்டிக் ஸர்வே - 1, 6, 109

க

கண்டிகின் என்பதில் கிகரம் திரிந்ததன் காரணம் - 71
கண்டிகும் - 88
கதாயுத்தம் - 69
கம்பராமாயணம்- 24, 72, 104, 105
கர்னாடக பாஷாபூஷணம் - 3, 52, 119, 147
கலித்தொகை - 32, 50, 61, 103, 138, 143, 150, 157
கவிராஜமார்க்கம் - 3, 42
கன்னடத்துப்பெயர் - (பன்மை)- 34
கன்னடம் 'ஏன்' - 127
கன்னட முன்னிலைப் பன்மை - 73
கன்னடமொழியில் உளப்பாட்டுப் பன்மையில் வேறுபாடு உளதா?- 41

கா

கால்ட்வெல் இலக்கணம் - 2, 5, 7, 8, 11-15 25, 26, 29, 30, 36, 39, 41, 44, 45, 47, 48, 53, 55, 65, 75, 80, 81, 84, 85, 87, 90, 92, 109, 112, 113, 114, 117, 120, 121, 122, 134, 137, 138, 140, 142, 144, 149
கால்ட்வெல் கருத்து - 7, 85, 90
கால்ட்வெல் கொள்கை - 55
கால்ட்வெல் கொள்கை (தன்மைப் பெயர்க்கு மூலம் மா என்றல்) அமையாமை - 29
காவ்யாவலோகனம் - 3, 119

கு

குண்டர்ட் மலையாள இலக்கணம் - 4, 7, 77, 95
குமாரவ்யாஸ பாரதம் - 68
குயிமொழி யிலக்கணம் - 5, 37, 53, 75, 96, 109, 126, 128
குருக் இலக்கணம் -1, 5, 6, 38, 53, 54, 75, 76, 77, 96, 109, 120, 126, 128, 129
குறள் - 49, 62, 67, 105, 107

கே

கேரளகௌமுதி- 125
கேரளபாணினீயம் - 25, 30, 87, 93, 95, 137
கேரளவர்ம ராமாயணம் - 95
கே.வி. சுப்பையா - 47, 48
கே.வி. சுப்பையா கருத்து - 17

கோ

கோவர் - 7

ச

சங்கர நமச்சிவாயப்புலவர் - 49, 50

சி

சிதியன்மொழி - 15
சில - 154
சிலப்பதிகாரம் - 68

சீ

சீவகசிந்தாமணி - 33, 51 81, 104, 131, 152

சு

சுட்டின் அடியிற் பிறந்த சொற்கள் - 137
சுட்டு - 125
சுட்டுப்பெயர் - 107
சுட்டுப்பெயரின் ஆராய்ச்சி - 113

சூ

சூளாமணி - 32, 33, 73, 107

டா

டாக்டர். P.S.சுப்பிரமணிய ஶாஸ்த்ரியாரவர்கள் - 107

த

தமிழ் 'அந்த' - 148
தமிழ் 'எவன்' - 132
தன்மை பன்மைப்பெயர் - 32
தன்மைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி - 39
தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் - 48
தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகார ஏகாரங்கட்கு இடைப்பட்ட ஒலியினது - 17
தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிர் ஆகாரம் என்பார்க்கு உயிர் ஏகாரமே - 24
தன்மைப்பெயரிற் சேர்ந்திருக்கும் உயிரெழுத்து யாது? - 11, 21
தன்மையில் அம்விகுதிக்கு முற்பட்டது அன்விகுதி என்றல் அமையாமை - 28
தன்மையொருமைப் பெயர் - 2
தன்மையொருமைப் பெயரின் ஆராய்ச்சி - 21
தனாது - 113
தக்ஷிணமார்க்கம் - 3

தி

திணைப் பாகுபாடு - 123
திராவிடம் ஒழிந்த பிறமொழிகளிற் காணுந் தொடர்பு - 13
திராவிடவினத்து மொழிகள் - 1
திருமாலை - 24
திருவிருத்தம் - 73

து

துவ்விகுதியின் பொருள் - 119
துளு - 36
துளு இலக்கணம் - 22, 33, 53, 75, 93, 96, 108, 126, 128
துளுமொழிப் பன்மைப்பெயர் - 93

தெ

தெலுங்கில், தன்மையொருமைப் பெயர் உருபேற்குமுறை - 23
தெலுங்கின் பன்மைப்பெயர் - 47
தெலுங்கு 'அந்த'- 147
தெலுங்கு 'ஏமி' - 132
தெலுங்குப்பெயர் (பன்மை) - 35, 74
தெலுங்குப் பெயர் 'நீவு' - 65
தெலுங்கு 'வாOடு, வீOடு' - 108

தொ

தொடர்புடை வினாப்பெயர் - 131
தொல்காப்பியம் - 29, 30, 32, 33, 46, 51, 56, 58, 66, 73, 84, 100, 101, 105, 106, 107, 113, 125, 127, 131, 132, 139, 141, 148, 150, 151, 152, 153, 156, 157
தொல்காப்பியனார் கூற்று - 56, 78
தொன்மையது யானா , ஆனா ? - 7

தோ

தோற்றுவாய் - 1

ந

நச்சினார்க்கினியர் - 50, 61, 151, 153
நற்றிணை - 34, 151
நன்னூல் - 2, 40, 50, 51, 59, 64, 73
நன்னூலார் - 48, 83

நா

நாங்கள் யாங்கள் என்பவற்றில் கள் விகுதி - 46
நாம் என்னும் பெயர் - 40
நாம் யாம் என்பவற்றின் மகரம் - 45
நாய்ச்சியார் திருமொழி - 33
நான் என்பதற்கும் யான் என்பதற்கும் உள்ள தொடர்பு - 8
நான் என்பதன் பழைய ஒலி ந்யான் என்பது - 19
நான் என்பது ஞான் எனத் திரிதல் - 27
ந்யான் என்னும் பெயர் - 30

நி

நிருபதுங்கன் - 3

நீ

நீம் - 78
நீமிர் - 83
நீய் - 64
நீயிர் என்பதன் அமைதி - 80
நீர் என்னுஞ் சொல் - 82
நீவிர் என்னுஞ் சொல் - 83
நீன் என்பதன்கண் உள்ள நகரம் - 60
நீன் என்பதில் 'ன்' விலக்கப் பட்டதன் காரணம் - 62

நு

நுவ்வை - 62

ப்

ப்ரஹ்ருயி இலக்கணம் - 54, 76, 77, 97, 110, 126, 129
ப்ரௌடவ்யாகரணம் - 47

ப

படர்க்கைப்பெயர் - 94
படர்க்கைப்பெயரில் 'து' சேர்தல் - 118
பல - 153
பலர்பாற்பெயர் - 124
பலவின்பாற்பெயர் ' அவை முதலியன ' - 114
பழமொழி - 31
பழைய வடிவம் நான் என்பதா, யான் என்பதா? - 7
பன்மைப்பெயர் ஏம் என்பதுவே - 40
பஸவ புராணம் - 68

பா

பாணினீயம் - 102
பாரதம்(கன்னடம்) - 44, 45
பாரதம்(தெலுங்கு) - 4, 68, 144
பாலவ்யாகரணம் - 4, 35, 47, 52, 74, 154
பாஷாநைஷத சம்பு - 4

பி

பிரயோக விவேகம் உரை - 79
பிரயோக விவேகமுடையார் கூற்று - 79
பிற - 154

பு

புறநானூறு - 24, 34, 40, 61, 67,84, 151, 157

பெ

பெண்பாற் பெயர் - 122
பெரிய திருமொழி - 24, 34
பெருங்கதை - 51, 131

பே

பேராசிரியருரை - 62

போ

போப்பு - 7

ம

மஞ்சரீ மகரந்த வ்யாக்யானா கிரியர் - 42
மணிமேகலை - 88, 148, 151
மயிலைநாதர் - 43
மராஅடி - 113
மலையாளம் 'எந்து' - 134
மலையாளப்பெயர்(பன்மை) - 36
மனமு என்னும் பெயர் - 48
மனுசரித்ரம் - 132
மஹாபாரதம் (மலையாளம்) - 95
மஹாம்மஹோபாத்யாய ஆர். நரசிம் மாசாரியவர்கள் - 44

மி

மின் விகுதி - 85
மின் விகுதியின் அமைதி - 86
மின் விகுதியின் ஆராய்ச்சி - 86

மீ

மீரு என்பதன் அமைதி - 91
மீரு என்பதன் ஆராய்ச்சி - 91
மீரு என்னும் பெயர் - 90

மு

முன்னிலைப் பன்மைப்பெயர் - 72
முன்னிலைப் பன்மைப்பெயரின் ஆராய்ச்சி - 78
முன்னிலைப் பன்மைப்பெயரின் தொல்லுருவம் யாது ? - 78
முன்னிலைப் பன்மை விகுதி - 83
முன்னிலையசை 'இகும்' - 88
முன்னிலையசைச்சொல் 'சின்' - 70
முன்னிலை யொருமைப்பெயர் - 50
முன்னிலை யொருமைப்பெயரின் ஆராய்ச்சி - 56
முன்னிலை யொருமைப்பெயரின் தொல்வடிவம் யாது? - 56
முன்னிலை யொருமை விகுதி - 65
முன்னிலை யொருமை வினையிற் காணும் இன் - 57

மே

மேமு என்பதன் முதலிலுள்ள மகரமும் எண்ணைக் குறிப்பது - 47

மோ

மோ விகுதி - 87

யா

யான் நான் இரண்டும் தொன்மைய - 9
யான், நான் முதலியவற்றின் இறுதினகரம் - 11

யொ

யொக்க - 135

ரா

ராமசரிதம் - 74, 85, 92
ராமஸ்வாமி ஐயரவர்கள் L.V. - 107

ல

லக்ஷ்மணராய வ்யாஸாவளி - 19
லக்ஷ்மணராவ கருத்து - 19
லக்ஷ்மணராவ்காரு - 48

லீ

லீலாதிலகம் - 114

வ்

வ்யாகரணமித்ரம் - 108, 125

வ

வடமொழியில் தொடர்புடை
வினாப்பெயர் - 135
வழக்கின்கண் முன்னிலைவினை
யிற் காணும் 'ஏன்'' விகுதி - 59

வி

வீரசோழியம் - 158

வே

வேட்டூரி ப்ரபாகர
ஶாஸ்த்ரியார் - 117, 124

ன

னகரம் பால் காட்டுவதன்று - 12

ஶ

ஶப்தமணிதர்ப்பணம் - 3, 24, 34, 35, 50, 52, 90, 101, 107, 119, 125, 127, 142, 147, 155
ஶப்தாதர்ஶம் - 52, 73
ஶப்தானுஶாஸனம் - 3

ஸ

ஸந்தி - 124

ஸி

ஸித்தாந்த கௌமுதி - 10

A

A Grammer of the Kuvi Language - 153, 154

D

Dravidic Studies I - 117
Dravidic Studies II - 5, 17, 18, 32

S

Studies in Dravidian Philology - 117, 118, 121

T

The Aryan affinities of Dravidian Pronouns - 100.


★ ★ ★

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65.00 |
| கதிர்வேற்பிள்ளை-தமிழ் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி-3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஓர் ஆய்வு | 60.00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| உத்தர ராம சரிதம் | 30.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடைநாடகப்பெண்கலைஞர்கள்குறிப்பேடு | 25.00 |
| **A Grammar of Contemporary Literary Tamil** | 80.00 |
| **Cilappatikaram** | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| **Tani Pacura Togai** | 30.00 |
| **Dedication** | 25.00 |
| **Temple Chimes** | 20.00 |
| **Nala Venba** | 45.00 |
| **Tamil Heroic Poems** | 40.00 |
| **Six Long Poems from Sangam Tamil** | 30.00 |
| **Kurinci-p-pattu-Muttollayiram** | 40.00 |
| **Kuruntokai** | 110.00 |
| **Landscape and Poetry** | 50.00 |
| **Tamil Culture and Civilization** | 60.00 |
| **Tolkappiyam and Astadhyayi** | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1 | 50.00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |

---

திராவிட மொழியின் மூவிடப் பெயர் விலை ரூ. 40/-